மேற்கூறப்பட்ட சிறப்புக் கூறுகள் இணைய வினாவிளகக முறையின் சிறப்பை எடுத்துரைக்கக் கூடியவை. இவை தவிர இணைய வினாவிளக்கம் வேறு சில இயலபுகளையும் கொண டிருக்கும். அவை,

பிறருடன் இணைந்து செயல்பட வழிவகுத்தல்.

ஒரு துறை அல்லது பலதுறை சார்ந்தவையாக அமைந்திருத்தல்.

ஊக்குவிப்புப் பண்புகள் அல்லது தன்மைகளைக் கொண்டிருத்தல.

ஆசிரியர்க்கான பாட மூலப் பக்கங்கள் இருத்தல்.

மாணவ ஆசிரியர்களுக்கு மிகவும் உதவியாக அமைந்திருத்தல் ஆகியன.

மாணவ ஆசிரியர்களுக்கு இணைய வினாவிளக்கம் கற்பித்தல்

எந்த ஒரு பாடத்தைக் கற்பிக்கும்போதும் தாம் வாழும் நாட்டின் எதிர்பார்ப்புகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப இனிமையும எளிமையும் மிக்கதாகக் கற்பிப்பது ஆசிரியரின் கடப் பாடாகும் என்ற கல்வியாளரின் (இராமையா, கா., 2001) கருத்துப்படி, கட்டுரையாளர் இணைய வினாவிளக்க முறையைத் தம்மிடம் பயிற்சி பெறும் மாணவ ஆசிரியரகளுக்குக் கற்றுத் தர விரும்பினார். குறிப்பாகக் கட்டுரை எழுதும் திறனை எவ்வாறு மேமபடுத்துவது என்று கற்றுத்தர விழைந்தார். அவர்களுக்கு இதைப் பற்றி விளக்கிவிட்டுச் சில மாதிரிகளை எடுத்துக்காட்டினார். அவர்களும் சில மாதிரிகளை உருவாக்கிப் பயிற்சி பெற்றனர். தொடர்ந்து பாடத்தின் பருவ மதிபபீட்டுக்காக (Semestral Assessment) ஒப்படைப்பு ஒன்றைச் செய்யுமாறு கூறினார். மாணவ ஆசிரியர்கள், தொடக்கப் பள்ளிகளுக்குச சென்று தாம் கற்பிக்கும் வகையில் ஒப்படைப்புகளைத் தயாரிக்க விருமபினர; ஆறு குழுக்களாகப் பிரிந்து செயல்பட்டனர். சுமார் ஒரு மாதகாலத்தில் பின்வரும் தலைபபுகளில் இணைய வினா விளக்க முறையில் ஒப்படைப்புகளை உருவாக்கிச் சமர்ப்பித்தனர். அவை வருமாறு:

குடிமைத் தற்காப்புப் படை

வரலாற்றுச் சுற்றுலாத் தளங்கள்

உடல்நலம் பேணுதல்

உடற்பயிற்சியும் அதன் பலன்களும்

சிங்கப்பூரில் சுற்றுலா

பொழுதுபோக்கு

மாணவ ஆசிரியர்களின் படைப்புகள்: ஒரு பார்வை

மாணவ ஆசிரியர்கள் தமக்கு விருப்பமான தலைப்புகளில் இடைவினையாடலகளுடன கூடிய கற்பித்தல் படைப்புகளைத் தயாரித்திருந்தனர். பாடத் திட்டக் கருப்பொருள்களை ஒட்டி அமைந்த தம் ஒப்படைப்புகளில், குழுவாக இணைந்து பள்ளி மாணவர்கள் எவ்வாறு தகவல்களைத் திரட்டலாம், ஒவ்வொருவரும் என்னென்ன பொறுப்புகளை மேறகொணடு தம் செயல்களைச் செவ்வனே செய்து முடிக்கலாம் எனபன பற்றித் தெளிவாகக் குறிப்பிட் டிருந்தனர். இது பாராட்டத்தக்கது என்றாலும், சில குழுவினர் தம் 'ஆசிரியரின பக்கத்'தில், இந்தப் படைப்பின் வாயிலாக மாணவர்கள் எத்தகைய பயன்களைப் பெறுவாரகள் என்று குறிப்பிட மறநதுவிட்டனர். தம படைப்புகளைச் செயல்படுத்தப போகும வகுப்பில் பயிலும மாணவர்கள் எத்தகைய முன்னறிவைப் பெற்றிருக்கவேண்டும் எனற செய்தி சிலரது படைப்பு களில் குறிப்பிடப்படவில்லை. கணினியைப் பயன்படுத்தி இணைய வினாவிளகக முறையில்

கட்டுரைப் பாடத்தைச் செய்யப் போகும் பள்ளி மாணவர்கள், எத்தகைய மொழியறிவைப் பெற்றிருக்கவேண்டும், எத்தகைய திறன்களைப் பெற்றிருக்கவேண்டும் என்பன பற்றிய தகவல்களில் சிலவற்றை ஒரு குழுவினர் குறிப்பிடாது விட்டுவிட்டனர். இவை ஒப்படைப்புகளில் இடம்பெறுவது அவசியமாகும் ஏனெனில் அப்போதுதான் குறிப்பிட்ட மாணவ ஆசிரியர் மட்டுமின்றி மற்ற ஆசிரியர்களும் இப்படைப்பைப் பயன்படுத்திப் பாடத்தை எளிதாக நடத்த முடியும்

ஒப்படைப்புகள் குறித்துப் பேசும்போது, பள்ளி மாணவர்கள் இம்முறையில் கட்டுரை படைக்க வசதியாகக் கூடுதல் இணையத் தளங்களைத் தேரவு செய்து பட்டியலிட்டிருக்கலாம் ஒப்படைப்பில அசையும் படங்கள் (animations) அதிகமாக இடம்பெறுவதைத் தவிர்த்திருக்கலாம். ஏனெனில இவை மாணவர்களின் கவனத்தைத் திசை திருப்பிடும் தன்மை வாய்ந்தவை மேற்கோள் மற்றும் நன்றி ஆகிய இரண்டையும் இன்னும் சரியாக வேறுபடுத்திப் பார்த்திருக்கலாம் பல குழுக்களைச் சேர்ந்தவர்கள கூடுதல் முயற்சிகளை மேற்கொண்டு மாறுபட்ட சிந்தனைகளுடன் தம படைப்புகளைத் தயாரித்திருந்தனர். இது வரவேற்புக்குரியது.

மாணவ ஆசிரியர்கள் தம் படைப்புகளை வகுப்பில் படைக்கும் நிகழ்ச்சி அடுத்து இடம் பெற்றது. அதில் அவர்கள் தத்தம் படைப்புகளைப் பிறர்தம படைப்புகளுடன் ஒப்பிட்டுக் கொண்டனர்; புதிய செய்திகளை அறிந்தனர தம் குழு உறுப்பினர்களுக்கும் படைப்புகளுக்கும மதிப்பெண்கள வழங்கினர் தம கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர். அப்போது, இந்த ஒப்படைப்புச் செய்யும்போது அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளையும் பட்டியலிட்டனர் அவை வருமாறு

ஆங்கிலத்தில இணைய வினாவிளக்கம் என்ற கற்பித்தல் அணுகுமுறைக்கு என இடம் பெற்றுள்ள 'வடிவப பக்கத்'தை (template) பயன்படுத்தித் தமிழ எழுத்துருக்களைத் தட்டச்சுச் செய்ய இயலவில்லை. இதனால் மாணவ ஆசிரியர்கள 'பவர்பாயிண்ட்' (Powerpoint) என்ற படைப்பு முறையில் இணைய வினாவிளக்கத்தைத் தயாரித்திருப்பதாகத் தெரிவித்தனர்.

மாணவ ஆசிரியர்கள் மற்றொரு மிக முக்கியமான பிரச்சினையையும் எதிர்நோக்கினர். தமிழில கட்டுரை எழுதவேண்டும் என்றாலும் மாணவ ஆசிரியர்கள் தம் ஒப்படைப்புகளில் இடம்பெறச் செய்வதற்கேற்ற இணையப் பக்கங்கள அல்லது தளங்கள் தமிழில குறைவாகவே இருப்பதை உணர்ந்தனர அவ்வாறு கிடைத்த இணையப் பக்கங்களில் சில, எளிதில் வாசிக்க இயலாதவையாக மாறுபட்ட எழுத்துருக்களில் இருந்தன. அவற்றில் உள்ள குறிப்பைப் பயன்படுத்திச் சரியான தமிழ் எழுத்துருவைப் பதிவு செய்ததும் வாசிக்க முடிந்தது இந்தப் பிரச்சினைகள் மாணவ ஆசிரியர்களால் சமாளிக்க முடிந்தவையே. ஆனால் தொடக்கப்பள்ளி மாணவர்களால் சமாளிக்க முடியுமா என்பது கேள்விக்குறியே அவர்களால் சமாளிக்க இயலாதபோது அவர்களுக்கு மிஞ்சுவது சலிப்பும் வெறுப்புமதாம

மேற்கூறப்பட்ட பிரச்சினைகள தீரத் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். எனினும் இது ஒரு நல்ல கற்றல அனுபவம் எனலாம்.

இணைய வினாவிளக்க முறையில் மதிப்பீடு

இணைய வினாவிளக்க முறையில மதிப்பீடு எனும்போது இது சற்றேறக் குறையக் குழுப் புலனாய்வு (Group Investigation) என்ற கூடிக்கற்றல் முறையில் இடம்பெறும் மதிப்பீட்டைப் போன்றே படிநிலைகள அமைந்துள்ளன இணைய வினாவிளக்க முறையில பின்வரும் வகைகளில மதிப்பீடுகள இடம்பெறும அவை வருமாறு:

முதலில் மாணவர்கள குழுவாகச் செய்யும கணினிவழிக் கட்டுரைப் படைப்புகள், அவற்றைத் தயாரிப்பதில இடம்பெற்ற படிநிலைகள ஆகியன குறித்துக் குழுவில் உள்ள ஒவ்வொரு வரும் தம சக உறுப்பினருக்கு மதிப்பெண்களைத் தருவார்கள். இதற்கான மொத்த மதிப்பெண்கள் 20 ஆகும்.

இப்போது மாணவர்களின் படைப்புகளின் தரம் மதிப்பிடப்படும். வகுப்பில மாணவர்கள் குழுவாக இணைந்து தம் படைப்புகளை வகுப்பின்முன் கணினிவழிப படைப்பர் அபபோது மற்ற மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடை கூறும வகையில் வினாவிடை நேரமும் இடம்பெற்றிருக்கும். இதனைத் தொடர்ந்து, வகுபபில் உளள மாணவர்கள் ஒவ்வொரு படைப்பையும் மதிப்பிட்டு மதிப்பெண்களை வழஙகுவர் மொதத மதிப்பெணகள் 30 ஆகும.

மூன்றாவதாக, மாணவர்கள் ஒவவொருவரும தமது தலைபபுக் குறிததுக் கட்டுரையை அல்லது அறிக்கையை எழுதிப் படைப்பார்கள். அதற்கு 50 மதிப்பெண்கள வழஙகப்படும். இறுதியில், இது வரை ஒவவொரு படிநிலையிலும பெற்ற மதிபபெண்கள் தொகுககப்பட்டு ஆசிரியர் வழங்கிய மதிப்பெண்களுடன் சேர்த்துக் கணக்கிடபபட்டு ஒவ்வொரு மாணவருக் கும் உரிய மதிப்பெண்கள் வழஙகபபடும. இவ்வாறு மதிபபிடுவது, சில கூடுதல் பணிகளைக கொணடிருந்தாலும குறிப்பிட்ட விதிமுறைகளைக் கவனததில் கொணடே மதிப்பெணகள் வழங்கப்படும். அந்த விதிமுறைகள் மாணவரக்கான பக்கத்தில் விரிவாக இடமபெறறிருககும.

தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாணவர்கள் கற்கும்போது அவர்கள் தம கற்ற லைச் சோதித்துப் பார்க்க உதவியாக அது அமைவதுடன் அவர்கள் தாம் மேறகொண்ட செயலில் தொடர்ந்து ஈடுபாடு காட்டப் பெரிதும் பயன்படும் என்பது டேவிட் இங ஃபூ சியோங் David Ng Foo Seong (2003) என்ற ஆய்வாளரின் கருத்து. அக்கருத்துடன ஒப்பிடுப் பார்க்கும் வகையில் இணையத்தைப் பயன்படுததித் தம் கற்றலையும் தாம் செய்யவேண்டிய படைப்புகளையும் சோதித்துப் பார்க்கவும் மதிப்பீடு செய்யவும் இணைய வினாவிளக்கம் உதவியாக அமைந்துள்ளது. மாணவர்கள் தயாரித்த படைபபுகளைப் பள்ளிகளில் குறிப்பாகத் தொடக்கப் பள்ளிகளில ஐந்து, ஆறாம் வகுப்பு மாணவர்களுக்குப் பயனபடுத்தி சோதிததுப பார்த்தபோது பாராட்டுகள் கிடைத்தன. அவர்கள் இதில் அதிக ஊக்கத்தோடு பஙகேற்ற துடன் தாம பல புதிய செயதிகளை அறிந்துகொணடதாகத் தெரிவிததனர். இணையததில் ஒரு குறிப்பிட்ட திசையில சென்று தகவல்களைப் பெறுவது நேரததைச் சேமித்ததுடன் சிறப் பாகச் செயலபட முடிந்தது என்று கருத்துரைத்தனர்.

இன்று ஆசிரியர்கள் தம் மாணவர்களுக்குச் சிநதனைத திறனகளைக் கற்பிப்பதன் வாயிலாக அவர்களது அறிவு வளர்ச்சியை மேம்படுத்த விருமபுகின்றனர். இதில் மொழியாசிரியர்களின் பஙகு குறிப்பிடத்தக்கது என்பதைச் சீனமொழி ஆசிரியர்களிடையே மேற்கொளளப்பட்ட ஆயவு (வோங் யின் மெய், ஹூஸு ஜிங்—ஃபோங் ஜாக்கி Wong Yin Mei, Hsu. Jing-Fong Jackie, 1999) எடுத்துரைககிறது. இக்கருத்து, பலவகைகளிலும் முயறசிகளை மேற்கொண்டு மாணவர்களின் சிந்தனைத் திறன்களை மேம்படுத்தி வரும் தமிழ் மொழி ஆசிரியர்களுக்கும் பொருந்தும். ஏனெனில் மொழி மற்றும் மொழிப் பாடத்தின் வழியே மாணவரகள தம் சிந்தனைத் திறன்களை மேமபடுத்திக்கொள்ளவும் அவை தொடர்பான புதிய பல செயதி களைச் சீரிய முறையில் அறிநதுகொள்ளவும் மொழியாசிரியர்கள பேருதவி புரிகிறார்கள் என்பது ஆர்தர் கோஸ்டா மற்றும் இராபர்ட் மர்ஸானோவின (1997) Arthur Costa and Robert Marzano பரிந்துரை (குழந்தைசாமி, இரா., 1998) இதை மீண்டும் மெயபபிக்கும் வகையில் தமிழில் இணைய வினாவிளக்கததின வாயிலாக மாணவர்களின் சிந்தனைத திறனகளையும் கட்டுரை எழுதும திறனையும் அவர்கள் விரும்பும வகையில் மேம்படுத்த முடிநதது. இது முதல் முயற்சி என்றாலும், இது குறிதது விரிவான ஆயவுகள் தொடர்ந்து நடைபெற இம் முறை கட்டுரையாளருக்கும ஆசிரியர்களுககும வழிகாட்டியதுடன் உந்துதலையும் அளித்துள் ளது என்பது மகிழ்ச்சிக்குரிய உண்மை.

நன்றிக்குரியோர்:

திருமதி ஹியூ ஹூவீ ஹூவாங் (Mrs HiewSim Hwee Hwang, NIE), வரலாறு மற்றும சமூக அறிவியல் கல்வி, தேசியக் கல்விக் கழகம், சிங்கப்பூர்.

கல்வியியல் பட்டய வகுப்பு முதலாமாண்டு மாணவ ஆசிரியர்கள் 17 பேர, தமிழ் மொழி மற்றும் பண்பாட்டுத் துறை, தேசியக் கலவிக கழகம், சிங்கப்பூர.

ஆய்வில் பஙகேற்ற பள்ளிகளின தலைமையாசிரியர்கள், தமிழாசிரியரகள், மாணவரகள்

கட்டுரை எழுதத் துணை புரிந்தவை:

இராமையா, கா, 2001. சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தலை இனிமையும் எளிமையும் மிக்கதாக்குவோம். சிங்கப்பூரில் தமிழ கற்றல் கற்பித்தலை இனிமையும் எளிமையும் மிக்கதாககுவோம (4.11.2000—இல் நடைபெற்ற கருத்தரங்கின் ஆய்வடங்கல்). (தொ.ஆ.கள்) இராமையா, கா., சீதாலட்சுமி. 2001. சிங்கப்பூர். 73—95.

குழந்தைசாமி, இரா., 1998. தமிழ் மொழியைச சிந்தனை மொழியாகக் கையாண்டு மாணவர் களிடையே சிந்தனைத் திறன்களை வளர்ப்பதில் தமிழாசிரியர்களின் பங்கு. நான்காவது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாட்டு மலர், சென்னை.

சீதாலட்சுமி. 2001. சிங்கபபூரில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு. நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர். (அச்சில் வராத முனைவர் பட்ட ஆய்வேடு.

David Ng Foo Seong 2003. Computer Simulations for Teaching Experimental Learning: Implications for Teaching National Education. Securing Our Future - Sourcebook for Infusing National Education into the Primary School Curriculum. Editors: Steven Tan Kwang San, Goh Chor Boon. Pearson Education Asia Pte Ltd, Singpapore. 102-116.

http://edweb.sdsu.edu/webquest/webquest.html

http://edweb.sdsu.edu/courses/edtec596/about_webquests.html

http://www.hope.edu/academic/education/wessman/Secondary_Block_Revised/unit4/dimensionslearn.htm

Ravindran, R., 2002. Message. Conference Papers, Tamil Internet 2002, San Francisco Bay Area, Compiler: K Kalyanasundaram, INFITT.

33

தகவல் தொழில்நுட்பத் தமிழ்க் கலைச்சொற்களைத் தரப்படுத்துதல்

மு. சிவலிங்கம்

சென்னை, தமிழ்நாடு, இந்தியா
<sivalingam@vsnl.net>

காலமும் சூழலும்

ஒரு காலத்தில் பல்கலைக்கழகங்களில் ஒரு பாடமாக மட்டுமே இருந்துவந்த கணினி அறிவியல் நாளடைவில் தொழில்நுட்ப அறிவியலின் ஒரு துணையாக வளர்ச்சி பெற்று, இன்றைக்கு எந்தவோர் அறிவியல் துறையின் வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்கும் ஒரு கல்வியாகப் பரிணமித்துள்ளது. எந்த அறிவியல் பாடத்தைக் கற்பவராயினும், எந்தத் தொழில் நுட்பத் துறையைப் பயில்பவராயினும் கணினி அறிவியலையும் கற்றிருக்க வேண்டும் என்பது கட்டாயத் தேவையாகிவிட்டது. எந்தவொரு வேலைக்குச் செல்பவராயினும் கணினியை இயக்கத் தெரிந்திருக்கவேண்டும் என்பது கட்டாயமாகிவிட்டது. சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் கணினிப் பயிற்சியில் அக்கறை காட்டத் தொடங்கிவிட்டார்கள் இதன் காரணமாக, கணினிக் கல்வியைத் தத்தம் தாய்மொழியில் பெறவேண்டிய ஆர்வமும் தேவையும் அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் கணினிக் கல்வி

தமிழ்நாட்டின் சிற்றூர்களில் — மூலை முடுக்குகளில் — எல்லாம் கணினி கற்றுத் தரும் பயிற்சி மையங்களைக் காண முடிகிறது. பள்ளி, கல்லூரி, பாலிடெக்னிக், பொறியியல் கல்லூரி மாணவர்கள் மட்டுமின்றி, அலுவலகம் செல்வோர், சிறிய தொழில் நடத்துவோர் — ஏன் — வீட்டில் ஒளிவாக இருக்கும் பெண்களும் கூட கணினிப் பயிற்சியில் ஆர்வம் காட்டு கின்றனர்.

இந்தியாவில் உள்ள மொத்தப் பொறியியல் கல்லூரிகளில் பாதி தமிழ்நாட்டில் உள்ளன. பெரும்பாலான தனியார் பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகள் கிராமப் பகுதி களில் அமைந்துள்ளன. பள்ளியில் தமிழ்வழிக் கல்வி பயின்ற எண்ணற்ற கிராமத்து மாணவர் கள் அக்கல்லூரிகளில் தொழில்நுட்பக் கல்வி பயிலுகின்றனர். கணினி அறிவியலைத் தமிழ் வழிக் கற்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். அனைத்துத் தொழில்நுட்பங்களையும் தமிழில் கற்றுத் தரவேண்டும் என்கிற ஆர்வம் அரசிடமும் இருக்கிறது.

தமிழில் கணினி வெளியீடுகள்

இணையத்தில் நுழைந்த முதல் இந்திய மொழி தமிழ் மொழி. இணையத்தில் ஏராளமான தமிழ் வலையகங்கள் உள்ளன. இந்திய மொழிகளிலேயே முதன் முதலில் கணினித் தொழில் நுட்பத்துக்கென தனிப் பத்திரிகை வெளியிடப்பட்டது தமிழ் மொழியில்தான். இணையத்துக் கென்றே தனியான தமிழ் இதழும் உண்டு. கணினி அறிவியலின் அடிப்படைத் தகவல்கள் தொடங்கி இன்றைய நவீன தொழில்நுட்பத் தகவல்கள் வரை தமிழில் வெளியிடப்படுகின்

றன மைக்ரோசாஃப்ட்டின புதிய மொழியான சி# மொழிப் பாடங்கள் 'தமிழ் கம்ப்யூட்டர்' இதழில் இரண்டாண்டு முனபிருந்தே முழுமையாக வெளியிடப்பட்டன.

விண்டோஸ, யூனிக்ஸ், லீனக்ஸ், இணையம், மின்னஞ்சல், மின்வணிகம், மின்வெளிச் சட்டங்கள, சி, சி++, விசுவல் பேசிக ஜாவா, ஹெச்டிஎமஎல், கோரல் டிரா, ஃபோட்டோ ஷாப், ஆஃபீஸ் எக்ஸ்பீ, ஹார்டுவேர போனற அனைத்து தலைப்புகளிலும் தமிழ் மொழியில் ஏராளமான புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்பத்துக்கென இந்திய மொழிகளில் வேறெநத மொழியிலும் இவ்வளவு புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளனவா என்பது ஐயமே.

தமிழ் மென்பொருள்கள்

பத்திரிகைகள் புத்தகங்கள் மட்டுமின்றி, கணினித் திரைகளில் வெகுகாலந்தொட்டே தமிழ் மொழி உலாவந்துகொணடிருக்கிறது. ஏராளமான மென்பொருள் தொகுப்புகள் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன உரைத தொகுப்பான்கள் (text editor), சொல் செயலிகள் (word processors), தரவுத்தள மேலாண்மை (database management), மினனஞ்சல் (e-mail), இணைய உலாவி (web browser), கணக்கியல் தொகுப்புகள் (account packages), குழந்தைப் பாடல்கள், மாணவர்ககான பாடங்கள், வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்கள் தமிழ் கற்றுக் கொள்வதற்கான பாடஙகள், கணினி அடிப்படையிலான பாடப் பயிற்சிகள் (computer-based tutorials), பல்லூடக விளையாட்டுகள் (multimedia games) — இன்னும் இவை போன்ற மென்பொருள்கள் தமிழில் வெளியிடப்படடுள்ளன.

தமிழில் கணினிச் செய்திகள்

இன்றைக்கு தினசரி/வார/மாதப் பத்திரிகைகளில், வானொலியில், தொலைக்காட்சியில் நாள் தோறும தகவல தொழில்நுட்பத் துறை சார்பான செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. கணினி விழிப்புணரவு வேறெந்த மாநிலத்தை விடவும் தமிழ்நாட்டில் அதிகமாக உள்ளது என்று சொன்னால் மிகை ஆகாது

கணித் தமிழைத் தரப்படுத்துதல்

பேச்சுத தமிழில் நெல்லைத் தமிழ், கோவைத் தமிழ், சென்னைத் தமிழ் என்றெல்லாம் வழங்கப்படுவது போல், கணித் தமிழும் ஊருக்கு ஒரு வடிவம், நாட்டுககு ஒரு வடிவம் என்கிற நிலையைக் காண முடிகிறது அறிவியல் என்பது அனைத்தாருக்கும் பொதுவானது. அது போலக கணித தமிழும் தமிழ் பேசும சமுதாயம் எங்கும ஒன்றுபோலப் பயன்படுத்தப்பட வேண்டும தகவல் தொழிலநுட்பத தமிழக் கலைச்சொற்கள தரபபடுததப்படவேண்டிய காலகட்டத்தை எட்டிவிட்டோம என்றுதான் சொல்லவேண்டும். தமிழில் வழங்கும் சில கலைச் சொறகள் தமிழ்நாடு, இலஙகை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வேறுபடுவது தவிர்க்க முடியாதது என்பதை ஒப்புக்கொண்டாலும், ஒரே பத்திரிகையில் வெவ்வேறு பக்கங்களில் வெவ்வேறு கலைச் சொல் இடம்பெறுவதை ஏற்றுககொள்ள முடியாதல்லவா?

ஹார்டு டிஸக் என்பது நிலைவட்டு, வன்தட்டு என்றும் காம்பேக்ட் டிஸ்க் என்பது குறுவட்டு, குறுந்தட்டு, குறுநதகடு, மென்தட்டு என்று பலவகையிலும் பயன்படுத்தப்படுகிறது. ஒரே செய்தித் தாளில் வெவ்வேறு நாளில் வெவ்வேறு சொல பயன்படுத்தப்படுகிறது. வானொலியில, தொலைக்காட்சியில ஒவ்வொரு நாள ஒவ்வொரு சொல் பயன்படுத்தப்படுகிறது

பலவேறு நிறுவனஙகள சொல்செயலி போன்ற தமிழ் மென்பொருளகளை வெளியிட்டுள்ளன. ஆஙகில மென்பொருள்களில் உலகளாவிய அளவில் பயன்படுத்தப்படும File, Edit, View, Format, Print, Save, Exit, Cut, Copy, Paste, Spell Check, OK, Cancel, Browse போன்ற சொற்களுககு தாஙகள சரியென்று கருதும் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். உலகளாவிய அளவில் பயன்படுததப்படும் மென்பொருள்கள் தமிழில் வெளியிடப்படுமபோது அனைதது மெனபொருள் தயாரிப்பாளர்களும் கலைச்சொற்களை ஒன்றுபோலப் பயன்

படுத்தவேண்டும். அதற்கு அனைவராலும் ஒப்புக்கொள்ளத்தக்க தரப்படுத்தபபட்ட கலைச் சொல் களஞ்சியம் தேவை.

நிறுவனங்களின் பெயர்கள, வல்லுநர்களின் பெயர்கள், மென்பொருளின் பெயர்கள போன்ற வற்றை ஒலிபெயர்த்து எழுதும்போதும் அவரவர்க்குத தோன்றும் முறையில எழுது கின்றனர். இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர என்பது சரியா? இணடர்நெட் எக்ஸபளோரர் சரியா? ஃபாக்ஸ்ப்ரோ — ஃபாக்ஸ்புரோ, லைனக்ஸ் — லீனகஸ் — லினக்ஸ் — இன்னும் பல.

தலைபபெழுத்துச் சுருககங்களிலும் சரியான அணுகுமுறை இலலை. டி.டி.பி. (DTP), பிபிஎல் (BPL), கேபிபிஎஸ் (kbps) என்று எழுதுவது சரியாகுமா? D, T மற்றும் பி, எல் ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டவேண்டாமா?

கணித் தமிழின் முறையான வளர்ச்சிக்கு விசைபபலகை மற்றும் எழுத்துக் குறியீட்டு முறை யைத் தரபபடுத்தியது போல கலைச்சொற்களைத் தரப்படுத்தலும் கட்டாயத் தேவையாகும். உடனடித் தேவையுமாகும். இது வரை வெளியிடப்பட்டுள்ள அனைத்து கலைச்சொல அக ராதிகளையும் ஆய்வு செய்து, தரப்படுத்தப்படட கலைச்சொல அகராதி ஒன்று உருவாக்கப படவேண்டும. இதற்கான திசைவழியில் அரசோ, பலகலைக்கழகஙகளோ, தமிழ்ச சமூக அமைப்புகளோ போதுமான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை எனறே கூறவேண்டும். தமிழ் இணையமாவது இதற்கொண்டு வழிகாட்டவேண்டும்.

34

தமிழக மாணவர்களுக்குக் கணினிக் கல்வி

டாக்டர் இரா விஜயராகவன்

விரிவுரையாளர் , மொழிக் கல்வித் துறை (தமிழ்)
வட்டாரக் கல்வியியல் நிறுவனம் (Regional Institute of Education), மைசூர் 570006

முன்னுரை

தொழில்நுட்ப வசதி மட்டுமே ஒரு சமுதாயத்திற்கான கல்வியை முழுமையாக அளித்துவிடும் எனக் கூற இயலாது. கற்றல், கற்பித்தல், கல்வி மேலாண்மை ஆகியவற்றைச் செம்மையுடன் மேற்கொள்ள தொழிலநுட்ப வசதியுடன, கலவிக் கூடங்களில் தேவையான உகந்த சூழலும் நிலவவேண்டும எடுத்துக்காட்டாக 'இணைய வசதி அனைத்து மாணவர்களுக்கும் — குறிப்பாக பொருளாதாரத்தில் / சமூகத்தில பின்தங்கிய மாணவர்கள், ஊனமுற்ற மாணவர் கள் ஆகியவரகளுக்கு — கிடைக்க வாய்ப்பு உள்ளதா? அடுத்து மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வணணம் அவரது தாய்மொழியில், நம்மைப் பொறுத்த வரை தமிழில், இவ் வசதியை எநத அளவுக்கு அளிக்க இயலும்? உடன்நிகழ் மொழிபெயர்ப்பின் (online transla tion) வழியே தமிழ் உட்பட எல்லா இந்திய மொழிகளிலும் இணைய வசதியை அளிக்க இயலும் எனறாலும் நம் நாட்டைப பொறுத்த வரை இன்னும் எவ்வளவு காலத்திற்கு வலை மொழியாக (web language) ஆங்கிலம மட்டுமே விளங்கும் எனத் தெரியவில்லை. எனவே தொழில்நுட்ப வசதியைக் கல்வித் துறையில் வெற்றிகரமாகப பயன்படுத்துவதற்கு, முக்கிய மான சில கல்விச் சூழல்கள் தேவை என்பதை நாம் உணரவேண்டும்.

தொழில்நுட்ப வசதியுடன் கூடிய வளமான கல்விச சூழலை நிறுவுவதற்கு என்னென்ன வழி முறைகளை மேறகொள்ளவேண்டும் என்பது பறறி ஆசிரியர்கள், தொழிலநுட்ப வசதிகளைத் திட்டமிடுவோர, ஆசிரியர பயிற்சி நிறுவனஙகள, கல்வியாளர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து சிந்திககவேணடும்; அதற்கான பணிச் சட்டங்களையும் (frameworks), தர அளவுகளையும் (standards) அவர்கள் உருவாக்கித் தரவேண்டும். இவ்வாறு உருவாக்கப்படும் கல்விச் சூழல், தொழில்நுடப வசதியைக கற்கும் செயலில முழுமையாகப் பயன்படுத்தும் வகையிலும், பின்னர கற்ற கலவியைக கொண்டு வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்க்கக் கூடிய ஆற்றலை மாணவர்களுக்கு அளிக்கக கூடிய வகையிலும் அமையவேண்டும். இதற்குக் கல்வியின் பாடப் பொருளும், அதனோடு தொடர்புடைய கல்வித் தொழில்நுட்பத் திறன்களும் (Educational Technology skills) ஒன்றிணைக்கப் பெறுவது முக்கியம்.

புதிய கல்விச் சூழலை நிறுவுதல்

இன்றைய தொழிற்கூடஙகளிலும் பணிச் சூழலிலும் பொருளீட்டுவதற்குத் தேவையான திறனகளை மரபு வழிபபட்ட கல்வி முறைகள மாணவர்களுக்கு வழங்கும் என்று சொல்வதற் கில்லை. பிரச்சினைகளுக்குத தீர்வு காணும் வழிமுறைகள் மற்றும உத்திகளைக் கற்றுக் கொளளவும மற்றவரகளுககுக கற்பிக்கவும இணைநது பணியாற்றவும் நடைமுறைப்படுத்தவு மான ஆற்றலை கலவிச் சூழல் மாணவர்களுக்கு வழங்கவேண்டும். சுருங்கக் கூறுவதெனில் மாணவர்களின் வளமான எதிர்காலத்தைக் கருத்தில் கொணடு அதற்கான உத்திகளையும்

கருவிகளையும் உள்ளடக்கியதாக கல்விச் சூழல் அமையவேண்டும் மரபுவழிப்பட்ட இன்றைய கல்விச் சூழலும், புதிய கல்விச் சூழல் எவ்வாறு அமையவேண்டும் என்பதை கீழ்க் கண்ட அட்டவணை தெரிவிக்கிறது:

மரபுவழிப்பட்ட கல்விச் சூழல்	அமையவேண்டிய புதிய கல்விச் சூழல்
ஆசிரியருக்கு முக்கியத்துவம் தரும் கல்வி	மாணவர்களை மையப்படுத்திய கல்வி
ஒரு புலன் தூண்டல்	பல் புலன் தூண்டல்
ஒரு வழி முன்னேற்றம்	பல வழி முன்னேற்றம்
ஓர் ஊடகம் வழி கற்றல்	பல்லூடக வழி கற்றல்
தனிமைப் பணி	கூட்டுப் பணி / தோழமைப் பணி
தகவல் திணிப்பு	தகவல் பரிமாற்றம்
எதிர்விளைவுத் துலங்கல் (Reactive response)	திட்டமிட்ட துலங்கல் (Planned response)
செயற்கைச் சூழல்	உறுதியான, நம்பத்தகுந்த, இயற்கைச் சூழல்
ஏட்டுக் கல்வி	ஆராய்ச்சிக் கல்வி

இன்றையக கல்விச் சூழல் காலத்திற்கேற்ற பாடத் திட்டங்களை உள்ளடக்கியதாயும் தனி மாணவர் தேவைகளை நிறைவு செய்வதாகவும் அமைதல் இன்றியமையாதது. எனவே கற்கும் சூழல் ஒவ்வொரு தனி மாணவரையும கீழ்க்கண்டவற்றிற்கு ஆயத்தப்படுத்துவதாக அமைதல் முக்கியம்.

- தகவல் தொடர்பில் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்துதல்
- பல்வேறு வழிகளில் தகவல்களைப் பெறுதல் மற்றும் பரிமாற்றம் செய்து கொள்ளல்.
- தகவல்களைத் திரட்டுதல், ஒழுங்குபடுத்தல், பகுத்தல் மற்றும் தொகுத்தல்
- திரட்டிய தகவல்களிலிருந்து ஒரு முடிவுக்கு வருதல் மற்றும் பொதுமை காணல்
- பொருளுணர்ந்து கற்றல் மற்றும் தேவைக்கேற்ற கூடுதல் தகவல்களைப் பெறுதல்
- தாமே கற்கும் ஆற்றலைப் பெறுதல்
- கூட்டு முயற்சிகளில் பங்கேற்றுத் துணை நிற்றல்
- ஒழுக்கத்துடனும், நீதிநெறியுடனும் பிறருடன் உறவாடுதல்
- வேலைவாய்ப்புக்குத் தகுதி பெறுதல்

தொழில்நுட்பத்தை முறையாகவும் வெற்றிகரமாகவும் பயன்படுத்துவது வளமான கல்விச் சூழலை உருவாக்கும் என்பதோடு, சமுதாயத்தின் சிறந்த குடிமக்களை உருவாக்கவும் வழிவகுக்கும் என்பதில் எவ்வித ஐயமும் கொள்ளத் தேவையில்லை.

கணினிக் கல்வியின் பண்போவியம் (Profile of Computer Education)

மாணவர்களுக்கான கணினிக் கல்வியின் தரப் பண்புகளை (standards) ஆறு பெரும் பிரிவு களாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பெரும் பிரிவையும் மாணவர்கள் சிறப்புடன் கறகும் வண்ணம் அவைகளுக்குத் தரப் பண்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு, அவை வலிமையூட்டப் பெறவேண்டும். ஆசிரியர்கள் இவற்றை வழிகாட்டிகளாகக் கொண்டு தொழில்நுட்ப அடிப் படையில் செயல்முறைகளைத் திட்டமிடலாம. இச்செயல்முறைகளைக் கற்பதன் வாயிலாக, மாணவர்கள் நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் தொலைத் தொடர்புத் திறன்களையும் அடைவதில் வெற்றிபெற வழியுண்டாகும்.

மாணவர்களுக்கான தொழில்நுட்பத் தரப் பண்புகள் (Technology Standards for Students)

1. அடிபபடைக் கோட்பாடுகளும் செயல்முறைகளும்

(அ) தொழிலநுட்பக் கருவிகளின் இயல்பையும் செயல்முறைகளையும் மாணவர்கள் நனகு புரிந்துகொள்ளுதல்

(ஆ) தொழிலநுட்பப் பயன்பாட்டில் மாணவர்கள் முழுமையான திறனைப் பெறுதல்

2 மானிட, சமூக, நனனெறிப பிரச்சினைகள்

(அ) தொழில்நுடபத்துடன் தொடர்பு கொண்ட சமூக, பண்பாட்டுப் பிரச்சினைகளை மாணவர்கள் புரிந்துகொள்ளல்

(ஆ) தகவல், மென்பொருள், தொழில்நுட்பக் கருவிகளை மாணவர்கள் சமூகப் பொறுப்புடன் பயன்படுத்துதல

(இ) வாழ்நாள் முழுதும கறறல், இணைநது பணியாற்றுதல், உறபத்திப் பெருக்கம், தனி மனித வளரச்சி ஆகியவற்றில் தொழில்நுட்பப் பயன்பாட்டை மாணவர்கள் வளர்ததுக் கொளளுதல்

3. உறபத்திககான தொழில்நுட்பக் கருவிகள .

(அ) கறறல், உற்பத்திப் பெருககம், படைப்பாக்கத் திறன் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் மாணவர்கள் தொழில்நுடபக் கருவிகளைப் பயன்படுத்தல்

(ஆ) தொழில்நுட்ப அடிப்படையிலான மாதிரிகளை வடிவமைக்கவும் வெளியீடுகளை உருவாக்கவும் படைபபாற்றலை வளரக்கவும் உற்பத்திக் கருவிகளை மாணவர்கள் பயனபடுததுதல்

4. தகவல் தொடர்புக்கான தொழிலநுட்பக கருவிகள்

(அ) மாணவரகள் தம் தோழர்களுடனும் துறை வல்லுநர்களுடனும் மற்றவர்களோடும் தொலைத தொடர்பு வசதியைப் பயன்படுத்தித் தொடர்பு கொண்டு உறவாடுதல்

(ஆ) பல வகை ஊடகஙகளையும் அமைபபுகளையும் பயன்படுத்தித் தகவல்களையும் கருத்துகளையும் பற்றிய கலநதுரையாடலை விரும்புவோருடன் மேற்கொள்ளல்

5. ஆராய்ச்சிக்கான தொழிலநுடபக் கருவிகள்

(அ) தொழிலநுட்பத்தைப பயன்படுத்திப பல்வேறு ஆதாரங்களிலிருந்து, மாணவர்கள் தகவலகளைக் கணடறிந்து, தொகுத்து, மதிபபீடு செய்தல்

(ஆ) தொழில்நுட்பக கருவிகளைப் பயனபடுத்திக் கிடைத்த தரவுகளை மாணவர்கள் ஆய்வு செயது முடிவுகளைப் பெறுதல

(இ) மதிப்பீடு செய்தல், புதிய ஆதாரங்களைத் தெரிவு செய்தல், தேவைக்கேற்ப தொழில்நுட்பப் புதுமைகளை மேற்கொள்ளல் ஆகியவற்றை மாணவர்கள் கடைபிடித்தல்

6. பிரசசினைகளுககுத் தீர்வு காணல், முடிவெடுத்தல் ஆகியவற்றிற்கான தொழில்நுட்பக் கருவிகள்

(அ) பிரசசினைகளுக்குத் திரவு காணவும் சீரான முடிவெடுக்கவும் மாணவர்கள் தொழில்நுட்ப ஆதாரங்களைப பயன்படுத்துதல்

(ஆ) நடைமுறை வாழ்க்கையில் பிரச்சினைகளுக்குத தீரவு காணும பொருட்டு உகந்த தொழில்நுட்ப வழிமுறைகளை மாணவர்கள் பயன்படுத்துதல்

பாடத்திட்ட வடிவமைப்பு (Designing a Syllabus)

மேற்கூறிய தரப் பண்புகள் அனைததையும் உள்ளடக்கிய தொழில்நுட்பச் சூழலை மாணவர் களிடம வளர்க்கவேண்டுமெனில், உரிய பாடத் திட்டம் வடிவமைக்கப்படவேண்டும் என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை இப்பாடத் திட்டம் பல்வகைப்பட்ட மாணவர்களின் தேவைகளையும் நிறைவு செய்வதாய் இருத்தல வேண்டும. நடுவண் அரசால் நடத்தப் பெறும பள்ளிகளிலும (Central Schools) நவோதயா பள்ளிகளிலும் கணினிப் பாடத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு நடைமுறைபடுததப்பட்டு வருகினறன. காலத்திறகேறப, தேவைக்கேற்ப அவற்றில் மாறுதலகளும் செய்யப்பட்டு வருகின்றன. எது எவ்வாறு இருப் பினும் பாடத் திட்டம் முன்னர் கூறப்பட்ட ஆறு தரப் பண்புகளை உள்ளடக்கி இருத்தல இன்றியமையாததாகும். பல்வேறு வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு உரிய கணினிப் பாடத் திட்டம் பொதுவாக எவ்வாறு அமையலாம் எனபது இங்கே தரபபடுகிறது இஃது ஒரு ஆலோசனையே தவிர முடிந்த முடிபல்ல, எனவே இது விவாதத்திறகும் மாற்றத்திறகும் உரியது.

பாடத் திட்டம்

1 முதல் 3ஆம் வகுப்பு வரை:

1. கணினி அறிமுகம்
2. கணினியின் மிக முக்கிய பகுதிகள்
3. பொருள்களை (பழம், காய், மரம், விலங்கு போன்றவற்றை) அறிந்துகொள்ளுதல்
4. எண்களைக் கற்றல்
5. எழுத்துகளைக் கற்றல்
6. வண்ணங்களை அறிதல்
7. வரைதல்
8. வடிவங்களை அறிதல்
9. குரல்களை அறிந்துகொள்ளல்
10. விண்டோஸ் (Windows) பற்றிய அறிமுகம்
11. வேர்ட்பேட் (WordPad)-ஐப் பயன்படுத்தி சொற்செயலி (WordProcessing) அறிமுகம்
12. பிசி—லோகோ (PC-logo) வில் செயல் வரைவு (programming) அறிமுகம

4 மற்றும் 5ஆம் வகுப்புகள்

1. கணினி இயக்கங்கள்
2. விண்டோஸில் பணியாற்றுதல்
3. எம்.எஸ். வேர்ட் (MS Word) இல் பணியாற்றுதல்
4. எக்செல் (Excel) பயன்பாடு (எடுத்துக்காட்டு பாட அட்டவணை தயாரித்தல்)
5. பிசி—லோகோவில் செயல் வரைவு
6. பல்லூடகம், இணையம் (multimedia, Internet) அறிமுகம்

7. ஊடாட்ட முறையில் கல்வி மென்பொருள்களைப் (interactive educational software) பயன்படுத்தி வகுப்பில் பல்வேறு பாடங்களைக் கற்பித்தல்
8. தகவல் பரிமாற்றம், கலந்துரையாடல், விநாடி—வினா போன்ற நிகழ்ச்சிகளை மேற் கொண்டு மாணவர்களின் தகவல் தொடர்புத் திறன்களை வளர்த்தல்
9. பல்வேறு கணினிச் செயல்பாடுகளைப் பயன்படுத்தி மாணவர்களின் படைப்பாற் றலை ஊக்குவித்தல்
10. மாதிரிகளை வடிவமைத்து, உருவாக்கி கண்காட்சிகளில் பார்வைக்கு வைத்தல்
11. கோடை விடுமுறை வகுப்புகளை நடத்துதல்

6 ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை

1. விண்டோஸ் 98/எம்இ/எக்ஸ்பி (Windows 98/Me/XP)
2. கோப்புகள் மற்றும் கோப்புறைகள் (Files and Folders)
3. வலையமைப்பாக்கம் (Networking)
4. வட்டு இயக்க அமைப்பு (Disc Operating System)
5. பவர் பாயிண்ட் (PowerPoint)
6. அக்சஸ் (Access)
7. ஊடாடட முறையில் கல்வி மென்பொருள்களைப் (interactive educational software) பயன்படுத்தி வகுபபில் பல்வேறு பாடங்களைக் கற்பித்தல்
8. பிற பள்ளிகளுடன் மின்—அஞ்சல் (e-mail) வழி தொடர்பு கொள்ளல்
9. இணையக் குழு (Internet club) அமைத்தல்
10. கணினி வினா—விடை நிகழ்ச்சிகளை பள்ளிக்குள்ளும் பள்ளிகளுக்கிடையேயும் நடத்தல்
11. கணினியில் செயல்முறைத் திட்டப் பணிகளை (project works) மேற்கொள்ளல்.
12. பல்லூடகக் குழு (multimedia team) அமைத்தல்

9 மற்றும் 10ஆம் வகுபபுகள்

1. ஒளிக்காட்சி வழி கலந்துரையாடல் (videoconferencing) அறிமுகம்
2. கணினி நச்சு நிரல (virus)
3. அக்சஸ் செயல்வரைவு
4. பல்லூடகப பயன்பாடுகள்
5. பள்ளி இதழ் தயாரித்தல் (பேஜ் மேக்கர், கோரல் டிரா ஆகியவற்றைப் பயன்படுத்தல்)
6. கணக்கு பாடப் பகுதியை ஒட்டிய நெறிமுறைகள் (algorithms), பாய்வுப் படங்கள் (flowchart) ஆகியவற்றை உருவாக்குதல்
7. ஊடாட்ட முறையில் கல்வி மென்பொருள்களை (interactive educational software) பயன்படுத்தி இயற்பியல், உயிரியல், வேதியியல் பாடங்களைக் கற்பித்தல்
8. கணினி வன்பொருள்களின் (hardware) அறிமுகம்

கணினிக் கல்விக்கு இன்றியமையாதவை

கணினிக் கல்வி சிறப்புடன் செம்மையாக நடைபெறுவதற்குக் கீழ்க்கண்டவை இன்றியமை யாத தேவைகளாகும்.

1. கணினிக் கல்விக்கான குறிக்கோள்
2. ஒவ்வொரு வகுப்பிற்கும் உரிய பாடத் திட்டம்
3. பாடத் திட்டத்திற்கு உறுதுணையாக இருக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட பாட நூல்கள்
4. ஆசிரியர்களுக்குரிய செம்மையான வழிகாட்டி நூல்கள்
5. பள்ளிகளுக்குரிய சிறந்த வழிகாட்டி நெறிமுறைகள்
6. சரியான மதிப்பீட்டு (evaluation) முறை

அடுத்து மாணவர்களுக்கு மேற்கூறிய பாடத் திட்டம் முழுமையான கவனத்துடன் கற்பிக்கப் பெற்றால் பத்தாம் வகுப்பு முடிந்தவுடன் அவர்கள் சுய வேலைவாய்ப்பு அல்லது பகுதிநேர வேலைவாய்ப்பு பெறுவதற்கு வழியுண்டாகும் என நம்பலாம். இப்பாடத் திட்டத்தில் நன்கு தேர்ச்சி அடைந்த மாணவர்கள் செயல்வரைவு உத்திகளையும் (programming techniques) புரிந்துகொள்வர்; மேலும் பல்லூடக வடிவமைப்பு (multimedia designing), வலைப்பக்க வடிவமைப்பு (webpage designing), மேசைப் பதிப்பு முறை (DTP) ஆகியவற்றையும் எளிதாகக் கற்றுக்கொள்ள இயலும்.

பாடநூல்கள் மற்றும் வழிகாட்டி நூல்கள்

பாடத் திட்டத்தை ஒட்டி மாணவர்களுக்குப் பாடநூல்களும், ஆசிரியர்களுக்கு வழிகாட்டி நூல்களும் வெளியிடப்படவேண்டும். இவை இரண்டும் இன்றியமையாத தேவைகளாகும். ஆசிரியர்களுக்கான வழிகாடடி நூல்களில் கீழ்க்கண்டவை இடம் பெற்றிருததல் நலம்.

- பாடத் திட்டத்தை ஒடடி மாணவர்களுக்குக் கற்பிக்கப் பெறும் அனைத்து மென் பொருள்களைப பற்றிய விளக்கம்.
- தகவல் தொழில்நுட்ப உலகில் ஆர்வத்தைத் தூண்டும் தலைப்புகள், நூல்கள் பற்றிய விவரம்
- ஆண்டு முழுமைக்கும் ஒவ்வொரு வகுப்புக்கும் கற்றுத் தரவேண்டிய பாடத் திட்ட விவரங்கள்
- அனைத்து வகுப்புகளுக்கும் உரிய பாடத திட்டத்தை ஒட்டிய வினா—விடை வங்கி

கணினிக் கல்விப் பாடத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

ஏற்கனவே சுமை மிகுந்த கல்வித் திட்டத்தில் கணினிக் கல்வியையும் சேர்ப்பது மாணவர் களின் கல்வி சுமையை மிகுதியாக்காதா? இந்நிலையில் கல்வித் தரத்தைப் பராமரிப்பது எங்ஙனம்? மாணவர்களின் தரத்தை உயர்த்துவது, திறன்களை வளர்ப்பது எபபடி? இவை யெல்லாம் கல்வியாளர்கள் முன் வைக்கப் பெறும் வினாக்கள். எச்சரிக்கையுடன தீர்வு காண வேண்டிய வினாக்கள் இவை. கணினிக் கல்வியை மாணவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்க வேண்டும்; சலிப்பையும் அச்சத்தையும் அவர்களுக்குத் தரக கூடாது; பல்வேறு துறைகளில் மாணவர்களின திறன்களை வளர்ப்பதாக கணினிக் கல்வி அமையவேணடும். ஆர்வ மிகுதி யினால் கணினித் துறையில் உயர்நிலைச் செயல்வரைவுகளை (high level programming) மேற் கொள்ளும் பணியை மாணவர்களிடம் திணிக்கக் கூடாது. இது கணினி வல்லுநர்கள் மேற் கொள்ளவேண்டிய செயல்.

பள்ளி மாணவரகளுக்குக் கணினிக் கல்வியை எளிதாகவும் சிறப்பாகவும் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதைச் சில எடுத்துக்காட்டுகளுடன் சிந்திப்போம்.

ஒரு பள்ளியில் 3 முதல 10ஆம் வகுப்பு வரை, ஒவ்வொரு வகுப்பிலும் இரு பிரிவுகள் (sections) கொண்ட, 16 பிரிவுகளில் படிக்கும் மாணவர்களுக்குக் கணினிக் கல்வி அளிப்பதாகக் கொளவோம். மற்றொரு பள்ளியில அதே 3 முதல் 10ஆம் வகுபபு வரை, ஒவ்வொரு வகுப்பிலும் மூனறு பிரிவுகள் கொண்ட 24 பிரிவுகளில் படிக்கும் மாணவர்களுக்குக் கணினிக் கலவி அளிப்பதாகக கொள்வோம்.

ஒரு நாளைக்கு 8 பாடவேளைகள் (periods) வீதம் வாரத்திற்கு ஐந்து நாள் பணியாற்றும் பள்ளியில வாரத்திற்கு 40 பாடவேளைகளும் ஆறு நாள் பணியாற்றும் பள்ளியானால் 48 பாடவேளைகளும் கணினிக் கூட (computer laboratory) வகுப்புகள் கிடைக்கும். 16 பிரிவுகள் கொண்ட பள்ளியில் ஒரு பிரிவுக்கு ஒரு வாரத்தில் இரண்டு பாடவேளைகள் வீதம் 32 பாடவேளைகள் போதுமானது. வாரத்தில் ஐந்து அல்லது ஆறு நாள் பணியாற்றும் எல்லாப் பள்ளிகளிலும 32 பாடவேளைகள கிடைப்பதில் சிக்கல் ஏதுமில்லை.

24 பிரிவுகள் கொண்ட பளளியில் ஒரு பிரிவுக்கு ஒரு வாரத்தில் இரு பாடவேளைக் கணினிக கல்வி வீதம 48 பாடவேளைகள் தேவைப்படும். வாரத்தில் ஆறு நாள் பணியாற்றும் பள்ளியில் இந்த 48 பாடவேளைகள் கிடைப்பதால் பிரச்சினை ஏதுமில்லை. ஆனால் ஐந்து நாள் பணியாறறும் பள்ளியில் 40 பாடவேளைகள் மட்டுமே கிடைப்பதால் சிக்கல் எழக் கூடும். தகுந்த முறையில் கணினிக் கூடத்தைப் பயன்படுத்தினால் இச்சிக்கலைத் தீர்த்திடலாம். எடுதது்ககாட்டாக, கணினி தொடர்பான தெரிவியல் (theory) கருத்துகளை வகுப்பறையிலேயே கறபிககலாம். பள்ளி முதல்வரும் கணினி ஆசிரியர்களும் ஒருங்கிணைந்து இச்சிக்கலைத் தீர்ப்பது எளிது.

ஏற்கனவே குறிப்பிட்டது போல, நடுவண் அரசு பாடத் திட்டத்தைப் பின்பற்றும் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில ஏறக்குறைய இதே முறையிலான கணினிக் கல்வி, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதற்காக அப்பள்ளி நிர்வாகங்களை பாராட்டவேண்டும்.

கணினிக் கல்வியில் மதிப்பீடு (Evaluation)

மாணவரகளுக்கு அசசமூட்டாததாய், நெகிழ்ச்சியுடன் கூடிய, நட்பு முறையுடன் கூடிய முழுமையான தொடர் மதிப்பீட்டு முறை (continuous and comprehensive evaluation system) பின்பறறப்படவேண்டும்.

- மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை உடன்நிகழ் தேர்வு மட்டுமே (online test) நடத்தப் பெறலாம்.
- ஆறு முதல் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு உடன்நிகழ் தேர்வோடு, புறவயச் சோதனைகளையும் (objective based tests) நடத்தலாம்.

கணினிக் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆதாரங்கள்

புதிதாக கணினிக் கல்வியை துவக்கப் போதுமான எல்லா வசதிகளும் சில பள்ளிகளில் இருக்கலாம்; பலவற்றில் இல்லாமலும போகலாம். கணினி மென்பொருள்கள், வன்பொருள்களை வாஙக சில லடசஙகளாவது தேவைபபடும். இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அதே வேளையில் கீழ்க்காணும கருத்துகளுக்கும முக்கியத்துவம் தரவேண்டியுள்ளது.

1. கணினி அமைப்புகளைப் பராமரித்தல்

கணினிகளைப் பராமரிபபது எனபது மிகவும் இன்றியமையாத, பொறுப்பு வாய்ந்த செயலாகும். இதற்குத தகுதி வாயந்த முழுநேர அல்லது பகுதிநேர கணினிப் பொறியாளர்கள் தேவை. கணினியின் தேவை பள்ளியில நாள் முழுதும் இருப்பதால் பழுதற்ற கணினிச் சேவை மிக முக்கியமானதாகும்.

2. கணினிகளை மேம்படுத்துதல்

கணினி மேம்பாடு என்பது நாளுக்கு நாள் வளர்ந்து வருவதாகும்; இன்று வாஙகிய கணினி யின் அமைப்புகள் அடுத்த ஆண்டு பழையதாகிப் போவது அனைவரும் அறிந்ததே. இந்நிலை சலிப்பையும் வெறுப்பையும் தருவதோடு, பணச் செலவுக்கும வழிவகுக்கிறது, ஆனால் கணினியை மேம்படுத்தாமலும் இருகக இயலாது. எனவே கணினிக் கலவிக்குத் திடடமிடும் போதே, கணினி மேம்பாட்டுக்கு என்றும் பண ஒதுக்கீடு செய்யவேண்டியுள்ளது.

3. தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் நியமனம்

கணினியில் பொருளறிவும் கற்பிக்கும் திறனும் பெற்ற தகுதி வாய்நத ஆசிரியர்களைப் பணிக்கு அமர்த்தவேண்டுவது இன்றியமையாததாகும். தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் கிடைப் பது என்பது அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தைப் பொறுத்தது என்பதும் மறுக்க வியலாத உண்மை.

4. பாடத் திட்ட வடிவமைப்பும் பாடநூல்கள் மற்றும் கல்விப் பொருள்கள் உருவாக்கமும்

நடுவண் அரசும் பல மாநில அரசுகளும் மிகச சிறந்த பாடத் திட்டங்களை வடிவமைத்து வெளியிட்டுள்ளன. பள்ளிகளும் தகுந்த பாடநூல்களைக் கண்டறிந்து பயன்படுத்த இயலும். கணினித் துறையில் இன்று மிகச் சிறந்த நூல்கள கிடைக்கின்றன. அரசும் பல தனியார் நிறுவனங்களும் பாடத் திட்டதிற்கேற்ற பாடநூல்களைத் தயாரித்து வெளியிட்டு வரு கின்றன. தகுந்தவற்றைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தலாம.

5. முதலீட்டில் இழப்பு

பள்ளியினால் முதலீடு செய்யப்படும் பணத்திற்கு வட்டி வராது; மேலும் இழப்பும் கூடிக் கொணடே போகும். இது அரசுப் பள்ளிகளின் நிலை. தகுதியான தனியார் நிறுவனங்களை அரசுப் பள்ளியின கணினிக் கல்வியில் ஈடுபடுத்துவதன் வாயிலாக இவ்விழப்புகளைத் தவிர்க்கலாம். அரசு உதவி பெறாத தனியார்ப பள்ளிகளின் நிலை வேறு; அதைப பற்றி இங்கே பேசப்படவில்லை

கணினிக் கல்வித் திட்டத்தை நிறைவேற்றுதல்

இன்றுள்ள நிலையில், கணினிக் கல்வித் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை முழுதும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்பபதில் பயனில்லை அரசு சாரா நிறுவனங் களிடம் பொறுப்பை ஒப்படைப்பது தவிரக்க இயலாது என்றே தோன்றுகிறது மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், தனியார் நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகிய பலரும் ஒருங்கிணைந்து இபபொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும அனைவரும் கணினிக் கல்வித் திட்டத்தில் பங்கேறபதன் வாயிலாக தேவைக்கேற்ற தரமான கல்வி வழங்க முடியும் என்ப தோடு, தவறு நேரா வண்ணம் மேற்பார்வையிடவும் கூடும்; மேலும் ஒரு சிறந்த திட்டத்தை நடைமுறைப்படுததுவதில் சமூகத்தின் ஈடுபாடும பொறுபபுணர்வும் மிகுதியாகும்.

கணினிக்குத் தேவையான வன்பொருள்கள்/மென்பொருள்கள்

நம் நாட்டைப் பொறுத்த வரையில் அனைத்துப் பள்ளிகளிலும் கணினிக் கல்வியைத் தருவதில் அரசையே முழுமையாக நம்பாமல் தனியார் துறையையும் ஈடுபடுத்தல் தவிர்க்க இயலாது என்று பார்த்தோம் கணினிக் கல்விக்கான ஆதரவைப் பெறுவதிலும் கணினி அமைப்பை மேமபடுத்துவதிலும் தேவையான வனபொருள்களைப பெறுவதிலும் யுனெஸ்கோ போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் உதவியை அரசின் அனுமதியோடு பெற வியலும். இண்டெல் போன்ற நிறுவனங்கள் இப்போதும் அத்தகைய உதவிகளைச் செய்து வருகின்றன

கணினி மென்பொருள்களைப பொறுத்த வரை இரு பிரச்சினைகள் உள்ளன. ஒன்று, அவை கூடுதலான விலையுள்ளவை. மற்றொன்று அவை சட்டச் சிக்கலையும் உண்டாக்குபவை. எனவே மென்பொருள்களைப் பெறுவதில் அரசு மற்றும் கல்வித் துறையினரின் உதவியை

பளளிகள் நாடலாம். அரசே மென்பொருள்களைத் தருவித்து வழங்கலாம், அல்லது பள்ளி களுககு மானியம் வழங்கி தேவையான மென்பொருள்களைப் பெறுவதில் உதவி செய்யலாம்.

பயிற்றுமொழி

கணினி மறறும் தகவல் தொழில்நுட்பத் துறையிலும் கூட பயிற்றுமொழியாகத் தாய்மொழி அல்லது மாநில மொழி இருப்பதே சிறந்தது. இவ்வாறு கூறுவதால் ஆங்கிலத்தை முழுமையா கப் புறககணிக்கவேண்டும் அல்லது நீக்கிவிடவேண்டும என்று பொருளல்ல. உலகின் எல்லா வளர்ந்த நாடுகளிலும் தாய்மொழிதான் கணினித் துறையிலும் பயிற்றுமொழியாக விளங்கு கிறது. கணினித் துறையிலும் தகவல தொழில்நுட்பத் துறையிலும பெரும் வளர்ச்சி பெற்றுள்ள ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, சீனா, ஜபபான், கொரியா ஆகிய பல்வேறு நாடுகளிலும் அவரவர நாட்டு மொழிகளதான் கணினித் துறையிலும் கோலோச்சி வரு கின்றன. தமிழைப் பொறுத்த வரை பாடத் திட்டம் வகுத்துத் தருவதற்கும் பாடநூல்கள் மற்றும் வழிகாட்டி நூல்கள் எழுதுவதற்கும் பல தகுதி வாய்ந்த அறிஞர்கள் உள்ளனர்; கணினிக கலவியைத் தமிழில் கற்பிபபதற்கும் கூடப பலர ஆயத்தமாக உள்ளனர். தகவல் தொழிலநுட்ப நூல்களையும் இதழ்களையும் மிகுதியாக வெளியிடுகின்ற இந்திய மொழிகளுள் ஒன்றாகத தமிழ விளங்குகிறது. இணையப் பயன்பாட்டில் ஆங்கிலத்திற்கு அடுத்த இடத்தில் தமிழ் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே பள்ளிக்கூட அளவில் கணினிக் கல்வியில் தமிழை பயிறறுமொழியாகப் பயன்படுத்துவதில் எவ்வித இடர்ப்பாடும் இருப்பதற்கில்லை.

தொகுப்புரையும் பரிந்துரைகளும்

1. தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினிக் கல்வியை நடைமுறைப்படுத்துவதில் தனியார் துறையின் ஈடுபாடு தவிர்க்க இயலாதது.
2. கணினிக் கல்வி கூடுதலான செலவுக்கு வழிவகுக்கும் ஒரு துறை.
3. மாணவர்களும் பெற்றோர்களும் செலவுத் தொகையில் பங்கேற்பது தவிர்க்க இயலாதது; அரசு ஓரளவுக்கு உதவித் தொகை வழங்கலாம்.
4. கணினிக் கல்வியை எல்லாப பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்த பல ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்கவேண்டும்; அரசே இவர்கள் அனைவருக்கும் ஊதியம் வழஙகி, பணிப் பாதுகாப்பு அளிக்கும் என்று கூறுவதற்கில்லை. இந்நிலையில் பள்ளிகள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியை நாடுவது தவிர்க்க இயலாதது.
5. தகவல தொழில்நுடபக் கருவிகளின் பராமரிப்பிலும் மேம்பாட்டிலும் கூட மேற் கூறியோரின் ஆதரவு தேவைப்படும்.
6. கணினி:மாணவர் விகிதம் 1:3 அல்லது 1:4 என்ற அளவிலேயே இருக்கவேண்டும்.
7. ஒவ்வொரு ஆசிரியருக்கும் வாரத்திற்கு 28 முதல் 32 பாடவேளைகள் தரப் படலாம்.
8. ஆசிரியர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தவும் அவர்கள் புத்தறிவு பெற வும் பணிமனைகள் (workshops) மற்றும் கருத்தரங்குகள் (seminars) அவ்வப்போது நடத்தப் பெறவேணடும.
9. தனியார் நிறுனத்தின் உதவியுடன் சிறந்த கணினிக்கூட ஆய்வகங்களை நிறுவ லாம்.
10. தேவையான பயிறசிக் கருவிகளைக் கணினிக் கூடத்தில் நிறுவவேண்டும்.
11. தகவல் தொழில்நுட்பம், கணினிக் கல்வி தொடர்பான நூல்களைக் கொண்ட நூலக வசதி மாணவரகளுக்கு அளிக்கப்படவேண்டும்.

12. கணினி தொடர்பான செயல்முறைப் பயிற்சியில் ஈடுபட மாணவர்களுக்கு வாய்ப் பளிக்கவேண்டும்.

13. பள்ளிக்கூடத்திற்குள்ளும் பள்ளிக்கூடங்களுக்கிடையிலும் கணினி தொடர்பான வினாடி வினா நிகழ்ச்சிகள், பல்வகைப் போட்டிகள் ஆகியன உடன்நிகழ் (online) முறையிலும் மரபு வழிப்பட்ட முறையிலும் நடத்தப பெறலாம்.

14. தேர்வுகள், மதிப்பீட்டு முறைகள் ஆகியன உடன்நிகழ முறையிலும் மரபுவழிப் பட்ட முறையிலும் நடத்தப்பெறலாம.

15. தாய்மொழியையும் ஆங்கிலத்தையும் தேவைக்கேற்ப கணினிக் கல்வியில் பயன் படுத்தலாம்.

16. கணினிக் கல்விக்கான செலவினங்கள் பற்றிய அட்டவணை ஒன்று அடுத்த பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

துணை நின்ற நூல்கள்:

1. Anderson, P.N.1986. **Management Information Systems and Computers.** Basingstoke: Macmillan.

2. Correll, J. 1992. **Outcomes of Using Computer Simulations.** Journal of Research on Computing in Education.

3. Daniel, N.C.1993. **Information Technology: The Management Challenge.** Workingham: Addition Wesley.

4. Young, M.E. 1993. **Instructional Design for Situated Learning.** Educational Technology Research and Development.

கணினிக் கல்விக்கான செலவுத் தொகைப் பகுப்பு

வ. எண்	எண்ணிக்கை					
	மாணவர்	பிரிவுகள்	பாடவேளைகள்	ஆசிரியர்கள்	கணினிகள்	ஒரு கணினிக்கு எத்தனை மாணவர்
1	500	15	30	2	6	3—4
2	1,000	25	50	3	12	3
3	1,500	35	70	4	18	3

வ. எண்	செலவினங்கள் (ரூபாயில்)					
	கணினிகள்	ஆசிரியர் ஊதியம் (3 ஆண்டுகளுக்கு)	பராமரிப்புச் செலவு	15% வட்டி 3 ஆண்டுக ளுக்கு	மொத்தச் செலவு	ரூ 35 வீதம் மாணவர் செலுத்தும் கட்டணம்
1	2,00,000	3,90,000	40,000	1,10,000	7,40,000	6,30,000
2	3,50,000	6,00,000	70,000	1,90,000	12,10,000	12,60,000
3	5,50,000	8,00,000	1,10,000	2,90,000	17,50,000	18,90,000

குறிப்பு: மேறகண்ட அட்டவணை கீழ்க்கண்ட சில கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிககபபட்டது.

(அ) எல்லா செலவினங்களும் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கானவை; எந்த ஒரு தனி யார் நிறுவனமும் மூனறாண்டுக்குக் குறைவாகப் பொறுப்பேற்று நடத்த முன்வராது.

(ஆ) ஆசிரியா ஊதியம மாதத்திற்கு ரூ 5000/- வீதமும், ஆணடொன்றுக்கு 10% ஊதிய உயர்வும சேர்த்துக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆசிரியர் நியமனஙகளை ஒரு குழுவின் கண் காணிபபுடன மேறகொள்ளலாம.

(இ) மாணவர் கட்டணம் ரூ. 35/- வீதம் கணக்கிடப்பட்டுள்ளது. திறமையின் அடிப்படை யில் மாணவரகளுக்கு அரசு உதவித் தொகை வழங்கலாம.

35

கலைச் சொல்லாக்கமும் சில சிக்கல்களும் – II

மா. ஆண்டோ பீட்டர், மு. சிவலிங்கம்

முன்னுரை

முனைவர் மு. ஆனந்த கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு அரசு அமைத்த, தகவல் தொழில்நுட்பக் கலைச் சொல்லாக்கக் குழுவில் உறுப்பினர்களாயிருந்து, ஏறத்தாழ எட்டாயிரம் சொற்களைத் தொகுத்தபோது, எங்களுககு ஏற்பட்ட சிக்கல்கள் சிலவறறை, சென்ற ஆண்டு தமிழ் இணைய மாநாட்டில் (த இ 2002 — அமெரிக்கா) முன்வைககப்பட்ட கட்டுரையில் பட்டியல் இட்டிருந்தோம். கலைச்சொல்லாககப் பயணத்தில் எங்கள் பணி தொடர்கிறது. செய்தித் தாள்களில், வார மாத இதழ்களில், கணினி தொடர்பான நூல்களில், தமிழ் மெனபொருள்களில், பயிற்சிக் குறுவட்டுகளில், வானொலியில், தொலைக்காட்சியில், தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தகவல்கள், செய்திகள், தமிழ் மொழியில் வெளியிடப் படுவதை உன்னிபபாகக் கவனித்து வருகிறோம். நாங்கள ஏற்கனவே பட்டியலிட்ட சிக்கலகள் பலவற்றுக்கும் ஏற்புடைய தீர்வு கிடைக்காத அதே வேளையில் சில புதிய சிக்கல்களையும் எதிர்கொணடுள்ளோம் அவற்றை அறிஞர் பெருமக்களிடையே பகிர்ந்துகொள்ள விழை கிறோம்.

தீர்க்கப்படாத சிக்கல்கள்:

முந்தைய கட்டுரையில் முன்வைக்கப்பட்ட சிக்கல்களை இங்கே தொகுத்தளிப்பது பொருத்தமுடையதாக இருக்கும்.

(அ) ஒருபொருட் பன்மொழி:

ஒரு பொருளில் வழங்கப்படும் பல்வேறு சொற்களை ஒரே கலைச்சொல்லால் குறிப்பிடுவது. Drive, Driver, Operator ஆகிய சொறகளை 'இயக்கி' எனல். Block, Batch, Set ஆகிய சொற்களை 'தொகுதி' எனல். Editor, Compiler, Assembler போன்ற சொற்களை 'தொகுப்பான்' அல்லது 'தொகுப்பி' எனல். ஆங்கிலத்தில வெவவேறு சொற்களாய் வழங்கி வருவன வற்றை தமிழில் ஒரே சொல்லில் குறிப்பிடுவது சரியாகுமா?

(ஆ) நேரடி மொழிபெயர்ப்பு

ஆங்கிலத்தில் அறியப்படும் ஒரு பொருளை, அதன் நேரடியான தமிழ்ச் சொல்லால் குறிப் பிடுவது பொருத்தமாகவே இருக்கும். Keyboard—ஐ 'சாவிப்பலகை' என்று சொன்னாலும் Primary Key, Public Key, Private Key, Secret Key, Key Words, Key field, Sorting Key, Search Key, Encription Key ஆகிய தொடர்களிலுள்ள Key என்ற சொல்லை 'சாவி' என மொழிபெயர்த் தல் சரியாகுமா? Hard என்பதை 'வன்' எனவும் 'Soft' என்பதை 'மென்' எனவும் மொழி பெயர்த்தல் எல்லா இடங்களிலும பொருத்தமாக அமையுமா?

(இ) ஒலிபெயர்ப்பு:

kbps என்பதை கேபிபிஎஸ் என்றும் DTP என்பதை டிடிபி என்றும் எழுதுகிறார்கள். B, P மற்றும் D, T ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு உணர்த்துமாறு தமிழில் எழுதவேண்டாமா?

(ஈ) சுருக்கச் சொற்களும் கூட்டுச் சொற்களும்

CD, PC, RAM, ROM ஆகியவற்றையும், Modem, Codec போன்ற சொற்களை அப்படியே ஒலிபெயர்த்து எழுதவேண்டுமா? அல்லது பொருத்த தமிழ்ச் சொற்களில் குறிப்பிடலாமா?

(உ) பால்சார்ந்த விகுதி:

Calculator — கணிப்பான், Editor — தொகுப்பான், Connector — இணைப்பான் என ஆண் பால் விகுதி சேர்த்து கலைச் சொற்களை உருவாக்குவது சரியாகுமா? கணிப்பி, தொகுப்பி, இணைபபி என 'இ' விகுதி சேர்த்து எழுதுவது பொருத்தமாக இருக்குமா?

(ஊ) முன்னொட்டு:

Antivirus, Antiglare, Antistatic, Non-volatile, Non-numeric, Non-procedural எனவரும் ஆங்கில முன்னொட்டுச் சொற்களுக்கு தமிழிலும் முன்னொட்டுக் கலைச் சொற்களை உருவாக்க முடியுமா?

இநத சிக்கல்களின் தொடர்ச்சியாக இன்னும் சில சிக்கல்களை முன்வைக்க விரும்புகிறோம்.

(1) தமிழ் இலக்கண மரபு

தமிழில் கலைச் சொற்களை உருவாக்கும்போது அச்சொல் தமிழ் இலக்கண மரபுப்படி அமைந்த சொல்லாக இருக்கவேணடும் என்பது அறிஞர்களின் கருத்து, என்றாலும் RAM என்பதை 'இரோம்' என்றும, ROM என்பதை 'உரோம்' என்றும் கூறுவது பொருத்தமுடைய தாக இல்லை எனபதை தஇ—2002 மாநாட்டில் திரு. ம.வெ. இராமச்சந்திரா (மலேசியா) தம்முடைய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது நினைவு கூறத்தக்கது. ஆங்கிலச் சொற்களை அப்படியே பெயர்த்து எழுதும்போதும், தமிழ் இலக்கண மரபைப் பின்பற்றவேண்டாமா?

'இன்டர்நெட்', 'இண்டர்நெட்' இவற்றுள் எது சரி என்று சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்க் கணினி இதழில் ஒரு விவாதம் நடைபெறறது. 'இணையம்' என்ற சொல் இருந்த போதிலும், Internet Explorer, Internet Information Server என்பது போன்ற மென்பொருள்களின் பெயர்களை அபபடியே ஒலிபெயர்ததுத்தான் எழுதவேண்டும். ண், ட் ஆகியவை இனவெழுத்துகள். எனவே, தமிழ் இலககண மரபுப்படி டகரத்தின் முன்பு ணகர மெய்யே இடம்பெறவேண்டும் என்பது ஒரு சாரரரின் கருத்து. அப்படியே பார்த்தாலும் 'இண்டர்நெட்' என்பது தமிழ் மரபுப்படி அமைநத சொல் அன்று. டகர மெய மொழியீற்றாய் அமைய முடியாது. எனவே 'இண்டர்நெட்டு' என்றுதான் எழுதவேண்டும் என்பது அவர்களின் வாதம். '..nt..' என வரும் சொற்களை '.ன்ட்..' எனவும், '..nd..' என வரும் சொற்களை 'ண்ட்' எனவும் எழுதலாம் என்பது இன்னொரு சாரார் கருத்து. Internet — இன்டர்நெட், Intel — இன்டெல், Pentium — பென்டியம், Mandrake — மாண்ட்ரேக், Windows — விண்டோஸ், Norton AntiVirus 2002 — நாரட்டன் ஆனடிவைரஸ் 2002 என்று எழுதுவதே பொருத்தமுடையது என்பது அவரகள் கருத்து. 'ஆணடிவைரஸ்' எனத் தமிழ மரபுப்படி எழுதினால் பொருளே மாறிப் போகலாம். ஆங்கிலச் சொற்களை ஒலிபெயர்த்து எழுதும்போது ஒலிக் குறிப்பே முக்கியம். எனவே தமிழ் இலக்கண மரபு மீறப்படுவதில தவறில்லை என்பது அவர்கள் கருத்து. Internet என்பதை 'இணையம்' என்பதைப போல் Web என்பதை 'வலையம்' எனக் கூறலாம் என்ற கருத்தை முன்வைத்தபோது, 'வலை' சொலலோடு 'அம்' விகுதி சேர்ப்பது தமிழ் மரபன்று எனத் தமிழறிஞரகள வாதிட்டனர் User என்பதை 'பயனர்' அல்லது 'பயனி' எனக் கூறலாம் என்று சொனனபோதும் தமிழறிஞரகள் ஏறகவில்லை. ஒலி பெயர்ப்பு சொற்களுக்குச் சொன்னது போலவே பிற சொற்களுககும் பொருத்தமான தமிழ் வேர்ச் சொற்களுடன் அம, இ, அர்,

அன் விகுதிகள் சேர்த்துத் தமிழுக்கு புதிய கலைச் சொற்களை உருவாக்கலாம் என்கிற கேள்விக்கு விடை காணவேண்டும்.

(2) கிரந்த எழுத்துகள்

ஒலிபெயர்த்து எழுதும்போது தவிர்க்க முடியாமல் கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. Linux என்பதை 'லினக்ஸ்' என்று எழுதுகின்றனர். 'லினச்சு' எனத் தூய தமிழில் எழுதுவதே சரியென்பது சிலரின் கருத்து. Windows என்பதை 'விண்டோசு' என எழுதவேண்டுமல்லவா? Visual Basic என்பது செல்வாக்குப பெற்ற மொழியாகும். இதனைத் தமிழில் எழுதுவது எப்படி? விசுவல், விஸ்வல், விஷுவல் — இவற்றுள் எது சரி? பேசிக், பேஸிக் — இவறறுள் எது சரி? Bill Gates. தமிழில் 'பில் கேட்சு' எனக் கூறல் சரியா? Stroustrup என்பதைத் தமிழில் எப்படி எழுதப் போகிறோம்? ஒலிபெயர்ப்புச் சொற்களில் கிரந்த எழுத்துகள் தவிர்கக முடியாதவை அல்லவா?

(3) ஒரே ஒலியுடன் பல சொற்கள்

Kbps, DTP போன்ற சொற்களை ஒலிபெயர்த்து எழுதுவதில் உள்ள குறைபாட்டை ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம். CAD, CAM போன்ற சுருக்கச் சொற்களை அப்படியே ஒலிபெயர்த்தே எழுதவேண்டும் அல்லவா? கேட், கேம் என்றுதானே எழுதவேண்டும். அப்படியெனில் GATE EXAM, CAT EXAM ஆகியவற்றை எப்படிச் சொல்வது? CAD, GATE, CAT ஆகிய அனைத்துச சொற்களையுமே 'கேட்' என எழுதுதல் தகுமா?

LAN, MAN, WAN ஆகிய சொற்களை லேன், மேன், வேன் என எழுதி வருகின்றோம். புதிதாக Value Added Network வந்தது. அதனை VAN எனச் சுருக்கமாக அழைத்தனர். நாம் தமிழில் எப்படி அழைப்பது? 'வேன்' எனலாமா? ஏற்கெனவே WAN, VAN — இரண்டுமே வேன் தானா? வேன், வான் எனக் கூறலாமா?

ஆங்கிலத்தில் KB என்பது கிலோபைட்டையும், kb என்பது கிலோபிட்டையும் குறிக்கின்றன. தமிழில் எழுதும்போது இரண்டையுமே 'கேபி' என்றுதான் எழுதவேண்டியுள்ளது. இந்தச் சிக்கலை முந்தைய கட்டுரையிலேயே குறிப்பிட்டுள்ளோம. கணினிப் பிணையங்கள் (Computer Networks) பற்றிய நூல்களில், Internet, internet என்று இருவேறு சொறகள் வெவ்வேறு பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. பல்வேறு பிணையங்கள் ஒன்றிணைக்கப்பட்ட, பிணையங்களின் பிணையம் (Network of Network), internetwork எனப்படுகிறது. சுருக்கமாக 'Internet' என எழுதப்படுகிறது. Internet என்பதையும் 'இணையம்' எனல் சரியாகுமா? internet என்பது பொதுப்பொருளில் வழங்கப்படும் பொதுச்சொல். Internet என்பது சிறப்புச் சொல். இரண்டையும் தமிழில் எப்படி வேறுபடுத்தப் போகிறோம்? Internet—ஐ 'இணைய பிணையம்' எனலாமா? Intranet, extranet ஆகியவற்றை எப்படி அழைப்பது? 'அக இணையம்', 'புற இணையம்' என்று அழைக்கலாமா?

(4) நிறுவனப் பெயர்கள்

நிறுவனப் பெயர்கள் பலவற்றை தலைப்பெழுத்துச் சுருக்கமாக அழைக்கிறோம். American National Standards Institute எனபது ANSI என அழைக்கப்படுகிறது. International Business Machines, IBM ஆயிற்று தமிழில் 'அன்சி', 'ஐபிஎம்' என எழுதுகிறோம முழுப் பெயரையும் தமிழில் எப்படி எழுதுவது? 'அமெரிக்கன் நேஷனல் ஸ்டாண்டர்ட்ஸ இன்ஸ்டிடியூட்', 'இன்டர்நேஷனல் பிஸினஸ் மெஷின்ஸ்' என எழுதுவதா? 'அமெரிக்க தேசிய தரக கட்டுப்பாட்டு நிறுவனம்', 'சர்வதேச வணிக எந்திரங்கள்' என எழுதப் போகிறோமா? நபரகளின் பெயர்கள், வணிகப் பொருள்களின் பெயர்கள், அளவீட்டுப் பெயர்கள், நிறுவனப் பெயர்களை அப்படியே ஒலிபெயர்த்தே எழுதவேண்டும் என்பதுதான் அறிஞர்பெருமக்களின்

ஒருமிதத கருத்து. Microsoft Windows 98 என்பதை 'நுண்மென் சாளரம் 98' என எழுதுவது சரியாகுமா?

United Nations Council என்பதை 'ஐககிய நாடுகள் மனறம்' என்கிறோம். UN Council—ஐ யுஎன் மன்றம் எனச் சொல்லாமல் 'ஐநா மன்றம்' என்றே கூறுகிறோம். Indian National Congress எனபதை 'இந்திய தேசிய காங்கிரஸ்' என்றும் சுருக்கமாக 'இதேகா' என்று குறிப்பிடுகிறோம். எனவே, ஐபிஎம என்பதை 'சவஎ நிறுவனம்' எனக் கூறல் தகுமா? Frequently Asked Questions சுருககமாக FAQ ஆனது தமிழில் எஃப்ஏகியூ எனலாமா? 'அகேகே' அடிககடி கேட்கப்படும் கேள்விகள் எனச சொல்லலாமா? INFITT எனபதை 'இனஃபிட்' என எழுதலாமா? 'உததமம்' என்னும் கலைச் சொல்லைப் பயன்படுத்தலாமா? இதே பாணியில் எம்பெக், ஜேபெக் போன்ற சொற்களுக்கும தமிழ்க் கலைச் சொற்களை உருவாக்கலாமா?

(5) இடம் — பொருள் — ஏவல்:

ஒருவருக்கு அளிக்கப்படும் சிறபபான வரவேற்பை ஆங்கிலத்தில் Warm Welcome என்கின்ற னர் குளிரான நாட்டில் இதமான வரவேற்பு Warm Welcome ஆயிற்று. இந்தியா போன்ற சூடான நாடடில் Warm Welcome—ஐ 'சூடான வரவேற்பு' என மொழி பெயர்க்கலாமா? இதயஙகுளிர்நத வரவேற்பு என்றுதானே கூறவேண்டும்? ரயில் நிலையத்தில் Platform 'நடை மேடை' ஆயிறறு. Windows Platform. Linux Platform ஆகியவற்றை விண்டோஸ் நடைமேடை, வினகஸ நடைமேடை எனல் தகுமா? இங்கே Platform 'பணித்தளம்' அல்லது 'பணிச்சூழல்' ஆகும். Bus என்பதைப் 'பேருந்து' என்கிறோம்.. ஆனால, Address Bus என்பதை 'முகவரிப் பேருந்து' எனல் தகுமா? துறைக்கு ஏற்ப சொற்களின் பொருள் மாறுபடுகின்றது. இடம் பொருள் ஏவல் அறிந்தே கலைச சொற்களை உருவாக்கவேண்டியுள்ளது

சி++, சி#, ஜாவா மொழிகளில் Exception Handling என்னும் கருத்துரு பேசப்படுகிறது. Exception என்பது விதிவிலக்குததானே? எனவே, Exception Handling என்பதை 'விதிவிலக்கு களைக கையாளுதல்' என்று மொழிபெயர்த்தல் சரியா? இங்கே ஒரு நிரலின் இயக்க நேரத் தில் (run time) ஏறபடும் பிழையே Exception எனபபடுகிறது. எனவே, 'இயக்கநேரப பிழை களை எதிர்கொளளல்' என மொழிபெயர்பபதுதானே சரியாக இருக்க முடியும்? என்றாலும் exception எனபதற்குப பொருத்தமான கலைச்சொல் காணப்படவேண்டும். இதே போல் layout, structure, architecture, construction, topology போன்ற சொற்களுக்கும் பொருத்தமான கலைச்சொற்கள் உருவாககப்படவேண்டும.

36

செம்மொழியென இணையத்திலும் தமிழ்...

ஐ. ஃபெலிக்ஸ்

தலைமைச் செயல் அலுவலர், க்ரியா லாங்குவேஜஸ்
276, அண்ணா முதல் குறுக்குத் தெரு,
திருவள்ளுவர் நகர், அயனாவரம், சென்னை — 23

E-Mail: kriya_languages@yahoo.co.in

முன்னுரை

நம் தமிழ், செம்மொழி என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதன் தொன்மை, மரபு, பரிணாமம — பன்முக ஆற்றல்களை அறிந்தவர்கள் அதற்கென எடுக்கிற எந்தப் புது முயற்சியும் இது வரை தோற்றதே இல்லை.

தமிழகத்தின் தலைநகரான சென்னையிலிருந்து செயற்படும் எங்கள் "க்ரியா லாங்குவேஜஸ்" நிறுவனம் எடுக்கிற இந்த முயற்சியையும் தமிழ்ச் சமுதாயம் குறிப்பாய் இணைய சமூகம் வரவேற்கும் என்பதை முழுமையாய் நம்புகிறோம்.

உலகெங்கும் பரவலாக கணினியைத் தொடர்ந்து 90களின் ஆரம்பத்தில் இணையம் பற்றிப் பேச்சு பரவலாக அறியப்படுகிற நேரத்திலேயே தமிழோடு இணையத்தை பேசியது மட்டுமல்லாது; 95களின் வளர்ச்சிக்குரிய நிலையில் சர்வதேச சமூகங்களோடு எல்லா நிலையிலும் இணையத்தில் தமிழ், தமிழர்களின் பங்கென்பது கவனத்திற்குரியதாக, முக்கியமானதாக பதிவுள்ளது. அதனடிப்படையில் செம்மொழியான நம் தமிழின் புதிய சக்திகளை அதன் மகத்தான தொன்மையோடு உருவாக்கித் தருவது அவசியமாக உள்ளது காலதாமதமின்றி.

அந்த விதத்தில் இணையத்திற்கான பிரத்யேக 'தமிழ் இணைய அகராதி' அவசியமாக உள்ளது. அதுவும் புத்தக வடிவம், குறுந்தகடு மற்றும் இணையத்திலும் கிடைக்கும்படியான நிலைகளில் முழுமையாகத் தரவேண்டியிருக்கிறது. இப்பணி முடிகிறபோது தமிழானது செம்மொழி என்பதற்குக் கூடுதலான அணிகலனாகும்.

Website - இது நமக்கெல்லாம் நன்கு பரிச்சயமான வார்த்தை. இதை ஆங்கிலத்திலிருந்து தமிழில் transliteration வழியாக சொல்லும்போது 'வெப்சைட்' என்றே சொல்வோம். அடிப்படையில் இது ஒரே வார்த்தை அல்ல! Web Site என இரண்டு வார்த்தைகள்! உச்சரிக்கும்போது வெப்சைட் என சொல்லவேண்டும். ஆனால் தமிழாகவே மாறுகையில் 'இணையம்' என அழகுடன் மிளிர்கிறது. இந்த விவரங்கள் சரியாக அறியவேண்டின் அகராதி அவசியமாகிறது.

World Wide Web என்பதை www, w3, the Web என்கிற மூன்று விதங்களில் பயன்படுத்துகிறோம். இது வரையிலும் இவற்றிற்கான சரியான தமிழாக்கத்தைப் பயன்படுத்தியிருக்கிறோமா? அல்லது வாய்ப்பாவது ஏற்பட்டிருக்குமா?

webtone (இணையத்திற்கு ஏற்ப தகவல்களைத் தருதல்)

webcasting *(இணைய ஒலிபரப்புத்தன்மை)*

webertising *(இணைய விளம்பரங்கள்)*

webspace *(இணைய முப்பரிமாண வடிவில் உருவாகும் கிராபிக்ஸ் மென்பொருள் தொடர்பானது*

weighting *(இணையத்தில் பயன்படுத்தும் காரணிகளின் தேவை மற்றும் காரணிகள்)*

webmaster *(இணையத்தை நிர்வகிக்கும் தனிமனிதர்)*

இது போன்ற பலவற்றின் அழகினிய தமிழாக்கம் தருவதின் அவசியம் இணைய சமூகத்தில் செயற்படுவோர் முழுதாக அறிவர். இவையெல்லாம் ஆங்கில உச்சரிப்பாகவே தமிழில் பயன் படுத்தப்பட்டு வருவது கவனத்திற்குரியது.

Internet (Note: Uppercase "I")

internet (Note: Lowercase "i")

ஒரே சொல்லான இரண்டின் பொருளும் ஆங்கில வழியில் அறிகையில் வேறுபடுகிறது. தமிழில் நமக்கு அந்தப் பிரச்சினையே இல்லை.

- the grammatical structure of the verbs when it is conjugated to several grammatical categories such as conditional, concessive, negatives etc.
- case system in Tamil
- the patterns of simple, compound and complex sentences in Tamil
- aspects and moods etc.

Sandhi

Sandhi is yet another area which needs separate treatment in the material. This section can give the various Sandhi changes involving different Tamil sounds when it combines with another sound. These can be put in simple rules with appropriate functional examples used in modern Tamil.

Lexicon

The format for the electronic dictionary should be pedagogically oriented with two kinds of vocabularies namely functional and cultural. The functional vocabularies will be presented by giving a clue in the main entry so that the learner can easily decline or conjugate the word without any difficulty. For instance, while presenting the verbs in Tamil it may be indicated whether it is a weak verb or a strong verbs. Also, the past tense marker the verb takes along with the indication whether the verb is a transitive form of the verb or the intransitive form of the verb. These basic information will enable the learner to conjugate the verb to his/her desired grammatical category of the verb.

In order to have a more user friendly dictionary we have to think of the following modes of presentations.

Entry

- entry of the words in Roman script
- entry of the words in Tamil alphabet.

Facility for the Dictionary user

- Tamil alphabetical search
- Roman alphabetical search
- search by typing the Tamil alphabet.
- search by typing the Roman script of the Tamil word.
- Search by typing the English word for which the learner wants to know the Tamil equivalent.
- Questions and Answers

It goes without saying that during the process of learning a language learner may encounter innumerable doubts which need immediate clarifications without which it may be difficult for the learner to move ahead in the process of learning or the learner may need an explanation regarding the technical terms used in the package as simple as Noun, Pronoun etc. Such kind of doubt may hinder the comprehension of the learner. In view of the heterogeneity of the learners as discussed above, such kinds of doubts are more common and natural. The material producer as a language teacher needs to cater to this need of the learner by giving explanation to the possible grammatical and other technical usages. These may be listed in a separate section under the title Frequently Asked Questions (FAQ). It is needless to say that this section can never be exhaustive because it may be difficult to predict the nature of doubts the students may get. However, the experience in second language teaching can make the material producer identify to a greater extent the nature of doubts the language learner can encounter and their proper explanations in simple terms with examples may be written under this section.

Online tutoring

No technology and no teaching methodology whatever advanced it may be, can substitute a teacher. No doubt the material for the net as discussed when put in the above format may have incorporated all the components the multimedia can handle such as audio, video, evaluation etc. But still it is definitely beneficial if there is a possibility for online tutoring. Provision may be given to have this additional

teaching component. This need to be worked out separately by keeping in view the distance and the time differences in various countries from which the potential learners log in.

Language games

Section on language games is a potential area through which the learner can be motivated to a greater extent. Several games starting with vocabulary development, picture identification, identification of sounds, and identification of words by way of listening to the specific sounds and words, sandhi changes, sentence building, word ordering etc. can be thought of.



Evaluation and testing

The component of evaluation is very important for language teaching programme because only through this the material producer can measure the credentials of the material, methods of presentation and the methodology of teaching. Evaluation through net need to be looked through the performance of the learners on the basic language skills viz, listening, speaking, reading and writing. In other words, the evaluation tools at the end of every lesson as far as possible should test the learner on the basis of the above basic skills. Only then the learner can be more confidently perform in the actual language environment. The evaluation tools should be devised accordingly.

PROBLEMATICS AND POSSIBLE SOLUTIONS

In this section we are basically concerned with the problems faced both by the material producer and also by the developer with reference to academic input and technology respectively.

We have stated above that the measuring scale of evaluation of the language achievement by the learners could be on the basis of their achievement in the four basic skills namely, listening, speaking, reading & writing. While measuring the rate of achievement in the above skills, the problems we face are in the areas of script teaching, and pronunciation practice, which can be attributed to writing skill and speaking skill developments respectively.

The writing skill development through this auto instructional package will be started with the introduction of individual Tamil script along with the native method of writing presented in an animated mode and its respective pronunciation. When it comes to practice, the learner can be asked to use the special type of paint brush which can be operated through the mouse and draw the specific Tamil letter within the predetermined four lines similar to the writing practice given traditionally. But, the problem faced here can be that the learner while trying to draw with the help of mouse may get more a drawing practice rather than the writing practice. Subsequently the technique to write the Tamil letter can never be achieved by the learner through this method. After teaching the individual Tamil script the learners will be introduced to write words and sentences. In this section again we can ask the learners to type the appropriate answers by looking at the key board displaying. This practice too cannot improve the actual handwriting of the learner though he/she can have the knowledge about the content in Tamil, which comes as the answer. Though at this level even if we feel that the learner has understood the content while making him to type the answer by following the key board display, it is understood that there are several types of key boards available developed by many companies. Some have followed the phonetic system and some have followed the general typewriter keyboard etc. This further complicates the learner while trying to type on the screen. It needs to be looked into by both the technical experts as well as by the academician more seriously and an uniform and user friendly keyboard should be developed.

The next problem will be to check the pronunciation of the learners. In order to solve this problem probably the speech analysis software can be incorporated which can help the students to match his/her pronunciation with the pronunciation of the master by comparing the graphics of both the master and the learner. But this facility as on today cannot be provided to the students who take the course through net. In the absence of this there is no evaluation for the pronunciation of the students. Hence till this date in order to rectify this problem, we may have to depend on the online tutor.

Conclusion

To conclude unless the problems mentioned above are not satisfactorily solved it may be difficult for the material producers, language learners and the technical experts to achieve Tamil teaching effectively on par with classroom teaching where the teacher can monitor the learners.

43

Developing Educational Software Within Application Software

N. Anbarasan

Chief Executive Officer, APPLESOFT
#39, 1st Cross, 1st Main, Shiva Nagar, West of Chord Road
Bangalore - 560 010
<E-mail: arasan@bgl.vsnl.net.in, aplesoft@vsnl.com>

Abstract

There are some standard application softwares developed to meet the specific requirement of the user needs. These softwares are not able to meet all the needs. In order to enhance the capability of the application software, a facility to develop software tools or utilities is being added to the off-the-shelf application software. It is normally called as macro language. The programming methodologies of such scripting languages differ from application to application.

Normally, educational softwares are developed using special authoring tools instead of the standard programming languages. The distributed educational software contains the core engine developed by the authoring software developers.

As there are quite a few popular softwares such as MS Office, StarOffice etc that are used extensively on the desktops. This author started exploring the capability of developing educational software within these applications. Interestingly, it was found that some of the popular application softwares available for desktop can be used for developing educational software with multimedia capability. This paper aims at demonstrating the capability of the standard application software MS Office to develop educational software.

Introduction

Developing educational software within the off-the-shelf software is a value added proportion to the off-the-shelf software and value for money proposition to the user. This type of development of software extends the existing off-the-shelf software to new areas like education. The potential of off-the-shelf software to develop educational software within it would extend the use of existing computers and software for educational purposes.

Developing educational software within off-the-shelf software opens new avenue for software houses. It enables the development of customizable software where in the contents can be contributed by the teacher community.

Overview of educational software

Educational softwares are developed to motivate the learner with multimedia contents. The multimedia based educational software comes with varying capability of interactivity and animations. The user interfaces are designed with graphics and appropriate music and voice over.

Authoring Tools

Generally the multimedia softwares are developed using standard authoring tools like Macromedia Director, Flash etc. These authoring tools are having facility to distribute the running version.

Application software as a developmental Tool

In contrast to Authoring tools, the standard applications do not have the facility to create standard executables. The software developed using the application software runs within the application. This limits the reach of the software developed using an application. However, if appropriate application software is selected for development of educational software, then the reach actually depends on the availability of the application software.

Even though, the application software is capable of providing the development facility, additional programming is needed to turn the application into educational software.

The widely used application softwares such as MS Office, Photoshop, StarOffice, OpenOffice, After Effects, ARC info, Microstation etc supports programming, which can be used for developing educational software.

Features of off-the-shelf applications to support development of educational software.

Nowadays, the off-the-shelf application software developed with open-end technologies to enable the programmer to add additional features. The number of off-the-shelf softwares that provide support for developing applications are growing. It would be helpful to know the features in considering the off-the-shelf software for developing application. Some of the features would be:-

1. Inexpensive: As the application developed is within the off-the-shelf software, the off-the-shelf software should be inexpensive to the end user to use the application software. Otherwise, the off-the-shelf software should be a kind of de facto software which may be widely used and familiar to the users.
2. Tailorable: The off-the-shelf software should provide "events", "hooks" or "methods" to let the programmer to trap the appropriate actions and add or modify the existing features.
3. Design: The off-the-shelf software should have facility to add programmable controls such as menu, toolbar etc.
4. Multimedia: Multimedia based educational softwares are always attractive and interesting to the learners. The off-the-shelf software should provide facilities for varieties of transitions, special effects, graphics and sound support etc. Apart from that it should also support wide range of file formats.
5. Scope: Educational software requirement start from simple objective type exercise to high graphics intensive skill development through analytical charts. The off-the-shelf software should provide facility to develop wide range of software.

Using MS Office for developing application software

Developing application software within the off-the-shelf application software started way back from 1987 when Excel was released with programming capabilities. From Microsoft Office 97, every application of the office suite is having programming language called VBA.

The advantages of MS Office-based development

Some of the advantages in using MS Office for software development are:

Proven	: The development tools are of proven quality.
Faster	: By extending the functionality, one can build application faster.
Familiar	: As the users are familiar with MS Office, the applications developed with MS Office will also be familiar and easy to use by the users.
Cheaper	: As no cost is involved for development tool, the cost for developing applications would be cheaper.
Flexible	: The programming tool is flexible in accessing and defining objects for developing applications.
Customize	: The standard interface of application softwares can be customized by adding or deleting commands, menu items, tool bars, scroll bars etc.

Using MS Office applications for Education

The number of study hours is so extensive and the material available is not sufficient for intensive learning. One way to make the learning more interest and intensive is to automate the learning materials.

The computerized learning materials provide immediate feedback to the students and provide an opportunity to practice specific topic at their own pace.

The computerized learning materials also include testing components. The teachers exposed to computers prepare question papers and notes using computers. The specialised testing programs do require all the texts and questions re-entered due to the difference in the formats. It amounts to repeat of text entry in the word processor and the specialised testing programs. Wouldn't be nice if the same word processing software used by the teacher to prepare learning materials and question papers used for testing as well.

The MS Office applications are having standardised methods of exchange of data amongst themselves and having common interface components. Some of the programmable tools of MS Office are:

* Menu bar	* Endnote	* Index
* Tool bar	* Comments	* Dialogs
* Status bar	* View options	* Forms
* Screen tips	* Bookmark	* Documents
* Office assistant	* Formatting controls	* Documents control
* Clipart gallery	* Frames	* Events

* Audio files	* Split Window	* Find and replace
* Drawing tools	* Autocorrect	* Automation
* Word Art	* Mail merge	* Zoom
* Chart	* Document protection	* Envelope, labels etc
* Font controls	* Tables	* Header and Footer
* Footnote	* Layout	* Context menu

As investigated by the author, MS Office provides a very good development environment, flexibility for developing applications.

Developing computerised test materials in a document using MS Word

Nowadays, irrespective of whether tests are conducted using computerized methods or by using only paper and pencil, computers are used for preparing test materials. One can easily make use of MS Office for computerised tests.

The simplest one could be with just simple controls like text box, option buttons, check box, toggle buttons.

Now, let me demonstrate as to how to create a simple test paper.

1. Type the text using your favourite Tamil interface software.
2. Check whether control toolbox is displayed on the tool bar or not. If not select control toolbox from View - Toolbars.
3. Type the questions as normal text or as a label using label control from the control box tool bar.
4. Use controls like check box, option button and toggle button as appropriate to give options to the questions.
5. Use Text box to give any instructions to any user.

Now, your document would look like the one shown in figure 1.


Tamil Electronic test paper - Microsoft Word
File Edit View Insert Format Tools Table Window Help
100%
Normal
TAM_Janani
12
வாசித்துணர்தல்
கீழுள்ள பகுதியை கவனமாகப் படித்து கேள்விகளுக்குப் பொருத்தமான பதில்களைப் தெரிவுசெய்யவும்
குரங்கும் குருவிகளும்
ஒரு மரத்தில் தூக்கணாங் குருவிகள் இரண்டு கூடு கட்டி வாழ்ந்து வந்தன. பக்கத்து மரத்தில் ஒரு குரங்கும் வாழ்ந்து வந்தது. ஆனால் அதற்குக் கூடோ வீடோ இல்லை.
ஒரு நாள் திடீரென்று மழைபெய்யத் தொடங்கியது. குரங்கு மழையில் நனைந்து குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது. அதற்குத் தங்குவதற்கு இடமில்லை. மழை பெய்து கொண்டே இருந்தது.
குருவிகள் இரண்டும் தங்கள் கூட்டுக்குத் திரும்பி வந்தன. அவை கூட்டுக்கு உள்ளே போயின. ஒரு குருவி.. குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த குரங்கைப் பார்த்தது; பரிதாபப்பட்டது. "குரங்கண்ணா குரங்கண்ணா! நீயும் எங்களைப் போல் ஏன் கூடு கட்டி வாழக்கூடாது." என்று கேட்டது. குரங்குக்குக் கோபம் வந்து விட்டது. சின்னக்குருவி எனக்குப் புத்தி சொல்வதா? "குருவியே, எனக்குக் கூடுகட்டத் தெரியாது. ஆனால் கூட்டைப் பிரித்து எறியத் தெரியும்" என்று சொல்லிக் கொண்டே குருவிகளின் கூட்டைப் பிரித்து எறிந்தது. பாவம் குருவிகள். முட்டாளுக்குப் புத்தி சொன்னது தவறு என்று எண்ணி வேறு ஒரு மரத்துக்குப் போயின.
1. குரங்கு மரத்தில் கூடு கட்டி வாழ்ந்து வந்தன?
சரி
தவறு
2. குரங்கு கடைசியில் என்ன செய்தது?
தனக்கு என்று ஒரு கூடு கட்டியது
குருவிகளின் கூட்டப் பிரித்து எறிந்தது
குருவிகளத் திட்டியது
3. இக்கதையில் வருபவை யாவை:
வீடு
குருவிகள்
குரங்கு
மரம்
கூடு
மழை
4. குருவிகள் வாழும் இடத்தின் பெயர் என்ன?
ஆப்பிள்சாப்ட், பெங்களூர் - 10
செந்தமிழ்
Page 1 Sec 1 1/1 At 7.4" Ln 36 Col 2 REC TRK EXT OVR English (U.S

Figure 1


Tamil Electronic test paper - Microsoft Word
File Edit View Insert Format Tools Table Window Help
100%
Normal
TAM_Janani
12
வாசித்துணர்தல்
கீழுள்ள பகுதியை கவனமாகப் படித்து கேள்விகளுக்குப் பொருத்தமான பதில்களைப் தெரிவுசெய்யவும்
குரங்கும் குருவிகளும்
ஒரு மரத்தில் தூக்கணாங் குருவிகள் இரண்டு கூடு கட்டி வாழ்ந்து வந்தன. பக்கத்து மரத்தில் ஒரு குரங்கும் வாழ்ந்து வந்தது. ஆனால் அதற்குக் கூடோ வீடோ இல்லை.
ஒரு நாள் திடீரென்று மழைபெய்யத் தொடங்கியது. குரங்கு மழையில் நனைந்து குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது. அதற்குத் தங்குவதற்கு இடமில்லை. மழை பெய்து கொண்டே இருந்தது.
குருவிகள் இரண்டும் தங்கள் கூட்டுக்குத் திரும்பி வந்தன. அவை கூட்டுக்கு உள்ளே போயின. ஒரு குருவி குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த குரங்கைப் பார்த்தது; பரிதாபப்பட்டது. "குரங்கண்ணா குரங்கண்ணா! நீயும் எங்களைப் போல் ஏன் கூடு கட்டி வாழக்கூடாது." என்று கேட்டது. குரங்குக்குக் கோபம் வந்து விட்டது. சின்னக்குருவி எனக்குப் புத்தி சொல்வதா? "குருவியே, எனக்குக் கூடுகட்டத் தெரியாது. ஆனால் கூட்டைப் பிரித்து எறியத் தெரியும்" என்று சொல்லிக் கொண்டே குருவிகளின் கூட்டைப் பிரித்து எறிந்தது. பாவம் குருவிகள். முட்டாளுக்குப் புத்தி சொன்னது தவறு என்று எண்ணி வேறு ஒரு மரத்துக்குப் போயின.
1. குரங்கு மரத்தில் கூடு கட்டி வாழ்ந்து வந்தன?
சரி
தவறு
2. குரங்கு கடைசியில் என்ன செய்தது?
தனக்கு என்று ஒரு கூடு கட்டியது
குருவிகளின் கூட்டப் பிரித்து எறிந்தது
குருவிகளைத் திட்டியது
3. இக்கதையில் வருபவை யாவை.
வீடு
குருவிகள்
குரங்கு
மரம்
கூடு
மழை
4. குருவிகள் வாழும் இடத்தின் பெயர் என்ன?
குருவிகள் வாழும் இடத்தின் பெயர் கூடு
ஆப்பிள்சாப்ட், பெங்களூர் - 10
செந்தமிழ்
Page 1 Sec 1 1/1 At 1.5" Ln 6 Col 1
REC TRK EXT OVR English (U.S

The document is now ready for test and can be used by the student. Students can attempt the questions and submit the document for valuation. The document can also be protected with password. The document would look like the one shown in Figure 2.

Automating computerized tests in MS Word

The valuation can be made automatically by adding some programming. At APPLESOFT, we have developed some online exercises. These exercises are intuitive and simple to use. The exercise I am going to demonstrate is on developing writing skill. Now, let me demonstrate as to how to use the online exercise:

Step 1. Type the passage with right answers to come first. And also type the necessary instructions in the Header. Screen capture of the document is shown in figure 3.



Step 2. Create an exercise from the game's menu (added by installing the educational software developed by APPLESOFT). Now the document is protected and saved. This document can be shared amongst the users of this software.

Step 3. Now, the interested student can play with the online exercise. The students are provided with appropriate options in the menu bar. The screen capture is shown as figure 4.





Step 4. Students attempt on the exercise and the resultant screen is shown in figure 5.

Step 5. When the student opts to "saripar", the exercise is evaluated and a visual feedback is provided. The screen capture is shown in as figure 6



As the documents are protected by the program, the documents can easily be shared or submitted to teacher through e-mail.

MS Word provides a facility to automate the tasks called macros. These macros can be created in two ways - by using macro recorder and the Visual Basic Editor, which is part of MS Office.

A macro can be created to automate any task like to change line spacing, to track an event etc., within any of the MS Office applications such as MS Word. To record a macro click on Record New Macro ... from Tools-> Macro. Now, by following the instructions one can record the macro for the required task. For more details please refer to MS Word help.

To write macros yourself, click on Visual Basic Editor from Tools-> Macro or press Alt+F11. Now a Visual Basic Editor is opened. Now you can write your macros.

In MS Office applications, all the objects like Document, font, buttons etc can be programmatically controlled. In case of any difficulties in knowing the exact objects used for a particular task, one can find the objects by recording a macro using the macro recorder.

It is interesting to note that MS Office supports extensive programming with support for standard API functions and automation facilities.

Using OpenOffice for developing application

OpenOffice is an open source office suite supported by Sun Microsystems, inc. OpenOffice is having built in programming language called Star Basic. This author has tried programming in OpenOffice and it was found that OpenOffice also supports good programming environment and is flexible. It is to be noted that the source code written for MS Office cannot be used with OpenOffice and vice versa.

Limitations of developing applications within Off-the-shelf software

Normally, any application software is being developed to meet a specific requirement is expected to run as a standalone software. However, any such application would require the Operating System. The following are the limitations of developing applications within an off-the-shelf software:

1. Application can't be a standalone software. Execution of the application needs the off-the-shelf software on which it has been developed.
2. Availability of the off-the-shelf software limits the use of the application software.

Pros and cons of developing applications within MS Office

Some of the pros and cons of developing applications within MS Office are:

1. The distributable versions can't be created as DLL or EXE from within the MS Office applications. However, by using automation techniques one can create Exe or Dll from VB.
2. The forms in applications developed within MS Office do not have resizeable options like Minimize, Maximize and sizing.
3. Dialogs can't be created within VBA application. However, one can use the system dialogs.
4. One can create his own objects in addition to the objects available within MS Office.

Educational software developed at APPLESOFT using MS Office

At APPLESOFT exploring MS Office started during 1996. By continuously exploring MS Office, many interesting tools and software have been developed. It would be interesting to know the kind of applications developed for educational requirement.

1. Surabhi tools - A set of utility tools for the students, teachers and any language users.
2. Aatral - A pack of six Tamil learning games to develop various language skills.
3. Visaithamizh Professional - An advanced typing learning tutor for Tamil 99 keyboard layout. It also contains additional utilities for learning Antonyms, Synonyms etc.

Conclusion

It is amply demonstrated that developing applications within the popular off-the-shelf application software are worthy try at the time of reduced funding for computerized educational systems. It is a good start to start developing applications in popular office suites like MS Office, StarOffice, OpenOffice, Lotus Smart suite etc.

44

'இணையம்வழிக் கற்றலுக்கான தமிழ் மொழிப் பாடங்களைத் தயாரிப்பது எளிது' – ஒரு செயல்முறை விளக்கம்

இர. கலைமணி

விரிவுரையாளர், தேசியக் கல்விக் கழகம்
நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம், சிங்கப்பூர்

முன்னுரை

சில ஆண்டுகளுக்கு முன்னர் கணினிகள் ஒரு சிலர் பயன்பாட்டில் மட்டும் இருந்து வந்தன. இன்றைய காலகட்டத்தில் கணினிகள் மூன்றாம் உலக நாடுகளில் கூடப் பிரபலமாகி விட்டன. மென்பொருள்களை இயக்கத் தெரியாதவர்கள் கூட இணையத் தளங்களில் அலையாடுவதிலும் மின்னஞ்சல்கள் அனுப்புவதிலும் திறமை பெற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். இணையத்திற்காகவே கணினி வாங்குவோரும் உள்ளனர்.

இணையம் சக்தி வாய்ந்த ஒரு கற்றல்/கற்பித்தல் கருவியாகவும் விளங்கி வந்துள்ளது. ஆனால் இது வரை கணினியில் புலமை பெற்ற ஆசிரியர்களால் மட்டுமே இணையத்தில் பாடங்களைத் தயாரித்துக் கல்வித் தளங்களைச் செயல்படுத்திவர முடிந்தது.

இந்த நிலை மாறிவிட்டது. சக்தி வாய்ந்த Hot Potatoes என்ற மென்பொருளின்மூலம் கணினியில் அடிப்படை அறிவு கொண்ட எவராலும் சிறப்பான ஊடாட்டு (interactive) பயிற்சிகளைத் தமிழிலே தயாரிக்க முடியும். Hot Potatoes இலவச மென்பொருளல்ல. ஆனால் வியாபார நோக்கில்லாத நிறுவனங்களும் கல்வியாளர்களும் இதை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரரீதியில் வாங்குவோர்க்கு முழுமையான பயன்பாட்டு உதவி கிடைக்கும். மற்றவர் அதன் இணையத் தளத்திற்குச் சென்று உதவிக் குறிப்புகளைக் காணலாம்.

இணையத் தளங்களில் மொழிப் பயிற்சிக்கான தேர்வுகளும் பயிற்சிகளும் மொழி விளையாட்டுகளும் ஆயிரக்கணக்கில் உள்ளன. ஆசிரியர்களும் அவற்றை அன்றாட பாடவேளைகளில் பயன்படுத்துகின்றனர். தம் சொந்த மாணவர்களுக்காக (அவர்களின் தனிப்பட்ட தேவைகளையும் மொழித் திறனையும் மனதிற்கொண்டு) சுயமாகத் தாமே மொழிப் பயிற்சிகளைத் தயாரிக்க ஆசிரியர்கள் விரும்புகின்றனர்.

கணினி அடிப்படையிலான மொழிப் பயிற்சிகளின் நன்மைகள் –

- மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப ஊடாட்டம் (interactivity) இருப்பதால் அவர்களின் ஆர்வம் தூண்டப்படுகின்றன.
- பொதுவாக பயிற்சிகள் விளையாட்டுகள் போல மகிழ்வூட்டும் வண்ணம் அமைந்திருக்கும்.
- பயிற்சிகள் செய்ய மாணவர்கள் எவ்வளவு நேரமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.
- மாணவர்கள் கொடுக்கும் விடைகளுக்குப் பதிலுரைகள் (feedback) உடனுக்குடன் பாரபட்சமின்றிப் பொதுமையாக அளிக்கப்படும்.

இந்த ஆய்வுக் கட்டுரையைப் படைப்பவர் Hot Potatoes என்ற மென்பொருளைத் தமிழாக்கம் செய்துள்ளார். இதன்மூலம் தமிழ்மொழி கற்பிப்போர் விரைவாகவும் எளிதாகவும் பல வகை யான தமிழ்மொழிப் பாடங்களைத் தயாரித்து இணையத் தளத்தில் ஏற்றி இணையக் கல்வி யைச் செயல்படுத்த முடியும்.

Half-baked Software என்ற நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது இந்த Hot Potatoes மென்பொருள். இந்த மென்பொருளின் அமைப்பின்வழி தமிழாசிரியர்கள் இணையம் சார்ந்த மொழிப் பயிற்சிகளைத் தமிழ் மொழியிலேயே உருவாக்க முடியும். ஊடாட்டுக் கூறுகளைக் கொண்டுள்ள இப்பயிற்சிகளை மாணவர்கள் சாதாரண உலவிகள் (browsers) மூலம் செய்ய முடியும். HTML, JavaScript கொண்டு இயங்கும் மென்பொருளாக Hot Potatoes இருந்தாலும், பயிற்சிகள் தயாரிப்பதற்கு ஆசிரியர்களுக்கு HTML அறிவு தேவையில்லை. Hot Potatoes வழங் கும் படிம அச்சுகளைக் (templates) கொண்டு மொழிப் பயிற்சிகளை எளிதில் தயாரித்து இணையச் சேவையகத்தில் மேலேற்றிவிடலாம். Hot Potatoes மூலம் நாம் ஆறு வெவ்வேறு வகை இணையப் பயிற்சிகளை உருவாக்க முடியும். இப்பயிற்சிகள் தனியாகவும், மற்ற பயிற்சி களோடு இணைக்கப்பட்டுத் தொடர் நடவடிக்கையாகவும் இயங்கும் தன்மை கொண்டவை. Hot Potatoes கொடுக்கும் பதிலுரைகளின் வழி (feedback) மாணவர்கள் தங்கள் விடை களைத் திருத்தியோ மாற்றியோ அமைத்துக் கொள்ளமுடியும். பயிற்சிகளின் தரத்தையோ அல்லது மாணவர்களின் மனப்பக்குவத்தையோ கருத்தில் கொண்டு பொருத்தமான பதி லுரைகளை ஆசிரியர் முன்பே தயாரித்துக்கொள்ள முடியும். தங்களின் மின்னஞ்சல் முகவரி யைக் குறித்திருந்தால் மாணவர் பெற்ற மதிப்பளவு ஆசிரியரை வந்தடையும். இணையப் பக்கம் உருவாக்கும் திறன் அவசியம் இல்லை என்றிருந்தாலும், சில அடிப்படை அனுபவம் இருந்தால் Hot Potatoesசின் குறிமுறைகளை (code) மாற்றியமைத்து Hot Potatoesசைத் தங்கள் தேவைக்கேற்ப மேலும் தனித்தன்மையாக்க முடியும்.

Hot Potatoesசின் அமைப்பை ஆசிரியர்கள் ஒரு சில நிமிடங்களில் புரிந்துகொண்டு பயிற்சி களைத் தயாரிக்க முடியும். கணினி நிரலாக்கம் (programming) அறிந்திருக்கவேண்டும் என்ற அவசியம் கிடையாது. பார்ப்பதற்கு எளிதாக இருந்தாலும் இது சக்தி வாய்ந்த ஒரு மென் பொருளாகும்.

Hot Potatoes பயிற்சிகளைத் தமிழாக்கம் செய்வது எளிது. தமிழில் டைப் செய்வதற்கு options சென்று Font கிளிக் செய்து TSC, TAB, Aparanar அல்லது தங்களுக்கு விருப்பமான எந்தத் தமிழ் எழுத்துருவையாவது தேர்ந்தெடுத்து வினாக்களை டைப் செய்ய வேண்டியதுதான்.



Figure 1

திரையில் தோன்றும் பதிலுரைகள், மதிப்பெண்கள், உதவிக்குறிப்புகள், கட்டளைகள் போன்ற வற்றைத் தமிழில் காண options சென்று தமிழ்வடிவக் கோப்பை (config file) இயக்க வேண்டும்.



Figure 2

Hot Potatoesசில் தமிழ் வடிவக் கோப்பு கிடையாது. கீழ்க்காணும் இணையப் பக்கத்தில் கட்டுரையாசிரியர் தயாரித்துள்ள TSC தமிழ் வடிவக் கோப்பினையும் தாரகை தமிழ் வடிவக் கோப்பினையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். http://asia.geocities.com/tharagai56/hotpot.htm அல்லது ஆசிரியர்கள் தமக்குப் பிடித்த எழுத்துருக் குறியீட்டில் தாமாக எளிதில் உருவாக்கிக்கொள்ளலாம்.



Figure 3

முன்பு கூறியதுபோல் Hot Potatoes என்பது ஆறு மென்பொருள்களைக் கொண்ட ஒரு தொகுப்பாகும். இந்த ஆறு மென்பொருள்களைக் கொண்டு நாம் ஆறு வெவ்வேறு வகையான ஊடாடு பயிற்சிகளை உருவாக்கமுடியும். உதாரணங்களைக் காண இந்த இணையத் தளத்திற்குச் செல்லலாம்.

http://asia.geocities.com/tharagai56/hotpot/hotpotexer.htm

JBC — தெரிவுவிடை வினாக்கள் — கொடுக்கப்படும் விடைகளுள் சரியானதைத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஒவ்வொரு விடைக்கும் தனித்தனி பதிலுரை கிடைக்கும். மதிப்பெண் வழங்கப்படும்.



Figure 4

JCloze – முன்னுணர்வுப் பயிற்சி — ஒரு பனுவலில் (text passage) சில சொற்கள் மறைந்திருக்கும். மாணவர் விடையை ஊகித்து அச்சொல்லை கோடிட்ட இடத்தில் டைப் செய்ய வேண்டும். உதவிக் குறிப்புகளை மாணவர் கேட்டுப் பெறலாம். ஒவ்வொரு விடைக்கும் ஒரு குறிப்பிட்ட பதிலுரை அமைந்திருக்கும். தானாவே மதிப்பிடப்பட்டு அம்மதிப்பெண் திரையில் காண்பிக்கப்படும்.



Figure 5

JMix – வாக்கிய அமைப்புப் பயிற்சி — மாறிக் கிடக்கும் சொற்களைச் சரியான தொடராக்கும் பயிற்சி. பல வகைத் தொடரமைப்பையும் சரியான விடையாக ஏற்றுக்கொள்ளும் வசதி கொண்டது. உதவிக் குறிப்புகள் உண்டு

JQuiz – புதிர்வினாக்கள் – மாணவர்கள் குறுவிடைகளை உள்ளீடு செய்யவேண்டும். ஆசிரியர் முன்பே தயாரித்திருந்த விடைகளோடு ஒப்பிட்டு மென்பொருளே மதிப்பிடும். பதிலுரை மாணவர் கொடுத்த விடையில் சரியான பகுதியை எடுத்துக்காட்டும். மாணவர் உதவிக் குறிப்புகளைக் கூட கேட்டுப் பெறலாம்.

JMatch – இணைக்கும் பயிற்சி — இடதுபக்க வரிசையில் சொற்களோ, படங்களோ, ஒலியோ இருக்கலாம். வலது பக்கத்தில் மாறிக்கிடக்கும் விடைகளை இடதுபக்க வரிசையுடன் சரியாக இணைக்கவேண்டும். சொல்வளப் பயிற்சிக்கு மிகவும் ஏற்ற பயிற்சி.

JCross – குறுக்கெழுத்துப் பயிற்சி — தமிழ் எழுத்துருக்களின் அமைப்பின் தனித்தன்மையால் (கொக்கி, புள்ளி, கொம்பு, கால் பிரிந்து வருவதால்) JCross பயிற்சியைத் தமிழில் உருவாக்க இயலாது.

Netscape Navigator அல்லது Internet Explorer உலவிகளைக் கொண்டு இப்பயிற்சிகளைச் செய்யலாம். தாரகை எழுத்துருவில் தயாரிக்கப்பட்ட பாடங்களை Netscape Navigatorல் எளிதில் உள்ளீடு செய்து பயிற்சி பெறலாம். Internet Explorer பயன்படுத்துவோர் TSC எழுத்துருவைப் பயன்படுத்தலாம். தமிழில் உள்ளீடு செய்வதில் சற்றுச் சிரமம் காணலாம். விரைவில் Hot Potatoes யூனிக்கோடில் வரவிருக்கிறது. அதன்பின் தமிழ் எழுத்துரு பிரச்சனை முழுமையாகத் தீரும் என நம்பலாம்.

Hot Potatoes தொகுப்பின் ஆறு மென்பொருள்களையும் தம் தேவைக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ளும் பல வசதிகள் உள்ளன. அவற்றுள் முக்கியமான ஒன்று பதிலுரை (feedback) கொடுத்தல். மாணவர் கொடுக்கும் விடைகளுக்கேற்ப ஆசிரியர் பாராட்டுரையையோ, ஊக்கவுரையையோ தனித்தன்மையுடன் அமைக்க முடியும். அதே போல் ஆசிரியர் பயிற்சிகளுக்கு உதவிக் குறிப்புகளையும் கொடுத்துதவ இயலும். மாணவர் பயிற்சிகளைச் செய்ய எடுத்துக்கொள்ளும் கால அளவையும் ஆசிரியர் முன்பே கட்டுப்படுத்த முடியும். வாசிப்புப் பனுவலை இணைத்து, அதனைப் படித்துவிட்டு கேள்விகளுக்கு பதிலளிக்கும் வசதியும் Hot Potatoesல் உண்டு. குறிப்பிட்ட நேரத்தில் வாசிப்புப் பனுவல் மறைந்து போகும்படியும் செய்யலாம். JCross என்ற குறுக்கெழுத்துப் பயிற்சியைத் தவிர்த்து ஏனைய ஐந்து மென்பொருள் பிரிவுகளிலும் படங்கள், ஒலிகள், விடியோ படங்கள் ஆகியவற்றை மொழிப் பயிற்சிகளோடு இணைக்க முடியும். நிறங்கள், பின்புலங்கள், புறத்தோற்றம் (background) ஆகியவற்றையும் எளிதில் மாற்றிக்கொள்ள முடியும்.

ஆனால் நம்மைப் பொறுத்த வரை மிகப் பெரிய வசதி, Hot Potatoesசை முழுமையாக தமிழாக்கப்படுத்திக்கொள்ள முடிவதே. ஆசிரியர்கள் கேள்விகளையும் விடைகளையும் மட்டும் தமிழ்ப்படுத்தலாம். அல்லது விரும்பினால் பதிலுரை, உதவிப் பொத்தான்கள், உதவிக் குறிப்புகள் போன்ற அனைத்தையும் தமிழிலேயே திரையில் தோன்றும் வண்ணம் செய்யலாம்.

தமிழை இரண்டாம் மொழிப் பாடமாகவோ (second language) அல்லது வேற்றுமொழிப் பாடமாகவோ (foreign language) கற்பிக்கும் தமிழ் மொழியாசிரியர்களுக்கு தகவல் தொழில் நுட்பம் பல வழிகளில் உதவுகின்றது. தமிழ்மொழி வகுப்பைவிட்டு அகன்ற பின்னும் தமிழ் மொழி புழங்கும் சூழ்நிலையை மாணவர்களுக்கு அமைத்துக் கொடுக்கிறது. ஒரு மொழியைக் கைவரப்பெறுவதற்கு (language acquisition) இது மிகவும் அவசியம் என்பது மொழி வல்லுனர்களின் கருத்து. சிறப்பாகத் தயாரிக்கப்படும் இணையப் பாடங்கள் வகுப்பறைப் பாடங்களுக்கு அனுபந்தமாக (supplement) அமைந்து மொழிக் கற்றலை நிறைவுபடுத்துகின்றன. உலகத்தில் வெவ்வேறு நாடுகளில் வாழும் இணையத் தொடர்புள்ள ஆசிரியர்களுடன் இப்பாடங்களைப் பகிர்ந்துகொள்ள முடியும்.

பொதுவாக drill & practice பயிற்சிகள் வழிச் சிறப்பான கற்றல் நிகழாது என்று சில கல்வி யாளர் கூறுவர். சரி, தவறு என்று மட்டும் கேட்கும் பயிற்சிகளுக்கு இது பொருந்தும். ஆனால் Hot Potatoesசில் மாணவர் கொடுக்கும் விடைகளை ஆய்ந்து பொருத்தமான பதிலுரைகளை ஆசிரியர் முன்னமே அமைத்துகொள்ள முடியும். யதார்த்தமான கற்றலை இங்கு நடத்த முடியும். தமிழை இரண்டாம் மொழியாகக் கற்றுக் கைவரப்பெறுவதற்கு Hot Potatoes பெரிதும் உதவ வல்லதாக இருந்தாலும் இணையக் கல்வி ஆசிரியர் தயாரிக்கும் உள்ளடக்கத்தைப் பொறுத்தே அதன் சிறப்பு உண்மையில் அமையும்.

Hot Potatoes மொழிப் பயிற்சிகள் தயாரிக்க உதவும் மென்பொருள் மட்டுமே. இதன்வழி சிறந்த மொழிப் பயிற்சிகளை உருவாக்க முடியுமேயன்றி மொழிச் சோதனைகளை நடத்த இயலாது. மாணவர் ஏமாற்றுவேலை செய்வதையோ மற்ற ஒழுங்குக் கட்டுப்பாடுகளை இதனால் கண்காணிக்க முடியாது. இந்த வசதிகள் கொண்ட மென்பொருள்கள் சந்தையில் உள்ளன, ஆனால் அவற்றின் விலையோ அதிகம். ஒப்பிட்டுப் பார்த்தால் இலவசமாகக் கிடைக்கும் Hot Potatoes மிகவும் மதிப்புடைய மென்பொருளாகவே கருதப்படவேண்டும்.

முடிவுரை

Hot Potatoes மென்பொருளை எவ்வாறு எளிதாகத் தமிழாக்கம் செய்து பயன்படுத்தலாம் என்பதைக் கட்டுரையாசிரியர் தமிழ் இணைய மாநாட்டின்போது செயல்முறை விளக்கமாகத் தம் படைப்பினிடையே செய்து காட்டுவார்.

45

தமிழ் வளர்ச்சியில் தொலைதூரக் கல்வி மற்றும் இணையப் பல்கலைக்கழகங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்

ம.வெ. இராமச்சந்திரா

விரிவுரையாளர்
மக்கள் தகவல் தொடர்புத்துறை, மாரா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்,
40450 ஷா அலாம், மலேசியா
(mvrchandra@hotmail.com, mvrchandra@salam.uitm.edu.my)

இன்று ஒன்றுக்கொன்று தொடர்புடைய மூன்று முக்கிய அறைகூவல்கள் உயர்கல்வியினை வெகுவாக மாற்றிக்கொண்டிருக்கின்றன. 1. பொருளாதார உலகமயமாதல் 2. அறிவுத் தேடலின் முக்கியத்துவம் மற்றும் 3. தகவல் தொடர்புத் துறையில் ஏற்பட்டுள்ள அதிரடி மாற்றங்கள்தாம் அம்மூன்று மாற்றங்கள். இவ்வகையான போட்டி ஏற்படுத்தும் மாற்றங்களால் பல்வேறு பல்கலைக்கழகங்களும் தங்களின் இயல்பிலிருந்து முழுமையாக மாறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இம்மாற்றங்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களை, தகவல் தொடர்பு தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கத்தைப் பயன்படுத்தவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கியதோடு எதிர்காலத் தேவைக்காக தொலைதூரக் கல்வி மற்றும் இணையப் பல்கலைக்கழகங்களை வளரச் செய்துள்ளது.

இவ்வகையான மாற்றங்களால் தமிழ் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், தொலைதூரக் கல்வி மற்றும் இணையப் பல்கலைக்கழகங்களின் மூலம் தமிழ்க் கல்வியினை வளர்க்கும் சாத்தியம், தரமான கல்வியினையும் தொழில்நுட்பத்தையும் இணைத்து வழங்குவதில் உள்ள சிக்கல்கள், இவ்வகைக் கல்விமுறையில் ஏற்படும் வருவாய்ச் சிக்கல்கள் ஆகியவற்றை இக்கட்டுரையானது ஆராய்கிறது.

முன்னுரை:

பல்கலைக்கழகம் என்ற இன்றைய அமைப்பு ஏறத்தாழ 1000 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கு ஐரோப்பாவில் தோன்றி, வெகு விரைவில் அறிவியல் மற்றும் அறிவுசார் கலைகள் கற்குமிடமாகவும் அவற்றிற்கு உத்தரவாதம் அளிக்குமிடமாகவும் மாறியது. பல்வேறு மொழிகள், கலைகள், கலாச்சாரங்கள் ஆகியவற்றின் சின்னமாகவும் பல்கலைக்கழகங்கள் விளங்குகின்றன. இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான தேவையை அதிகப்படுத்தி உயர்கல்விக்கான தேவையை அதிகப்படுத்தியது. இவ்வகையான உயர்கல்விக்கான தேவை இன்று வரை வளர்ந்துகொண்டேயுள்ளதன்றி குறையவில்லை. பல்கலைக்கழகமானது இன்று அறிவுசார் சின்னமாக நிலை பெற்றுவிட்டது.

சற்றே கற்பனை செய்து பாருங்கள். இவ்வாறு பெருமை பெற்றுள்ள பல்கலைக்கழகமானது கட்டிடங்களின்றி, வகுப்பறைகளின்றி, நூலகமின்றி இருந்தால் எப்படியிருக்கும்? இப்பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் பத்தாயிரம் கிலோமீட்டர்கள் தள்ளியிருந்து தங்கள் படிப்பைத் தொடர்ந்தால் எப்படியிருக்கும்? பல்கலைக்கழகத்தில் எந்தவொரு துறையும் இல்லாமலிருந்தால், குறிப்பிட்ட பாடங்கள்தான் படிக்கவேண்டும் எனும் நிலை இல்லாதிருந்தால், நினைத்தபோது, நினைத்தபடி பாடங்களைப் படிக்கலாம் என்றிருந்தால் எப்படியிருக்கும்?

ஒரு நாட்டின் வருவாய் கணிசமான அளவு இவ்வகை உயர்கல்வியினால் வரும் என்ற நிலை இருந்தால் எப்படியிருக்கும். இது கனவல்ல. இந்த 21ம் நூற்றாண்டில் உயர்கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் அடுத்த படிதான் இந்நிலை என்பது விரைவில் அனைவரும் அறியக்கூடிய உண்மையாகும்.

கடந்த சில வருடங்களாகவே பல்வேறு நாடுகளில் உயர்கல்வித்துறைகளில் பல அதிரடி மாற்றங்கள் ஏற்படத் துவங்கியுள்ளது. பல்கலைக்கழகங்களில் நிர்வாக முறை, பொருளாதாரம், பாடத் திட்டங்கள், கற்பிக்கும் முறை, தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இன்றைய உயர்கல்வியின் அமைப்பையே எதிர்காலத்தில் அடியோடு மாற்றி விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய பல்கலைக்கழக கல்வி முறை இன்னும் சில காலத்திற்கு நீடிக்கும் எனினும் மாற்றம் வெகுவிரைவில் வரும் என்பதில் ஐயமில்லை.

புதிய அறைகூவல்கள்:

இன்று ஒன்றுக்கொன்று தொடர்புடைய மூன்று முக்கிய அறைகூவல்கள் உயர்கல்வியினை வெகுவாக மாற்றிக்கொண்டிருக்கின்றன. 1. பொருளாதார உலகமயமாதல் 2. அறிவுத் தேடலின் முக்கியத்துவம் மற்றும் 3. தகவல் தொடர்புத்துறையில் ஏற்பட்டுள்ள அதிரடி மாற்றங்கள்தாம் அம்மூன்று மாற்றங்கள். இவ்வகையான போட்டி ஏற்படுத்தும் மாற்றங்களால் பல்வேறு பல்கலைக்கழகங்களும் தங்களின் இயல்பிலிருந்து முழுமையாக மாறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

உலகமயமாதல் என்பது பொருளாதாரம், தொழில்நுட்பம், தகவல் ஆகியவற்றிற்கான கரைகளை நாடு தழுவிய அளவிலிருந்து நீக்கி, உலகம் முழுவதுமான வணிகச் சந்தையினை விரிவு படுத்தி உலக பொருளாதாரத்துடன் ஒன்றுபடுதலேயாகும். இதனால் நாடுகள் தங்கள் தரத்தை மேம்படுத்தி மற்ற நாடுகளுடன் போட்டியிடவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப் பட்டுவிட்டன. நாடுகளின் பொருளாதார வளர்ச்சிகள் நாட்டிற்கு நாடு வேறுபட்டிருந்த போதிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் பாதித்தபோதும் உலகமயமாதலின் விளைவாக நாடுகள் மட்டுமின்றி ஒவ்வொரு நிறுவனமும், தனி மனிதனும் மற்ற உலக நாடுகளுடன் போட்டியில் இறங்கி வெற்றி பெறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அறிவுத் தேடலின் முக்கியத்துவம் இரண்டாவது முக்கிய காரணியாகத் திகழ்கிறது. பொருளாதார வளர்ச்சி என்பது நாடுகள் பயன்படுத்தும் தொழில்நுட்பம், சமூக பொருளாதார அறிவு, உலகமயமாகுதலை உபயோகிக்கும் விதம் ஆகியவற்றோடு நேரடித் தொடர்புடையதாகும். எளிதாக இயற்கை ஆதாரம் கிடைத்தல், குறைந்த சம்பளத்தில் வேலைக்கு ஆட்கள் கிடைத்தல், தொழில்நுட்பம் உபயோகப்படுத்த போதுமான வசதிகள் கொண்ட கட்டமைப்பு, மற்றும் அறிவுசார் வளர்ச்சி ஆகியவையே பொருளாதார வளர்ச்சியின் சாதகமான அம்சங்களாகும். ஆயினும் இன்றைய சூழ்நிலையில் பொருள் சேமிப்பு முறையை விட அறிவு வளர்ச்சி சேமிப்பு முறையானது பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய காரணியாகக் கருதப்படுகிறது.

இவ்வகையில் பார்த்தால் ஒரே தொழில்நுட்பமாக இருப்பினும் தரம் மற்றும் சேவை வழங்கும் முறையினை வைத்தே பொருளாதார வளர்ச்சி கணக்கிடப்படும். வழக்கமான பொருளாதார வளர்ச்சி முறைகள் வெகு விரைவில் பயன்பாடற்றுப் போகும். அதே சமயம் வேகமாக வெளிப்படும் அறிவுசார் வளர்ச்சியானது தொழில்நுட்பம் மற்றும் பொருட்கள் பயன்பாட்டின் கால அளவு ஆகியவற்றின் ஆயுளை வெகுவாகக் குறைத்து விடுகிறது. இதற்கு சிறந்த உதாரணமாக கணினி பயன்பாட்டைக் கூறலாம். முந்தைய கணினி வகையின் கால அளவினை விட அடுத்த வகை கணினியின் கால அளவு குறைந்து கொண்டே வருகிறது என்பது கண்கூடு. அதே போன்று அறிவு வளர்ச்சியானது பல துறைகளில் அடிப்படை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடு ஆகியவற்றிற்கிடையேயான இடைவெளியை வெகுவாகக் குறைத்துவிட்டது அல்லது இல்லாமலேயே செய்துவிட்டது. உதாரணமாக கணினி அறிவியல் மற்றும் மூலக்கூறு உயிரியல் ஆகிய துறைகளைக் கூறலாம்.

தகவல் தொடர்புத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் உயர்கல்வி மாற்றத்திற்கான மூன்றாவது காரணியாகும். தகவல்களை சேமித்து வைக்கவும், பங்கிட்டுக்கொள்ளவும் ஏற்பட்டுள்ள

வசதிகள் இக்காரணிக்கான அடிப்படையாகும். தொலைத் தொடர்புத் துறை மற்றும் மின்னியல் ஆகியவற்றின் புதிய கண்டுபிடிப்புகள் அதிக தகவல்களை விரைவில் அனுப்ப வழி செய்வதுடன் அதற்கான செலவினை வெகுவாகக் குறைத்துள்ளது. இதன் விளைவாக மக்கள், நிறுவனங்கள் மற்றும் நாடுகள் ஆகியவற்றின் இடையேயுள்ள உண்மை இடைவெளி தூரமானது தகவல் புரட்சி வழியாக வெகுவாகக் குறைக்கப்பட்டுவிட்டது.

இம்மாற்றங்கள் கல்வித் துறையில் ஏற்படுத்தியுள்ள இரண்டு தாக்கங்கள் மிகவும் முக்கியமாக கவனிக்கப்படவேண்டியதாகும். அவையான கல்வி நிறுவனங்களின் எல்லையற்ற தன்மை மற்றும் தனியார்மயமாகுதலாகும். இன்றைய சூழ்நிலையில் தனிப்பட்டவர்களின் கல்விக்காக அவர்களே செலவு செய்து கல்வி கற்கவேண்டியுள்ளது. கல்வி நிறுவனங்கள் பொது மக்களின் பணமின்றி, அதிக மக்களை கல்வி கற்கவைக்கவேண்டியும் உள்ளது. இருபதாம் நூற்றாண்டின் சமூக பொருளாதார மாற்றங்கள் அனைத்து நாடுகளிலும் பல்வகைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றம் மிகவும் முக்கியமானதாகும். அடிப்படைக் கல்வி என்ற கோட்பாட்டிலிருந்து முன்னேறி உயர்கல்விக்கான தேடல் என்ற நிலைக்கு மாணவர்களை மாற்றியது இதில் மிக முக்கியமானதாகும். இந்நிலையே தொலைதூரக் கல்விக்கான அடிப்படைக் காரணம் எனலாம்.

வளர்ந்து வரும் சமூக பொருளாதார மாற்றங்கள் உயர்கல்விக்கான தேவையை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இதனால் பல நாடுகளில் அரசுகள் கல்வி நிறுவனங்களுக்கு நிதி வழங்குவதில் சிக்கலேற்பட்டு, நிதி வழங்குவதிலிருந்து ஒதுங்கத் துவங்கிவிட்டது. இதன் விளைவாக கல்வி கற்பவர்கள் முழு கல்விக்கான செலவினங்களை அவர்களே ஏற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இம்மாற்றம் கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்வி கற்பவர்களை விற்பவர் மற்றும் வாங்குபவர் என்ற உறவுக்கு மாற்றி கல்வியை சந்தைப் பொருளாதாரமாக மாற்றியுள்ளது. இச்சந்தைப் பொருளாதாரம் வாங்குபவரின் தேவைக்கேற்ப கல்வியை மாற்றி வழங்கவேண்டிய சூழ்நிலைக்கு உயர்கல்விக் கூடங்களை மாற்றிவிட்டது.

சுருங்கி வரும் அடிப்படை ஆதாரங்கள் மற்றும் அதிகரிக்கும் கல்வித் தேவை ஆகியவற்றின் விளைவாக கல்வித் துறையில் உண்டாகும் பிரச்சனைகளைக் களைய தொழில்நுட்ப வளர்ச்சி சரியான வாய்ப்பாக விளங்குகிறது. குறிப்பாக தொலைத் தொடர்புத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றம் கால அளவு மற்றும் தூரம் ஆகியவற்றினால் ஏற்படும் பிரச்சனைகளைக் களைகிறது. கணினித் துறை மற்றும் தொலைத் தொடர்புத் துறையின் கூட்டுப் பயன்பாட்டின்வழி பல்கலைக்கழகங்கள், உயர்கல்விக் கூடங்களை நோக்கி மாணவர்களை வருவதைத் தவிர்த்து, தொலைதூரக் கல்வியின் வழியே அவர்கள் எங்கிருப்பினும் கல்வியை அவர்களுக்கு வழங்குகிறது.

தொலைதூரக் கல்வி மற்றும் திறந்தவெளிக் கல்வி முறை:

கடிதப் போக்குவரத்து அல்லது ஒலி, ஒளிபரப்பின்வழி விரிவுரைகளைப் பெற்று கல்வி கற்கும் முறை தொலைதூரக் கல்வி முறை எனவும் வழக்கமான வகுப்பறை கல்வி முறை அன்றி, அடிப்படை கல்வித் தகுதிகள் இன்றி தனிப்பட்ட முறையில் கல்வி கற்கும் முறை திறந்த வெளிக் கல்விமுறை என்றும் வழங்கப்படுகிறது. உயர்ந்து வரும் கல்விச் செலவினங்களுக்கு மாற்றாக தொலைதூரக் கல்வி முறை அமைந்துள்ளது எனலாம். மேலும் குறைந்த செலவிலேயே தரமான கல்வியைப் பெற சிறந்த முறையாகவும் கருதப்படுகிறது. ஆயினும் திறந்த வெளிக் கல்விமுறையினைத் தொடங்க அதிக செலவு பிடிக்கலாம். அடிப்படை வசதிகள், தொழில்நுட்பம், நிர்வாகக் கட்டமைப்பு ஆகியவற்றிற்காக அதிக செலவு செய்ய நேரிடும். அடிப்படை தொழில்நுட்பக் கட்டமைப்பு இல்லாவிடின் அது தொலைதூரக் கல்வி முறையின் அடிப்படையையே பாதிக்கும். வளரும் நாடுகளில் சில பல்கலைக்கழகங்கள் இவ்வாறு அடிப்படை தொழில்நுட்ப கட்டமைப்புக் குறைவின் காரணமாக பல சிரமங்களை எதிர்கொள்வதை நாம் அறிவோம். வானொலி, தொலைக்காட்சி, தொலைத் தொடர்பு மற்றும் கணினி கட்டமைப்புகள் அதிக செலவு பிடிப்பினும், நாளடைவில் தேவைப்படும் மிகக் குறைவான பராமரிப்பு செலவு உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் உள்ளடக்கி மொத்தமாகப் பங்கிட்டுப் பார்த்தால் மிகக் குறைவான செலவு விகிதமாகவே அமையும்.

பல நாட்டு அரசுகளும், பல்கலைக்கழகங்களும் பல சோதனை முயற்சிகளை மேற்கொண்டு இத்தொலைதூரக் கல்விமுறையை சிக்கனமான முறையாக மாற்ற முயற்சித்து வருகின்றன. பெரும் பல்கலைக்கழகங்கள் ஏற்கனவே உள்ள தொடர்பு கட்டமைப்புகளை இம்முறையில் பயன்படுத்திக்கொள்கின்றன. உதாரணமாக துருக்கியில் உள்ள அனடோலு பல்கலைக்கழகம் தேசிய தொலைக்காட்சியை இம்முறைக்கு பயன்படுத்திக்கொள்கிறது. இந்தோனேசியா தெர் புக்கா பல்கலைக்கழகம் தபால் நிலையங்களை மாணவர் சேர்ப்பு நிலையங்களாகப் பயன் படுத்திக்கொள்கிறது. ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி பல்கலைக்கழகம் அந்நாட்டிலுள்ள காப்புறுதி நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளது இன்னும் சர்ச்சைக்குள்ள ஒரு விஷயமா கும் எனினும் இதுவும் ஒரு புதிய முயற்சியே.

தமிழ்க் கல்வியினைப் பொறுத்த வரை தமிழகப் பல்கலைக்கழகங்கள் தொலைதூரக் கல்வி மற்றும் திறந்தவெளிக் கல்விமுறையினை வழங்கினாலும் அவை பொதுவாக இந்தியாவை விட்டு வெளியே செல்லவில்லை என்பதே உண்மை. ஒரு சில பல்கலைக்கழகங்கள் ஒரு சில நாடுகளில் தொலைதூரக் கல்வியை வழங்கினாலும் அவை உலகெங்கும் பரவியுள்ள தமிழர் களைச் சென்றடையவில்லை என்பதுதான் வேதனைக்குரிய விஷயமாகும். தமிழ் இணையப் பல்கலைக்கழகமானது தற்போது துவங்கப்பட்டு செயல்படுவது தமிழர்களுக்கு சற்றே ஆறுதல் அளிக்கும் விஷயம் எனினும் பல நாடுகளில் வசிக்கும் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு இவ் வாறு ஒரு பல்கலைக்கழகம் செயல்படுவது கூடத் தெரியாத நிலை உள்ளது என்பது கவலை தரும் செய்தியாகும்.

எதிர்நோக்கும் சவால்கள்:

பொதுவான பழக்க வழக்கங்களிலிருந்து வேறு முறைக்கு மாறுவதற்குண்டான எதிர்ப்புகளே இத்தொலைதூரக் கல்விமுறைக்கு உண்டான முதல் சவாலாகும். வழக்கமான ஆசிரியர் — மாணவர் கல்வி முறையிலிருந்து மாறுபட்டு புதிய முறையின்வழி கல்வி கற்றுக்கொள்ளுதல் சவாலான ஒரு விஷயமாகும். ஆயினும் இந்தியா உட்பட பல நாடுகள் இதில் முயன்று சாதித்துக் காட்டியும் விட்டன.

இவ்வகை பல்கலைக்கழக தொலைதூரக் கல்வியின் தரம், தொழில்நுட்பக் கட்டமைப்பு, நூலக வசதிகள் அதற்கான ஏற்பாடுகள், நிர்வாக, மாணவர் தொடர்பு, அடிப்படை அறிவு சார் கட்டமைப்பு ஆகியவை இன்னும் பெரிய கேள்விக் குறியாகவே திகழ்கின்றன. இந்தியா விலுள்ள இந்திரா காந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகம் வழங்கும் கல்வியின் தரம் மற்ற நாடுகளில் போற்றப்படுவதைப் போல் மற்ற பல்கலைக்கழகங்கள் வழங்கும் கல்வின் தரம் போற்றப்படுகிறதா? ஹாங்காங் பல்கலைக்கழகம் வழங்கும் கல்வியின் தரத்திற்காக அரசு பயன்பாட்டாளர் பாதுகாப்பு விதிகளை வகுத்து சீனா முழுமையும் அமுல்படுத்தி யுள்ளது. தாய்லாந்தின் சுக்கோதாய் தம்மாதிராட் திறந்தவெளிப் பல்கலைக்கழகம் சிறந்த பயிற்சிக்காகப் போற்றப்படுகிறது. உலகெங்கும் உள்ள பல்கலைக்கழகங்களில் 13 பல்கலைக்கழ கங்கள் மட்டுமே தரமான தொலைதூரக் கல்வியை வழங்குவதாக சில புள்ளிவிவரக் குறிப்பு கள் காட்டுகின்றன.

தொலைதூரக் கல்வி முறையில் பாடங்கள் அமைக்கத் திட்டமிடுதலும் தயாரித்தலும் அதிக நேரம் பிடிக்கும் செயல் மட்டுமில்லாது அவற்றை மாணவர்களுக்கு வழங்கும் முறையும் பல் வேறு சிக்கல்களைக் கொண்டுள்ளதாகும். அச்சு ஊடகம். ஒலி ஊடகம். ஒலி, ஒளி ஊடகம் கணினிசார் ஊடகம் ஆகிய பல்வகை ஊடகங்களின் வழி கல்வி வழங்குவதில் உள்ள சிக்கல் கள் ஏற்கனவே நாம் அறிந்ததே. ஆயினும் இச்சிக்கல்கள் சரியான தொழில்நுட்ப கட்டமைப் பின் வழி சரி செய்யக் கூடிய சிக்கல்களாகும்.

நிதிச் சிக்கலானது தொலைதூரக் கல்வி முறையில் மிகப் பெரிய சிக்கலாகக் கருதப்படுகிறது. நிர்வாகச் செலவுகள், பாடங்கள் தயாரித்து வழங்கும் செலவு, வரிகள் காப்புரிமைக் கட்ட ணங்கள் மற்றும் இதர செலவினங்கள் இவ்வகைக் கல்வி முறைக்குப் பெரிய சவால்களாகத் திகழ்கின்றன. அரசுகள் சரியான, எளிமையான விதிகளைத் தயாரித்தலும் கல்விக்காக கட்ட மைப்பு வசதிகளை மிகக் குறைந்த கட்டணத்தில் அளித்தலும் பெருமளவில் நிதிச் சிக்கல் களைக் குறைத்துவிடும்.

குறியீட்டுச் சிக்கலானது தமிழ் மொழி வளர்ச்சிக்கு உரிய சிக்கல்களில் இன்று வரை உள்ள மிகப் பெரிய சிக்கல் எனினும் வெகு விரைவில் அனைவரின் பயன்பாட்டிற்கு வந்துவிடும் யுனிகோடு இச்சிக்கலை எளிதாகத் தீர்த்துவிடும். பலரும் பலவிதமாகப் பயன்படுத்தும் பல வகைக் குறியீடுகளை வழக்கத்திலிருந்து எடுத்து உலகெங்கும் ஒரே மாதிரியான குறியீட்டு முறைக்குக் கொண்டுவரும் யுனிகோடு முறையினை தமிழக அரசு உடன் அமுல்படுத்துவது தமிழ் வளர்ச்சிக்கு செய்யும் மிகப் பெரிய தொண்டாகும்.

பல்கலைக்கழகங்கள் சரியான கட்டண விகிதங்களை அமைப்பதும் ஒரு மிக முக்கியப் பிரச்சனையாகும். வளரும் நாடுகளின் மாணவர்களுக்காகவும், வளர்ந்த நாடுகளின் மாணவர்களுக்காகவும் தனித்தனியே கட்டண முறை அமைத்தல் இன்று பரவலாக ஏற்றுக்கொள்ளப் படுகிறது. இதன் வழி பல நாட்டு மாணவர்களையும் எளிதில் கவர முடியும்.

தொழில்நுட்பம்:

வகுப்பறைக் கல்வி போலன்றி தொலைதூரக் கல்வி முறையானது வேறுபட்டதாகும். யூனிப் பட்டவர்களுக்காக அன்றி அனைவரையும் கருத்தில் கொண்டு பாடத் திட்டங்கள் அமைக் கப்படவேண்டும். இது சவாலான மற்றும் சிக்கலான விஷயமாகும். மேலும் இது பல்வகை தொழில்நுட்பங்களின் மூலம் மாணவர்களுக்குக் கொண்டுசேர்த்தலும் மிகப் பெரிய சவாலான விஷயமாகும். மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல், அவர்களைத் தொடர்ந்து கவனித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவை தொழில்நுட்பக் கட்டமைப்பின் வாயிலாகச் செய்யப்படுவதால் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சரியான வளர்ச்சி கொண்டதாக இருத்தல் வேண்டும்.

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் போன்றவை வழங்கும் இணைய வழி கல்விமுறையானது விரிவுபடுத்தப்படவேண்டும். தமிழர்கள் அதிகமாக வசிக்கும் நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் தொடர்பு கொண்டு தமிழை ஒரு மொழிப் பாடமாக அங்கு சேர்க்கும் வண்ணம் வகை செய்யலாம். மேலும் முதுகலைப் பட்டப்படிப்பு முறையையும் கொண்டு வரலாம், அத்துடன் தமிழ் ஆய்வு முனைவர் பட்டப்படிப்பை உடன் கொண்டுவருவதன் வழி பல ஆசிரியர்களை பல்வேறு நாடுகளில் உருவாக்கி எதிர்கால மாணவர்களுக்கு வழிகாட்ட வகை செய்யலாம்.

அச்சு ஊடகத்தை மட்டும் நம்பியிராது வெளிநாட்டு மாணவர்களையும் கவர பல்கலைக்கழகங்கள் தங்கள் கணினி தொழில்நுட்பக் கட்டமைப்பை மேம்படுத்தலும் யுனிகோடு குறியீட்டிற்கு மாறுதலும் உடன் மேற்கொள்ளவேண்டிய காலத்தின் கட்டாயங்களாகும். கணினியின் வழி வழங்கப்படும் பாடத்திட்டங்கள் எளிதில் பல நாட்டு மாணவர்களையும் சென்றடையும்.

தொலைதூரக் கல்வி மற்றும் இணையப் பல்கலைக்கழகங்களின் தரம்:

சரியான வழியில் தரமான தொலைதூரக் கல்வி வழங்கும் விதி முறைகள் என உயர்கல்விக்காக அங்கீகாரம் வழங்கும் கழகம் (Council for Higher Education Accreditation) வகுத்துள்ள விதி முறைகளாவன:

1. நம்பகத்தன்மை கொண்ட நேர்மை வாய்ந்த செயல் அளவை விதிகள்
2. துறையினர் மாணவர் சந்திப்பிற்கான நேர்மையான ஆதாரங்கள்
3. சிறந்த போதனை தொழில்நுட்பத்திற்கான ஆதாரங்கள்
4. சரியான ஆசிரியர்கள் தேர்வும் அவர்களுக்கான சரியான பயிற்சியும்
5. கற்பதற்கான அடிப்படை ஆதார வசதிகளை உண்டாக்குதல்
6. தொழில்நுட்பக் கட்டமைப்புகளை மேம்படுத்தலும் அவற்றைச் சரியாகப் பராமரித்தலும்
7. பாடத் திட்டங்களைச் சரியாக அமைப்பதில் கவனம் செலுத்துதலும் தேவையான தகவல்களைத் தருவதும்

8. வழக்கமான மதிப்பீட்டு முறையிலிருந்து மாறுபட்டு சரியான புதிய முறையில் மாண வர்களைச் சோதித்தலும் ஆகும்.

இவ்விதிகளின்படி நமது பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றனவா என சோதித்து தரமான கல்வியை வழங்க வகை செய்தல் நமது கடமையாகும்.

வளரும் நாடுகளில் தொலைதூரக்கல்வி மற்றும் இணையப் பல்கலைக்கழகங்களின் வருவாய்/ இலாபம் அணுகுமுறை:

ஒருவர் தொலைதூரக் கல்வி அல்லது இணையப் பல்கலைக்கழகத்தின் வழி படிப்பதற்கு ஆகும் செலவையும் நேரடியாகப் பல்கலைகழகத்தில் சேர்ந்து படிப்பதற்காக ஆகும் செலவை யும் ஒப்பிட்டுப் பார்த்தால் தொலைதூரக் கல்வி அல்லது இணையப் பல்கலைக்கழகத்தின் வழி ஆகும் செலவு மிகவும் குறைவாகவே உள்ளது. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே, தபால் வழி பாடங்கள் தாமதமாகக் கிடைத்தல், தொலைந்து போதல் போன்ற பிரச்சனை களையும் தாண்டி தொலைதூரக் கல்வி முறை வளர்ச்சி பெறுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். தொழில்நுட்ப வளர்ச்சியானது தொலைபேசி, தொலைக்காட்சி, குறுந்தகடுகள் என தொலைதூரக் கல்வியின் பரிணாமங்களை வளர்த்து தற்போது இணையக் கல்விக்கு அடித்தளமிட்டிருக்கிறது.

இணையப் பல்கலைக்கழகங்கள் தொலைதூரக் கல்வி முறையினை விட அதிக செலவு பிடிக்கும் அம்சமாகவே உள்ளது. அதிக வேகம் கொண்ட இணையத் தொடர்பு, பாடங்களை வடிவமைப்பதற்கான செலவு, கணினி கட்டமைப்பு முறைகள் ஆகியவை அதிகம் செலவு செய்ய வைக்கும் அம்சங்கள் எனினும் இது எல்லையில்லா பரப்பினைக் கொண்டு உலகம் முழுவதும் பரவுவதுடன் தொடர் செலவுகளை வெகுவாகக் குறைக்கிறது. மேலும் அதிக எண்ணிக்கையிலான மாணவர்களைச் சேர்ப்பதன் வழி செலவுகளை வெகுவாகக் கட்டுப் படுத்த முடியும்.

இன்றைய நாளில் அதிக வேகம் கொண்ட கணினி வழித் தடம் பெரும் பிரச்சனையாகத் தோன்றினாலும் கணினி வளர்ச்சியின் வேகத்தைக் கணிக்கும் போது எதிர்காலத்தில் இது பிரச்சனையே அல்ல என்றே தோன்றுகிறது. எதிர்காலத்தில் கம்பியில்லாத் தொடர்பு முறை யில் வெகு வேக கணினி வழித்தடங்களைப் பெற இயலும் எனக் கணிக்கப்படுகிறது. அவ் வாறாயின் அது தொலைதூரக் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கும் என்பதில் ஐய மில்லை.

சீனாவில் உள்ள மத்திய வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பல்கலைக்கழகத்தின் தொலைக்காட்சி வழியிலான தொலைதூரக் கல்வி முறையின் வாயிலாக ஒரு கோடிக்கும் அதிகமானோர் தங்களது படிப்பினைத் தொடருகின்றனர். இது பல்கலைக்கழகத்திற்கு அதிக வருவாயைத் தேடித் தருகிறது. 1997ல் ஆரம்பிக்கப்பட்ட ஹுனான் பல்கலைக்கழகமானது சீனாவின் முதல் இணையப் பல்கலைக்கழகமாகும். பின்னர் ஆரம்பிக்கப்பட்ட மூன்று இணையப் பல்கலைக்கழகங்களும் ஒன்று சேர்ந்து 2000 வருடத்தில் கூட்டுச் சங்கம் (Consortium) அமைத்து பலவேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. இதன் விளைவாக இன்று இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் இந்த இணையப் பல்கலைக்கழகங்களில் சேர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது எடுக் கப்பட்ட புள்ளி விவரங்கள் பத்தில் ஒரு மாணவர் வேலை பார்த்துக் கொண்டே இணையப் பல்கலைக்கழகத்தில் தமது படிப்பைத் தொடர விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று கூறுகிறது. இது இணையப் பல்கலைக்கழகங்களின் ஒளிமயமான எதிர்காலத்தையே நமக்குச் சுட்டுகிறது.

நம் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் நேரடிக் கல்வி முறையினை விட ஏராள மானவர்கள் தொலைதூரக் கல்வி முறையில் படிக்கின்றனர் என்பதும், தொலைதூரக் கல்வி முறையே அதிக வருவாய் ஈட்டித்தருகிறது என்பது கண்கூடான உண்மையாகும்.

முடிவுரை:

பொருளாதார உலகமயமாதல், அறிவுத் தேடலின் முக்கியத்துவம் மற்றும் தகவல் தொடர்புத் துறையில் ஏற்பட்டுள்ள அதிரடி மாற்றங்கள் உயர்கல்வியினை வெகுவாக மாற்றிக்கொண்டிருக்கிறது என்பது உண்மையாகும். வளர்ச்சியின் சாதகமான அம்சங்களை எடுத்துக் கொண்டு அதன்வழி நமது உயர்கல்வியினையும் தமிழையும் வளர்க்க ஆவண செய்யவேண்டியது உலகெங்கும் உள்ள ஒவ்வொரு தமிழரின் கடமையாகும்.

தொலைதூரக் கல்வி முறையின் எல்லையை நமது பல்கலைக்கழகங்கள் விரிவுபடுத்தி புலம் பெயர்ந்த தமிழர்கள் இருக்கும் இடங்கள் அனைத்திற்கும் கொண்டு செல்லவேண்டியது மிக முக்கியமான தேவைகளுள் ஒன்றாகும்.

தமிழ் இணையப் பல்கலைக்கழகமானது முனைவர் படிப்பு வரை விரிவுபடுத்துவதுடன் பல நாடுகளில் உள்ள, குறிப்பாக தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள, பல்கலைகழகங்களுடன் ஒப்பந்தம் செய்து தமிழ் மொழியை பாடமாக வைப்பது தமிழ் வளர்ச்சிக்கு பேருதவியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் வளர்ச்சிக்காக, கணினி குறியீட்டு முறையை யுனிகோடு குறியீட்டு முறைக்கு மாற்ற தமிழர்கள் தாய் மண்ணான தமிழகத்தின் சார்பில் தமிழக அரசு ஆணை பிறப்பிப்பது தமிழ் பயன்பாடு வளரவும் பல்கலைக்கழகங்களின் பயன்பாட்டிற்கும் உதவும் உடனடியான அத்தியாவசியத் தேவையாகும்.

தொலைதூரக் கல்வி முறை பரவ வழி இருப்பினும் தமிழ்க் கல்வி முறையின் வளர்ச்சியானது இன்னும் அடிப்படையிலேயே இருப்பதை உணர முடிகிறது. தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் கணினி தொழில்நுட்பக் கட்டமைப்பை மேம்படுத்தி, சரியான பாடத் திட்டங்களை தயாரித்து, உலகெங்கும் பயன்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கும் யுனிகோடு முறையில் அவற்றை வழங்கி புலம்பெயர்ந்த தமிழர்களும் பாடங்களைப் பெற்று தேர்வெழுதும்படி விதிகளைத் தளர்வு செய்தால் தமிழ்க் கல்வியானது தரணியெங்கும் பரவி வளரும் என்பதில் ஐயமில்லை.

மேற்கோள்கள்.

ம.வெ. இராமச்சந்திரா (2001), "பல்லூடகங்களின் வழி தமிழ்க் கல்வி — பயன்களும், அவற்றிலுள்ள சிக்கல்களும்". உலகத் தமிழ் இணைய மாநாடு, 2001, கோலாலம்பூர், மலேசியா.

Carr, Sarah (2001), "Is Anyone Making Money on Distance Education?" Chronicle of Higher Education. February 16, 2001.

URL: <http://chronicle.com/weekly/v47/i23/23a04101.htm>

China Internet Network Information Center: SemiAnnual Survey Report on Internet Development in China, URL: <http://www.cnnic.net.cn/develst/e-cnnic200101.shtml>

Farrell (1999), "The development of virtual education: A global perspective", Vancouver, Canada: the Commonwealth of Learning

Gafford, B.R. (1995). Mediated Learning: A new model of technology-mediated instruction and learning. Mountain View, CA: Academy Systems

Institute for Higher Education Policy: "What's the Difference? A Review of Contemporary Research on the Effectiveness of Distance Learning in Higher Education," April, 1999. URL: <http://www.ihep.com/difference.pdf>

Jamil Salmi (2000), "Higher Education: Facing the Challenges of the 21st Century", Techknowlogia, Jan/Feb 2000.

Jody K. Olson (2000), "Is Virtual Education for Real?", Techknowlogia, Jan/Feb 2000.

John S. Daniel (1996), Mega Universities and Knowledge Media: Technology strategies for Higher Education, London: Kogan Page

M.V. Ramachandra (2003), Distance Learning Programmes: Is Real Solution For The Future?, The Association of Southeast Asian Institutions of Higher Learning (ASAIHL) International Conference 2003, Kota Kinabalu, Sabha, Malaysia

Rewick, Jennifer (2001), "Off Campus: Private Virtual Universities challenge many of the assumptions long held by educators. Their challenge: survival," Wall Street Journal, March 13, 2001, E-Commerce Section.

World Bank (1998). World Development Report: Knowledge for Development. New York: Oxford University Press, p. 28.

46

மொழியியற் பார்வையில் தமிழ்க் குறியேற்றங்களுக்கான ஒரு முன்னீடு

முனைவர் இராம.கி.

தமிழம் தன்னார்வுக் குழு, சென்னை, தமிழ்நாடு, இந்தியா

1.0. கட்டுரை வாயில்:

1.1 மொழியும் எழுத்தும்:

மொழி என்பது ஒலிகளால் ஆனது; அது வாயாலும் செவியாலும் மட்டுமே மாந்தனால் முதலில் அறியப்படுவது; மொழியை மாந்தன் கண்ணால் உணரத் தலைப்பட்டது நெடுநாட்களுக்குப் பிறகே; அப்படி நெடுநாட்கள் எழுத்துருவம் காணாமல், வெறும் பேச்சுருவோடு மட்டுமே மொழிகள் இருந்த காலமும் ஒன்று உண்டு. பின்னொரு காலத்தில், நேரடிப் பேச்சு இல்லாமலும் ஒருவருக்கு ஒருவர் கருத்துப் பரிமாற்றம் செய்யும் வகையில், ஒலிகளைப் பதிவு செய்வதற்காகவே எழுத்துக்கள் உருவாயின. படவெழுத்து, அசையெழுத்து, அகரவரிசை எனத் தோன்றிக் கொஞ்சங் கொஞ்சமாய்த் தட்டுத் தடுமாறி, நீண்ட வளர்ச்சி பெற்ற எழுத்துக்கள் கருத்துப் பரிமாற்றத்தின் முதல் ஆளிகள் அல்ல, மாறாக நிகராளிகளே என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

மொழியின் உள்ளுறை (content) அதன் ஓசைகளிலும், அந்த ஓசைகள் குறிக்கும் பொருள்களிலுமே உள்ளது. சொல்ல வந்த உள்ளுறை, எழுத்தின் வழிக் கல்வெட்டிலும், ஓலையிலும், பிற்காலத்தில் தாளிலும் அச்சிலும் கணியிலும் போகும்போது, அதன் பொருள் மாறாமலேயே, எந்த ஒரு கட்டத்திலும் ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தடையிராமலேயே, கருத்துப் பரிமாற்றம் நிகழவேண்டும்.

படவெழுத்து இந்த நிகராட்சியைச் சரியாகச் செய்யாததால் அசையெழுத்திற்கும், பின்னர் அதுவும் பொருந்தாததால் அகர வரிசைக்கும், படிப்படியாக மாந்தன் மாறினான். இன்றைக்கு இந்த மாற்றத்தில் சில மொழிகள் அகர வரிசை வரைக்கும், பல மொழிகள், குறிப்பாக இந்திய மொழிகள், திறந்த அசையெழுத்துகளுக்கும் (open syllable characters) அகர வரிசைக்கும் (alphabets) இடைப்பட்ட நிலையில் வந்து நின்றுவிட்டன.

1.2. தமிழெழுத்தின் தனிநிலை:

இந்திய மொழிகளுக்குள் தமிழ் மொழி மட்டுமே புள்ளியைப் பயனாக்குவதாலும் கூட்டு எழுத்துக்கள் இல்லாது போனதாலும் மற்ற இந்திய மொழிகளைப் பார்க்க, தமிழ் மொழி ஓரளவு முந்திய நிலையில் இருக்கிறது. ஆனாலும் உரோமன் எழுத்தைப் பயன்படுத்தும் மேலை மொழிகளைப் போல, அகர வரிசையை மட்டுமே பயன்படுத்தும் நிலைக்குத் தமிழ் மொழி வரவில்லை.

இன்றைக்கு அகரவரிசை எழுத்தை மட்டும் கொண்டு, உயிர்மெய் எழுத்து இல்லாத மேலை மொழிகளால் கணிக்குள் எளிதாகப் பயில முடிகிறது. அடிப்படையில் உயிர்மெய் எழுத்தை எப்படிக் கணியில் கையாளுவது என்று முடிவெடுக்க ஒட்டாமல்தான் தமிழ்க் கணிமை இன்

றும் தடுமாறிக்கொண்டிருக்கிறது. உயிர்மெய் எழுத்துக்களை தமிழ்க் கணிமையில், குறிப்பாகத் தமிழ்க் குறியேற்றங்களில், சரியாகக் கையாளுகிறோமா என்ற கேள்வியை எழுப்பி அதற்கு ஒரு தீர்வு சொல்லுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2.0. ஒலிகள், எழுத்துக்கள் மற்றும் குறியேற்றங்கள்:

2.1. தமிழின் அடிப்படை ஒலியன்கள்:

ஒலி இயலின்படி, தமிழில் பழகி வரும் 12 உயிர், 25 மெய் (க், ஹ், g, ங், ச், ஸ், ஜ், ஞ், ட், d, ண், த், dh, ந், ப், b, ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்), 1 குற்றியலுகரம், 1 குற்றியலிகரம், 1 ஆய்தம் என 40 முதல் ஒலிகளை மொழியியலார் ஒலியன்கள் என்று அழைப்பார்கள். இந்த 40 ஒலியன்களைக் கூட்டியே நம் தமிழ் மொழி இயங்குகிறது.

அதே பொழுது, இந்த ஒலிகளைக் குறிக்க 31 எழுத்து வடிவங்களே உயிர், மெய், ஆய்தம் என இருக்கின்றன. (மொழியியலார் எழுத்து வடிவங்களைக் கீற்றங்கள் – graphemes என்று அழைப்பார்கள். எழுத்து என்ற சொல் ஒலியனும் கீற்றமும் சேர்த்து உள்ள கருத்தையே உணர்த்துகிறது. அ என்ற எழுத்து அதன் ஒலியனையும் கீற்றத்தையும் சேர்ந்தே குறிக்கிறது.) குற்றியலுகரத்திற்கும் குற்றியலிகரத்திற்கும் தனிக் கீற்றங்களைக் காட்டாமல், அந்தந்த முற்றிய லுகரமும், முற்றியிலிகரமுமே அவற்றிற்கு உரிய கீற்றங்களாகத் தமிழில் ஆளப்படுகின்றன. இத்தகைய குற்றோசைகளை நாம் இடம் பார்த்துப் புரிந்துகொள்ளுகிறோம். தவிர, மேலே உள்ள மெய் ஒலிகளில் ஹ், g, ஸ், ஜ், d, dh, b, என்ற ஒலிகள் தனித்த கீற்றங்களைப் பெறுவ தில்லை. அவை ஒரு சொல்லில் வரும் இடத்தைப் பொறுத்து, க், ச், ட், த், ப் என்ற ஐந்து கீற்றங்களாலேயே நிகராண்மை பெறுகின்றன.

உயிரும் மெய்யும் புணர்ந்து வரும் திறந்த அசையொலிகளை (open syllable sounds) உயிர்மெய் என்றும், அவற்றை நிகராளும் போது உயிர்மெய்க் கீற்றங்கள் (vowel-consonants) என்ற வடி வங்களின் மூலமும் காட்டுகிறோம். உயிர் எழுத்தையும் மெய் எழுத்தையும் போல அல் லாது, உயிர்மெய் எழுத்துக்களைத் தமிழ் இலக்கணத்தார் முதல் எழுத்துக்கள் என்று சொல் லாது, வழி எழுத்துக்கள் என்றே சொல்லுகிறார்கள். இந்த அடிப்படைக் கருத்தையும் கணி ஞர்கள் ஆழ்ந்து பார்க்கவேண்டும்.

தமிழ்ச் சொல் என்பது, கேட்கும் அளவில், வெறும் 40 ஒலியன்களின் சேர்க்கையே. சொல்லை மொழி என்ற பெயராலே கூடத் தமிழ் இலக்கணத்தார் அழைப்பது உண்டு. (சொல்லும் மொழியும் ஓசையையே குறிப்பிடுகின்றன. இங்கே கீற்றம் என்பது இரண்டாம் படித்தரம்; இதை ஒரு நாளும் நாம் மறக்கக் கூடாது.) மொழியில் முதல், இடை, கடை என்ற மூன்று இடங்களைக் குறிப்பிடுகிறோம். மொழி முதலில் மட்டுமே தமிழ் உயிரொலி தனித்து ஒலிக்கும். இடையிலும் கடையிலும் தனித்த உயிரொலி புழக்கத்தில் வராது. இதே போல மொழி முதலில் மெய்யொலி வரவே வராது. அது இடையிலும், கடையிலும் மட்டுமே வரும். உயிரும் மெய்யும் புணர்ந்த அசையொலிகள் எந்தெந்த இடங்களில் எப்படி வரும் என்பதற் கும் குறிப்பிட்ட விதிகள் உள்ளன. அவற்றை இங்கு விரிப்பின் பெருகும்; வேண்டும் என்பவர் அவற்றை தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கணங்களில் அறியலாம்.

2.2. ஒலிக் கீற்ற முகப்பு:

நாம் தமிழ் மொழியைக் கேட்கும்போது 40 ஒலியன்களையும், 300 புணரொலிகளையும் கேட் டாலும், கண்ணால் காணும்போது 247 கீற்றங்களை மட்டுமே பார்க்கிறோம். இந்த 340 ஒலிச் சேர்க்கைகளை நிகராளும்போது, 247 வகையான உயிர், ஆய்தம், மெய், உயிர்மெய்க் கீற்றங் களால் குறிப்பதைக் கணக்கியற் பார்வையில் முகப்புதல் (mapping) என்பார்கள் (ஒன்றை நமக்கு முன்னே முன்வந்து முகத்துக் காட்டுவதால் அது முகப்பாயிற்று). அதாவது 340 ஒலிச் சேர்க்கைகள் 247 உருவங்களாக முகக்கப்படுகின்றன. (இந்தக் கட்டுரையில் முகப்புதல் என்ற கருத்து பெரிதும் ஆளப்படுவதற்கு வாசகர்கள் பொறுத்தருளவேண்டும். இந்தக் கணக்கியற் பார்வை, புரிதலுக்கு வழிவகுக்கும் என்பதால் அப்படிச் சொல்ல முற்படுகிறேன்.) இத்தகைய

முகப்பும், புள்ளியிட்டு மெய்களைத் தனித்துப் பிரித்ததுமே, மற்ற இந்திய மொழிகளைக் காட்டிலும், நம் தமிழ் வேறிட்டுத் தெரிவதற்குக் காரணமாகும். இதைச் செய்தது நம் இலக்கணிகளின் சிறப்பு.

மேலே உள்ள மெய் ஒலிகளில் ஹ், g, ஸ், ஜ், d, dh, b என்ற ஒலிகளுக்குத் தனித்த வடிவம் கொடுக்காமல், அவை வரும் இடத்தைப் பொறுத்து, க், ச், ட், த், ப் என்ற ஐந்து கீற்றங்களாலேயே நிகராண்மை செய்ய வைத்ததும் ஒரு பெருமிதத்திற்கு உரிய செயலே (ஆங்கிலம் போன்ற மொழிகளில் 45 ஒலியன்களும், 252 புணரொலிகளும் ஆக 297 ஒலிகள், வெறும் 52 உரோமன் கீற்றங்களால் முகக்கப்படுவது இன்னும் சிறப்பு. மேலை மொழிகள் இவ்வளவு வளர்ந்ததற்கு இந்த உரோமன் முகப்பும் ஒரு காரணம். இந்த உரோமன் முகப் பால், கணி போன்றவற்றில் ஆங்கில மொழி எளிதாகப் பயனாகிறது. இது போன்ற முகப்பு இல்லாததும், மேலை மொழிகளின் வளர்ச்சி அளவுக்கு நம் மொழி போக முடியாமல் இருப்பதற்கு ஒரு காரணம் ஆகும்.).

2.3. குறியேற்ற முறைகள் பற்றிய மீள்பார்வை:

தமிழில் எண்மடை(8-bit)க் குறியேற்ற (encoding) முறைகளில் செந்தரமாக TAB, TAM, TSCII போன்றவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தக் குறியேற்ற முறைகளை இடைக்கால முறைகளாக ஏற்றிருக்கும் நமக்கு, வரும் நாட்களில் நெடுநாள் தீர்வாக ஒன்றியக்குறியும் (unicode) உள்ளே நுழையக் காத்திருக்கிறது. இந்தக் குறியேற்ற முறைகளின் நிறைகுறைகளைப் பற்றிய மீள்பார்வையை இந்தக் கட்டுரை முன்வைக்கிறது.

இந்த எண்மடைக் குறியேற்ற முறைகளில் பொதுக் காரணம் கருதி சில பொந்துகளை (slots) வெற்றாக விடவேண்டிய காரணத்தால், தமிழில் உள்ள எல்லா கீற்றங்களுக்கும் இடம் ஒதுக் கும் நிலையில் 247 பொந்துகள் இந்தக் குறியேற்றங்களில் கிடைக்காது இருக்கிறது. அதற்காக, கணிக்குள் உள்ளீடு செய்யவேண்டி, இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுப் பழக்கத்தைத் தூக்கி எறிந்து, நம் வரலாற்றை மறுதலித்து, நம்முடைய இன்றைய எழுத்தைத் தவிர்த்து, உரோமன் போன்ற ஒரு முகப்பை எடுத்துக்கொண்டு, வெறும் அகர வரிசை எழுத்துக்கு மட்டுமே தமிழை மாற்ற முடியுமோ? அது முடியாது என்பதால், இந்தப் புதிரியை எளிதாகச் சுளுவெடுக்க (to solve) வேறு வழிமுறைகளை கடந்த சில ஆண்டுகளில் பல கணிஞர்கள் செய்து காட்டி இருக்கிறார்கள். அதாவது 247 கீற்றங்களையும் கணித் திரையில் காட்டி, கணிக்குள் இருக்கும் ஞாபகப் பகுதியில் குறைந்த பொந்துகளை மட்டுமே வைத்துக்கொண்டு ஏரணங்களின் மூலம் இந்த மாயங்களைச் செய்து காட்டியிருக்கிறார்கள். இப்படிக் காட்டும் வேலையை மீள்தருதல் (rendering) என்று கணிஞர்கள் சொல்லுகிறார்கள்.

3.0 கீற்றுக்களின் அடிப்படை

3.1 எழுமடை, எண்மடைக் குறியேற்றங்கள்:

தமிழில் முதலில் வந்த குறியேற்ற முறை எழுமடைக் குறியேற்றமே. இந்தக் குறியேற்றத்தில் 128 இடங்களே இருக்கின்றன (இதிலும் சில இடங்களை வெற்றாக விடவேண்டியிருக்கிறது.) இதற் குள் 247 தமிழ்க் கீற்றங்களைப் பொருத்த முடியாத காரணத்தால், அந்தக் கீற்றங்களைக் கூறு போடவேண்டியிருக்கிறது. கூறு போட்ட அலகுகளை கீற்றுக்கள் (glyphs) என்று கணிஞர்கள் சொல்லுகிறார்கள் (glyph என்பதை கீற்று என்று அழைப்பதற்கு மாறாகக் குழிப்பு என்றும் பாவாணர் அழைத்தது போல் சொல்லலாம்; குழித்து, பள்ளமாக்கி உருவாக்கிய உருவம் குழிப்பு; கல்லை வெட்டி எழுதுவதுதால் கண்ணெழுத்து என்று அந்தக் காலத்தில் சொன்ன தும் இதே குழிப்புப் பொருளில்தான்). ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கீற்றுக்கள் இணை சேர்ந்து ஒலியை நிகராண்மை செய்வது ஒரு கீற்றம் எனப்படுகிறது. ஒவ்வொரு குறி யேற்றத்திலும் ஒவ்வொரு விதமாகக் கீற்றங்களைக் கூறு போட்டு, இருக்கின்ற பொந்துகளில் பொருத்துகிறார்கள். காட்டாக, "கொடு அழகு மொழிச் சொல்" என்னும் வாக்கில் உள்ள "கொ, டு, அ, ழ, கு, மொ, ழி, ச், சொ, ல்" என 10 எழுத்துக்களை, TSCII குறியேற்றத்தில் "ெ, க, ா, டு, அ, ழ, கு, ெ, ம, ா, ழ ழி, ச், ெ, ச, ா, ல்" எனப் 17 கீற்றுக்களாகவும், ISCII

குறியேற்றத்தில் மெய்யெழுத்துக்களையும் கூறு போட்டு, புள்ளியைத் தனிக் கீற்றாகக் காட்டி, 19 கீற்றுக்களாகவும் செய்வார்கள்.

எழுமடைக் குறியேற்றத்திற்குப் பின், தமிழில் அடுத்து வந்த குறியேற்ற முறை எண்மடைக் குறியேற்றம். இதில் 256 இடங்கள் இருந்தும் சில பொதுவான குறியீடுகளுக்கு இடம் விட்டு, மீந்த இடங்களில் தமிழ்க் கீற்றுக்களைப் பொதித்தார்கள். குறிப்பாகச் சில எழுத்துக்களை அச்சிடும்போது, அழகாகத் தெரியவேண்டும் என்ற உணர்வால் தூண்டப்பட்டு இங்கே மொத்தக் கீற்றுக்கள் கூட்டப்பட்டன. எழுத்துக்கள் உடைக்கப்பட்டது ஓரளவு குறைந்தது. இப்படி எழுந்ததே TAM என்னும் குறியேற்றம்.

இனி அடுத்த குறியேற்றங்களான TAB, TSCII ஆகிய இரண்டும் ஒரே குறியேற்றத்தில் தமிழ், உரோமன் என்ற இரண்டு மொழிக் கீற்றுகளைக் குறிக்கவேண்டி உருவாக்கப்பட்டன. முதற் பொந்தில் இருந்து 128ம் பொந்து வரை அப்படியே எழுமடைக் குறியிடான ASCII உரோமன் முறையை வைத்துக்கொண்டு, 129ம் பொந்தில் இருந்து 256ம் பொந்து வரை இந்தக் குறியேற்றங்களில் தமிழ்க் கீற்றுகள் பொருத்தப்பட்டன. இதிலும் சில பொந்துகள் வேறு சில கட்டாயங்களுக்காக வெற்றாக விடப்பட்டன.

எனவே இருக்கின்ற சிக்கல்களை 128 பொந்துகளுக்குள் இருப்பதாகவே எண்ணிக் கொண்டு, அவற்றைச் சரிசெய்தால் அழகுணர்ச்சிக்காக உருவான TAM வார்ப்பில் (font) பிறகு சரி செய்வது எளிதுதான்.

3.2. கீற்றுக்களின் பொருட்பாடு:

இப்பொழுது புழக்கத்தில் உள்ள குறியேற்றங்கள் தங்களுக்குள் இரண்டு விதமாய் வேறுபடுகின்றன. அவையாவன:

1. கீற்றுகளின் அமைப்பு
2. கீற்றுகளுக்கான பொந்துகள்

மூன்று தமிழ் இணைய மாநாடுகளுக்கு அப்புறம் செந்தரமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட TAB, TAM, TSCII என்ற மூன்று குறியேற்றங்களை உருவாக்கியவர்கள் எந்தப் பொந்தில் எந்தக் கீற்றை வைப்பது என்ற கேள்வியில்தான் தங்களுக்குள் மாறிக்கொண்டு நின்றனரே ஒழிய கீற்றங்களைக் கூறு போட்டுக் கீற்றாக்கியதில் யாருமே கேள்வி எழுப்பவில்லை. கூறாக்கப்பட்ட கீற்றுக்கள் பொருள் உள்ளவைதானா, இவை ஒரு மொழிக்கு அடிப்படைக் கூறுகள் ஆக முடியுமா என்று யாருமே கணிஞர்களைக் கேட்கவில்லை. இது ஏதோ கணிஞர்களுக்குள் மட்டுமே ஏற்பட்ட சிக்கல் என்று கருதிக்கொண்டு, மொழியியலார் கூட இடையில் நுழைந்து பேசாமல் இருந்தது நமக்கு வியப்பாக இருக்கிறது.

இப்பொழுது உள்ள குறியேற்றங்களின்படி கொ என்னும் ஓர் உயிர்மெய் எழுத்துக் கீற்றம் கொம்பு, ககரம், கால் என மூன்று கீற்றுக்களால் ஆனது. அதாவது கொகரம் என்ற எழுத்தை 3 கீற்றுக்கள் வரை சேர்த்தால்தான் கணித் திரையில் கொண்டுவர முடிகிறது. இப்படிக் கொண்டுவருவதன் மூலம் மொழியியலின்படி என்ன சொல்ல முற்படுகிறோம்? ககரத்தோடு, எகரத்தையும், அகரத்தையும் புணர்த்தி ஒகரவொலியைக் கொண்டுவந்துவிட முடியும் என்று சொல்லுகிறோம். ஒன்றியக்குறி கூட்டமைப்பு (Unicode Consortium) கூட தெற்கு ஆசிய மொழிகளுக்கான பரிந்துரையில் அப்படித்தான் சொல்ல முற்படுகிறது. இதைப் பற்றியும் யாருமே கேள்வி கேட்கக் காணோம். இது மொழியியலின்படி சரியா? இந்தக் கீற்றுக்கள் வெறும் பட வடிவுகள் அல்லவே? அவை ஓர் ஒலியைக் குறிக்கவேண்டாமா? ஒலியில்லாமல் மொழியேது?

3.3. ஒன்றியக் குறியேற்றம் பற்றிய கருத்துக்கள்:

ஒன்றியக் குறியேற்றத்தின் நாலாம் வெளியீட்டுச் செந்தரத்தில் மொத்தம் 49 கீற்றுக்களைத் தமிழுக்கு என எடுத்துக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாகப் பொதிந்து வைத்து இருக்கிறார்

கள். இங்கு மேலும் 20 பொந்துகளில் தமிழ் எண்களையும் இன்னும் சில கணக்கு வழக்குக் குறியீடுகளையும் வைத்திருக்கிறார்கள். குறியேற்ற அமைப்பைப் பார்க்கும்போது செருப்பிற்கு ஏற்ற கால் எனும் வகையில் தமிழுக்கு நகரிக் கோலம் கொடுத்துக் குதறி இருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. ஏன் இப்படி நகரிக் கோலம் என்றால், இந்திய மொழிகளுக்குள் எழுத்துப் பெயர்வு எளிதாக முடியும் என்ற மறுமொழியை அளிக்கிறார்கள். இங்குமே ஒட்டுக் குறிகளுக்குத் தனியிடம் கொடுத்து, உயிர்மெய் எழுத்துக்களைத் திரையில் கொண்டு வரும்போது அகர மெய்யையும் ஒட்டுக் கீற்றுகளையும் ஒட்ட வைத்து, வேண்டும் என்கிற இடத்தில் (குறிப்பாக உகர, ஊகார உயிர்மெய்களுக்கு) கீற்று நிகராக்கல் (glyph substitution) என்ற முறை மூலம் வேறு உருவங்களைக் கொண்டு வந்து காட்டுகிறார்கள்.

ஆக ஒன்றியக்குறியேற்றத்தின் படி ஒரு உயிர்மெய் எழுத்தைத் திரையில் காட்டவேண்டுமானால், குறைந்தது இரண்டு 16 மடை குறியீடுகள் அடுத்தடுத்து இருக்கவேண்டும். இதன் விளைவாக ஒவ்வொரு தமிழ் ஆவணமும் கணிக்குள் மிகுந்த ஞாபகப் பகுதியை அடைத்துக் கொள்ளும். இதனால் ஆங்கில ஆவணங்களைக் காட்டிலும் தமிழ் ஆவணங்கள் 1.5 மடங்கிலிருந்து 1.8 மடங்கு வரை அதிக இடத்தை ஞாபகப் பகுதிக்குள் பிடித்துக்கொள்ளும் என்று கணிஞர்கள் மதிப்பிடுகிறார்கள்.

3.4: ஒட்டுக் கீற்றுச் சிக்கல்:

இந்தக் குறியேற்றங்களில் இன்னொரு சிக்கலும் உள்ளது. இந்தக் கட்டுரையில் கொம்பு, கால், கொக்கி போன்றவற்றை விளக்கம் கருதி ஒட்டுக் கீற்றுக்கள் என்று அழைப்போம். கொ என்ற எழுத்துக் கீற்றம் ககரத்திற்கு இரண்டு பக்கமும் ஒட்டுக் கீற்றுக்களையும், கா என்ற எழுத்துக் கீற்றம் வலது பக்கம் மட்டும் ஓர் ஒட்டுக் கீற்றையும், கை என்ற எழுத்துக் கீற்றம் இடது பக்கம் மட்டும் ஓர் ஒட்டுக் கீற்றையும் பெற்றுள்ளன (ஒட்டுக் கீற்றுக்களாக உடைக்க முடியாத உகர, ஊகார எழுத்துக் கீற்றங்கள் பற்றிப் பலரும் எழுதிவிட்டார்கள். கிட்டத்தட்ட அத்தனை தமிழ்க் கணிஞர்களும் இந்தத் தேன்கூட்டில் ஏன் கைவைக்கவேண்டும் என்று அவற்றை அப்படியே வைத்துவிட்டார்கள். நாமும் அந்தச் சிக்கலுக்குள் இப்பொழுது நுழைய வேண்டாம்). நம்முன் உள்ள கேள்வி: இந்தக் கொம்பு, கால், கொக்கி போன்ற ஒட்டுக் கீற்றுக்கள் என்றென்றைக்கும் உள்ளவைதானா? இவை எப்படி எழுந்தன? இவற்றிற்கு இலக்கண வழி ஆதாரம் உண்டா?

3.5. ஒட்டுக் கீற்றுகளும் வரலாறும்:

உண்மையில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழி (Tamizi), பெருமி (Brahmi) போன்ற எழுத்துக் கீற்றங்களில் காலும் கிடையாது, கொம்பும் கிடையாது, கொக்கியும் கிடையாது. தொடக்க காலத் தமிழியில் கொ என்ற எழுத்துக் கீற்றம் ககரத்தோடு கொம்பும் காலும் சேர்ந்தது அல்ல. அந்தக் கொ என்ற எழுத்துக் கீற்றத்தில் இரண்டு சிறு கோடுகள் ககர உருவத்தின் மேற்பகுதியில் (பழைய ககரம் என்பது இந்தக் காலக் கூட்டற்குறி போன்றதே) ஒட்டினாற்போல் இடப்பட்டன. கூடவே ஓகாரத்தின் மாத்திரை குறைப்பதற்காக ஒரு புள்ளியும் இடப்பக்கத்தில் மேலே இடப்பட்டது.

இந்த எழுத்துக்கள் எல்லாம் ஏட்டில் எழுத்தாணி கொண்டு எழுதிய பழக்கத்தால் கொஞ்சம் கொஞ்சமாக வட்டமாக உருப் பிறழ்ந்து மாறிப் போயின. அத்தகைய பிறழ்ச்சியில் ஒன்றாக, ஏட்டோலையில் புள்ளிகளும் எழுதப்படாமலே போய் அவற்றை இடம் பார்த்துப் படிப்பவர்கள் புரிந்துகொண்டார்கள். இது போக, எழுத்தாணியை எடுத்தெடுத்து எழுத முடியாத காரணத்தால், ஏட்டில் எழுதிய எழுத்துக்கள் எல்லாம் ஒன்றை ஒன்று தொட்டுக்கொண்டு வீச்செழுத்தாகவே, முடிவில்லாது வளைந்து நெளியும் தொடர் கோடாகத் தெரியத் தொடங்கின. இத்தகைய ஏட்டுப் பழக்கத்தால், கொகரத்தின் வலப் பக்கம் பார்த்த சிறுகோடு உருமாறி இந்தக் காலத்துக் கால் போலவும், இடப்பக்கம் பார்த்த சிறு கோடு இந்தக் காலத்துக் கொம்பு போலவும் நாளாவட்டத்தில் தோற்றமளிக்கத் தொடங்கின. அச்சுக் கலையை 1600களில் இந்தியாவிற்குக் கொண்டுவந்த கிறித்துவ விடையூழியர்கள் (missionaries), குறிப்பாக வீரமா முனிவர், அறவட்டாக (arbitrary) இந்த வீச்செழுத்துக்களை தனியாகப் பிரித்து,

கொகரத்திற்கு ஒரு பக்கம் காலாகவும், இன்னொரு பக்கம் கொம்பாகவும் உருவாக்கினார். இது போல இரட்டைக் கொம்பை உருவாக்கியவரும் வீரமா முனிவரே. உண்மையில், நாம் இன்றைக்குப் பழகுகின்ற எழுத்து முறை அந்தக் கால வீரமா முனிவரின் தாக்கத்தாலும் இந்தக் காலப் பெரியாரின் திருத்தத்தாலும் உருவாகிய ஒன்றே.

3.6. கொகரச் சிக்கல்:

இத்தகைய பழைய வரலாற்றை மறக்காது இருந்தால், கொகர எழுத்தில் வரும் கொம்பும் காலும் தனித் தனியான ஒட்டுக்கள் அல்ல, பிரிக்க முடியாத இரட்டை ஒட்டுக்கள் என்று உணர முடியும்; உணரவேண்டும்; அதாவது ஒகரவொலியை உயிர்மெய் எழுத்துக் கீற்றத்தில் கொண்டுவரவேண்டுமானால் கொம்பும் காலும் சேர்ந்தே காட்சி அளிக்கவேண்டும் என்று உணரவேண்டும்.

சரியாகச் சொன்னால், கொகரம் என்பது இரண்டு கீற்றுக்களின் தொகுதி; மூன்று கீற்றுக் களின் தொகுதி அல்ல. ஆனால் இப்பொழுது இருக்கும் குறியேற்றங்களின்படி கொகரம் என் பதைக் குயவுப் பலகை (key board)யில் அடித்துவிட்டு, கணித்திரையில் காணுவதை நம் விருப்பம் போல் காலை அழித்துக் கெகரமாகவும், கொம்பை அழித்துக் காகாரமாவும் ஆக் கிக்கொள்ளலாம். அப்படிச் செய்யும்போது நம் மொழியைச் சரியாகக் கையாளவில்லை என் றல்லவா உணர்த்துகிறது? இப்படிக் குறைபட்ட முறையில் கீற்றுக்களை உருவாக்கி உலவவிட் டால் மொழியின் உள்ளுறை எப்படிப் பாதுகாக்கப்படும்? அதைச் சரியாக வேலை செய்ய வைக்க மிகவும் கடினமான பழக்க முறையை அல்லவா பின்பற்றவேண்டும்? (என்னங்க இது, வெறும் கொகர உருவத்திற்கா இவ்வளவு கூக்குரல் எழுப்புகிறீர்கள் என்று சிலர் நினைக்கக் கூடும். கொகரம் என்பது இங்கே ஓர் எடுத்துக்காட்டு. நான் இங்கு சொல்ல வருவது எழுத்துக்களின் மாற்றம்; அடிப்படை புரியாமல் வெறும் தோற்றத்திற்கு மட்டுமே பார்த்துக் குறியேற்ற முறைகளைச் செய்யக் கூடாது என்பதே.)

எழுத்துக்களைக் கீற்றாக உடைக்கவேண்டும் என்று ஆன பிறகு, இலக்கணம் வழுவாத முறையில், ஓசை மாறாத முறையில் எப்படி உடைக்கலாம்? (இந்த உடைந்த கீற்றுக்களைத் தனித்துக் கணித் திரையில் தெரிய வைக்கவேண்டிய தேவையில்லை. கணித் திரையில் இன்று உள்ள தோற்றத்துடனே தமிழ் எழுத்துக்களைக் காட்ட வைக்கலாம்; அதற்கு முன் இந்த வாக்குவாதத்தின் ஏரணம் புரிவதற்காக கீழுள்ளவற்றைப் பார்ப்போம்.)

4.0 அடிப்படைப் பரத்திடுகள்

4.1. பொருள் விளங்கும் தமிழ்க் கீற்றுகள்:

பொருள் விளங்கும் தமிழ்க் கீற்றுகளாகக் கீழே இருப்பதை ஓர்ந்து பார்ப்போம்.

1. உயிர்க் கீற்றுகளும், ஆய்தக் கீற்றும் (13)
2. அகர உயிர்மெய்க் கீற்று (18)
3. ஒட்டு உயிர்மெய்க் கீற்று

(மெய்யைக் குறிக்கப் புள்ளி	் ,
ஆகாரத்தைக் குறிக்கக் கால்	ா,
இகரத்தைக் குறிக்கக் கொக்கி	ி,
ஈகாரத்தைக் குறிக்கச் சுழிக் கொக்கி	ீ,
உகரத்தைக் குறிக்கக் கொண்டை	ு,
ஊகாரத்தைக் குறிக்கச் சுழிக் கொண்டை	ூ,
எகரத்தைக் குறிக்கக் கொம்பு	ெ,

ஏகாரத்தைக் குறிக்க இரட்டைக் கொம்பு ே,

ஐகாரத்தைக் குறிக்க இரட்டைச்சுழிக் கொம்பு ை,

ஒகரத்தைக் குறிக்கக் கொம்புக்கால் ெ ா,

ஓகாரத்தைக் குறிக்க இரட்டைக் கொம்புக்கால் ே ா,

ஔகாரத்தைக் குறிக்கக் கொம்புச்சிறகு ெ ள

ஆக 12 ஒட்டுக் கீற்றுக்கள்)

இப்படி மொத்தம் 43 கீற்றுக்களை வைத்துக்கொண்டு தமிழ் ஒலிகளை எந்தக் கணியும் அறியும்படி செய்யலாம். மேலே சொன்ன குழப்பங்கள் இருக்காது. சில கிரந்த எழுத்துக்களையும் கணி அறியும்படி செய்யவேண்டுமானால் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற ஐந்து அகர உயிர் மெய்க் கீற்றுக்களையும் இணைத்துக்கொள்ளலாம். அப்பொழுது 48 கீற்றுக்கள் தேவைப்படும். இன்னும் ஸ்ரீ போன்ற ஒன்றிரண்டைச் சேர்க்கவேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளலாம்.

இந்தக் 43 கீற்றுக்களும் அறவட்டான (arbitrary) கீற்றுக்கள் அல்ல. பொருளுள்ள கீற்றுக்களே. புள்ளி என்ற கீற்று உள்ளடங்கிய அகரத்தை எடுத்துவிட்டு மெய்யைக் கொண்டு வரும் ஒரு கீற்று என்று பொருள் கொள்ளலாம். அது போலக் காலென்ற கீற்று ஆகாரத்தைக் கொண்டு வருவது. இப்படி ஒவ்வொரு கீற்றையும் மொழியியலின்படி சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

4.2. மூன்று வகை நிகராட்சிகள்:

இந்த ஒட்டுக் கீற்றுக்கள் ஏரணத்தின் வழி ஏன் தோன்றின என்பது அடுத்த கேள்வி. இப் பொழுது க், ஒ என்ற இரு ஒலிகளைத் தனித்து ஒலிப்பது ஒரு முறை. மெய்யும் உயிரும் தனித்து ஒலிக்காமல், அவற்றை விரைவு கருதிப் புணர்த்திக் கொ என்று ஒலிப்பதை உணர வைக்கவே இந்த ஒட்டுக் குறிகள் தோன்றின. அதாவது புணர்ச்சி இலக்கணத்தின் வெளிப் பாடே உயிர்மெய் எழுத்துக்கள். புணர்ச்சி வரும் இடங்களைத் தனித்துக் காட்டவே உயிர் மெய் எழுத்துக்களை இந்திய மொழிகள் உருவாக்கிக்கொண்டன. இன்னொரு வகையில் பார்த்தால், அகர மெய்யோடு ஒட்டுக் கீற்றுக்களைச் சேர்த்துத் தெரிபவையே உயிர்மெய் எழுத்துக்கள் என்று புரிந்துகொள்ள முடியும்.

அவ்அன்ஐந்ஆன்இன்ற்ஐக்க்உப்பஆர்த்த்ஏன்

என்ற இந்த எழுத்துக் கூட்டை புணர்ச்சி விதியின்படி எழுதும்போது மட்டுமே உயிர் மெய் எழுத்தின் பயன்பாடு வருகிறது. மேலே உள்ள எழுத்துச் சேர்க்கையில் ஒவ்வொரு மெய்க்கும் அடுத்து உயிர் இருப்பின், அதைப் புணர்த்தி எழுதும்போது உயிர்மெய் எழுத்தைக் கொண்டு வந்து எழுதுகிறோம். மேலே உள்ள எழுத்துச் சேர்க்கையை, வெறும் உயிரையும் மெய்யையும் மட்டும் வைத்துக் காட்டுவதை, மெய்யுயிர் நிகராட்சி (consonant/vowel representation) என்று அழைப்போம்.

அவனைநானின்றைக்குப்பார்த்தேன்.

உயிர் மற்றும் மெய்யோடு உயிர்மெய் கலந்துவரும் இந்த எழுத்துச் சேர்க்கையை உயிர் மெய் நிகராட்சி என்று சொல்லுவோம். இனி அடுத்து, பொருள் புரியவேண்டி இந்த நிகராட்சியை புணர்ச்சிப் பிரிப்பு என்ற முகப்பின் வழியாகப் பார்ப்போம்.

அவனை நான் இன்றைக்குப் பார்த்தேன்.

இந்தப் பிரிப்பிற்கு அப்புறம்தான், மேலே முதலிற் கொடுத்த, பிணைந்து கிடக்கும் ஓர் எழுத் துச் சேர்க்கை நாலு சொற்களாகப் பிரிந்து ஒரு பொருள் தரும் சொற்றொடராக மாறுகிறது. இதைச் சொற்றொடர் நிகராட்சி என்று சொல்லுவோம்.

இங்கே உயிர்மெய் முகப்பு, புணர்ச்சிப்பிரி முகப்பு என்ற இரண்டு முகப்புக்கள் நடந்தி ருக்கின்றன. முதலில் கொடுக்கப்பட்ட தரவு வெறும் உயிரும் மெய்யுமாகக் கிடந்த மெய்யுயிர் நிகராட்சி; இதை உயிர்மெய் முகப்பின் மூலம் உயிர்மெய் நிகராட்சியாக மாற்றிப் பின்

புணர்ச்சிப்பிரி என்ற முகப்பின் மூலம் பொருள் பொதிந்த சொற்றொடர் நிகராட்சியாக வெளிக் கொணர்ந்திருக்கிறோம். இனி நாம் செய்யவேண்டியதெல்லாம் இந்த ஏரணத்தை ஒரு கணிக்குள் எப்படிக் கொண்டுவருவது என்பதே. அதற்கு முன் இந்த முகப்புக்களின் தலை கீழ்ப் பயன்பாடுகளைப் பற்றியும் பார்ப்போம்.

5.0 செய்முறை ஏரணம்:

5.1. தலைகீழ் முகப்பு:

மேற்சொன்ன இரண்டு முகப்புக்களையும் திருப்பிப் போட்டுப் பார்க்க முடியுமா என்று கேட்டால் முடியும் என்றுதான் மறுமொழிக்கவேண்டும். கொடுத்திருக்கும் சொற்றொடர் நிக ராட்சியை தலைகீழ் உயிர்மெய் முகப்பின் மூலம் புரட்டி எடுத்து மெய்யுயிர் நிகராட்சியாகக் கொண்டுவர முடியும். காட்டாக,

தமிழ் என்பது படிக்க எளிதான மொழியே

என்ற சொற்றொடரைத் தலைகீழ் உயிர்மெய் முகப்பின் மூலம் மாற்றினால்,

த்அம்இழ்என்ப்அத்உப்அட்இக்க்அஎள்இத்ஆன்அம்ஒழ்இய்ஏ

என்ற மெய்யுயிர் நிகராட்சி நமக்குக் கிடைக்கும். இந்த முகப்பை ஒரு நிரலியிற் செய்வதற்குத் தேவையானது கணிஞர்கள் நன்கு அறிந்த மேல்நோக்குப் பட்டியலே (look-up table).

5.2. மேல்நோக்குப் பட்டியல்:

இந்த மேல்நோக்குப் பட்டியல் மூலம் ஓர் உயிரும் மெய்யும் சேர்ந்து உருவாகும் உயிர் மெய்யையும் ஓர் உயிர்மெய்க்குள் இருக்கும் உயிரையும் மெய்யையும் இருவழிப் போக்கில் ஒரு கணியினால் அடையாளம் காண வைக்க முடியும். முதற் பட்டியலில் உயிர்மெய் இல் லாமல், உயிர் எழுத்துக்களையும் மெய் எழுத்துக்களையும் மட்டும் அடைத்து, இரண்டாவது பட்டியற் பொந்துகளில் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்களை உள்ளடைத்து, இரண்டாம் பட்டியலில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் முதற் பட்டியலில் இரண்டு எழுத்துக்களை இணை கொள்ள வைத்து இந்த விதியை நிரலிக் காட்டுவது ஒன்றும் சிக்கலான புதிரி அல்ல. முதற் பட்டியல் மட்டுமே கணியின் பயன்பாட்டிற்குப் போதும்; இரண்டாவது பட்டியல் கணி—மாந்தர் ஆகிய இருவரிடையே இருக்கும் இடைமுகத்திற்கான (interface) தேவையே ஒழிய வேறொன்றும் இல்லை. இப்படி உயிர்மெய் எழுத்துக்களைத் தனிப் பட்டியலில் வைத்துக்கொள்ளுவதில் பெருத்த சிறப்பும் தேவையும் இருக்கின்றன.

மேலே கூறிய முறைக்கு மாறாக இப்பொழுது இருக்கும் குறியேற்ற முறைகளில் முதற் பட்டி யலுக்கு மாறாய் உயிரும் மெய்யும் ஒட்டுக் கீற்றுகளும் சில உயிர்மெய் எழுத்துக்களும் என ஒரு கலவையைக் குடி வைத்து, அதையே கணிச் செயற்பாட்டுக்குள்ளும் கொண்டு போய்ச் சேர்க்கிறோம். இதன் விளைவாக குயவுப் பலகையில் இருந்து அடிக்கும்போது எழும் தரவு களைக் கையாள, கூடுதல் பலக்கை (complex) முறைகளைப் பயன்படுத்தவேண்டியிருக்கிறது. ஒரு குயவுப் பலகையியில் k என்ற பொத்தானை அழுத்தினால் அதற்கு முன் என்ன பொத் தான் அழுத்தப்பட்டது, அடுத்து என்ன பொத்தான் அழுத்தப்படுகிறது என்று இரண்டு பக்க மும் பார்த்து, பின் நிரலியில் உள்ள ஏரணம் வேலை செய்து ஒட்டுக் கீற்றை வேண்டும் எனும்படி வலமும் இடமும் ஒட்டித் திரையில் நமக்கு இந்தக் கணி காட்டவேண்டும். ஆனால் எண்ணிப் பார்த்தால், கணிக்குள் இத்தனை வேலைகள் செய்யவேண்டிய தேவையே இல்லை.

ஒரு இந்திய மொழியின் அடிப்படை, குறிப்பாகத் தமிழ் மொழியின் அடிப்படை உயிரிலும் மெய்யிலும்தான் இருக்கிறதே ஒழிய உயிர்மெய் எழுத்தில் இல்லை. உயிர்மெய் எழுத்தின் பயன்பாடு, மாந்தனுக்குப் புரிய வைக்கவேண்டிய வெளிக்காட்டும் பயன்பாட்டில் மட்டும் தான். வரிசைப்படுத்தல், உருவியல் அலசல் (morphological analysis) என எல்லா விதமான செயலாக்கத்திலும், உயிரும் மெய்யும் மட்டுமே போதும். இப்படி உயிரையும் மெய்யையும்

தனித்து வைத்துக் குறியேற்றம் செய்வதை பற்றுகோள் நிகராட்சி (reference representation) என்று அழைக்க விரும்புகிறேன். உயிர், மெய், மற்றும் உயிர்மெய் இருக்கும் பட்டியலை மீள் தரு நிகராட்சி (rendering representation) என்று அழைக்க விரும்புகிறேன். எனவே குறியேற்ற முறை என்பது பற்றுகோள் நிகராட்சிக்கு மட்டுமே. இதில் உயிரையும் மெய்யையும் மட்டும் வைத்துக்கொண்டு, உயிர்மெய்யை வேறொரு பட்டியலுக்குள் அடைத்து வைத்துத் திரையில் வெளிப்படுத்த மட்டும் அதை (மீள்தரு நிகராட்சியை)ப் பயன்படுத்துவதே சாலச் சிறந்தது. கிட்டத்தட்ட இதே கருத்தை திரு. அன்பரசன் தமிழிணையம் 99 மாநாட்டில் எடுத்துரைத் தார். அந்தக் கருத்தை மற்றவர்கள் முன்னெடுத்துச் செல்லவில்லை என்றே இப்பொழுது மீண்டும் அதைக் கூற விழைகிறேன்.

5.3. தமிழ் எழுத்தின் காலத் தொடர்ச்சியும், வார்ப்பு மாற்றப் பயன்பாடும்:

இப்படித் தனித்து உயிர்மெய்ப் பட்டியல் உருவாக்குவதில் பெருத்த வாய்ப்புக்களும் உள்ளன. அதாவது, மேலே சொன்ன உயிர்மெய்ப் பட்டியலை வெவ்வேறு படி எடுத்து ஒவ்வொரு படி யிலும் வெவ்வேறு விதமான பாணியில் எழுத்துக்களை உருவாக்கலாம். காட்டாக இன்றை யத் தமிழ் எழுத்து, மறைந்த முன்னாள் முதல்வர் மா.கோ.இரா.வின் அரசாணையால் பெரி யார் எழுத்துக்களில் இருந்து சில பரிந்துரைகளை மட்டும் ஏற்றுக்கொண்டு, தமிழ் மக்க ளிடையே புழங்க வைக்கப்பட்ட எழுத்து. இதை மா.கோ.இரா. எழுத்து என்று ஒரு பேச்சுக் காகச் சொல்லுவோம். மா.கோ.இரா.வுக்கு முன் புழங்கி வந்த எழுத்தில் ணாகாரம், ளை காரம் போன்றவை வேறு உருவம் கொள்ளும் அல்லவா? இது போன்ற வேறுபாடுகளைக் இன்னொரு விதமான உயிர்மெய்ப் பட்டியல் மூலம் கொண்டு வர முடியும். இன்றைய உயிர் மெய்ப் பட்டியலை மா.கோ.இரா. வார்ப்பு என்றால், அதற்கு முந்திய பட்டியலை 20ம் நூற் றாண்டு வார்ப்பு என்று பேச்சுக்கு அழைக்கலாம். இது போல ஒவ்வொரு காலத்தில் இருந்த தமிழ் எழுத்து முறையையும் ஒவ்வொரு வகை வார்ப்பாகக் கொண்டுவந்துவிட முடியும். ஏன் 2300 ஆண்டுகளுக்கு முன் இருந்த தமிழி எழுத்தைக் கூட தமிழி வார்ப்பாகக் கொண்டு வரலாம்.

5.4. பரிந்துரைத்த முறையின் பயன்பாடு:

இப்படிக் கொண்டுவருவதால் என்ன நன்மை என்று கேட்டால் மிகவும் உண்டு என்றே சொல்ல முடியும். இப்படிச் செய்வதன் மூலம் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஒரு கணுத்துவத்தை (continuity)க் கொண்டுவருகிறோம். இன்றைக்கு இருக்கும் குறியேற்றங்களால் மா.கோ.இரா.— வுக்கு அப்புறம் இருக்கும் தமிழை மட்டுமே நிகராள முடிகிறது. இந்தக் குறியேற்றங்களை அப் படியே வைத்துக்கொண்டால், ஒரு 30 ஆண்டுகளுக்கு முன்னுள்ள தமிழ் கூட நமக்கு பிறனா கிப் போகிவிடுகிறது. இதைக் காட்டிலும் ஒரு சோகம் உண்டோ? இவ்வளவு கணித்திறம் நம்மிடையே வந்தும் கூட நம்மால் தமிழின் கணுத்துவத்தைக் காப்பாற்ற முடியவில்லை என்றால் அப்புறம் இவ்வளவு கணிஞர்கள் தமிழில் இருந்தும் பலன் இல்லாமல் போய்விடு கிறதே?

மாறாக இங்கு சொல்லப்பட்ட முறையினால், மா.கோ.இரா. காலத்துத் தமிழையும் கையாளலாம்; அதற்கு முந்திய தமிழையும் கையாளலாம். இன்றைக்கு எழுதிய ஒரு வரி 19ம் நூற் றாண்டு எழுத்து முறையில் எப்படி இருந்திருக்கும்; 10ம் நூற்றாண்டில் எப்படி இருந்திருக்கும் என்று காட்ட முடியும். அதைப் போல 7ம் நூற்றாண்டில் இருக்கும் ஒரு செப்பேட்டை அப் படியே உள்ளிட்டு அதை இந்தக் காலத்தில் தமிழில் சூ மந்திரக்காளி என்பது போல் வெறும் வார்ப்பு மாற்றத்தால் கொண்டுவந்து பொருளைப் புரிய வைக்க முடியும். இதன் பயனை ஓர்ந்து பாருங்கள். இந்திய நாட்டில் இருக்கும் 3 இலக்கம் கல்வெட்டில் ஒரு இலக்கம் கல் வெட்டுக்கள் தமிழிலேயே உள்ளன. அதில் இவ்வளவு காலத்திலும் வெறும் 10000 அளவிற்கே கல்வெட்டுக்களைப் படித்திருக்கிறோம். 90% தமிழ் வரலாற்றுச் செய்தி இன்னும் அறியப்படா மலே இருக்கிறது. கல்வெட்டுப் படிப்பவர்கள் இந்தக் காலத்தில் அருகிவிட்டார்கள். மேலே சொன்ன முறையில் குறியேற்றங்களையும் வார்ப்புகளையும் செய்து வைத்தால், கல்வெட்டுப்

படிப்பது என்பது ஒளிக் குறிமானத் தெரிப்போடு (optical character recognition) இணைத்துப் பார்த்தால் வெறும் வார்ப்பு மாற்றம் என ஆகிவிடும்.

வெறும் வரலாற்று பயன்பாட்டிற்கு மட்டுமா இந்த வேலை செய்யவேண்டும் என்று சிலர் தயங்கினால், கூடவே வணிகப் பயனும் உண்டு என்றுதான் நான் கூறுவேன். ஏகப்பட்ட நில ஆவணங்கள் இப்பொழுது கணி வழியே பதியப்படுகின்றன. பல பொழுதுகளில் கடந்த 100 ஆண்டு வில்லங்கச் சான்றிதழ் கேட்கின்ற நிலையும் வருகிறது. அப்பொழுது பழைய எழுத் துக்களில் வீச்செழுத்துக்களில் எழுதப்பட்ட ஆவணங்களையும் தேடவேண்டியிருக்கிறது. மறு படியும் ஒளிக் குறிமானத் தெரிப்பின் மூலம் வார்ப்பு மாற்றங்களால் இந்தச் செயற்பாடு களைச் செய்ய முடியும். இது போல அழகு, மற்றும் வணிக நோக்கைக் கருதி யாரோ ஒருவர் மிகுந்த எழிலான முறையில் கொம்புகளையும் கால்களையும் கொக்கிகளையும் போன்ற ஒட்டுக் கீற்றுகளை அடிப்படை அகர மெய்யோடு ஓட்ட வைத்து, நாம் பார்க்கும் நகரி எழுத்தை போலவோ, அரபி எழுத்தைப் போலவோ காட்டுகிறார் என்று வைத்துக்கொள்ளு வோமே? அத்தகைய வார்ப்புகளை இன்றைய முறையில் எளிதாகக் கொண்டுவர இயலாது. ஆனால் இந்தக் கட்டுரையில் சொன்ன ஏரண முறையின்வழி அதைக் கொண்டுவர முடியும்.

5.5. வரிசை முறைப் புதிரி (sorting problem):

அடுத்து இன்னொரு சிக்கல் வரிசை முறை பற்றியது. தமிழ்ச் சொற்களை வரிசைப்படுத்தும் போது உயிர்மெய் எழுத்துக்களை அடிப்படையாக நாம் பயன்படுத்துவதே இல்லை. அதன் உள்ளார்ந்த உயிரையும் மெய்யையுமே வைத்தே வரிசை முறைக்குத் தேவையானதாகப் பயன்படுத்துகிறோம். எனவே கணிக்குள் சொற்களை வரிசைப்படுத்தத் தேவையான தரவு உயிரும் மெய்யும் மட்டுமே. இப்பொழுது பயன்படுத்தும் தமிழ் வரிசைமுறை:

உயிர்வரிசை

ககர மெய்

ககர உயிர்வரிசை

ஙகர மெய்

ஙகர உயிர்வரிசை

எனப் போய்க்கொண்டிருக்கும். அடிப்படைத் தரவு மெய்யுயிர் நிகராட்சியாக மட்டுமே இருந்தால் மேலே கூறிய தமிழ் வரிசை பிழையில்லாமல் போகும்.

கொஞ்சம் ஓர்ந்து பார்த்தால், கணியைப் பொறுத்த மட்டும் எந்த வேலை செய்யவேண்டு மானாலும் மெய்யுயிர் தரவு மட்டுமே போதும். உயிர்மெய் நிகராட்சியும் சொற்றொடர் நிகராட்சியும் நம்மைப் போன்ற மாந்தர்களோடு உறவாடவும் புரிய வைக்கவும் மட்டுமே தேவையானவை. சுருக்கமாகச் சொன்னால் மெய்யுயிர் நிகராட்சி என்பது முன்னுறும் நிகராட்சி. மற்ற இரண்டும் வழியுறு நிகராட்சிகளே.

5.6. தேட்டப் புதிரி:

தேடு பொறிகள் தமிழில் இப்பொழுது வந்துகொண்டிருக்கின்றன. ஒரு சொல்லைக் கொடுத்து ஆவணங்களில் எங்கெல்லாம் வந்திருக்கிறது என்று பார்த்து அதைத் திருத்தச் சொன்னால் இப்பொழுது உள்ள குறியேற்றங்களின் மூலம் செய்யும்போது சுற்றி வளைத்துச் சரவற்பட்டு நிரலிகளை எழுதவேண்டும்; காட்டாக அப்பால் என்ற சொல்லை ஆவணங்களில் தேடச் சொல்லி ஆணையிட்டால் அவனுக்கப்பால் என்று புணர்ந்தெழுதி இருக்கும் இடத்தை தேடு பொறிகள் விட்டுவிட வாய்ப்புகள் உண்டு. இந்தக் கட்டுரையில் சொன்னபடி குறியேற்றங் களைச் செய்தால், தவறே வராமல் எதையும் விட்டுவிடாமல் தேடிக் காட்ட முடியும். எனவே தேட்டப் புதிரியைச் சுளுவி எடுக்கவும் இங்கு பரிந்துரைத்த முறை உதவும்.

6.0. கணியில் செய்முறை

6.1. செய்முறை விவரிப்பு:

அடிப்படைக் குறியேற்றத்தில் (அது எழுமடை, எண்மடை, ஒன்றியக்குறி என எதுவானாலும்) உள்ள பொந்துகளில் உயிரையும் மெய்யையும் மட்டுமே வைத்துக் கொண்டு அதை ஒரு அடிப்படைப் நிகராட்சியாகவும், பற்றுகோள் நிகராட்சியாகவும் (reference representation) கொள்ளுவதே சாலச் சிறந்தது. இதைச் செய்யவேண்டுமானால், குறியேற்றத்திற்கான அடிப் படைத் தரவில் உயிர்மெய் எழுத்துக்களை நுழைக்காமல் அங்கு உயிரையும் மெய்யையும் மட்டுமே வைத்துக்கொண்டு, குயவுப் பலகையில் ஒரொரு பொத்தானையும் அழுத்தும் போது அதற்கான உயிர் அல்லது மெய்க் குறியை இந்தப் பற்றுகோள் நிகராட்சியில் இருந்தே எடுத்துக்கொண்டு கணியின் ஞாபகப் பகுதிக்குக் கொண்டுபோய் வைத்துக்கொண்டு, வேண்டும் வழிக் கணிப்புகள் செய்து, முடிவில் கணித்திரையில் வெளியிடும்போது மட்டும் தேர்ந் தெடுத்த மேல்நோக்குப் பட்டியல் வழி உயிர்மெய், புணர்ச்சிப் பிரிப்பு ஆகிய முகப்புக்களின் வழி தேர்வு செய்த உயிர்மெய் வார்ப்பின் மூலம் வெளிக்கொணருவதே சரியான முறை என்று பரிந்துரைக்கிறேன். இதன் மூலம் உயிர்மெய் எழுத்துக்கள் என்பவை நிகராளுவதற்கு மட்டுமே உரித்தானவை என்ற மொழியியல் அடிப்படையும் உறுதி செய்யப்படும். இப் பொழுது இருக்கும் சிக்கல்கள் இல்லாது போகும்.

உயிர்மெய் முகப்பையும், புணர்ச்சிப் பிரிப்பு முகப்பையும் ஒவ்வொரு தமிழ் நிரலியிலும் சேர்த்துவிட முடியும். உயிர்முகப்பின் வழியாக வெவ்வேறு வகையான தமிழ் முகப்புக்களைக் வார்ப்புகளாக ஆக்கிக் காட்டலாம்.

6.2. விளக்கப் படம்:

கீழே உள்ள விளக்கப் படத்தில் பற்றுகோள் நிகராட்சியில் வெறும் உயிரும், மெய்யுமே இருப்பதாகக் கொள்ளவேண்டும். உயிர்மெய் நிகராட்சியில் உயிர், மெய், மற்றும் உயிர்மெய் ஆகிய எல்லாமே இருக்கின்றன.



7.0 முடிப்புரை:

இன்றைக்கு இருக்கும் குறியேற்றங்களிலும் இனி வரப்போகும் ஒன்றியக் குறியேற்றத்திலும் உயிரையும் மெய்யையும் மட்டுமே குறியேற்ற முகப்பிற்குள் கொண்டுவந்து உயிர்மெய் எழுத்துக்களைத் தனி முகப்பாக வைத்துக்கொள்ளுவது கணிச் செயற்பாட்டிற்குச் சாலச் சிறந்தது என்று இந்தக் கட்டுரை பரிந்துரைக்கிறது. இத்தகைய முகப்புக்களால் ஏற்படும் பயன்களையும் இது எடுத்துரைக்கிறது.

47

Rationalisation in Tamiz ezuttu niral: An Agenda to Minimise Number of Glyphs Used in Tamiz Syllabary

N D Logasundaram

Chennai

The richness found in a language is the index of its civilization as it is an inseparable part of a culture of a land. Thousands of languages are in use in world today and majority of them do not have script. Hence most of them are at the verge of extinction. There are languages found in the history which were once very popular in some region for hundreds of years, and after reaching the apex lost their flavour and identity and gone into oblivion. Not only the history, the whole spectrum of human knowledge, its acceleration cum explosion was possible only out its accumulation with this tool the 'script'.

Tamiz is one of the progressive and classical languages of the world, which is in continuous and useful service for few thousand years, on the eastern meridians of this planet, demonstrating its richness and strength.

Without a script a mere spoken form of a language can quickly get corrupted and distorted within few transfers in the interfaces as mouth-ear-mouth. Therefore script is a must for maintaining uniformity in a spoken language. Script will fix the language to a standardized use and prevent it going astray without bounds by unavoidable phonetic variants creeping from not-so-committed users or from unwarranted fancy mongers.

We know well that there are scripts contrived even for reading by finger tips for blind people while non script cum non phonetic body language mode of communication were also devised and sported through out the globe from time immemorial. Even today it is very much alive and used not only by hearing-impaired people, but also on the turf of sports playgrounds to tarmac handling of supersonic aircraft.

Primitive humans painted simple graffiti and later devised and scribbled imprints out of necessity of passing on their feelings, thoughts or messages to others in their group separated by time, distance or both. A created record also serves as an aid for review / alteration by the author or by others. By nature it has to go always with a 3D medium.

In old ages they were static as rock panel glyphs, temple wall or nadukal stone inscriptions or portable as palm leaves, animal skins, clay tablets, metal plates etc. Paper, a modern avatar of palm leaves, facilitates easier multiplication and distribution. Scientific and industrial advancements found many fast gadgets as printing, telegraph, television, telephotocopying (fax), etc. and all of them were fully exploited by every one, every day.

The new and omnipotent medium cum tool covering the whole planet with lightning speed, the Computer and Internet, is in reign today. Realising that the communication is vital for growth and advancement,

wise people in a rational society never lose great opportunities. Tamiz the language spoken by several hundred millions of population, always had wisdom flexibility and tenacity in the past and continue to strive to hold the unique position as one of the dynamic languages of the world.

Any language of a land is always subjected to inevitable changes springs from geographical and political variations, cultural mutations, fusion and diffusions out of war, trade, migration, scientific and industrial advancements etc.

The evolution of Tamiz script, over thousands of years, are well studied by epigraphists with age old stone inscriptions, copper plate grants, coins, palm leaf editions of sacred hymns and classic literature and found it to be natural, continuous and need based.

Tamiz script being written from left to right in a horizontal line formation while there are right to left and top to bottom progressing formats are in use in other languages of the world. Rare ancient scripts even reported to be written from bottom to top and even in opposing directions in alternate lines.

Tamiz is based on words framed out in a set of varying permutation combination of phonemes/letters from its alphabet and train of such words make a sentence to convey a message. Languages in this mode dominates the world today. But Chinese or Korean language uses indivisible pictures or complex glyph to represent whole word or a sense, just as icons in the computer screen. We can say, the common characters as $,%,@ etc. on our keyboard are akin to it. If you look closer into the lines *'eNN en2pa En2ai ezutten2pa ivviraNTum kaNNen2pa vAzum uyirkku' & 'eNNum ezuttum kaNNen2attakum', the word 'eNN' mean* not only mathematical figures, (which is actually a pictograph) but also, represent an *'eNNam'* an idea or a sense conveyed monolithically which is different from assemblage of phonemes as in *ezuttu*. The two different forms of the writing system, used being mentioned here as a set

History have recorded instances of institutionally inducted minor changes to Tamiz script form with rationale. For example few centuries ago oRRaiccuzik kompu - ெ - the present modifier for kuril ekara uyirmey was then intended for nedil Ekaaram, an uyirmey of two nodi duration. For ekara uyirmey (kuRil) the same oRRaiccuzik kompu was written but with a puLLi - ெ் - on top of it denoting shortened articulation time. In this case pulli denotes one noTi instead of two. The irraTTaiccuzik kompu - ே - was devised anew for Ekaara uyirmey which is a nedil of two nodi.

During third quarter of last century the aakaara uyirmey Naa, Raa, n2aa - ணா றா னா - and aikaara uyirmey Nai, lai, Lai, n2ai - ணை லை ளை னை - are redesigned and given the streamlined form as on today i.e. they were assigned with same modifier as that of other letters in their set eliminating different type of conjunctions.

But, till today ukara-uukaara uyirmey letters were not touched, in waiting, for much longer period, probably to comply with the emerging requirements of the modern medium, the IT, in one stroke, for a similar reform, i.e. use of a common modifier similar to akara, aakaara, ikara, iikaara, ekara, eekaara, okara, ookaara, aikaara, aukaara uyirmey letters. There are several instances of such an excise mooted out, even by influential educationalists, Tamiz Enthusiasts, but with little success, may be, due to high dose of radicalness.

Hence a very simple scheme easy to register even in the mind of an average person, with least psychological inertia, by reshaping ukara-uukaara uyirmey letters (18 + 18) along with other minor plans for uyir kuRil to uyir nedil morphosis (5)and Takara ikram and iikaaram (2) is presented here as 'An Agenda to Reduce Number of Glyphs used in Tamil Syllabary'.

By this proposed blueprint the number of characters in the suite will drastically reduce to mere 36, which is even less than what is in English (52). Therefore unscaled full sized version of a Tamiz keyboard can now be on the miniaturised keypads of handhelds as organisers and palmtops.



The reduced number of characters when implemented will bring out changes to Tamiz language especially in the digital world towards an auspiciously liberated ambience. Here are the few.

* By virtue of lesser number of characters it will be easier to learn reading and writing.

* Learning methods, tools and time needed to learn will become easier, convenient and shorter.

* Foreign language speakers can even read and write standard Tamiz quickly in crash course time.

* In Indian languages, Tamiz is already having fewer characters, without any ligatures, can now with this reform will have still lesser characters[1].

The pace of progress made in the cyber world both in hardware and software points that computer is going to be the multipurpose ubiquitous tool in any human activity. Therefore reduction in no. of characters to be dealt in Tamiz digital world will pave way for:

* Fixing all Tamiz letters[2] even into the miniaturised keypads of handhelds.

* Accommodating spilled over special characters, numerals and punctuation marks into Tamiz keyboard.

* Easier and simpler software programming for (A) OCR devices (B) voice input / output applications / utilities (C) language translations transliterations and transcription programs (D) applications for handicap ped people in speech, sight and hearing[3] impaired (E) and the bunch of interlinking utilities between all the above.

What are the proposals ?

1. ukara uukaara uyirmey

For the ukara and uukaara uyirmey letters, a simple and new common ottezuttu (modifier)one for each set of 18 consonants is suggested replacing separate individual glyphs in the traditional syllabary in rhythm with other uyirmey transformations.

1. ukara uyirmey.



The last set has more number of letters (9) than others and hence a modifier (oTTezuttu) design was taken out from them to have more familiarness.

It is approximately a laterally inverted 'Ta' which has to be positioned after a akara consonant slightly lower to the horizontal rule of writing without touching it simulating the present ukaram.



The new rationalised shape differ not much from old one in Nu, tu, nu, lu, zu, Lu, Ru, n2u. In others though it is apparent, it will take less than a minute to learn even by an individual of average IQ.

2. uukaara uyirmey

For uukaara uyirmey a modifier similar to the above but with a soonva koolaccuzi added at its upper end is proposed.

For this uukaara uyirmey several shapes as - - were considered before deciding a suitable shape and finally the one as above was zeroed-in being a better choice. The first one was giving an illusion as aakaarakkaal as bottom horizontal line almost fusing with parent character. Second one is having too many curves and longer character length. Third was similar to the chosen one, but the vertical line in it, merges with parent consonant or if given with sufficient gap the character length is increasing. All these three shapes are devised for rhythm in design with new ukara modifier seen above. The last one was a shape already being used with vadamozi grantha letters found mixed in Tamiz fonts. But its counterpart in ukaram will be creating illusion of iikaara talaikkiiRRu. Hence the set was not considered.

3. uyir neTil

uyirkkuril letters changing into nedil in 5 different ways - அஆஇஈஉஊஎஏஒஓ- By giving a common oTTezuttu (modifier) to all the 5 kuRil uyir, it is possible to modify them to neTil uyir as in uyirmey letter's transformation. The modifier which is already in aakaaram is sugested for use with other 4 uyir for continuity and to avoid strangeness. Use of common modifier for kuRil to neTil uyir is a new plan and this can reduce 4 characters in the suite.

Though variations are notable in iikaaram and uukaaram it has thread to follow sans a complete change. Hence it will not induce psychological resistance to switch.

4. Takara ikaram and iikaaram

The Takaram can start with a slanted line instead of perfect vertical line - - so that normal ikara Ikaara oTTezuttu (talakkIRRu)what is given to other 17 consonants can be used here touching at top right side starting point. This will dispense two special glyphs of takaram - டிடீ- in the suite. Though new shape will look odd initially the strangeness will disappear after little use.

Chennai and Videoconferencing: Videoconferencing for Performing, Teaching, and Discussing Tamil Language and Performing Arts

Eric Miller

Ph.D. candidate, Folklore Program,
University of Pennsylvania, Philadelphia, USA
emiller@sas.upenn.edu

Summary of paper:

This paper discusses ways in which the people of Chennai could use videoconferencing to perform, teach, and discuss Tamil language and performing arts.

Ours is a 24-hour world. That is to say, the world is increasingly connected, and at least half of the world is always awake. Holidays aside, at least one third of the world is always open for business. Consider the times around the world when, in Chennai, it is 12:30 AM at night. To the east, it is the following morning: in Melbourne, 5 AM; in Singapore, 3 AM. To the west, it is the previous day: in London, 8 PM; in New York, 3 PM; and in San Francisco, 12 noon.

Facing Singapore – and beyond, the nations of the Pacific Ocean – the seaport of Chennai is halfway between Africa and Australia, in the center of one of the most culturally rich and economically promising regions of the world.

Perhaps in part because so many Tamil people speak English so beautifully, USA telephone customer and technical assistance is often given in Chennai. When a person in the USA buys a computer, car, etc., and calls a number for technical assistance, the odds are good that the answering person will be in Chennai.

Catering to an international clientele, such telephone service providers must work when their employers and the public demand their services - in many cases around the clock, in multiple shifts. Thus, the 9 to 5, or 10 to 6, workday is in many Chennai businesses today a thing of the past, a provincial concept, a quaint relic of a bygone era.

It is well and good for people in Chennai to use communication technology as employees for foreign companies, but Chennai-ites should not just be actors in other people's scripts in this realm. They should also be offering their own unique services, and owning the communication businesses that would provide these services. Chennai should also be using the technology on her own terms, for providing her own cultural offerings in her own way. By offering interactive performance of, instruction in, and discussion about arts, culture, beauty, morality, tolerance of diversity, etc., Chennai could truly help make herself, and the rest of the world, better places.

Chennai is an education, technology, and performing arts capital not only of India, but of the world. She has many ancient and rich traditions on which to build, and which could be applied to, and transposed into, videoconferencing. Videoconferencing, a form of video-mediated communication, can be defined as communication in which all participants can send as well as receive audio and video; it may occur via the Internet or other technologies. Web casting, which occurs via the Internet, involves transmitting but not receiving audio and video (audience members may be able to respond with e-mails).

One style of teaching/learning that is practiced in Chennai – actually, in all of India – is known as the "lead-and-follow" method. In the lead-and-follow method, the teacher's statement (for example, a few notes of music) is often meant to be repeated by the student. Sometimes it is meant to be improvised upon, or replied to. Sometimes the student is meant to join in and, alongside the teacher, finish the statement. Chennai could specialize in using this technique to teach via videoconferencing.

At present, Subbu Arumugam is attempting to begin a Villupattu school. Dr. Premeela Gurumurthy, head of the Dept. of Indian Music at the University of Madras, is a scholar and performer of Katha Kalakshebam (also known as Harikatha). Villupattu and Katha Kalakshebam are, respectively, folk, and orthodox Hindu, styles of discourse, or, storytelling. In both cases, the lead speaker alternates between speaking, chanting, and singing.

Villupattu and Katha Kalakshebam instruction should be available via videoconference. These art forms need to develop and evolve in order to stay alive. In Katha Kalakshebam, there is a complex system that must be adhered to in regard to referring to traditional commentators (poets, scholars, saints, pundits, etc.) according to what episode of an epic, such as the Ramayana or the Mahabharata, is being narrated. Much of the information to be learned can be placed on websites (in Tamil, English, and other languages), but teaching and performing requires presence – whether physical presence or tele-presence. (Numerous studies have shown that for videoconferencing to give its best results, the participants should also periodically meet physically.)

There is a tremendous market around the world composed of youngsters of Tamil background, who speak just a little Tamil. It would be wonderful if such young people could experience aspects of traditional Tamil culture and the most modern of communication technologies at once – this could increase their interest and proficiency in both the ancient and the modern forms of communication.

Today, if children of Tamil descent around the world wish to learn and practice a Tamil form of performance, the main opportunities are for Bharata Natyam dance and Carnatic music. Other options, including from folk and popular culture, should also be there.

The Lakshman Sruthi Light Orchestra, which recently toured the USA, has opened an instrument shop and instruction and rehearsal centre in Ashok Nagar. As this light orchestra, like most in Tamil Nadu, plays mostly Tamil cinema songs, the Lakshman Sruthi Light Orchestra's participation in video-mediated events would in a sense signify an entry of the Chennai cinema world into the realm of video-mediated communication.

More than once I have heard young men in Chennai Internet browsing centres wearing the headset earphone and microphone, and singing Tamil cinema songs to distant parties via Yahoo Messenger and other instant message software programs, which increasingly enable near-instantaneous audio and video communication, along with text. The sharing of such music could be channeled into structured (and profitable) activities.

Due to Chennai having been, and continuing to be, a world capital of cinema production, the infra structure, facilities, and expertise (directors, composers, choreographers, playback singers, etc.) are here for cinema production and post-production work. Much of this activity has been expanding into the television industry. It could also expand into the web casting and videoconferencing industries: in these

cases, it is not a matter of entertaining people, but rather of engaging them in artistic, intellectual, and educational relationships and experiences. Chennai's historic cinema studios should be consulted with regarding how this might best be done. Cinema people could contribute both in terms of teaching and discussing the cinematic arts, and also in terms of applying their production abilities to videoconferencing projects.

The Karaoke industry is large in much of East Asia, although to date it is minor in India. Karaoke involves clients entertaining themselves and others by singing songs. Often the lyrics appear on a video screen, and are read by the singer. Sometimes the singer's live image is also placed on the screen. Karaoke practices thus utilize many cinematic techniques, such as superimposing foreground figures onto various backgrounds, and displaying subtitles in different languages.

In the cases of web casting and videoconferencing, instantaneous subtitles may be called for, which may call for computer voice-recognition and translation capabilities. Specialized software needs to be developed for such applications.

Chennai shops such as Pro Music in Egmore sell musical instruments (mostly electronic) and install sound systems. People are coming there for DJ lessons, even though there are very few opportunities to do public, professional DJ-ing in Chennai, in part due to music and dance venues closing early.

The world-music, fusion-music scene is almost non-existent in Chennai, and this, again, is largely because, at present, music is not allowed to be played late at night here. Much experimenting is going on around the world by DJs and musicians, who are mixing pre-recorded and live music for crowds of dancers. At such discos, video is often projected onto large screens. Sometimes computers enable aspects of the music to directly affect the visuals. Sometimes people can see images of themselves as they are dancing, mixed with other images.

Developing audio and video for the international disco (or "club") scene is a significant component of the computer hardware and software industries. Why should Chennai exclude herself from these techno logical and artistic experiments and developments? Why should the rest of the world be denied Chennai's presence and leadership in these realms? Why should musicians be forced to go elsewhere to work and to develop their ever-evolving arts?

North Indian cinema music mixed, sampled, and otherwise processed has for some years been played in discos around the world. This is known as "bangra" music. What is the name for south Indian cinema (and folk, and classical) music transposed into dance/disco music? It may be that there is not a widely known name for this yet because to date it has only rarely been done in public.

In sum: Chennai should build on her glorious traditions – her already-existing strengths, successes, and achievements – including the above-mentioned lead-and-follow teaching/learning method, and the music and cinema industries, by expanding them into and applying them to video-mediated communication such as videoconferencing and web casting.

Presently, the British Council and the USA Consulate have two of the finest videoconferencing facilities in town. Dishnet's videoconferencing suite in Sterling Tower is available for approximately 5000 Rs per hour. The Satyam I-Way Internet centre on Radhakrishnan Salai claims they will soon have a video conferencing booth. Chennai's Indian Institute of Technology is involved in numerous innovative video-mediated communication projects, many of them related to the Dept. of Engineering's Dr. Ashok Jhunjhunwalla's world-leading work with wireless Internet.

There are a number of Internet centres in Chennai where one can go to videoconference with instant message programs. However, the picture comes slowly, and the image is small; and only one or two individuals can participate on this end of the event.

A few of these Internet centres are open 24-hours (presently, national franchise branches only). These 24-hour Internet centres, for many people, greatly enhance the quality of life in a city. Businesspeople, journalists, tourists, and many others find it a wonderful convenience and relief to be able to use such facilities at irregular hours, to always be able to go out to work on academic or professional projects, and perhaps most importantly, to be able to arrange to participate in text, audio, and/or video meetings with people around the world, in all of the different time-zones, around the clock.

Chennai has the telecommunication infrastructure and the technological know-how for excellent video-mediated communication, as has been demonstrated, for example, by the recent telecasts of heart surgeries from Apollo Hospital (both the surgeries and the telecast were successful!). Educational ventures such as Direcway are just getting underway here. The Tamil Virtual University, based in the Tidel Park complex, has made a wonderful start and is positioned to help lead the way.

But today, where in Chennai can cultural, civic, professional, and other groups go to hold a video conference with colleagues in other Indian cities, or in other nations? The options are few and are not especially practical. What is needed are "teletoriums."

Tele is Greek for, from a distance. It seems the word, teletorium, is derived from the word, auditorium. As an auditorium is a place one goes to in order to hear, a teletorium is a place one goes to in order to communicate with distant people, that is, to telecommunicate with them. Teletoriums, as the word is usually used in the USA, is a space equipped with technology for videoconferencing and large screen display (usually video projectors and screens). With the addition of such technology, a rehearsal centre could be a tele-rehearsal centre. A seminar centre could be a tele-seminar centre. A disco could be a tele-disco.

A DJ could be a tele-DJ. A tele-DJ would need to see a video image of the people on the dance floor, so as to be able to judge what music to play next. A tele-DJ in Chennai could transmit music to tele-discos anywhere in the world – at all different hours. Of course, the music could also be a collaboration, coming from numerous sources.

Public activity at 3 AM in Chennai need not be associated with drunkenness or other bad behavior: rather, 3 AM public activity could be associated with international educational and business meetings; performance and discussion of the arts; upward social-economic mobility; a service economy; and the teaching of language, management, and all other subjects.

Let us imagine for a moment, what an ideal Chennai teletorium complex might look like.

First of all, it would be in a central location, such as on Mt. Road near the centre of town, or perhaps on or near Nungambakkam High Road. Its facilities would be accessible 24-hours-a-day, seven-days-a-week.

Our ideal teletorium would be available to individual citizens, as well to groups of all sorts, including people of Chennai's many universities. There would be small rooms for individual meetings, slightly larger rooms for groups, and a large space (seating and non-seating) for crowds. The facilities could be used for family reunions, as well as for sales, educational, and many other types of events. Web casting could accompany launches, announcements, and openings for products, services, and causes.

Among the options would be low-cost, low-quality videoconferencing (over the regular Internet), more expensive videoconferencing via ISDN lines and specialized hardware, and videoconferencing via Internet2. Internet2, a new generation of the Internet, was originally developed by universities in the USA (including the University of Pennsylvania, where I am presently a Ph.D. candidate), and is now being used in many places around the world (www.internet2.org). Internet2 enables multi-party near-broadcast-quality videoconferencing. Sites that are Internet2-capable become places where the international

community that uses such technology can visit and form collaborations. It seems that the sea-floor cables that have recently reached India from Singapore may be Internet2-capable.

The only way that such a teletorium could come into existence and be maintained would be as a combined venture of businesspeople, engineers, academics, people in the arts, and civic leaders, led by the government.

One or more restaurants might be included in the teletorium complex. This would enable people, for example, to dance and then eat and drink, if not in the same room, then in adjacent rooms. People should be able to send an e-mail, or videoconference with friends or family, especially if they have just been tele-dancing and tele-music-making with them. Fax and telephone services should also be at hand, as one never knows what communication channel will work best in a particular case. The separation between conversational, artistic, and business communication is artificial and unnecessary: all such events can happily co-exist in the same facility (the walls would be sound-proof, of course). All of this would lead to people discovering new ways of working via videoconference, as the technology enables access to more employers, and to more customers.

It is sadly true that in many places and times late-night music has been associated with bad behaviour such as overuse of alcohol, and rowdyism – but this need not be so in the future.

Today, for many people around the world – especially the producers, craftspeople, and performers involved, and many members of the public – the late-night music and dance scene is more about learning about and using new audio-video software and interactive telecommunication, and about career-building, than it is about getting drunk. Part of the fun and glamour of attending a disco, or tele-disco, is participating in an intellectually stimulating technological and artistic experiment.

Everyone knows that cyber-communication and heavy alcohol consumption do not mix well. Excessive drinking can lead to reckless and belligerent behavior, and these are the last things that one wants in the vicinity of expensive and delicate telecommunication equipment. Also, to overcome possible imperfec tions in intercontinental interactive telecommunication processes, one needs to be alert, and sensitive to the smallest cues from the distant parties – which is not likely if one is drunk. People often want to look their best in a videoconferencing environment: for one thing, they might be seen by prospective employers.

I would suggest that in our teletorium complex no alcohol would be sold or served after a certain hour, say, 12 midnight. Our teletorium would develop drinks other than alcohol, such as fruit drinks (with sugar to the customer's taste), and vegetable drinks. Dancing is good for weight loss and getting and staying in good shape, as well as for developing one's creativity. Dancing in our teletorium to excellent music could come to be seen as a healthy and intelligent activity.

I am from New York City, and I recognize in Chennai many of the same wonderful qualities that are found in my hometown. Both cities are by the sea, and both are trade-, university-, and arts-centred.

Today, Chennai stands at a moment of decision. The rest of the world needs Chennai at this moment! Chennai's developing of videoconferencing – especially in regard to the performing, teaching, and discussing of language and the arts – could help set the world on a wonderful new track, lay a new international cultural foundation, set an excellent example, and inspire people around the world.

Let the government work together with businesspeople, engineers, artists, and academics to form new cultural, business, and artistic institutions! Let Chennai develop new forms of facilities and practices for meeting, performing, and teaching! The rich cultural background that would support such an effort is here to a degree unsurpassed by any other place in the world.

The establishment of teletoriums such as the one imagined above would benefit Chennai's music, tourism, and computer businesses, as well as her academic institutions.

Most of all, let us rescue late-night music from the association with rowdiness, and instead associate it with high-technology entrepreneurial efforts, and the spread of beautiful culture around the world!

51

பார்வையற்றோருக்கான தமிழ்க் கணினி மேம்பாட்டுத் திட்டம்

முனைவர் அர. ஜெயச்சந்திரன்

முதுநிலை விரிவுரையாளர்
மாநிலக் கல்லூரி,
சென்னை — 600 005

முன்னுரை

ஒலிமயக் கணினி பார்வையற்றவருக்குக் கண்ணாக விளங்கும். கண், காது இரண்டும் பழுதானவர்களுக்கு தொடுதிரை கணினி துணை செய்யும். புள்ளி எழுத்துக்களை கையால் தொட்டுப் படிக்கும் வசதியுள்ள திரை அமைய வேண்டும். அந்தத் திரையினையே இங்கு தோடுதிரை என குறிப்பிடப்பட்டுள்ளது. கையால் எழுத்தைத் தடவிப் பார்க்க நேரம் மிகும். களைப்பும் உண்டாகும். திரையின் எழுத்து வரிகள் தானாக நகர்ந்து கையில் பட்டுச் செல் லும்படி அமைத்தால் எளிதாக நெடுநேரம் படிக்கலாம். புள்ளி எழுத்தைப் படிக்கும்போதே எழுத்து ஒலிகளை காதால் கேட்கவும் வசதி செய்யவேண்டும். விசைகளை இயக்க முடியாத கை இழந்தவர்கள் பயன்படுத்தும் விதத்தில் பேச்சை எழுத்தாக்கும் முறை உருவாக்கப்பட வேண்டும். உதாரணமாக டிராகன் ஸ்பீச் முதலிய பேச்சை எழுத்தாக்கும் ஆங்கில மென் பொருளை குறிப்பிடலாம்.

பேச்சை எழுத்தாக்கும்போது கவனிக்கவேண்டிய விதிகள்

பேச்சு ஒலி, எழுத்து, விசை இயக்கம் இம்மூன்றும் ஒன்றாக இயக்கவேண்டும். ஒலியன், உருபன், சொல், தொடர், பத்தி, நிறுத்தக் குறிகள் முதலியவற்றை சேர்த்தும் பிரித்தும் படிக்கக் கூடியதாக இருக்கவேண்டும்.

தற்சார்பு

ஊனமுற்றோருக்கான கணினியை உருவாக்கும்போது தற்சாற்பினை மனதில் கொண்டு உரு வாக்கவேண்டும். கணினியை இயக்கத் தொடங்கியது முதல் மூடும் வரை எல்லாம் பேச்சி லும் புள்ளி எழுத்திலும் வெளிப்படவேண்டும். இன்றைய நிலையில் கணினியில் ஆங்கிலத் தில் JAWS என்னும் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தத் தொழில்நுட்பத்தை பின் பற்றி தமிழிலும் கணினியில் பேசும் முறையைக் கொண்டுவரலாம். குரல் இனிமை கருவி களின் அதிர்வும் இரைச்சலும் இல்லாமை, ஒலிப்பில் தெளிவு முதலியவற்றை அமைத்தலில் சிறப்பாக கவனம் செலுத்தவேண்டும். மேலும் குரலின் வன்மை, மென்மை, பேசும் வேகம் இவற்றை மாற்றல், கூட்டல், குறைத்தல் ஆகிய ஏற்பாடுகளை செய்யவேண்டும். ஆங்கிலத்தில் நடைமுறையில் உள்ள JAWS, OpenBook முதலிய மென்பொருள்களில் இவ்வியல்புகள் பொருந்தியுள்ளன.

விசை இயக்கம்

தமிழ் 99 TMTB எழுத்துருக்கள், பொன்மொழி, பொன்மடல் முதலிய மென்பொருள்கள், தமிழ் எழுத்தில் இருந்து பேச்சும், பேச்சி விசைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுத்தில் இருந்து பேச்சும், பேச்சி

லிருந்து எழுத்தும் உருவாக்கப்படல் வேண்டும். ஆங்கிலத்தில் இப்போது உருவாக்கப் பட்டுள்ள JAWS, Open Book முதலியவற்றில் குரல் இனிமை உள்ளது.

இன்றைய நிலையில் பார்வையற்றோரும் தமிழ் கணினியும்

பாரதி பிரைல் எனும் கணினி முறையை ஐஐடி நிறுவனம் உருவாக்கியுள்ளது. இதில் தமிழ் வரி எழுத்துக்களை உள்ளிட்டு பிரைல் எழுத்தில் அச்சில் பெறலாம். இந்த வசதியை பார்வையற்றவர்கள் நேரடியாக பயன்படுத்த முடியாது. அனால் மேற்கு வங்க அரசின் திட்டமாகிய வெபல் மீடியா (Webel Media) என்னும் திட்டத்தில் உருவாக்கப்பட்ட மென் பொருள் பிரைல் புள்ளி எழுத்தம் பேச்சு இணைந்த முறை கணினியில் உருவாக்கப்பட்டுள் ளது. பேச்சு, குரல் ஆகியவற்றில் இனிமையும் தெளிவும் உள்ளது. குரல், பேச்சின் வேகம் ஆகியவற்றை மாற்றிட வழியில்லை. இருபக்கமும் பிரைல் முறையில் அச்சிடுமாறு அமைக்க வில்லை. ஒருபக்கம் அச்சிடுவதால் தாள் பெரிதும் வீணாகும். பிரைலில் அச்சிடும் செய்தி களை வரி எழுத்து அச்சில் பெற்றுக்கொள்ளவும் வசதி இருக்கவேண்டும்.

இந்திய மொழிகளுக்கான பேசும் கணினி கல்யாண கிருஷ்ணன் என்பவரால் உருவாக்கப் பட்டு, "வித்யா விருக்சா" நிறுவனத்தல் பயிற்சி அளித்து வழங்கப்படுகிறது. இம்முதல் முயற்சியை பார்வையற்றோர் சமுதாயம் பெரிதும் பாராட்டுகிறது. இந்த மென்பொருளுக்கு Local Language Editor என்று பெயர். இதன் உதவியால் பார்வையற்றவர் ஒருவர் கணினியை திறந்து கோப்பினை உருவாக்கி செய்திகளை தட்டச்சிடலாம். அப்போதைக்குத் திருத்திக் கொள்ளலாம். Microsoft Word மற்றும் JAWS உதவியால் எல்லா வேலைகளிலும் LLE உதவி யால் செய்ய முடியவில்லை. தமிழ் 99 விசைகளை பயன்படுத்தும் விதத்தில் அமைக்கப்பட் டால்தான் நேரச் சுருக்கம் கிட்டும். JAWS முறையை பின்பற்றினால் தற்சார்பு கிட்டும். ஆங்கி லம் தெரிந்த பார்வையற்றவர்களுக்கு JAWS என்பது பேசும் கண்ணாக விளங்குகிறது. இது பார்வையற்றவர்களுக்கு தற்சார்பினை வழங்குகிறது. பேச்சு முறை கணினியை உருவாக்கும் போது கருவியின் குரலை கேட்கிறோம் எனும் எண்ணம் தோன்றாதவாறு அமைக்கவேண் டும். ஓரே எழுத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விசைகளை இயக்கும் முறை விரைவில் சோர் வினை அளிப்பதோடு மிகுதியான நேரத்தை எடுத்துக்கொள்ளும். இதிலும் மாற்றம் தேவை. ண, ந, ல, ன, ர, ற, ல, ள, ழ முதலிய ஒலிகள் குறில், நெடில் ஆகிய வேறுபாடுகளை நன் றாக உணரும்படி அமைக்கவேண்டும். LLE முறையை மேற்குறித்த பரிந்துரைகளின் அடிப் படையில் மேம்படுத்த பொறுப்புள்ள நிறுவனங்கள் உதவவேண்டும். இக்கருத்துக்களின் அடிப் படையில் தமிழில் பேசும் பிரைல் கணினியை உருவாக்கவேண்டும். எழுத்தைப் பேச்சாக்கும் தொழில்நுட்பம் உருவானால் வருடியின் (Scan) மூலம் புத்தகங்களை கணினியில் உள்ளீடு செய்து பேச்சில் படிக்கலாம். ஆங்கிலத்தில் OpenBook என்னும் மென்பொருள் இவ்வேலை யைச் செய்ய உதவுகிறது. தமிழில் அம்முறையை உருவாக்க பொன்விழி உதவும். அதன் மேம் பாடும் இதன் மேம்பாடும் இணைந்து செல்லலாம். OBR (Optical Braille Recognition) என்று ஒரு மென்பொருள் உள்ளது. இது பார்வையற்றவர்கள் பிரைல் எழுத்தில் எழுதும் ஆவணங் களை வருடித்து (Scan செய்து) பேச்சில் படித்துக் காட்டும் வரி எழுத்தில் அச்சில் பெற லாம். பிரைல் அல்லது எழுத்தை பேச்சாக்கும் முறையை பயன்படுத்தி செய்திகளை உள்ளீடு செய்தால் பிரைல் எழுத்தில் அச்சில் பெற Index Brailer Four by Four என்பவை உள்ளன. அதை செய்திகளை வரி எழுத்து அச்சிலும் பெற்றுக்கொள்ளலாம். வரி எழுத்தில் உள்ள செய்திகளை Scan மற்றும் OpenBook மூலம் Floppyயில் பதிவு செய்து பிரைல் அச்சிலும் பெற லாம். பிரைல் அல்லது எழுத்தை பேச்சாக்கும் முறையைப் பயன்படுத்தி செய்திகளை உள்ளீடு செய்தால் பிரைல் எழுத்தில் அச்சில் பெற Index Brailer Four by Four என்பவை உள்ளன. அந்த செய்திகளை வரி எழுத்து அச்சில் பெற்றுக்கொள்ளலாம். வரி எழுத்தில் உள்ள செய்திகளை Scan மற்றும் OpenBook மூலம் floppyயில் பதிவுசெய்து பிரைல் அச்சிலும் பெறலாம். ஆங்கில மொழியை அடியொற்றி உள்ள மேற்குறித்த வசதிகள் தமிழ் மொழி அடிப்படையில் செய்யப்பட்டால், பார்வையற்றவர்கள் பின்வரும் பயன்களைப் பெறலாம்.

பயன்கள்

எழுத்தைப் பேச்சாக்கும் முறை உருவானால் பார்வையற்றவர்கள் தமிழ்ப் புத்தகங்களைக் கணினியின் துணையோடு தாமே படித்துக்கொள்வர். மேலும் தமிழ் வழியில் இணையத்தின் பயன்பாட்டையும் பெறுவர். பார்வையற்றவர்கள் தம் கருத்துக்களை கணினியில் உள்ளீடு செய்து, திருத்தி, செப்பனிட்டு பிறருக்குத் தெரிவிக்கலாம். இம்முறையில் கடிதங்கள், கட்டுரைகள், நூல்கள் ஆகியவற்றை எழுதி தாமே வெளியிடுவர். வரி எழுத்து வினாத் தாள்களை பிரைல் எழுத்தில் கணினி மூலம் அச்சிட்டு பார்வையற்றவர்களுக்குக் கொடுக்கலாம். அவர்களும் தேர்வுகளை கணினியின் துணையோடு தாங்களாகவே எழுதிக்கொள்வர். தேர்வுத் தாள் திருத்தல், வினாத் தாள் உருவாக்கல், விண்ணப்பங்களை நிரப்புதல், ஊதியம், வருமான வரிக் கணக்குகளை நிர்வகிப்பர். பல்வேறு விதமான அறிக்கைகள், மாணவர் சேர்க்கைப் பட்டியல், மதிப்பெண் பட்டியல், நூலக நடைமுறைக் கணக்குகள், பாடக் குறிப்பு, பாடத் திட்டம் முதலியவற்றை உருவாக்கல் எனப் பல வேலைகளை பார்வையற்றவர்கள் தாங்களாகவே செய்துகொள்வர்.

இன்றைய நிலையில் தமிழ் கணினியில் ஒலி வசதி

தமிழ் மொழியைக் கற்பித்தல் தொடர்பாக "உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்" உருவாக்கிய குறுந்தட்டு, "ஆப்பிள் நிறுவனம்" உருவாக்கிய சங்கத் தமிழ்ப் பாடல்கள், சென்னை கவிகள், Compcare Software Private Ltd, Learn Fun Systems Private Ltd., தமிழ் Softv w முதலிய நிறுவனங்கள் உருவாக்கிய குழந்தைகளுக்கு தமிழ் கற்பித்தல், குழந்தைகளுக்கான கதைகள், திருக்குறள், கணினி கற்பித்தல், பிற தமிழ் இலக்கியம், தமிழ் இணையப் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ள கோயில்கள், பண்பாட்டு செய்திகள், குழந்தைப் பாடல்கள், பல இலக்கியப் பாடல்கள், செய்திகள், சைவ திருமுறைப் பாக்கள் முதலியவற்றை ஒலி வடிவில் பெறலாம்.

செய்யவேண்டிய ஏற்பாடுகள்

கிருபானந்த வாரியாரின் சொற்பொழிவுகள், பல்வேறு அறிஞர்களின் இலக்கியச் சொற்பொழிவுகள், தருமபுரம் சாமிநாதன் பாடிய சைவ திருமுறைப் பாக்கள், பல்வேறு இடங்களில் நிகழ்த்தப்படும் திருவருட்பா முற்றோதல், திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்ட நாலாயிர திவ்யப் பிரபந்தம், பல்வேறு வானொலி நிலையங்களில் உள்ள ஒலிக் களஞ்சியங்களின் பக்திப் பாடல்கள், இலக்கிய விரிவுரைகள், இலக்கியப் புதையல், திருக்குறள், விளக்கவுரைகள், நாட்டுப்புறப் பாடல்கள், செய்தித் தொகுப்புகள், அறிவியல் மருத்துவ உரைகள் முதலியவற்றை முறையாகத் தொகுத்து அமைத்தால் மிகப் பெரிய ஒலிவழி நூலகத்தை உருவாக்கி இணையத்தின் மூலம் வழங்கி பார்வையற்றவரும் மற்றவரும் பயன்பெறச் செய்யலாம். அவ்வாறு அமைக்கப்படும் ஒலி நூலகம் பார்வையற்றவர்களுக்கு நிறைந்த அறிவுச் செல்வத்தை வழங்கும்.

ஆங்கிலக் கணினியை தமிழ் பயில்வோர் பயன்படுத்தும் விதம்

தமிழ் இலக்கியத்தின் பெருமை ஆங்கிலம் அறிந்தவர்களுக்கு உதவும் விதத்தில் அம்மொழியில் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி வெளியிடலாம். நல்ல தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கலாம். தமிழ் பற்றிய ஆங்கில நூல்களை OpenBook மூலம் படித்துக்கொள்ளலாம். இணையத்தின் மூலம் செய்திகளைத் தெரிந்து தமிழில் நூல்கள் எழுதலாம், சொற்பொழிவுகள் நிகழ்த்தலாம். இணையத்தில் மடலாடு குழுக்களின் பேச்சு முறையில் பங்கேற்கலாம். தமிழில் பேசும் கணினி உருவாக்கத்திற்குத் தேவையான சொல் வலை (WordNet) தரவு மூலத் தொகுப்பு (கார்ப்பஸ்) முதலியவற்றை உருவாக்கத் துணை செய்யலாம். பேசும் கணினி உருவக்கத்திற்கான பேச்சுத் துணுக்குகளை பதிவுசெய்து கொடுக்கலாம். அகராதிகள் தயாரிக்கலாம். பல்வேறு விதமான நோக்கு நூல்களை உருவாக்கலாம். ஒலி வடிவ குறுந்தட்டுகளை வெளியிடலாம். பார்வையற்றவர்களுக்குத் தேவையான மென்பொருள்களை உருவாக்குவதற்குரிய ஆலோசனைகளை பத்திரிகைகளில் கட்டுரைகளாக எழுதலாம். அதே கருத்துகளை தொடர்புடைய அறிஞர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கடிதங்கள் வாயிலாக தெரிவிக்கலாம். இம்முறையில் மென்பொருள் தயாரிப்பவர்களை ஊக்கப்படுத்தலாம், உதவலாம்.

இல்லாமையின் விளைவு

ஆங்கிலத்தில் உள்ள கணினி வசதிகள் தமிழில் இல்லாததால் வேறு வழியின்றி தமிழ்ப் பற்று உள்ளவர்கள் கூட ஆங்கில வழியில் கணினியைப் பயன்படுத்தவேண்டியுள்ளது. தமிழ் கணினித் துறையில் அடைந்துள்ள இன்றைய வளர்ச்சியின் விளைவுகளைக் கூட பார்வை யற்றவர்களால் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை.

பார்வையற்றோர் மற்றும் ஊனமுற்றோருக்கு உதவக் கூடிய தொழில்நுட்பத்திற்கு ஆங்கிலத் தில் Assistive Technology (உதவும் தொழில்நுட்பம்) என்று கூறுகிறார்கள். இத்தொழில்நுட்பத் திற்கென தனி அமைப்பை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அதில் செய்யவேண்டிய பணிகள்: உள்ளிடல், வெளிபெறல் (input, output), ஆகியவற்றில் பிரைல் எழுத்திலிருந்து வரி எழுத்து, பிரைல் எழுத்திலிருந்து பேச்சு, பேச்சிலிருந்து வரி எழுத்து, பேச்சிலிருந்து பிரைல் எழுத்து, வரி எழுத்திலிருந்து பேச்சு மற்றும் பிரைல் எழுத்து, தொடுகோடுகள் உருவாக்கம், புள்ளி உருவாகும் கணினி திரையாக்கம், பிரைல் அச்சுப் பொறி உருவாக்கம், தொடுகோடு கணினி திரையாக்கம், திரை படிப்பான் மென்பொருளாக்கம், பேச்சுவழித் தகவல் தொடர்பு சாதன உருவாக்கம், தகவல் தொழில்நுட்ப உதவியுடன் பிரைல் மற்றும் பேச்சுக் குறிப்பேட்டு கருவி யாக்கம், பார்வையற்றோர்க்கான பயிற்சிக் குறுந்தட்டு ஆக்கம், பார்வையற்றோர்க்கான உதவும் தொழில்நுட்ப வசதியைக் கூறும் புத்தக உருவாக்கம் முதலிய பணிகளைச் செய்ய வேண்டி உள்ளது.

முடிவுரை

தமிழக அரசு ஊனமுற்றோர்க்கான தகவல் தொழில்நுட்ப சிறப்புக் கொள்கை ஒன்றை உட னடியாக அறிவிக்கவேண்டும். இதனை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும் விதத்தில் பார்வை யற்ற ஒருவரை ஒருங்கிணைப்பு ஆலோசகராக நியமித்தல் வேண்டும். தமிழக அரசு பார்வை யற்றோருக்கு கணினி அறிவை வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி உதவியை தமிழில் பிரைல் மற்றும் பேசும் மென்பொருள் உருவாக்கத்திற்காக பெருமளவை பயன்படுத்தவேண் டும். இதன் மூலமே தமிழ்நாட்டு பார்வையற்றோருக்கு கணினி அறிவு முழுமையான பயனை அளிக்கும். அமையவிருக்கும் ஊனமுற்றோர்க்கான மாநில வள மையத்தில் (State Resource Centre) பிரைல் மற்றும் பேசும் மென்பொருள்கள், வன்பொருள்கள் ஆகியவற்றை வாங்கி வைத்து பார்வையற்றோருக்குக் காண்பிக்கவேண்டும். அவற்றைக் குறைந்த செலவில் பயன் படுத்திக்கொள்ள வாய்ப்பளிக்கவேண்டும்.

நன்றியுரை

தமிழ் சார்ந்த பார்வையற்றோர்க்கான மென்பொருள் உருவாக்கத்தில் உதவுவதாகக் கூறி யுள்ள Crescent பொறியியல் கல்லூரியின் பேராசிரியர் வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், Comp Care புவனேஸ்வரி அவர்கள், கட்டுரைக்கு கருத்துகள் வழங்கிய Syslab System—ன் ராஜேஷ் அவர்கள், நண்பரும் கணினி வல்லுநருமாகிய திரு. கே. ராம் மற்றும் மகாதேவன் அவர்கள். பார்வையற்ற நண்பராகிய IOBயில் பணியாற்றும் திரு. து. மணி அவர்கள் முதலியோருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

52

பல்லூடகத் தமிழ் கற்பித்தல் மென்பொருள்கள் குறித்த மதிப்பீடு

முனைவர் த. பரசுராமன்

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
112 காமாட்சியம்மன் கோவில் தெரு, புதுச்சேரி 605 001

0. கணினித் தொழில்நுட்பத்தில் இந்தியாவில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. இதே போல் உலகத் தமிழர்கள் கணினித் தொழில்நுட்பத்தில் தமிழுக்குக் குறிப் பிடத்தக்க இடத்தைப் பெற்றுத் தந்துள்ளார்கள். இது வரை தமிழில் ஏராளமான எழுத்துருக் களை உருவாக்கியிருக்கிறார்கள். கணினித் தொழில்நுட்பம் குறித்துத் தமிழில் நூல்களும் இதழ்களும் நிறைய வெளிவருகின்றன. பிழை திருத்தி, மின்அஞ்சல், ஓ.சி.ஆர். போன்றவற் றிலும் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளார்கள். தமிழ், தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு தொடர்பான செய்திகளை இணையத்தில் தரும் பணியையும் செய்து வருகிறார்கள். இச் செய்திகள் தமிழிலேயே கிடைக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மொத்தத்தில் தமிழ் மட்டுமே தெரிந்த ஒருவருக்குக் கணினித் தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பைத் தரும் நோக்கில் செயல்படுகிறார்கள். இத்துடன் தமிழைக் கற்பிப்பதற் கும் கணினித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்கள். இதற்கென உரு வாக்கப்படும் மென்பொருள்கள் இரு வகைப்படும். ஒன்று இணைய தளங்களில் கிடைப்பது. மற்றொன்று குறுவட்டுகளாக வெளிவருவது. இக்கட்டுரையில் குறுவட்டுகளாக வெளி வந்துள்ள தமிழ் கற்பித்தல் மென்பொருள்களே மதிப்பீடு செய்யப்படுகின்றன. இக்குறுவட்டு களையும் இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று, தமிழ் தெரியாதவர்களுக்காகத் தயாரிக்கப் பட்டவை. அதாவது தமிழை இரண்டாம் மொழியாகவோ அயல்மொழியாகவோ கற்க விரும்புகிறவர்களுக்கானவை. இரண்டு, தமிழ் தெரிந்தவர்களுக்கானவை. அதாவது தமிழை முதல் மொழியாகவோ தாய்மொழியாகவோ கற்பவர்களுக்கானவை. இக்கட்டுரை இரண் டாம் வகை வட்டுகளைப் பற்றிய மதிப்பீடாகவே அமைகிறது.

தற்போது சந்தையில் கிடைக்கிற தமிழ் கற்பித்தல் குறுவட்டுகளை அவற்றின் உள்ளடக் கத்தைக் கொண்டு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். குழந்தைகளுக்கான பாடல்கள் மட்டும் உள்ள வட்டுகள், கதைகள் மட்டும் உள்ள வட்டுகள், மொழித் திறன்கள் பலவற்றையும் வளர்க்க உருவான வட்டுகள் என்பன அவை. மூன்றாம் வகை வட்டுகளில் கதைகளும் பாடல்களும் கூட இருக்கலாம்.

1. பாடல் வட்டுகள்

இவ்வகை வட்டுகளில் குழந்தைப் பாடல்கள் இசையுடன் இடம்பெற்றுள்ளன. பாடலுக்கு ஏற்ற படமோ அனிமேஷன் படங்களோ காட்டப்படுகின்றன. கோலாலம்பூர் வைகறை புரடக்ஷன் வெளியிட்டுள்ள வட்டில் மட்டும் குழந்தைகள் பாடலுக்கு ஏற்ப நடனமாடுவது படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. பாடல்கள் வழியாகக் குழந்தைகள் ஒலிப்புப் பயிற்சி பெறுவதுடன் அவர்களுக்குக் கேட்டல் திறனும் கேட்டுத் திரும்பப் பாடுவதன் வழியாகப் பேசுதல் திறனும் வளரும். சொற்களஞ்சியம் பெருகவும் வாய்ப்பு உண்டு. தற்போது கிடைக் கின்ற பாடல் வட்டுகளில் (இணைப்பு 1) மூன்று இங்கு மதிப்பிடப்படுகின்றன.

1.1 சென்னை Softview Computer நிறுவனம் வெளியிட்டுள்ள குழந்தைகளுக்கான பாடல்கள் கொண்ட வட்டு 'குழந்தை பாடல்கள்'. இதில் ஒரு பாடலைப் பார்த்தவுடன் அடுத்த பாடலைப் பார்க்க மீண்டும் முதன்மை மெனுவிற்குப் போகவேண்டியதிருக்கிறது. இல்லாவிட்டால் அதே பாடல் திரும்பத் திரும்ப வருகிறது. இதே போல் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு இடைமுகம் உள்ளது. அதில் தக்க இடத்தில் சுட்டினால்தான் பாடலைப் பார்க்க முடிகிறது. இந்த இடைமுகத்தில் சில நேரங்களில் இடது பக்கத்திலும் பாடலைப் பார்க்கச் சுட்டவேண்டிய திருக்கிறது. இது பயனாளிகளை எரிச்சல்படுத்துவதாக அமைந்துள்ளது. பாடல்களைப் பொறுத்த வரை ஒரு பாடலில் அறிவுஜீவி என்ற சொல் வருகிறது. குழந்தைகளுக்குப் புரியாத இது போன்ற சொற்களைத் தவிர்த்திருக்கலாம். பாடல்களில் ஒன்றான 'கைவீசம்மா கைவீசு' பாடல் மிக மெதுவாகப் பாடப்பட்டுள்ளது. அதனால் அது குழந்தைகளைக் கவரும்படியாக அமையவில்லை. மற்றொரு பாடல் மே.வீ. வேணுகோபால் எழுதிய 'அம்மா இங்கே வா வா' எனும் புகழ்பெற்ற பாடல். இதில் கடைசி வரியான 'அஃதே எனக்கு வழியாம்' என்பது 'அஃதே எனக்குச் சரியாம்' எனத் தவறாகப் பாடப்பட்டுள்ளது. இந்தப் பாடலுக்கு உரிய படங்களில் 'ஓதும் செயலே நலமாம்' எனும் பாடல் வரிக்கு ஒரு குழந்தை இருகை கூப்பி வணங்கிக்கொண்டிருக்கிறது. இது தவறான படம் என்பதோடு வேறு ஓர் ஐயத்தையும் ஏற்படுத்துகிறது. அதாவது ஓதுவது என்பதைப் படிப்பது எனப் பொருள் கொள்ளாமல் வணங்குவது எனத் தவறாகப் புரிந்துகொண்டிருக் கிறார்களோ தயாரிப்பாளர்கள் எனத் தோன்றுகிறது.

1.2 Star Dot Star நிறுவனம் வெளியிட்டுள்ள குறுவட்டு 25 Animal Rhymes - Tamil எனும் பாடல்கள் வட்டு. இதில் உள்ள சில பாடல்கள் இதே நிறுவனம் வெளியிட்டுள்ள அரிச்சுவடி எனும் குறுவட்டில் உள்ளவை. இவ்வட்டில் உள்ள பாடல்கள் பல, வசனத்தைப் பாடுவது போல் உள்ளன. எடுத்துக்காட்டாக யானை பற்றிய பாடல் இதோ:

நான் எவ்வளவு பெரிசு பாத்தியா
எனக்கு தும்பிக்கை உண்டு

மற்றொரு பாடல்

நான்தான் ஒட்டக சிவிங்கி
என் கழுத்து ரொம்ப நீளம்
என் உடல் மஞ்சள் நிறம்
ஓடுவேன் ரொம்ப தூரம்.

நீர் யானை பற்றிய பாடலில் 'நிலத்துல நீருல இருக்குவேன்' என வருகிறது. இருப்பேன் என்ற சொல் இருக்குவேன் என்று தவறாக உள்ளது. இந்த வட்டில் படத்துடன் பாடல் ஒலிப்பதுடன் குறிப்பிட்ட விலங்கைப் பற்றிய சிறு விளக்கமும் இருக்கிறது. ஒவ்வொரு பாடலிலும் விளக்கம் தவிர கேள்வி பதில் பகுதியும் உள்ளது. இதைச் சுட்டினால் கேள்விகள் வருகின்றன. ஒரு கேள்விக்கு விடை கொடுத்தால் அடுத்த கேள்வி வருகிறது. இவ்வாறு கேள்விகள் தொடர்ந்து வருகின்றன. எல்லாப் பாடல்களிலும் இதே கேள்விகள்தான் வருகின்றன. இக்கேள்விகள் விலங்குகள் பற்றியனவாக இருப்பதால் பாடல்கள் எல்லாவற்றையும் கேட்ட பிறகு கேள்விகள் வந்திருக்கவேண்டும். இதற்குத்தக்க இடைமுகம் இருந்திருக்கவேண்டும் அல்லது அந்தந்த விலங்கைப் பற்றிய கேள்வி அந்தந்த விலங்கு குறித்த பாடலுடன் இருக்க வேண்டும். இவ்வட்டில் உள்ள மற்றொரு குறை பயனாளி விரும்பிய பகுதியை விரும்பிய நேரத்தில் பார்க்க வாய்ப்பில்லாத வகையில் அமைந்திருப்பது. மேலும் எழுத்துப் பிழைகள் சிலவும் வட்டில் உள்ளன.

1.3. கோலாலம்பூர் வைகறை புரடக்ஷன் வெளியீடு பாடிப் பழகுவோம் குறுவட்டு. தலைப் பிற்கு ஏற்பத் தமிழ்ப் பாடல்களை பாடிப் பழக இவ்வட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. பிரபல குழந்தைக் கவிஞர் முரசு நெடுமாறன் இயற்றிய பத்துப் பாடல்கள் இதில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. இசையோடு பாடல் ஒலிக்க, சிறுவர்கள் பொருத்தமாக ஆட, வெளிப்புறப்

படப்பிடிப்பாக ஏற்ற இடங்களில் படமாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலும் முதலில் காட்சியோடு பாடப்பட அடுத்த காட்சி மட்டும் இசையோடு இடம்பெறுகிறது. அப்போது கற்போர் பாடலைப் பாடிப் பழகவேண்டும். பாடல் ஒலிக்கும்போதும் பாடல் இல்லாமல் காட்சி மட்டும் தோன்றும்போதும் பாடல் வரிகள் எழுத்து வடிவில் தோன்றுகின்றன. தமிழ் எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு உதவும் நோக்கில் இவ்வாறு ஆங்கில வரிவடிவிலும் தரப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. மொத்தத்தில் பாடல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விதமும் இசையும் பாடல்களை அறிமுகம் செய்யும் முறையும் சிறப்பாக உள்ளன. ஆயினும் எளிதாகக் களையத்தக்க குறைகளும் வட்டில் உள்ளன.

வட்டின் உறையில் வட்டில் ஒன்பது பாடல்கள் இருப்பதாகப் பட்டியல் உள்ளது. ஆனால் உண்மையில் பத்துப் பாடல்கள் உள்ளன. எங்கள் பூனை எனும் ஒன்பதாவது பாடல் மேல் உறையில் குறிக்கப்படவில்லை. உறையில் இவ்வட்டு சிறுவர்களுக்கானது எனக் குறிப்பிடப் படாவிட்டாலும் அறிமுகத்தில் சிறுவர்களையே விளித்துப் பேசப்படுகிறது. அப்படியிருக்க முதல் பாடல் பல்கலைக்கழகப் பட்டம் பெற்று வழக்குரைஞரான பெண் தன் குழந்தைப் பருவத்தைப் பற்றிப் பாடுவதாக இருப்பது ஏன் என்று தெரியவில்லை. இதுவும் சிறுவனோ சிறுமியோ பாடும் பாடலாக இருந்திருந்தால் சிறப்பாக இருக்கும். ஆறாம் பாடலுக்கான காட்சிகளில் சூரியன், அம்புலி, மேகம் எனப் பாடலில் வரும்போதெல்லாம் அவை காட்டப் படுகின்றன. ஆனால் விண்மீன் கூட்டம் என வரும்போது மட்டும் வெறும் வானம் காட்டப் படுகிறது. வானில் விண்மீன் எதுவும் இல்லை.

தமிழ் வாசிக்கத் தெரியாதவர்களுக்கு உதவும் வகையில் ரோமன் வரிவடிவிலும் பாடல் கொடுக்கப்பட்டுள்ளதாக ஏற்கெனவே குறிப்பிட்டோம். இதில் சீர்மை இல்லாததுடன் கொடுக்கப்பட்டுள்ள நோக்கத்தையே சிதைப்பதாகவும் உள்ளது. ஒரே சொல் இரண்டு வித மாகப் பல இடங்களில் எழுதப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் இதையாவது தவிர்த்திருக்கலாம். ஒவ்வொரு பாடலுக்கும் குரலோடு ஒரு முறையும் குரல் இன்றி ஒரு முறையும் என இரண்டு முறை பாடல் வரிகள் தோன்றுகின்றன. பாடல் வரிகள் திரும்பத் திரும்ப வருவதும் சில பாடல்களில் நிகழ்கிறது. இவ்வாறு சில வரிகள் பல முறை தோன்றுகின்றன. இவற்றில்தான் ஒரே சொல் இரண்டு விதமாக எழுதப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக முதல் பாடலில் செய்தவர் என்பது seithavar, cheithavar என இரண்டு விதமாகவும் பெய்தவர் peithavar, paithavar என இரண்டு விதமாகவும் எழுதப்பட்டுள்ளன. இரண்டாம் பாடலில் அழகு என்பது alagu, azhagu எனவும் முகத்திலே என்பது mugattile, mugathile எனவும் காதுகள் என்பது kaathugal, kaadugal எனவும் எழுதப்பட்டுள்ளன.

தமிழ் நெடில் எழுத்திற்குச் சில இடங்களில் ஓர் ஆங்கில எழுத்தும் வேறு சில இடங்களில் இரண்டு ஆங்கில எழுத்துகளும் எழுதப்பட்டுள்ளன.

(எ.டு)

கா	kathidum	kaathugal
	காத்திடும்	காதுகள்
லா	melai	kaanalaam
	மேலாய்	காணலாம்
பா	pappa	paadam
	பாப்பா	பாடம்

இதே போல் வெவ்வேறு சொற்களில் வெவ்வேறு விதமாக ஒரே தமிழ் எழுத்துக்கு இணை யாக ரோமன் எழுத்து எழுதப்பட்டுள்ளது.

(எ.டு)

பூ	pookkal	puvame	
	பூக்கள்	பூவாமே	
சி	cinna	sirikkum	kaatchi
	சின்ன	சிரிக்கும்	காட்சி
று	kattru	petru	
	கற்று	பெற்று	

இரண்டு வெவ்வேறு தமிழ் எழுத்துகள் ரோமன் வடிவில் ஒரே மாதிரி எழுதப்பட்டுள்ளன.

ஊ	ookkum
	ஊக்கம்
ஓ	ooyvum
	ஓய்வும்

இதே போல் ஒரே வகையான எழுத்துகள் இரண்டு விதமாக எழுதப்பட்டுள்ளன.

க்	காணக்	kaanak
ச்	பேசச்	pesaic
	ஆடச்	Aadaic

பெரும்பாலான இடங்களில் த, th என்றும் ட, d என்றும் குறிக்கப்பட்டாலும் சில இடங்களில் வேறு விதமாகவும் வந்துள்ளன.

(எ.டு)

பாதுகாக்கும்	paadu kaakum
தந்து	tantu

2. கதை வட்டுகள்

மொழி கற்பிப்பதற்குக் கதைகள் மிகவும் பயன்படக்கூடியவை. கதைகள் மொழி கற்போரின் கற்றல் ஈடுபாட்டைத் தக்கவைத்துக்கொள்ளவும் மொழித் திறன்களை வளர்க்கவும் கூடியவை. கதைகளால் கேட்டல் திறன் வளர்வதோடு சொற்களஞ்சியம் பெருகும். புதிய புதிய வாக்கிய அமைப்புகளையும் கதைகள் வழியாக மாணவர்கள் கற்றுக்கொள்ளலாம். கதை வட்டுகளில் பெரும்பாலும் காலங்காலமாகச் சொல்லப்பட்டு வரும் கதைகளே இடம்பெற்றுள்ளன. இவை அனிமேஷன் படங்களுடன் சொல்லப்படுகின்றன. இன்று சந்தையில் கிடைக்கின்ற கதை வட்டுகளுள் (இணைப்பு2) ஒன்று இங்கே மதிப்பிடப்படுகிறது.

2.1 சென்னை நங்கநல்லூரில் உள்ள வனிதா பதிப்பகம் பஞ்சதந்திரக் கதைகள் 3 எனும் பெயரில் கதைகள் கொண்ட வட்டு ஒன்றை வெளியிட்டுள்ளது. 3 என இருப்பதால் இதற்கு முன் பஞ்சதந்திரக் கதைகள் கொண்ட இரண்டு வட்டுகள் வெளிவந்துள்ளதை அறிய முடிகிறது. இந்த வட்டில் பன்னிரண்டு கதைகள் உள்ளன. ஒவ்வொரு கதையும் பின்னணிக் குரலில் ஒருவர் சொல்லக் கதை அனிமேஷனில் ஓடுகிறது. பெரும்பாலான கதைகளை ஒரு பெண் மணி சொல்லியுள்ளார். அவர் கதைகளை வேகமாகச் சொல்லியிருக்கிறார். இதனால் புரிந்து கொள்ளச் சற்றுக் கடினமாக இருக்கிறது. சிறிது மெதுவாகச் சொல்லியிருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும். மேலும் பல இடங்களில் கதையில் ஒரு நிகழ்ச்சி விவரிக்கப்படும்போது அது காட்சியாகத் தோன்றாமல் பிறகு தோன்றுகிறது. அதாவது குரலும் காட்சியும் ஒருங்கிணைந்து

போகவில்லை. மேலும் கதையை ஒருவரே சொல்வதற்குப் பதிலாகக் கதையில் வரும் பாத்தி ரங்கள் பேசும்போது அவற்றிற்குச் சிலரும் கதை சொல்ல ஒருவரும் குரல் கொடுத்திருந்தால் கேட்பதற்குச் சுவையாய் இருந்திருக்கும். சில கதைகள் முடிந்தவுடன் அக்கதைகளில் உள்ள நீதி என்ன என்று ஒருவர் சொல்கிறார். அல்லது அவர் கேட்கச் சில குழந்தைகள் பதில் சொல்கிறார்கள். ஆனால் வேறு சில கதைகளில் இவ்வாறு ஏதும் இல்லை. இதற்குக் காரணம் என்ன எனத் தெரியவில்லை. செலவு அதிகரிக்கக்கூடாது எனும் நோக்கில் அனிமேஷன் செய்யப்பட்டிருக்கிறது இவ்வட்டில். இதில் தவறில்லை. ஆனால் பல்லூடகம் (multimedia) என்ற நிலையிலிருந்து கேள்வி ஊடகம் (audio media) என்ற நிலைக்குப் போய்விடக்கூடாது. ஒரு கதையில் சிங்கம் ஆட்டை நன்றாகச் சாப்பிட்ட பிறகும் ஆடு அப்படியே இருக்கிறது, கொஞ்சம்கூட அதன் உடல்பகுதிகள் குறையவில்லை. எனவே அனி மேஷனில் இன்னும் சிறிது மேம்பாடு தேவை. வட்டில் ஆட்டு மந்தை என்பது ஆடு மந்தை எனச் சொல்லப் பட்டுள்ளது. இது போன்ற தவறுகள் தவிர்க்கப்படவேண்டும்.

3. பிற வட்டுகள்

கதை, கவிதை போன்று குறிப்பிட்ட ஒரு வகை மட்டும் இடம்பெறாமல் பல வகையான பாடங்களையும் பயிற்சிகளையும் கொண்டு தமிழ் மொழியை ஓரளவு கற்றுக்கொடுக்க உருவாக்கப்பட்டவை இவ்வகை வட்டுகள். தமிழில் கேட்டல், படித்தல் திறன்களையும் தமிழ் மொழியமைப்பில் வல்லமையையும் வளர்க்கவும் சொற்களஞ்சியத்தையும் இலக்கண இலக்கிய அறிவையும் வளர்க்கவும் இவ்வகை வட்டுகளால் இயலும். இவ்வகையான நான்கு வட்டுகள் இங்கே மதிப்பிடப்படுகின்றன.

3.1 Star Dot Star நிறுவனத்தின் குறுவட்டு 'அரிச்சுவடி'. அரிச்சுவடி என்ற பெயரைப் பார்த்தால் இது எழுத்துகளைக் கற்பிப்பதற்கான வட்டு எனத் தோன்றும். ஆனால் இதில் எழுத்துகள் மட்டும் இல்லை, காய்கள், கனிகள் போன்ற வேறு சிலவும் உள்ளன. முதல் வகுப் புத் தமிழ்ப் பாடநூலை மனத்தில் வைத்துத் தயாரிக்கப்பட்டது போல இருக்கிறது. இவ்வட் டில் அ, ஆ வரிசை அறிதல், மெய்யெழுத்து அறிதல், அடுக்குத் தொடர், குழுவில் சேராத சொல், ஒலிகள், காய்கள், பழங்கள், சுவைகள், நிறங்கள் ஆகிய ஒன்பது பகுதிகள் உள்ளன. அ, ஆ வரிசை அறிதல் எனும் முதல் பகுதியில் ஒவ்வொரு உயிரெழுத்திற்கும் அந்த உயி ரெழுத்து இடம்பெறும் சில சொற்களும் அச்சொற்கள் குறிக்கும் பாடங்களும் உள்ளன. இந்தச் சொல் குறித்த பாட்டோ, சிரிப்புத் துணுக்கோ, சிறிய விளக்கமோ கூடுதலாக இடம் பெற்றுள்ளது. இந்தப் பகுதியின் நோக்கம் என்ன என்பது புரியவில்லை. அ, ஆ வரிசை அறிதல் என்ற தலைப்பைக் கொண்டு அதுதான் நோக்கம் எனக் கொள்வதா, இல்லை உயிரெழுத்துகள் இடம்பெறும் சொற்களையும் அவற்றின் படம், விளக்கம் ஆகியவற்றையும் கொண்டு சொற்களஞ்சியம் பெருக்குவதே நோக்கம் எனக் கொள்வதா எனத் தெரியவில்லை. வரிசை அறியச் செய்தல் நோக்கம் என்றால் இந்தப் பகுதி அமைந்திருக்கும் முறையால் அப் பயன் ஏற்பட வாய்ப்பில்லை. 'அம்மா இங்கே வா வா' போன்ற அகர வரிசைப் பாடலோ வரிசைப்படுத்துதல் போன்ற பயிற்சியோ பயன் தரும். இவ்வட்டில் உள்ள முறையால் பயன் கிடைக்காது.

இரண்டாம் பகுதி மெய்யெழுத்து அறிதல். இதில் மெய்யெழுத்துகள் தனியாக ஒலித்துக் காட்டப்படுவதுடன் அவை ஒவ்வொன்றும் இடம்பெறும் சொற்களும் ஒலித்துக் காட்டப்படு கின்றன. இங்கே குறைந்தபட்சம் வரிவடிவமும் ஒலிவடிவமும் இணைத்துக் காட்டப்பட்டுள் ளன. உயிரெழுத்துகளுக்கும் மெய்யெழுத்துகளுக்கும் இடம் தந்துள்ள இந்த வட்டில் உயிர் மெய்யெழுத்துகளுக்கு இடம் தரவில்லை. மேலும் உயிரெழுத்துகளுக்கு ஒரு மாதிரியும் மெய் யெழுத்துகளுக்கு இன்னொரு மாதிரியும் செய்முறை அமைந்துள்ளது. இதற்கான காரணம் சொல்லப்படவில்லை. புரிந்துகொள்ளவும் இயலவில்லை. ஏற்கெனவே எழுத்துகளைக் கற்ற வர்களுக்கு இந்த வட்டு எனில் அவர்களுக்கு இருவகை எழுத்துகளையும் அறிமுகப்படுத்தி மேலும் பயிற்சி செய்ய வாய்ப்புக் கொடுத்திருக்கவேண்டும். புதிதாகக் கற்பவர்களுக்கு என்றால் முற்றிலும் மாறுபட்ட முறையை இருவகை எழுத்துகளுக்குமே கையாண்டிருக்க வேண்டும்.

மூன்றாம் பகுதி அடுக்குத் தொடர். அடுக்குத் தொடர்கள் சில இப்பகுதியில் வாக்கியத்தில் அமைத்துக் காட்டப்பட்டுள்ளன. அவ்வாக்கியங்கள் ஒலி வடிவிலும் இடம்பெற்றுள்ளன. ஆனால் சில அடுக்குத் தொடர்களுக்கு இரண்டும் ஒரே மாதிரி இருக்க சிலவற்றிற்கு எழுத்து வடிவம் ஒன்றாகவும் ஒலிவடிவில் வேறாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக அவரக்காய் கொத்துக் கொத்தாய் காய்க்கும் என எழுத்திலும் எங்க வீட்டுத் தோட்டத்துல அவரக்காய் கொத்துக் கொத்தாய் காச்சது என ஒலி வடிவிலும் உள்ளன. இவ்வாறு சில மட்டும் வேறு பட்டு அமைவது ஏன் எனத் தெரியவில்லை.

நான்காம் பகுதி குழுவில் சேராத சொல். மூன்று நான்கு சொற்கள் படங்களுடன் உள்ளன. அவற்றுள் வேறுபட்ட சொல்லைக் கண்டுபிடிக்கவேண்டும். சொல்லை வாசிக்காமலேயே படத்தைக் கொண்டே இப்பயிற்சியைச் செய்ய முடியும். ஐந்தாம் பகுதி ஒலிகள். புலி, முயல், நாய், சுண்டெலி போன்ற விலங்குகளின் படமும் அவை குறித்த பாடல்களும் இப்பகுதியில் உள்ளன. ஒலிகள் என ஏன் இப்பகுதிக்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள் எனத் தெரிய வில்லை. விலங்குகள் எழுப்பும் ஒலிகளைக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்த எண்ணியிருக்க லாம். ஆனால் இப்பகுதி அவ்வாறு அமையவில்லை. எனவே விலங்குகள் என்ற தலைப்பி லேயே இப்பகுதி அமைந்திருந்தால் பொருத்தமாக இருக்கும். ஆறாவது பகுதி காய்கள். இதில் பட்டியலில் உள்ள காய்களுள் ஒன்றைச் சுட்டினால் படத்துடன் பாடலோ விவரணையோ இடம்பெறுகிறது. பூசணிக்காய் குறித்த பாடலில் பரங்கிக்காய் என வருகிறது. இதனால் படத்தில் உள்ளது பூசணிக்காயா பரங்கிக்காயா எனும் குழப்பம் ஏற்படுகிறது. ஆறாம் பகுதி யைத் தொடர்ந்து பழங்கள், நிறங்கள், பகுதிகளில் எல்லாம் பாடல்களாகவும் சுவைகள் பகுதியில் துணுக்குகளாகவும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. சுவைகள் பகுதியில் 'பாகற்க்காய்' எனப் பிழையாக எழுதப்பட்டுள்ளது.

3.2 iTutor India நிறுவனத்தின் வெளியீடு தமிழ் கற்பீர் குறுவட்டு. இதில் தமிழ் எழுத்துகள், திருக்குறள், ஆத்திசூடி, எழுத்துப் பயிற்சி, விளையாட்டு என ஐந்து பகுதிகள் உள்ளன. முதல் பகுதியில் தமிழ் எழுத்துகள் அறிமுகம் செய்யப்படுகின்றன. எழுத்தும் அதற்குறிய ஒலிப்பும் உள்ளன. குறிப்பிட்ட எழுத்து இடம்பெறும் சொல்லும் உள்ளது. இவ்வாறு ஒவ்வொரு எழுத்துக்கும் பல எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. ஒவ்வொரு எழுத்தும் குறிலா நெடிலா எனவும் உயிர் மெய்யெழுத்துகள் வல்லினமா, மெல்லினமா, இடையினமா எனவும் குறிக்கப் பட்டுள்ளன. இரண்டாம் பகுதி திருக்குறள். இதில் குறள் எழுத்தில் தோன்ற அதன் ஒலி வடிவம் குரலில் வெளிப்படுகிறது. ஆனால் குரல் வேகமாக ஒலிக்க எழுத்து வடிவமோ மெது வாகத் தோன்றுகிறது. பொருள் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அதற்குறிய இடத்தில் சுட்டப் பொருள் தமிழிலும் ஆங்கிலத்திலும் தோன்றுகிறது. மூன்றாம் பகுதி ஆத்திசூடி. இதில் ஔவையாரின் ஆத்திசூடி எழுத்திலும் குரலிலும் வெளிப்படுகிறது. ரோமன் எழுத் திலும் ஆத்திசூடி கொடுக்கப்பட்டுள்ளது. திருக்குறள் இவ்வாறு கொடுக்கப்படாதபோது ஆத்திசூடி மட்டும் ரோமன் எழுத்தில் கொடுக்கப்பட்டுள்ளதற்குக் காரணம் தெரியவில்லை. திருக்குறளுக்குப் போன்று இங்கும் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் கொடுக்கப்பட்டுள்ள பொருள் குழந்தைகளுக்குக் கடினமாக இருக்கும். அறம் செய விரும்பு என்பதற்கு ஈகை செய்திட ஆசைப்படு எனப் பொருள் தரப்பட்டுள்ளது. ஈகைக்கு யார் குழந்தைகளுக்குப் பொருள் சொல்வது? அடுத்து எழும் கேள்வி ஆத்திசூடிக்கும் திருக்குறளுக் கும் ஏன் ஆங்கிலத்தில் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது என்பது. இந்த வட்டு நிச்சயமாகத் தமிழ் தெரியாதவர்களுக்கு உரியது இல்லை. அப்படியிருக்க ஆங்கிலத்தில் பொருள் ஏன்? நான்காம் பகுதி எழுத்துப் பயிற்சி இதில் எழுத்துகளின் எழுதுமுறை அம்புக்குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளது. கணினியின் சுட்டியை இயக்கி அவற்றின் மீது வரியொற்றி எழுத வேண்டும். இதனால் பெரிதும் பயன் இல்லை. ஏனென்றால் கையால் எழுதும் அசைவும் சுட்டியால் வரையும் அசைவும் வெவ்வேறானவை. இதை விடக் கணினித் திரையைப் பார்த் துத் தாளில் எழுதிப் பழகச் சொல்லியிருக்கலாம். இப்பகுதியில் உயிர்மெய்யெழுத்துகளைச் சிறப்பெழுத்துகள் என்ற பெயரில் தந்துள்ளார்கள். இது ஏன் எனத் தெரியவில்லை. உயி ரெழுத்துகள், மெய்யெழுத்துகள் எனும் சொற்களைப் பயன்படுத்திவிட்டு உயிர்மெய்யெழுத்து கள் எனச் சொல்வதில் என்ன தயக்கம்? இங்கு க, ங, ச, ஞ..... ஆகியவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு அவற்றுடன் உயிர் எழுத்துகளின் துணை வடிவங்களைச் சேர்த்து கி, கு,

கெ, போன்றவற்றை வரைய வழிசெய்யப்பட்டுள்ளது. இதில் எகர, ஏகார துணை வடிவங் களைக் கற்பிக்கும்போது மட்டும் தவறாக எழுத்துகள் இடம்பெற்றுள்ளன. அதாவது மற்றவற் றில் அடிப்படை வடிவங்கள் அப்படியே இருக்கத் துணை வடிவங்கள் வரையவேண்டியிருக் கிறது. ஆனால் இவற்றில் மட்டும் துணை வடிவங்கள் முழுமையாக இருக்க அடிப்படை வடிவங்களை வரையவேண்டியதாக உள்ளது. ஐந்தாவது பகுதி விளையாட்டு. இதில் உள்ள விளையாட்டுகளுள் சில தமிழ் மொழி தொடர்பானவை அல்ல. அவை பொதுவானவை. ஒரு விளையாட்டில் வரிகுதிரை (வரிக்குதிரை), ஒட்டக சிவிங்கி (ஒட்டகச்சிவிங்கி) என ஒற்று மிகாமல் பிழையாக எழுதப்பட்ட சொற்கள் உள்ளன. விளையாட்டுகளை விளையாடப் போதுமான விவரங்கள் வட்டில் இல்லை. இதனால் அவற்றைப் புரிந்துகொண்டு விளை யாடச் சிரமப்படவேண்டியுள்ளது.

3.3 சிங்கப்பூரிலுள்ள iT21 நிறுவனம் சிங்கப்பூர் கல்வித் துறையுடன் இணைந்து தயாரித்து வெளியிட்டுள்ளது தமிழ் மொழிக் கணினி வட்டு. எமக்குக் கிடைத்த மாதிரி வட்டில் மூன்று வகுப்புகளுக்கு உரிய பாடங்கள் சிறிது சிறிது கொடுக்கப்பட்டுள்ளன. அரும்புக்கு விருந்து 1 எனும் தலைப்பில் உள்ளது தொடக்கநிலை முதலாம் வகுப்புக்கு உரியது. அரும்புக்கு விருந்து 2 எனும் தலைப்பில் உள்ளது தொடக்கநிலை இரண்டாம் வகுப்புக்கு உரியது. இவற்றில் ஐந்து பகுதிகள் உள்ளன. கதை, வாசிப்புப் பனுவல், நடவடிக்கை, பாடல், விளையாட்டு என்பன அவை. இந்த ஐந்து பகுதிகளில் ஏதாவது ஒரு பகுதியில் உள்ள செயல்பாடுகளுள் ஒன்றிரண்டைச் செய்து முடித்தபின் அடுத்த பகுதிக்குப் போகவேண்டுமானால் முடிய வில்லை. அதிலிருந்து வெளிவந்தால் ஐந்து பகுதிகள் காணப்படும் இடைமுகம் தெரிவ தில்லை. மீண்டும் முதலில் உள்ள மூன்று வகுப்புகளைக் குறிக்கும் இடைமுகமே தோன்று கிறது. அதில் ஒன்றைச் சுட்டியே மீண்டும் அதன் பகுதிகள் உள்ள இடைமுகத்திற்குப் போக வேண்டியுள்ளது. ஒரு வேளை முழுமையான வட்டில் இந்தக் குறை இல்லாமல் இருக்கலாம். மேலும் இவ்வட்டில் பல இடங்களில் குரல் புரிந்துகொள்ள முடியாத வகையில் பதிவாகியுள் ளது. பின்னணி இசையும் எப்பொழுதும் தூக்கலாகவே இருப்பதால் பனுவல்களை வாசிக்கும் குரல் தெளிவாகக் கேட்க இயலாவண்ணம் இருப்பதோடு கவனச் சிதைவும் ஏற்படுகிறது.

உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை கதை, வாசிப்புப் பனுவல், பாடல் மூன்றிற்கும் பெரிய வேறுபாடு இல்லை. இவற்றின் எழுத்து வடிவம் திரையில் தோன்ற ஒளி வடிவம் குரலில் வெளிப்படுகிறது. மாணவர்களுக்கு வாசிப்புப் பயிற்சியாகவோ கேட்டல் பயிற்சியாகவோ இவை உதவும். இவற்றை வாசிக்க இயலாத மாணவர்கள் கேட்டு மகிழலாம். அரும்புக்கு விருந்து 1—ல் 'தாவித் தாவி ஓடு' நடவடிக்கையில் படத்தையும் அதன்கீழ் ஓழிரு வாக்கியங் களையும் கொடுத்து அவ்வாக்கியங்களில் உள்ள கோடிட்ட இடங்களை நிரப்பச் சொல்லி யுள்ளது. இதுவும் கூட வாசித்தல் பயிற்சிதான். இதே போல் அரும்புக்கு விருந்து 2—ல் உள்ள ரயில் பெட்டிகளை இணைக்கும் பயிற்சியிலும் ஒரு கதையின் பகுதிகளை வாசித்து ஒழுங் கான வரிசையில் அடுக்கவேண்டியுள்ளது. எனவே வாசித்தல் திறனுக்கே இவற்றில் பெரிதும் இடம் தரப்பட்டுள்ளது என்பது தெளிவு. இதனால் அரும்புக்கு விருந்து 1 முதல் வகுப்பு மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுமா எனும் கேள்வி எழுகிறது. முதல் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கின்ற மாணவர்களால் இந்த அளவு வாசிக்க இயலுமா என்பது ஐயமே. எனவே கதையையும் பாடலையும் கேட்டல் திறன் வளர்க்க என வைத்துக்கொண்டு மற்றவற்றை வாசித்தல் திறன் வளர்க்க என வைத்துக்கொண்டிருக்கலாம். கேட்டல் திறனுக்கானவற்றில் எழுத்து வடிவத்தையும் வாசித்தல் திறனுக்கானவற்றில் ஒலி வடிவத்தையும் தவிர்த்திருக்க லாம். குறைந்தபட்சம் யாராவது விரும்பினால் மட்டுமே இவை கிடைக்கும்படியாகச் செய்திருக்கலாம்.

வானவில் 1 உயர்நிலைக்கு உரியது. இதில் விளையாட்டு, வாசிப்புப் பனுவல், நடவடிக்கை 1, 2 ஆகியவை உள்ளன. விளையாட்டு, பழமொழிகளுக்கான பயிற்சியாகவும் நடவடிக்கை, 1 அறுவகை இலக்கணத்திற்கான செயல்பாடாகவும் உள்ளன. வாசிப்புப் பனுவலில் பனுவலை வாசித்துவிட்டு வினாவுக்கு விடை தரும் வாய்ப்பு உள்ளது. இப்பகுதி உயர்நிலை மாணவர் களுக்கு என்பதால் பனுவலைப் புரிந்துகொண்டார்களா என்பதைச் சோதித்துக்கொள்ள வினா கொடுத்திருப்பது சிறப்பு என நினைக்க முடியாத வகையில் வினா இருக்கிறது. அதா

வது ஒரு பதிலுக்குரிய வினா அமைப்பதே இங்கு வினாவாக உள்ளது. ஏன், எதனால், எப்படி, எவ்வாறு போன்ற வினாச் சொற்களைக் கோடிட்ட இடங்களில் நிரப்பவேண்டும். இந்தப் பயிற்சி ஏன் வாசிப்புப் பனுவலில் இடம்பெற்றது என்பது தெரியவில்லை. நடவடிக்கை இரண்டு கோடிட்ட இடங்களை நிரப்பவேண்டிய வாக்கியங்களைத் தந்து நிரப்ப வேண்டிய சொல்லில் உள்ள எழுத்துகளை மாற்றித் தந்து அவற்றைச் சரிசெய்து நிரப்பும் வண்ணம் உள்ளது.

(எ—டு)

நண்பர்கள் தவறான பாதையில் செல்லும்போது அவர்களுக்கு

______________________ கூறவேண்டும்.

அ ரை றி வு

இப்பயிற்சியில் வாக்கியம் சொல்லைக் கண்டுபிடிக்க உதவியாக உள்ளது. வாக்கியம் இல்லாமலும் இப்பயிற்சி அமைய முடியும். எப்படியாயினும் இதைத் தொடக்க நிலை வகுப்புகளுக்கே தந்திருக்கலாம். இது உயர்நிலைக்கு எளிது.

வானவில் 1 நடவடிக்கை 2—ல் நாம் தவறான விடையைத் தந்தால் அது ஏன் தவறு எனும் விளக்கமோ சரியான விடையோ நமக்குக் கிடைப்பதில்லை. வானவில் 1 வாசிப்புப் பனுவலில் நாம் தவறான விடையைத் தந்தால் உடனே சரியான விடையைக் கணினி தருகிறது. அரும்புக்கு விருந்து 1—ல் உள்ள 'தாவித் தாவி ஓடு' விளையாட்டில் ஒவ்வொரு முறையும் இரண்டு கோடிட்ட இடங்கள் இருக்கின்றன. இவற்றில் ஒன்றைச் சரியாகவும் ஒன்றைத் தவறாகவும் நிரப்பினாலும் இரண்டையும் தவறாக நிரப்பினாலும் அவை மறைந்துவிடுகின்றன. இதனால் இரண்டும் தவறா ஒன்று மட்டும் தவறா என்பதைக் கண்டு திருத்திக் கொள்ள இயலாமல் போய்விடுகிறது. வானவில் 1—ன் நடவடிக்கை 1—ல் தவறான விடைக்கு ஏன் தவறு எனும் விளக்கம் கிடைக்கிறது. இவ்வாறு வெவ்வேறு செயல்பாடுகளுக்கு வெவ்வேறு நிலைப்பாடு ஏன் என்பது தெரியவில்லை. ஏன் தவறு என விளக்காமைக்கு அவ்வாறு விளக்குவது எல்லா நேரங்களிலும் எளிதல்ல என்பது ஒருவேளை காரணமாக இருக்கலாம். ஆனால் சரியான விடையை மாணவர்கள் தெரிந்துகொள்வது அவசியம் அல்லவா? தேவைப்படுவோர் தேவைப்படும்போது (அவர்கள் விரும்பிய அளவு மீண்டும் மீண்டும் முயற்சி செய்ய வாய்ப்புத் தந்து) சசியான விடையைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு எல்லாச் செயல்பாடுகளிலும் இருக்கவேண்டும். முடிந்தபோதெல்லாம் அவர்கள் செய்தது ஏன் தவறு என்பதும் விளக்கப்படவேண்டும். அப்போதுதான் கற்றல் முழுமையடையும்.

3.4 பெங்களூரில் உள்ள ஆப்பிள்சாஃப்ட் நிறுவனம் வெளியிட்டுள்ள தமிழ் கற்பித்தல் வட்டுகள் செந்தமிழ் 1 A, செந்தமிழ் 1 B என்பன. இவை யாருக்கு எனக் குறிப்பிட்டுச் சொல்லப்படாவிட்டாலும் சிங்கப்பூர் நிறுவனங்களின் முகவரிகள் கொடுக்கப்பட்டுள்ளதாலும் பாடங்களில் சிங்கப்பூரில் உள்ள இடங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளதாலும் சிங்கப்பூர் மாணவர்களை மனத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. எனினும் தமிழ் பேசத் தெரிந்த குழந்தைகள் யாரும் பயன்படுத்தலாம். வட்டு ஒவ்வொன்றிலும் எட்டுப் பாடங்கள் என மொத்தம் பதினாறு பாடங்கள் உள்ளன. ஒவ்வொரு பாடத்திலும் எழுத்து, சொல், வாசித்துப் பழகுவோம், கதை என நான்கு பகுதிகள் உள்ளன. எழுத்து நீங்கலாகப் பிற பகுதிகளில் பயிற்சியும் உள்ளது.

ஒவ்வொரு பாடத்திலும் எழுத்துப் பகுதியில் சில எழுத்துகள் உள்ளன. அவற்றில் ஒன்றைச் சுட்ட அதன் எழுத்து முறை தெரிகிறது. அந்த எழுத்து இடம்பெறும் சொல் ஒன்றும் அதற்கான படமும் அருகில் தெரிகின்றன. சொல் மீதோ படத்தின் மீதோ சுட்டினால் சொல் ஒலிக்கப்படுகிறது. எழுதிக் காட்டப்பட்ட எழுத்தின் மீது சுட்ட எழுத்து ஒலிக்கப்படுகிறது. எழுத்து எழுதும் முறையை மீண்டும் மீண்டும் பார்க்கக் கீழே உள்ள பச்சை விளக்கைச் சுட்டவேண்டும். இவ்வாறு சுட்டி எழுத்து திரும்பத் திரும்ப எழுதிக் காட்டப்படும்போது ஒலிப்பைக் கேட்க முடியவில்லை. 1 B-ல் ஓர் எழுத்தின் ஒலிப்பை அறிய எழுதிக் காட்டப்பட்ட அவ்வெழுத்தின் மீது சுட்டவேண்டியதில்லை. தொடக்கத்தில் எழுத்தின்மீது சுட்டிய

வுடனேயே அது எழுதிக் காட்டப்படுவதுடன் ஒலித்தும் காட்டப்படுகிறது. இது போதாது. எப்போதெல்லாம் எழுத்து எழுதிக் காட்டப்படுகிறதோ அப்போதெல்லாம் ஒலித்துக் காட்டப்படவேண்டும். அப்போதுதான் வரி வடிவமும் ஒலி வடிவமும் மனத்தில் நின்று கற்போர் எழுத்துகளை நன்கு கற்றுக்கொள்ள முடியும். இப்பகுதியில் மீண்டும் மீண்டும் எழுத்து எழுது முறையைப் பார்க்க என்ன செய்யவேண்டும் என்ற விவரம் சொல்லப்படும்போது இங்கே சுட்டவேண்டும் எனச் சொல்லப்படுகிறது. அவ்வாறு சொல்லப்படும்போது குறிப்பிட்ட விளக்கு மின்னவேண்டும். அப்போதுதான் அதை எளிதில் தெரிந்துகொள்ள முடியும். ஆனால் அவ்வாறு விளக்கு மின்னவில்லை.

ஒவ்வொரு பாடத்திலும் சில தமிழ் எழுத்துகள் இடம்பெறுகின்றன. எனவே 16 பாடங்களிலும் சேர்ந்து எல்லாத் தமிழ் எழுத்துகளும் இடம்பெறும் என எதிர்பார்ப்பது இயல்பு. ஆனால் அவ்வாறு இல்லை. முதல் பாடத்தில் ட, ப, ம, ர ஆகியனவும் ட், ப், ம், ர் ஆகியனவும் உள்ளன. இரண்டாம் பாடத்தில் ச, க, த, ந ஆகியனவும் ச், க், த், ந் ஆகியனவும் உள்ளன. மூன்றாம் பாடத்தில் வ, ய, ன, ண ஆகியனவும் ய், ண், ன் ஆகியனவும் உள்ளன. ஐந்தாம் பாடத்தில் ல, ள, ழ, ள் ஆகியனவும் ஆறாம் பாடத்தில் ஞ், ங் ஆகியனவும் உள்ளன. ஆக க, ச, ட, ண, த, ந. ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ண ஆகிய அகர உயிர் மெய்களும் க், ங், ச், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ள், ன் ஆகிய மெய்யெழுத்துகளும் மட்டுமே உள்ளன. அடிப்படை வடிவங்களுள் ங, ஞ, ற ஆகியன இல்லை. ங, ஞ பயன்பாடு குறைவு என்பதால் அவை இடம்பெறாமை தவறில்லை. ஆனால் ற—வை ஏன் அறிமுகம் செய்யவில்லை? இதே போல் மெய்களில் ல், வ், ழ் ஆகியவை ஏன் அறிமுகம் செய்யப்படவில்லை?

உயிரெழுத்துகளை அறிமுகம் செய்யும் பாடத்தில் அந்த உயிரெழுத்துகள் ஏறிவரும் உயிர் மெய்கள் எல்லாவற்றையும் அறிமுகம் செய்யவில்லை. எடுத்துக்காட்டாக நான்காம் பாடத்தில் அ, ஆ அறிமுகம் செய்யப்படும்போது பா, மா, கா, நா, தா மட்டுமே உள்ளன. டா, ரா, சா, வா, யா, னா, ணா ஆகியவை இல்லை. ஏழாம் பாடத்தில் இ, ஈ அறிமுகம் செய்யப்படும்போது சி, டி, ணி, யி, னி ஆகியனவும் கீ, மீ ஆகியனவும் மட்டுமே உள்ளன. இவ்வாறு இதற்குப் பின் உள்ள பாடங்களிலும் பல எழுத்துகள் இல்லை. ஆனால் இல்லாத எழுத்துகள் கொண்ட சொற்கள் தொடர்ந்து வரும் பாடங்களில் இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. இடப் பற்றாக்குறை காரணமாகச் சில எழுத்துகள் மட்டும் அறிமுகம் செய்யப்பட்டிருக்கலாம். குறிப்பிட்ட எழுத்துகள் கொண்ட சொற்களுக்குப் படங்கள் இல்லாமை காரணமாக இருக்கலாம். அல்லாமல் இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்டவை காரணமாக, இருக்கலாம். ஆனால் ஒரு சிறந்த கற்பித்தல் பொருள் அதன் அளவில் முழுமையாக இருக்கவேண்டும். எனவே எல்லா எழுத்துகளையும் தருவதில் சிக்கல் இருப்பின் அதற்கு மாற்று வழி காணப்பட்டு எல்லா எழுத்துகளும் தரப்பட்டிருக்க வேண்டும். இரண்டாம் பாடத்தில் வாக்கியம் வாசிக்கும் பகுதியில் அது பந்தம், அது தந்தம், அது நகம் போன்ற தொடர்கள் உள்ளன. அ, இ, து அறிமுகமாகாத நிலையில் அது, இது வந்துள்ளன. நான்காம் பாடத்தில் என் மாமா எனும் தொடர் உள்ளது. எ ஒன்பதாம் பாடத்தில்தான் உள்ளது. ஐந்தாம் பாடத்தில் ழ—வை அறிமுகப்படுத்த அன்னாசிப் பழம் எனும் சொல் உள்ளது. ஆனால் சி ஏழாம் பாடத்தில்தான் உள்ளது. இவற்றையெல்லாம் எளிதில் தவிர்த்திருக்கலாம்.

எழுத்துகள் அறிமுகத்தைத் தொடர்ந்து ஒவ்வொரு பாடத்திலும் அந்த எழுத்துகள் இடம் பெறும் சொற்களை எழுத்துக்கூட்டிப் படிக்கக் கற்றுத் தரப்படுகிறது. படமும் படம் குறிக்கும் சொல்லுக்குகிய எழுத்துகள் ஒவ்வொன்றாக ஒலிப்புடனும் தோன்றுகின்றன. பிறகு முழுச் சொல்லாக ஒலிக்கப்படுகிறது. இவ்வாறு பல சொற்கள் வந்த பிறகு பயிற்சி ஒன்றும் உள்ளது. இதில் படமும் எழுத்துகளும் உள்ளன. சொல் ஒலிக்கப்படுகிறது. ஒலிப்பைக் கேட்டு எழுத்துகளை ஏற்ற வரிசையில் சுட்டிச் சொல்லை அமைக்கவேண்டும். பாடத்தின் மூன்றாம் பகுதி வாசித்துப் பழகுவோம். ஒரு படம் தோன்றுகிறது. அப்படத்தை மையமாகக் கொண்ட தொடர்கள் திரையில் மெதுவாக நகருகின்றன. அவை வாசித்துக் காட்டவும் படுகின்றன. மாணவர்களும் அவற்றைப் படிக்கவேண்டும். எடுத்துக்காட்டாகக் கப்பல் படம் காட்டப் பட்டு இது கப்பல், இது பயணக் கப்பல் எனும் தொடர்கள் வருகின்றன. இப்பகுதியில்

இரண்டு குறைகள் உள்ளன. ஒன்று வாக்கியங்கள் நீண்டதாக இருக்கும்போது அவற்றின் ஒலிவடிவம் விரைவாகவும் வரிவடிவம் மெதுவாகவும் தோன்றுகின்றன. மேலும் மாணவர்கள் வாசிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதால் தொடர்கள் தோன்றியவுடன் மாணவர்கள் வாசிக்கச் சிறிது நேரம் தந்துவிட்டுப் பிறகு வாசித்துக் காட்டப்படலாம். இதனால் மாணவர் கள் வாசித்ததைச் சரிபார்த்துக்கொள்ள இயலும். எனவே சிறிய தொடர்களை முழுமையாக வும் நீண்ட வாக்கியங்களைப் பகுதி பகுதியாகவும் போதுமான அளவு நேரம் தந்து வாசித் துக் காட்டவேண்டும். இரண்டாவது குறை வாக்கியத்தில் அது வரை உள்ள பாடங்களில் இடம்பெறாத எழுத்துகளும் உள்ளன. குறிப்பாக அது, இது எனும் சொற்கள் வந்துள்ளன. இவை இல்லாமலேயே தொடர்கள் அமைந்திருக்கலாம். இப்பகுதிக்குப் பயிற்சியாக ஒரு சொல் ஒலிக்கப்பட்டு அதற்குரிய படத்தைக் கொடுக்கப்பட்டுள்ள சில படங்களுள் சுட்டுவது உள்ளது.

இறுதிப் பகுதியாகக் கதை இடம்பெறுகிறது. சிங்கமும் சுண்டெலியும் போன்ற பழைய கதை களும் சர்க்கஸ் பார்க்கப் போதல் போன்ற நிகழ்ச்சிகளும் கதைப் பகுதியில் உள்ளன. இவை அசைவுப் படங்களுடன் சொல்லப்பட்டுள்ளன. கதை முடிந்தவுடன் பயிற்சியாக அந்தக் கதையில் வரும் முக்கிய நிகழ்ச்சிகள் குறித்த ஆறு படங்களைத் தந்து அவை வரிசைப்படுத் தச் சொல்லப்படுகின்றன. இதனால் பார்த்த கதை நினைவில் உள்ளதா எனச் சோதித்துப் பார்த்துக்கொள்ளவும் இல்லாவிட்டால் நினைவுப்படுத்திக் கொள்ளவும் இயலும்.

இவ்வட்டுகளில் தொடக்கத்தில் வட்டை உருவாக்கியவர்களின் பட்டியல் தோன்றும்போது பொருத்தமான வண்ணங்கள் தேர்ந்தெடுக்கப்படாததால் சில பெயர்களை வாசிக்க முடிய வில்லை. அதாவது எழுத்துகளின் வண்ணமும் பின்னணி வண்ணமும் ஒத்தவையாக உள்ளன. வட்டில் பொது அறிமுகம் ஒன்று இருந்திருந்தால் சிறப்பாக இருக்கும். 16 பாடத் தொகுதிகள் உள்ளன என்பதும் ஒவ்வொரு பகுதியிலும் என்ன இருக்கிறது, அதை எவ்வாறு கையாளவேண்டும் என்பதும் ஆங்காங்கே உள்ளன. ஆனால் இவற்றின் நோக்கம் என்ன? யார் இவ்வட்டுகளைப் பயன்படுத்தலாம் என்பன இல்லை. இவற்றைப் பொது முன்னுரை யாகத் தந்திருக்கவேண்டும்.

இவ்வட்டுகளில் சில குறைகள் இருந்தாலும் எழுத்துகள் அறிமுகம், எழுத்துக் கூட்டிச் சொற் களை வாசித்தல், பல சொற்கள் சேர்ந்த தொடர்களையும் வாக்கியங்களையும் வாசித்தல், பல வாக்கியங்களைக் கொண்ட கதைகளைக் கேட்டல் எனச் சாத்தியமான அளவில் முழுமையாகத் தொடக்கநிலைத் தமிழ் கற்பித்தலை மேற்கொண்டிருக்கின்றன. மேலும் மொழி கற்பித்தல் துறை வல்லுநர்கள் உதவியோடு திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளன. தெளிவான படங்கள், இயல்பான அசைவுகளுடன் (realistic animation) கதைகள், எப்போது வேண்டு மானாலும் எளிதில் எப்பகுதிக்கும் செல்லவும் வெளிவரவும் வசதி, கற்றுக்கொள்வதுடன் பயிற்சி செய்யவும் வாய்ப்பு எனச் சிறப்பான முறையில் இவ்வட்டுகள் உருவாக்கப் பட்டுள்ளன.

இணைப்பு 1

பாடல் வட்டுகள்

1. குழந்தை பாடல்கள், Softview Computers, Chennai.
2. பாடிப் பழகுவோம், வைகறை புரடக்ஷன், கோலாலம்பூர்
3. பாப்பா பாட்டுப் பாடுவோம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை
4. 25 Animal Rhymes - Tamil, Star Dot Star, Chennai.

இணைப்பு 2

கதை வட்டுகள்

1. ஆர்த்தியின் மகிழ்ச்சியூட்டும் கதைகள், Cyber Multimedia

2. பஞ்சதந்திரக் கதைகள் 3, வனிதா பதிப்பகம், சென்னை

3. World Fairy Tales (The Three Little Pigs), Times Learning Systems Pvt. Ltd., Singapore.

இணைப்பு 3

பிற வட்டுகள்

1. அடிப்படைத் தமிழ் — நிலை 1, ஜெயபக்தி, மலேசியா & Tekethlon Sys India Pvt. Ltd.
2. அடிப்படைத் தமிழ் — நிலை 2, ஜெயபக்தி, மலேசியா & Tekethlon Sys India Pvt. Ltd.
3. அரிச்சுவடி, Star Dot Star, Chennai.
4. செந்தமிழ் 1 A, APPLESOFT, Bangalore
5. செந்தமிழ் 1 B, APPLESOFT, Bangalore
6. செந்தமிழ் 4, APPLESOFT, Bangalore
7. தமிழ்க்களம், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, சென்னை.

53

Tholkaappiyam reviewed

Dr. Kodumudi Shanmugan,

Secretary, Tamil Valarchi Kazhagam,
11-B, Second Avenue, Indhira Nagar, Chennai-600020
<Email: kodumudishanmugan@vsnl.net>

The Great Tamil Grammar Tholkaapiam is still very much valid with respect to the Tamil -99 keyboard. This paper tries to appreciate some of the aspects and apply the same to the present day elementary education.

1. எழுத்தெனப் படுப
அகர முதல
னகர இறுவாய முப்பஃதென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே

2. அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன.

The letters are 30 starting from a to na.. Kutriyalugaram, Kutriyaligaram and Aaydham are other three secondary letters represented by three small dots. Then Aaydham was represented only by a small dot and not like the present three dots ஃ.

The Tamil 99 keyboard aptly represent the first suuthiram of Tholkaappiyam. This contains only the thirty letters mentioned in Tholkaappiyam. No other letters other than mey dot, comma and full stop. The letters are generated by phonetic method and hence all the 246 letters are neatly printed.

There is no shift key required to produce Tamil letters. This is a major break through in typewriting. In English, sentence starts with capitals and all proper nouns require caps and hence English cannot compete with Tamil. As it is, any body may choose to dispense with capitals and there is no compulsion to retain capitals in English. I see most of the E-mail letters without capitals without any change in the meaning. This system may be generalized and practiced by all.

ஆ ஈ ஊ ஐ ஏ ள ற ன ட ண ச ஞ

அ இ உ எ க ப ம த ந ய

ஔ ஓ ஒ வ ங ல ர ழ

All 30 letters are arranged as above. Let us compare them with traditional arrangement.

அ இ உ எ ஒ ஐ
ஆ ஈ ஊ ஏ ஓ ஔ

க ச ட ப ற	வல்லினம்
ய ர ல வ ழ ள	இடையினம்
ங ஞ ண ந ம ன	மெல்லினம்

Tholkaappiyar says அ to ன and it is possible only if idayinam comes in between vallinam and mellinam. The present Matrix in primary school is not Tamil based where ழ ள ற ன which are not in Sanskrit are grouped at the end.

15. மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல்

All mey letters have dot over their head. This has to be read along with suuthiram 17.

17. புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுருவாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உருவோடு உருவு திரிந்து யிர்த்தலும்
ஆயீரியல உயிர்த்தலாறே

Mey letters will have top dot. Letter without top dot are basic letters in the agaram row. All other letters will have some distortion. Let us see them as they are.

க் க கா கி கீ கு கூ கெ கே கொ கோ கை கௌ

It is high time to know how the Tamil letters appear in the days of Tholkaappiar, which we shall take up after a few paragraphs.

18. மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே

mey+ uyir= uyirmey. uyirmey acquires the qualities of uyir and not mey.

Only in Tamil 99 keyboard mey is followed by uyir to generate uyirmey. This Phonetic system simply follows English. In other words English is following Tholkaappiyam.

Thiru Kondal Mahadhevan suggested this type of script reforms for Tamil in KONGU SEPTEMBER 1974. க ஒ ண ட அ ல ம அ க ஆ த ஏ வ ன. Nobody cared by then.

Our Computer Engineers have silently accepted this suggestion and implemented giving a great honor to Thiru Kondal Mahadevan.

25. ங ஞ ண ந ம ன என்னும் புள்ளி முன்னர்த்
தத்தம் இசைகள் ஒத்தன நிலையே

30. மெய் நிலை சுட்டின் எல்லா எழுத்தும்
தம்முன் தாம் வரூஉம் ர ழ் அலங்கடையே

After 6 nasal mey characters, their corresponding vallina characters will follow. This formula has been well utilized in Tamil 99 Keyboard. The facility of automatic generation of top dot over nasal characters when followed by corresponding vallinam is a boon.

Out of 18 mey letters, 16 letters leaving ர and ழ all repeat after mey. Here also it is not necessary to put top dot for the mey letter. But this facility is available for all letters. The occurrence of this type is more in Tamil writing and hence we save lot of strain to the pointer finger of the left hand.

Suuthiram 25 and 30 are best utilised here. The difference is very much felt by the users of mechanical typewriters where the top dot is placed in the dead key that too for the little finger of the right hand.

Having taken Tholkaappiyam, let us have a look at the letters of that period.





அ இ உ எ ஒ

ஆ ஈ ஊ ஏ ஓ

க ச ட த ப ற

ங ஞ ண ந ம ன

ய ர ல வ ழ ள

There were only 10 vowels during Tholkaappiyar times. 5 short and 5 long vowels. ஐ and ஔ were not existent then. They were later insertions during recopying year after year. Tamil, Braagirudham, Magadhi, Arta maagati, Pali were many popular languages co-existent all over India by that time. All these Languages had one common script as shown above. Tamil had a few characters specially suite to it. The common script was called Brahmi in the North and Tamil in the South or Tamil Brahmi as some scholars call it. All the above scripts are found around the Rule of ASHOKA the great by B.C.300.

The Sanskrit was developed as a scholarly language with out script for a very long time and the common man is not permitted to use it or even hear it. The First Sanskrit Inscription appears at Girnar in Gujarat State around 285 A.D.

க கி கு கெ கொ

கா கீ கூ கே கோ

Let us have a look at the modifications taken place during the generation of consonants. க basic letter with out any change representing அ row.

கா கி கீ கெ கே கை கொ கோ கௌ

Please see the figures. The above letters have changing factors at the top. They have become separate glyphs in due course of time.

கு கூ

These two rows only do not have a separate glyph. Please see the above figures again. They have their changing factor attached at the bottom of the letters. While writing continuously in palm leaves they became extensions of the main letter and hence became the part of the main letter. Hence for these two letters alone 36 figures are required.

கு சு டு து பு று

கூ சூ டூ தூ பூ றூ

ஙு ஞு ணு நு மு னு

ஙூ ஞூ ணூ நூ மூ னூ

யு ரு லு வு ழு ளு

யூ ரூ லூ வூ ழூ ளூ

The basic letters are uyir 12 + mey 18, total being 30. The glyphs are 10.

ா ி ீ ெ ே ை ெ—ள plus 2 if we choose to take two glyphs for the two rows referred above.

The GOTN calendar represents two months as ஜூன் ஜூலை. These are English words written in Tamil-grantha script. They are taught only in the first standard textbook of GOTN. These symbols are not found in any other language including Sanskrit.

Who is to approve this? Definitely GOTN.

Then what is our role? Simply preparing the mind for the change.

When is this proposal likely to be approved?

Department of Tamil Development and Culture of GOTN have constituted a High Level committee as TAMIL VALARCHI MANRAM with Honorable Chief Minister of GOTN as Chairperson and Honorable Minister for Education as Vice-Chairman. During the last tenure of the present Chief Minister, She had appointed a committee to go into the details of the reforms required for the Tamil script for the better dissemination of knowledge through Tamil. The committee has submitted its report long back. The decision of the GOTN is awaited.

What is the relevance of this paper at this time?

It is Education. So far in Tamilnadu a student can pass all classes and courses without having a chance to see the Tamil script at all with firm decision to be a local illiterate and not a much useful citizen to Tamilnadu. To change this situation, the GOTN has recently passed an order introducing Tamil in all schools, as subject in third part with the name SCIENCE TAMIL.

With the radical change in the உ ஊ rows, the total number of script gets reduced to 30 plus 10 glyphs in place of 76. This is a major break through in elementary education the learners will find it easy to learn the script in a shorter time.

Two important questions arise-

How about the old generation trained with the old script?

What will happen to the present books in old script?

The present generation may be allowed to continue to use the present script for their handwriting till their life. New script will be used for typing and printing their manuscript.

The old books may find their reprints soon. Till then, chart showing the 36 changed characters with equivalents may be pasted in the old books for the new generation to follow. There will not absolutely be any problem in the change over.

The major setback for the change over will be the mindset of the highly educated people. Ordinarily educated people and students will welcome the change. Once I gave a script with modified letters to a friend of mine, who was a poet, writer and a printer.

He found it very difficult to start reading. Immediately I asked his son who was in his eighth standard. To read. He has done the job very quickly. You too may experience this soon.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க

செய்யாமை யானும் கெடும்

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்

குத்தொக்க சீர்த்த விடத்து.

The TI 2000 Singapore Conference had included this item in the final resolutions of the conference. This TI 2003 Conference may also recommend this proposal to the GOTN in a stronger note.

54

தமிழ் எழுத்துச் சீரமைப்பு

டாக்டர் வா.செ. குழந்தைசாமி

நாம் வாழ்வது கல்வி யுகம். வரலாறு காணாத அளவிற்கு ஒரு நாட்டின் அரசியல், சமுதாய, பொருளாதார வாழ்வில் மைய இடத்தைக் கல்வி வகிக்கிறது. அனைவரும் கல்வியறிவு (Universal Education) பெறுவது இன்று உலக அளவில் இன்றியமையாத தேவையாகி விட்டது.

கல்வி கற்பதற்கு மொழியறிவு தேவை. ஒரு மொழியைக் கற்க முதல் படி அதன் எழுத்து களைக் கற்பதுதான். ஒரு மொழியின் வரிவடிவம் (எழுத்துகள்) எளிதாக இருந்தால் அது எழுத்தறிவு பெறுவதை எளிதாக்குகிறது. எழுத்துகள் எண்ணிக்கையில் மிகுதியாகவும் வடிவத் தில் சிக்கலானவையாகவும் இருந்தால் கற்பது கடினமாகிறது. கற்பவர்களை மலைக்க வைக் கிறது. தமிழ் எழுத்துகள் பின்வருமாறு:

I. முதன்மை எழுத்துகள்

i. உயிர் எழுத்துகள்

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ — 12

ii. மெய்யெழுத்துகள்

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் — 18

iii. ஆய்த எழுத்து

ஃ — 1

இந்த 31 எழுத்துகள்தான் அடிப்படை. இவற்றைக் கற்க, குழந்தைகள் மெய்யெழுத்தின் புள்ளியையும் தனியாகச் சேர்த்து 31 குறியீடுகளைக் கற்கவேண்டும். ('ஔ' என்னும் உயிரெழுத்தில் புதிய குறியீடு எதுவும் இல்லை)

II. சார்பெழுத்துகள்

அடுத்தபடியாக உயிர்மெய் எழுத்துகள்; இவை உயிரும் மெய்யும் சேர்ந்து வருபவை. (சான்று: க் + அ = க). இவ்வாறே 18 மெய்யுடன் 12 உயிர் சேர வருபவை 216 உயிர்மெய் எழுத்துகளாகும் (18X12=216). இன்று இந்த 216 எழுத்துகளை எழுதுவதற்கு 76 குறியீடுகள் தேவைப்படுகின்றன. விவரம் பின்வருமாறு (அட்டவணை—1):

க ங.................ன வரை 18 குறியீடுகள் முன்பே கொடுத்துள்ள மெய்யெழுத்துகளில் இருக் கின்றன. தலையில் ஒரு புள்ளிதான் வேறுபாடு. மீதமுள்ள 198 எழுத்துகட்கு முன்பே கூறியது போல 76 குறியீடுகள் தேவைப்படுகின்றன (அட்டவணை — 1). உயிர் எழுத்துகள் உயிர்மெய் எழுத்துகள். ஆய்தம் அனைத்திற்கும் சேர்த்து மொத்தம் 107 (31 + 76) குறியீடுகள் கற்கப்பட வேண்டும்.

அட்டவணை-1 உயிர்மெய் எழுத்துகள்

க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ	
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ	
.	.	.	.	.	.	.	.	.	.	.	.	
.	.	.	.	.	.	.	.	.	.	.	.	
ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ	மொத்தக்
	ா	18	18	18	18	ெ	ே	ை	-	-	-	குறியீடுகள்
-	1'(18)''		72'(72)''						3'(108)''			76

* குறியீடுகள் எண்ணிக்கை.

** குறியீட்டைப் பயன்படுத்தி எழுதப்படும் எழுத்துகளின் எண்ணிக்கை

இவற்றுள் கா, கெ, கே, கை, கொ, கோ, கௌ வரிசைகட்குத் தேவைப்படுபவை ா, ெ, ே, ை ஆகிய நான்கு குறியீடுகள்தான். ஆனால் கி, ஙி,....., கீ, ஙீ......., கு, ஙு....., கூ, ஙூ......., வரிசைகட்கு ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு தனிக்குறியீடு தேவைப்படுகிறது. எனவே 72 எழுத்துகட்கும் 72 குறியீடுகள் தேவைப்படுகின்றன. இவற்றுள் குறிப்பாக:

கு ஙு சு ஞு டு ணு து நு பு மு யு ரு
லு வு ழு ளு று னு

கூ ஙூ சூ ஞூ டூ ணூ தூ நூ பூ மூ யூ ரூ
லூ வூ ழூ ளூ றூ னூ

ஆகிய 36 எழுத்துகளும் ஒன்றுக்கொன்று எவ்விதத் தொடர்பும் இல்லாமல் இருப்பதால் இவற்றைக் கற்பதற்குக் குழந்தைகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். நீண்ட நாட்கள் குழந்தைகட்குக் கற்பித்த ஆசிரியர்கள் children get frustrated when they come to these 36 vowel-consonants என்று கூறுகின்றனர். ஆங்கிலத்திற்கு மொத்தமே 26 எழுத்துகள்தான். பொதுவாக மத்திய ஆசிய மொழிகள், ஐரோப்பிய மொழிகள் ஆகியவற்றில் மொத்தத்தில் 30க்கு ஒரு சில எழுத்துகள் கூடுதலாகவோ குறைவாகவோதான் உள்ளன. நாம் 12 செங்குத்து வரிசைகள் கொண்ட உயிர்மெய் எழுத்துகளில் 4 செங்குத்து வரிசைகட்கு மட்டும் 72 தனித்தனியான எழுத்துகளைக் கற்கவேண்டியிருக்கிறது. மீதமுள்ள 8 வரிசைகளில் கா, கெ, கே, கை, கொ, கோ, கௌ வரிசைகட்கு வலது பக்கத்திலோ இடது பக்கத்திலோ குறியீடுகளைப் பயன்படுத்துவது போல இந்த நான்கு வரிசைகட்கும் பயன்படுத்தினால் நான்கு குறியீடுகள் போதும். இந்தக் குறியீடுகளை அறிஞர்கள் மூலம் வடிவமைக்கலாம். தற்போது சான்றுக்காக அட்டவணை 2ல் கொடுக்கப்பட்டுள்ளது போன்று நான்கு குறியீடுகளைப் பயன்படுத்தலாம்.

அட்டவணை 2ல் கொடுத்துள்ள குறியீடுகளைப் பயன்படுத்தினால் உயிர்மெய் இகர, ஈகார, உகர, ஊகார வரிசைகள் அட்டவணை 3ல் கண்டது போல் அமையும். 72 எழுத்து கட்கும் நான்கு குறியீடுகளைக் கற்றால் போதும்.

அட்டவணை - 2 புதிய குறியீடுகள்

இகரம்	ᒉ	உகரம்	ᑯ
ஈகாரம்	ᑢ	ஊகாரம்	ᖳ

அட்டவணை-3 சீரமைத்த எழுத்து வடிவம்

கி	கᒉ	கீ	கᑢ	கு	கᑯ	கூ	கᖳ
ஙி	ஙᒉ	ஙீ	ஙᑢ	ஙு	ஙᑯ	ஙூ	ஙᖳ
சி	சᒉ	சீ	சᑢ	சு	சᑯ	சூ	சᖳ
-	-	-	-	-	-	-	-
-	-	-	-	-	-	-	-
-	-	-	-	-	-	-	-
-	-	-	-	-	-	-	-
-	-	-	-	-	-	-	-
-	-	-	-	-	-	-	-
னி	னᒉ	னீ	னᑢ	னு	னᑯ	னூ	னᖳ

இந்த எளிய மாற்றங்களை ஏற்றுக்கொள்வோமானால் தமிழ் கற்க 39 குறியீடுகள் மட்டுமே தேவைப்படும். அவை அட்டவணை—4ல் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சிறு மாற்றம் தமிழ் மொழியைக் கற்பதை மிகப் பெரிய அளவில் எளிமைப்படுத்தும் 247 ஒலியெழுத்துகளையும் எழுத அட்டவணை—4ல் காணும் 39 குறியீடுகளைக் குழந்தைகள் கற்றால் போதுமானது.

அட்டவணை-4

முதன்மை எழுத்துகள்						உயிர்மெய்க் குறியீடுகள்	
அ	இ	உ	எ	ஒ	ஃ	்	ா
ஆ	ஈ	ஊ	ஏ	ஓ	ஐ	ᒉ	ᑢ
க	ச	ட	த	ப	ற	ᑯ	ᖳ
ங	ஞ	ண	ந	ம	ன	ெ	ே
ய	ர	ல	வ	ழ	ள	ை	

நாம் இங்கு கருத வேண்டுவன பின்வருமாறு:

1. ஒரு சிலர் மட்டுமே கல்வி கற்ற பண்டைச் சமுதாயத்தில் வரிவடிவத்தைக் கற்பதற்கு மட்டும் நீண்ட நாட்கள் செலவிடுவது, சமுதாய அளவில் அவ்வளவு பெரிய கால விரையம் அன்று. இன்று எல்லோரும் கல்வி பெறவேண்டும் என்ற நிலை வரும்பொழுது கற்பதை எளிதாக்குவதும் காலச் சிக்கனமும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

2. பண்டைய காலத்தில் கல்வி என்பது பெரும்பாலும் மொழிக் கல்வியாகவே இருந்தது. இன்று மொழிக் கல்வி பல துறைகளில் அறிவு பெற ஒரு சாதனம்தான். மொழிக் கல்வியே கல்வியாகிவிடுவதில்லை.

3. வாழ்வு தசையாலும், நரம்பாலும் ஆனது அன்று. அது காலத்தால் ஆனது. இன்று விரைவு (speed) உள்ள சமுதாயமே வெற்றிபெறும்.

4. இங்கு கூறப்படும் சீர்திருத்தம் எழுத்துகளின் எண்ணிக்கையை இம்மியும் குறைப்பதன்று; 247 ஒலி எழுத்துகளையும் எழுதுவதற்குத் தேவைப்படும் குறியீடுகளை மட்டும் குறைத்து கற்பதை எளிதாக்குவதாகும். புதிய வரிவடிவத்தில் தமிழ் நெடுங்கணக்கு அட்டவணை—5ல் கொடுக்கப்பட்டுள்ளது.

5. பக்கத்தில் உயிர்க் குறியீடுகளைப் பயன்படுத்தும் இந்த மாற்றம் உயிர்மெய் ஆகாரம் (கா), எகரம் (கெ), ஏகாரம் (கே), ஐகாரம் (கை), ஒகாரம் (கொ) ஓகாரம் (கோ), ஔகாரம் (கௌ) போன்ற மற்ற உயிர்மெய் எழுத்துகளுடன் இணைந்ததேயன்றி தமிழ் எழுத்து மரபுக்குப் புறம்பானதன்று. உண்மையில் இது உயிர்மெய் எழுத்துகளின் வரிவடிவத்தில் ஒரு சீர்மையை (uniformity) உருவாக்குகிறது

6. ஒரு மொழிக்கு ஒலிதான் நிரந்தரமானது. வரிவடிவம் நிரந்தரமானது அன்று. கி.பி. இரண்டாவது நூற்றாண்டுகட்கும் முன்னிருந்து தொடர்ந்து தமிழ் எழுத்துமாறியே வந்திருக்கிறது. (அட்டவணை—6)

அட்டவணை — 6 : நூற்றாண்டுகள் கி.மு. 3 முதல் கி.பி. 19 வரை

உயிர் எழுத்துகள்



மெய் எழுத்துகள்



இவையன்றியும் தமிழைப் பொறுத்த வரை இன்னுமொரு முக்கியமான அம்சத்தையும் குறிப்பிடவேண்டும்.

1. மொத்தம் 7.5 கோடி தமிழர்களில் 20 சதவிகிதம் பேர் அதாவது 1.5 கோடி பேர் தமிழக எல்லைக்கு வெளியே 50க்கு மேற்பட்ட நாடுகளில் வாழ்கிறார்கள்.

2. தமிழ் இந்தியாவில் ஒரு மாநில ஆட்சிமொழி மட்டுமே. ஆனால் இதை விட முக்கியமாக இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தமிழ் தேசிய ஆட்சி மொழி.

3. தமிழ், மலேசியா, மொரீஷியஸ், ஃபிஜி, தென் ஆப்பிரிக்கா போன்ற பல நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட மொழி.

4. தமிழ் இன்று உலகுதழுவி வாழும் ஒரு மொழிக் குடும்பத்தின் மொழியாகக் கருதப் படுகிறது.

5. தமிழ் மொழியின் இந்த சர்வதேசத் தகுதியை நாம் காப்பாற்றவேண்டும். அப்படிக் காப்பாற்றவேண்டுமானால் அயலகத் தமிழர்கள் தமது தாய்மொழியொடு தொடர்புள்ளவர் களாக இருக்கவேண்டும்.

6. தமிழ்நாடு, இலங்கை தவிர மற்ற நாடுகளில் தமிழ் கற்பது பொருளாதாரத் தேவை அன்று. எனவே தமிழ் சமுதாயத் தேவையாக, பண்பாட்டுத் தேவையாக மட்டுமே கற்கப்பட வேண்டும். தமிழ் கற்பது எளிதாக இருந்தால் ஒழிய வருங்கால இளைய தலைமுறை தமிழ் கற்க முன்வராது.

7. தமிழர்களை ஒரு குவலயக் குடும்பமாக, சர்வதேசக் குடும்பமாக (Global Family) நிலை நிறுத்த, தமிழ் சர்வதேச அளவில் புழக்கத்தில் இருக்கும் மொழி என்ற பெருமையைப் பாது காக்க, மேலும் வலிமைப்படுத்த, உலகத் தமிழர்கள் அனைவரும் தமிழ் எழுதப் பேசத் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். அதற்குத் தமிழ் கற்பது எளிதாக்கப்படவேண்டும். அதற்கு முதற்படி எழுத்துச் சீரமைப்பு.

8. எழுத்துச் சீரமைப்பை, பெரியார், டாக்டர் தெ.பொ.மீ., டாக்டர் மு.வ., டாக்டர் அப்பா துரை, புலவர் குழந்தை, திரு. கி.வா.ஜ., பேராசிரியர் அ.ச.ஞா. போன்ற மாபெரும் தமிழ் அறிஞர்கள் பலர் வரவேற்றிருக்கிறார்கள். ஆரம்பத்தில் எதிர்த்த சிலம்புச் செல்வர் ம.பொ.சி. பின்னர் ஏற்றுக்கொண்டார்.

9. பண்டைய பாரம்பரியமுள்ள சீனம் முதல் நவீன கால மொழியாகிய மலையாளம் வரை ஏறத்தாழ எல்லா மொழிகளிலும் வரிவடிவச் சீர்திருத்தம் நடந்திருக்கிறது.

10. தமிழிலும் 18—ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் சில மாற்றங்களைச் செய்தார். தமிழக அரசு 1978—இல் சில மாற்றங்களைச் செய்தது. இதனால் நன்மை விளைந்ததே தவிர தமிழுக்கு எந்தத் தீங்கும் ஏற்படவில்லை.

தமிழர்கள் ஒரு மொழியினர்; பல நாட்டினர்; எல்லா நாடுகளிலும் சிறுபான்மையர். அவர்கள் தங்கள் வலிமையை மொழிவழி இணைக்கவேண்டும். பொதுவாக நமது ஆசைகள் பெரியவையாக இருக்கவேண்டும். நமது கனவுகள் பெரியவையாக இருக்கவேண்டும். நாம் உலகுதழுவி வாழும் மொழிக் குடும்பம் என்ற பெருமிதம் நமக்கு வேண்டும். அதற்கேற்ப நமது அணுகுமுறை, கொள்கை, பார்வை அமையவேண்டும்.

அட்டவணை — 5

தமிழ் நெடுங்கணக்கு : 247 ஒலி எழுத்துகள் [திருத்திய வரிவடிவம்]

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ	க்
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ	ட்
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ	த்
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ	ந்
ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ	ப்
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ	ம்
ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ	ய்
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ	ர்
ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ	ல்
வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ	வ்
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ	ழ்
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ	ள்
ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ	ற்
ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ	ன்

55

கணினியில் தமிழ்

முனைவர் இரா. பக்கிரிசாமி

எ.எப். பிளாக், IIவது பிரதான சாலை, அண்ணாநகர், சென்னை—40

ஒரு மொழி ஒரு இனத்தை அடையாளம் காட்டுகிறது. தமிழ் மொழி பேசுபவர்கள் தமிழர்கள். ஆங்கிலம் பேசுபவர்கள் ஆங்கிலேயர்கள்.

ஒரு மொழி வளர வழிவழியாக வளம் பெறவேண்டுமாயின் அம்மொழி பேசும் மக்களை சேர்ந்தது. தம் மொழியை அலட்சியப்படுத்திவிட்டு மற்ற மொழிக்கு முக்கியத்துவம் கொடுப்பார்களாயின் அம்மொழி அழிந்துவிடும். அம்மொழிபேசும் மக்களின் இனப் பெயரும் தெரியாமல் போய்விடும். இது இயற்கை. அந்த இனமும் இல்லாமல் போய்விடலாம். உலகத்தில் இந்த இயற்கை நிகழ்ச்சி நடந்துகொண்டிருப்பதை பார்த்துக்கொண்டிருக்கிறோம்

சமீபத்தில் பிரஞ்சு நாட்டில் மொழிகளைப் பற்றிய ஒரு ஆய்வு நடந்தது. தற்போது வழக்கில் இருக்கும் 1000 மொழிகளில் இன்னும் 100 ஆண்டுகளுக்கு பிறகு எத்தனை மொழிகள புழக்கத்தில் செழுமையாக இருக்குமென ஆராய்ந்தார்கள்.

அந்த ஆராய்ச்சியின் முடிவு — 100 ஆண்டுகளுக்குப் பிறகு உலகில் 100 மொழிகள்தான் வழக்கில் இருக்கும்.

ஒரு மொழி

பல காலம் பேசப்படவேண்டும்

பல காலம் எழுதப்பட வேண்டும்

மக்களின் பொருளாதாரத்தை மேன்மைப்படுத்தவேண்டும்

காலத்திற்கு ஏற்ற அறிவியல் நுணுக்கங்களை எடுத்துச் சொல்லவல்லதாக இருக்கவேண்டும்

மேற்சொன்ன குணங்களைப் பெற்றிருக்கும் மொழிதான் காலத்தால் அழிக்க முடியாததாக இருக்கும்.

இவ்வாறெல்லாம் கணித்துப் பார்க்கும்பொது இந்தியாவில் இந்தி மொழி ஒன்றுதான் இந்த கணிப்புக்குள் அடங்குமாம். தமிழ் மொழி இருக்காதாம். இது என்ன வேடிக்கை. ஆம், இதுதான் உண்மையும் கூட. இந்த நிலை வரலாமோ? அன்றே பாரதி சொன்னான் 'தமிழினி சாகும் — அந்த மேற்கு மொழிகள் புவிமிசையோங்கும்'. அவன் நமக்குக் கட்டளை இட்டதைப் போல் சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.

அந்த சேவையைத்தான் இப்போது தொடங்கி இருக்கிறோம். அதன் தொடர்புதான் கணினியில் தமிழைப் புகுத்துதல் நாம் செய்யவேண்டிய முதல் கடமையாகும்.

இந்த பணியினை நம் கணினி படித்த இளைஞர்கள் முழுமூச்சுடன் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் தரவேண்டியது நம் கடமையாகும்.

நம்மைப் போன்ற சமுதாயப் பணி அமைப்புகள் தமிழ்க் கணினியை கிராமங்கள்தோறும் பரவ செய்யவேண்டும். அதன் மூலம் தமிழ் மாத்திரமே படித்த மக்களுக்கு வேலை வாய்ப் பினை பெற்றுத் தரவேண்டும்,

தமிழ்த் தட்டச்சு கற்றுத் தரும் நிலையங்கள் போலவே கணினி தமிழ் தட்டச்சுக் கூடங்கள் கிராமங்கள்தோறும் திறக்கப்படவேண்டும். தமிழ் கணினி நமக்கு ஒரு வரப்பிரசாதம். அதனை செவ்வனே பயன்படுத்திக்கொண்டால் நம் இளைஞர்களுக்கு நல்ல எதிர்காலம் காத்துக் கொண்டிருக்கிறது. தமிழக அரசு பல அலுவலகங்களில் பத்திரப் பதிவு அலுவலகம், வட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் இந்த நல்ல தருணத்தை நழுவ விடுதல் கூடாது. அதே நேரத்தில் நம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கும்.

இவ்வாறாகப் பேச்சில், எழுத்தில், அறிவியல் துறையில் தமிழைப் பயன்படுத்துவோமாயின் தமிழ் என்றென்றும் புழக்கத்தில், பழக்கத்தில் நின்று நிலைத்துவிடும். 100 ஆண்டுகள் என்ன, இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஆனாலும் நம் தமிழ் வாழும், வளம் பெறும். இது திண்ணம்.

வெறுங்கை என்பது மூடத்தனம்.

விரல்கள் அத்தனையும் மூலதனம் — என்றான் தாரா பாரதி.

ஆம் விரல்கள் அத்தனையும்

கணினிக்கு மூலதனம்

என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவோம். நம் தமிழை வளமுற வாழ வைப்போம்.

56

தமிழ் எழுத்துச் சீர்மை

ஆவரங்கால் சின்னத்துரை ஸ்ரீவாஸ்

வெளியீடு 2003 வெளியீடு—14. முதல் வெளியீடு: 1985
த.இ.2003 துணை வெளியீடு: கி அரவிந்தன் (விண்ணூஞ்சல்)

தொல்காப்பியர் காலத்திலும் திருவள்ளுவர் காலத்திலும் இருந்த விஞ்ஞான தத்துவங்களை
அடிப்படையாகக் கொண்டதும் சரியானதுமான பாரம்பரிய தமிழ் எழுத்துத் தத்துவங்களைத்
திரும்பவும் பாவிப்போம். இன்றைய காலத்தில் பாவனையில் இருக்கும் குதர்க்கம் நிறைந்த
சில தமிழ் எழுத்துக்கள் மாணவர்களையும் கல்வி வாய்ப்புக் குறைந்தோரையும் பெரியளவில்
இடர்படுத்தியும் எழுத, வாசிக்க இடராய் இருந்தும் ஆரம்பக் கல்வி மட்டும் கற்கும் வசதி
காண்டோரை அறிவிலிகள் ஆக்கியும் தமிழரின் வளர்ச்சிக்குத் தடைபோடும் இந்தக் குதர்க்
ம் கொண்ட சில தமிழ் எழுத்துக்களை உதிர்த்திடுவோம். ஒற்றைக்கொம்பு, இரட்டைக் காம்பு
போன்ற <u>குதர்க்கமான குறியீடுகள்</u> அண்மைய காலத்தில் தவறாக அறிமுகமான எழுத்துக்
களாகும். சரியானதாகவும் விஞ்ஞான அடிப்படையைத் தழுவியும் அன்று இருந்த பாரம்பரி
யத் தமிழ் எழுத்துத் தத்துவத்தைத் திரும்பவும் பாவிப்போம். எழுத, வாசிக்கத் தெரிந்தோரின்
எண்ணிக்கையை பல்மடங்காய்ப் பெருக்கிடுவோம்.

> எழுத்தெனப் படுவ அகர முதல னகர விறுவாய் முப்பஃ தென்ப..
>
> தொல்காப்பியம்

விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ந்து வரையறுக்கப்பட்டது தொல்காப்பியத் தமிழ் இலக்
கணம். இல்லை, தமிழ் எழுத்துக்கள் 256 என்றோ அல்லது இல்லை தமிழ் எழுத்துக்கள் 512
என்றோ விதண்டாவாதம் புரிந்தும், குதர்க்கமான கொம்புக் குறியீடுகளை ஆதரித்தும் இன்று
பாவனையில் உள்ள சில பிழையான தமிழ் எழுத்துக்களைத் தக்கவைக்க முயற்சிப்போர்
தமிழ் இலக்கணத்தை ஏற்காதவர்கள் மட்டுமல்லாது கல்வி கற்கும் வசதிகள் குறைந்து காலப்
போக்கில் எழுத வாசிக்கத் தெரியாதோராக வருவோரின் வேதனைகளை கண்டு குதூகலிப்
போராகவும் கருதப்படவேண்டியோரே. இன்றைய குதர்க்கத் தமிழ் எழுத்துக்கள் தமிழர்களின்
கல்வி வளர்ச்சியை அதிகளவில் பாதிக்கின்றன. அதிக விழுக்காடான தமிழர்களை அறிவிலி
கள் ஆக்குகின்றன இந்த சில குதர்க்கத் தமிழ் எழுத்துக் குறியீடுகள். தொல்காப்பிய எழுத்தி
லக்கணத்திற்கு விரோதமான தத்துவத்தையும் வள்ளுவர்காலம் போன்ற அன்றைய காலத்தில்
இருந்த தமிழ் எழுத்துக்களின் சீர்மைக்கும் விரோதமான தத்துவத்தை அடிப்படையாகக்
கொண்டு இருக்கின்றன இன்றைய தமிழ் எழுத்துக்கள்.

தவறாக அறிமுகமாகி இன்றும் பாவனையில் இருக்கும் குதர்க்கம் நிறைந்த உயிர்க்
குறியீடுகள்:

ெ ே ை ள

உ+ம்:— கெ கே கை கொ கோ கௌ

தவறாக அறிமுகமாகி இன்றும் பாவனையில் இருக்கும் உகர ஊகார உயிர்மெய் எழுத்துக்கள். உகர மெய்யும் ஊகார மெய்யும் எழுத்துக்களின் எண்ணிக்கையை காரணமின்றி அதிகரிக்கின்றது. கல்விவாய்ப்பு குறைந்தோருக்கு மிகவும் இடையூறாக இருக்கின்றன இந்த உகர ஊகார மெய் எழுத்துக்கள்.

(குறிப்பு: கொம்புகள் போல் குதர்க்கமானவையல்ல உகர ஊகார மெய்கள்)

கு ஙு சு ஞு டு ணு து நு பு மு யு ரு லு வு ழு ளு று னு

கூ ஙூ சூ ஞூ டூ ணூ தூ நூ பூ மூ யூ ரூ லூ வூ ழூ ளூ



தரவுக்குறிப்பு: "எழுத்துச் சீர்மை" அறிஞர்கள் கருத்து - பதிப்பு 1979



படம் 14.6 : சீர்செய்த எழுத்துக்கள்



படம் 14.7 : வரும்கால உயிர் மெய் எழுத்து - இன்றைய உயிர் மெய் எழுத்து

எழுத, வாசிக்கத் தெரிந்தோர் (கல்வி வசதி குறைந்தோர் (இந்தியா, இலங்கை, மலேசியா) தமிழ் கற்க நேர வசதி குறைந்தோர் (ஐரோப்பா, அமெரிக்கா, ஔஸ்ரேலியா) கல்வி கற்க வசதி குறைந்தோர்: இலகுவாக தமிழ் கற்பதற்கு ஏற்றவாறு தமிழ் எழுத்துக்கள் அமைய வேண்டியதன் அவசியம் இன்றைய காலகட்டத்தில் மேலும் அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டிலும் இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலும் தமது சிறுவயதிலேயே கல்வி கற்றலை நிறுத்திக்கொள்ளும் கணிசமான தொகையினர், எழுத, வாசிக்கத் தெரிந்தோராக இருக்க

வேண்டியமை மிகவும் அதிகரித்துள்ளது. இப்படியான கல்வி வசதி குறைந்தோரின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகவே இருப்பது பலரும் அறிந்த ஓர் விடயமாகும். ஆரம்பக் கல்வி கற்று எழுத, வாசிக்கத் தெரிந்தோராக இருந்தோர், இந்த ஒற்றை இரட்டைக் கொம்புகளின் குதர்க்கத்தினால் எழுத வாசிக்க தெரியாதோராய் நாளடைவில் மாறுகின்றார்கள். உகர மெய், ஊகார மெய் போன்ற காரணமின்றி அறிமுகமாக்கப்பட்ட தமிழ் எழுத்துக்களும், ஒற்றை, இரட்டைக் கொம்புகள் போன்ற குதர்க்கத் தமிழ்க் குறியீடுகளும் தமிழ் கற்பதை மிகவும் கடினமாக்குகின்றது. தமிழ் எழுத்துக்களில் பிழை; தமிழ் கற்போரில் பிழையில்லை, குதர்க்கத் தமிழை தக்கவைப்போரில் பிழை; தமிழைக் கற்க முயல்வோரில் பிழையில்லை. இதை நிவிர்த்தி செய்யும் பணியை நாம் உடன் ஆரம்பித்தல் வேண்டும்.

பகுதிநேரத் தமிழ்க் கல்வி: இலகுவாக தமிழ் கற்பதற்கு ஏற்றவாறு தமிழ் எழுத்துக்கள் அமைய வேண்டியதன் அவசியம் இன்றைய காலகட்டத்தில் மேலும் அதிகரித்துள்ளது. ஐரோப்பா கண்டம், கனடா, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் இன்று தமிழ்க் கற்றல் பல இலட்சம் மாணவர்க்கு ஓர் பகுதிநேர தமிழ்க் கல்வி வசதியாகவே அமைந்துள்ளது. இந்த வசதி கிழமைக்கு ஒரு மணித்தியாலம் தமிழ் கற்றல் போன்ற அடிப்படை வசதியாகவே அமைந்துள்ளது. இத்தகைய வசதியின்மை மொரீசியஸ், சௌத் ஆஃப்ரிக்கா, அந்தமான், கரீபியன் போன்ற மேலும் பல எண்ணற்ற நாடுகளிலும் காணப்படுகின்றது. தமிழிலே இடைக்காலத்தில் ஏற்பட்ட சில தவறான மாற்றங்கள் எழுத்துத் தமிழில் இருந்த எளிமையினைச் சிக்கலாக்கிவிட்டன. எழுத்துத் தமிழில் இருந்த விஞ்ஞானத்தை இன்றைய சில எழுத்துக்கள் விரோதித்து நிற்கின்றன. ஐந்து வருடங்கள் பகுதிநேரமாக அழுந்தி அழுந்தி கற்றும் எழுத, வாசிக்க சிரமப்படும் தமிழ் மாணவர்கள் பலர் முடிவில் எழுத, வாசிக்கத் தெரியாதோராய் விளைகின்றார்கள். இலகுவாக தமிழ் கற்பதற்கும், அத்துடன் கற்ற தமிழை மறவாது தொடர்ந்தும் வாழ்நாள் முழுவதும் உபயோகிக்கக் கூடியதான வசதி கொண்டதுமான ஓர் மொழியாக தமிழ் அமைய வேண்டியது மிக மிக அவசியமாகின்றது.

உதிர்க குதர்க்கம்: இன்றுள்ள சில குதர்க்கத் தமிழ்க் குறியீடுகள் கற்றதைக் கூட காலப்போக்கில் மறக்க வைக்கும் தூண்டியாகவே செயல்ப்படுகின்றன. இடையில் புகுந்த தவறுகளைத் திருத்துதல் சரியானது. சரியான எமது பாரம்பரியத்தை திரும்பப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது. சீன மொழி கூட பார்வைக்குச் சிக்கலாக இருந்தாலும் ஓர் தர்க்கத்தை அடிப்படையாக கொண்டு வரையறுக்கப்பட்ட ஓர் எழுத்துமுறையைக் கொண்டுள்ளது. அன்றைய தமிழ், விஞ்ஞானத்தின் அடிப்படையில் சிறந்த்த தர்க்கத்தைக் கொண்டும் கற்பதற்கு இலகுவாகவும் அமைந்திருந்தது. இடையில் ஏற்பட்ட மாற்றங்கள் குதர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு சிக்கலானதும் கற்பதற்குக் கடினமானதுமாக தமிழை மாற்றிவிட்டது. தமிழில் இருக்கும் இந்தக் குதர்க்கத்தை உதிர்த்தெறிந்து தர்க்கத்தைப் புகுத்தல் மிக மிக அவசியமாகின்றது. தமிழை சிறப்பாக எழுத, வாசிக்க தெரிந்த்திருந்த பலர், எழுத்துக்களில் இன்றுள்ள குதர்க்கத்தின் காரணமாகக் காலப்போக்கில் எழுத, வாசிக்க தெரியாது தடுமாறுகின்றார்கள். இத்தகைய குறைபாடு தமிழ்நாட்டிலும் இலங்கை, சிங்கப்பூர், போன்ற நாடுகளிலும் கூட காணக்கூடியதாக இருக்கின்றது என்றால் மற்றைய நாட்டுத் தமிழர்களின் அவதியை எண்ணிப் பாருங்கள். ஏன், தமிழில் பாண்டித்தியம் பெற்றுத் தொடர்ந்து தமிழைப் பாவித்துக் கொண்டிருக்கும் பலர் இந்த ஒற்றை, இரட்டைக் கொம்புகள் தொடர்பான ஆராய்ச்சிச் சோதனைகளில் சிக்கல்பட்டுத் தோற்றுவிடுகின்றார்கள். கெ கே கொ கோ சார்ந்த சொற்களை விரைந்து எழுதும்போது அதனை வாசிக்கும்படி செய்யும் சோதனையில் தமிழில் பாண்டித்தியம் பெற்ற சிலர் கூடத் தோற்றிருக்கின்றார்கள். இப்படி என்றால் சாதாரண தமிழ் மாணவர்கள், கல்வி கற்க வசதி குறைந்த தமிழ் மாணவர்கள், பகுதி நேரம் மட்டுமே தமிழ் கற்கும் வாய்ப்புக் கொண்ட தமிழ் மாணவர்களின் நிலைமை எவ்வளவு கடினமானது என்பதை சிந்தித்துப் பார்த்தல் எம் எல்லோரதும் கடமையாகின்றது.

கணினிக்காகத் தமிழா அல்லது தமிழுக்காகக் கணினியா: தமிழ் எழுத்துச் சீர்மை தொடர்பாக என் கட்டுரைகளை சென்னைப் பல்கலைக்கழகத்தில் திரு கி அரவிந்தன் (விண்ணூஞ்சல்) அவர்கள் வாசித்து சமர்ப்பித்தபோது எழுந்த கேள்விகளில் முக்கியமான கேள்விகளில் ஒன்று "கணினிக்காகத் தமிழா அல்லது தமிழுக்காகக் கணினியா" என்று ஓர் கேள்வியாகும். எனது

இந்த தமிழ் எழுத்துச் சீர்மையில் முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால், இந்த சீர்திருத்தம் கணினிக்காக அல்ல. இந்த சீர்திருத்தமானது முக்கியமாக, கல்வி கற்கும் வாய்ப்பு குறைந்த சிறுவர்கள் இலகுவாக தமிழ் கற்க ஏதுவாக இருப்பதற்கும் கற்ற தமிழை மறக்காது தொடர்ந்து பாவிக்கக் கூடியதாக தக்கவைப்பதற்கும் தொல்காப்பியம் போன்ற சரியான தமிழ் இலக்கணங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ் இருப்பதற்கும் ஏற்ற நடவடிக்கை களை எடுப்பதற்காகவே. எனவே இந்த சீர்திருத்தம் கணினிக்காக இல்லை என்பதை வலி யுறுத்திக் கூறுகின்றேன். கணினி தமிழ் எழுத்துக்களில் இருக்கும் தவறுகளை ஓரளவிற்கு தானாகவே திருத்தும் சக்தி வாய்ந்தது. எனினும் கணினிக்காகவும் சில மாற்றங்கள் தமிழ் எழுத்து வடிவங்களில் செய்தல் நல்லது என்றும் சில கருத்துக்கள் உள்ளன. இவை தொடர் பாக "கணினியும் தமிழும்" எனும் தலைப்பில் எழுதிய கட்டுரைகளில் குறித்துளேன். ஆனால் இந்தத் தமிழ் எழுத்துச் சீர்மை தமிழுக்காகவேயன்றி கணினிக்காக அல்ல.

திரு இ.வெ. இராமசாமி பெரியார்: திரு இ.வெ. இராமசாமி பெரியார் அவர்கள் பகுத்தறிவு என்ற பத்திரிகையில் தமிழ் எழுத்துச் சீர்மை தொடர்பாக 1935ம் ஆண்டுகளில் எழுத வேண்டிய காரணிகள் இன்றும் சரியாகவே உள்ளன. பெரியாரின் இந்த தமிழ் எழுத்துச் சீர்மை தொடர்பான கோட்பாடுகளில் சில இது வரையில் நடைமுறைப்படுள்ளன. இந்த சீர்படுத்தல் வரிசையில் எம்ஜி இராமச்சந்திரன் அவர்களின் காலத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டு இன்று பாவனையில் இருக்கும் "னை, ணை, லை, ளை, னா, ணா, றா" போன்ற ஐகார உயிர்மெய், ஆகார உயிர்மெய் போன்றவற்றைக் குறிப்பிடலாம். 1975களில் கூட விடுத2லக்கும் விடுதலைக்கும் பாவனையில் போட்டி இருந்ததையும் இன்றும் (2002) சில ஆசிரியர்கள் கற்பிக்கும்போது பழமைசார்ந்த தடுமாற்றம் கொண்டோராகக் காணப்படுவதை யும் நாம் கருத்தில் கொண்டு மாற்றங்களை நெறிப்படுத்தல் வேண்டும். இந்த சீர்செய்தல் மிகவும் அவசியமாக செயல்படுத்தவேண்டிய ஓர் விடயமாகும்.

தமிழ் எழுத்துக்கள் எத்தனை? தமிழ் குரலொலிகள் எத்தனை?

ஒவ்வொரு மெய் எழுத்தும் பல சார்ந்துவரும் மெய் ஒலியன்களை ஒருங்குகூட்டிப் பிரதிபலிக் கும் எழுத்தாக இருக்கின்றது. இது போல் ஒவ்வொரு உயிர் எழுத்தும் பல சார்ந்துவரும் உயிர் ஒலியன்களை ஒருங்குகூட்டிப் பிரதிபலிக்கும் எழுத்தாக இருக்கின்றது. பலர் இன்று தமிழ் எழுத்துக்களையும் அவை பிரதிபலிக்கும் ஒலியன்களையும் தவறாகவே புரிந்து வைத்துள்ளனர். இதில் பல தமிழ் அறிஞர்களும் அடங்குவது மறைக்க முடியாத உண்மை.

காகம் என்பதில் காஹம் என்று ஹ ஒலியன் இருப்பது போல் ஒவ்வொரு மெய் எழுத்துக்கும் சார்ந்துவரும் ஒலியன்கள் பல உண்டு. இசை, இஸை ஆகும். அத்தனை அத்0த0னை ஆகும். அதன், அத2ன், ஆகும். இந்த, இந்த3 ஆகும். இந்த, இந்4த ஆகும். சங்கம், சங்க3ம் ஆகும். இப்படி எத்தனையோ உதாரணங்கள் உண்டு. க்0 கொண்ட சொற்கள் நாற்பது விகிதம் உள்ளன என்றால் க்1 கொண்ட சொற்கள் 40 விகிதம் உண்டு என ஓர் குறிப்பிற்குக் கூறலாம். இதே போல்தான் மற்றைய மெய்சார்ந்த ஒலியன்களின் விகிதாசாரமும். இதே போன்றுதான் உயிர்சார்ந்த ஒலியன்களின் விகிதாசாரமும் உண்டு என்று சொல்லலாம். அம்மா என்பதில் அ0ம்மா உண்டு. அன்னை என்பதில் அ1ன்னை உண்டு. எல்லா உயிர் எழுத்துக்களுக்கும் தமிழில் உயிர்சார்ந்த ஒலியன்கள் உண்டு. இந்த ஒலியன்களின் பாவனையின் தன்மைகளை மரபு முறையில் சரியாகக் கற்றுக்கொள்ள வசதி இல்லாதோர் கொச்சைத் தமிழ் பேசுவார்கள். இந்த ஒலியன்களின் பாவனையின் தன்மைகளை தவறாகப் புரிந்துகொண்ட சில தமிழ் அறிஞர்களும் கொச்சைத் தமிழ் பேசுவதும் மறுக்க முடியாத உண்மையே. உதாரணமாக பாஸம் என்று குரல் தராது பாச0ம் என்று சொல் என்பார்கள் தவறாக சில தமிழ் அறிஞர்கள்.


பின் உயிர் எழுத்துச் சீர்மை (சின்னத்துரை ஸ்ரீவாஸ் 9/2002)
உதிர்க
கு ஙு சு ஞு டு ணு து நு பு மு யு ரு லு வு ழு ளு று னு
வளர்க
உதிர்க
கூ ஙூ சூ ஞூ டூ ணூ தூ நூ பூ மூ யூ ரூ லூ வூ ழூ ளூ றூ னூ
வளர்க
உதிர்க
கெ ஙெ செ ஞெ டெ ணெ தெ நெ பெ மெ யெ ரெ லெ வெ ழெ ளெ றெ னெ
வளர்க
உதிர்க
கே ஙே சே ஞே டே ணே தே நே பே மே யே ரே லே வே ழே ளே றே னே
வளர்க
உதிர்க
கொ ஙொ சொ ஞொ டொ ணொ தொ நொ பொ மொ யொ ரொ லொ வொ ழொ ளொ றொ னொ
வளர்க
உதிர்க
கோ ஙோ சோ ஞோ டோ ணோ தோ நோ போ மோ யோ ரோ லோ வோ ழோ ளோ றோ னோ
வளர்க
உதிர்க
கை ஙை சை ஞை டை ணை தை நை பை மை யை ரை லை வை ழை ளை றை னை
வளர்க
உதிர்க
கௌ ஙௌ சௌ ஞௌ டௌ ணௌ தௌ நௌ பௌ மௌ யௌ ரௌ லௌ வௌ ழௌ ளௌ றௌ னௌ
வளர்க

இந்தத் தடுமாற்றத்தை நீக்குவதற்கு ஒலியன்களை விபரித்து குரலொலி அகராதி தருவதற்குப் பல ஆய்தக் குறியீடுகள் புதிதாக தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அகேன (ஃ) ஆய்தம் மட்டுமே இன்று ஓர் ஆய்தக் குறியீடாகப் பாவனையில் இருக்கின்றது. இந்த ஃ எல்லா விதமான தேவைகளையும் பூர்த்தி செய்யும் ஒன்றாக இல்லை. எஃகு, அஃகு, முப்பஃ போன்ற தமிழ் எழுத்துக்களில் தொல்காப்பிய காலத்திலேயே இந்த ஃ ஆய்தம் பாவிக்கப்பட்டுள்ளது. (குறிப்பு: மற்றைய தென் ஆசிய மொழிகளில் க்ஃ, ச்ஃ, ட்ஃ, த்ஃ போன்ற (ளீலீ, நீலீ, பீலீ, மீலீலீ) குரலொலிகளுக்குத் தனித்தனியான எழுத்து வடிவங்கள் இருக்கின்றன, ஆனால் தமிழில் இந்த ஃ சேர்க்கும் நுட்பம் ஓர் சிறந்த நுட்பமாகவே இருக்கின்றது. மெய் எழுத்துக்களின் எண்ணிக்கையை அரைமடங்கால் குறைக்கின்றது இந்த வகை ஃ. இன்னொரு பாவனையாக ஃ ஆனது ஃப்ரான்ஸ், ஃசிம்ஃபாஃப்வே (France, Zimbabwe) போன்ற சொற் களில் பாவனையில் உண்டு. மெய் எழுத்துக்களின் பின்புறமாக வும், முன்புறமாகவும் ஃ தேவையின் பொருட்டு மாறிவருவதனையும் கவனிக்கவும். குரலொலி விபரங்களைத் தரும் "குரலொலி அகராதி" தமிழுக்கு மிக அவசியம்.



aytham2.jpg

ஆய்தக் குறியீடுகள்: விபர ஆய்தக் குறியீடுகள் எனும் புதிய விபர ஆய்தக் குறியீடுகளை பாவனைக்கு எடுத்துக்கொள்ளலாம். குரலொலி அகராதிக்கு மட்டும்தான் இந்தப் புதிய விபர ஆய்தக் குறியீடுகளை பாவித்தல் வேண்டும். உதாரணமாக சாதாரண மெய் எழுத்து பாவனைகு 18 தமிழ் எழுத்துக்களுமே போதுமானவை, எனினும் விபரமாகக் குறிப்பிட வேண்டிய தேவை ஏற்படின் (உ+ம்:— அன்னியர் தமிழ் கற்க) ஓரளவிற்கு இந்தப் புதிய விபர ஆய்தக் குறியீடுகளைப் பாவிக்கலாம்.

மெய் எழுத்தின் வலதுபுறமாக பின் உயிர் எழுத்துக்கள்.

(உயிர்மெய் எழுத்துக்களின் வலது புறத்தில் பின் உயிர் வருதல்)

பின் உயிர் "ரி", பின் உயிர் "ரீ" என்பன இன்று மெய் எழுத்துக்களின் மேற்புறமாக இடம் எடுக்கின்றன. பல அறிஞர்கள் இந்த நிலை மாறி மெய் எழுத்தின் வலதுபுறமாக இவை எழுதப்படல் வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளனர்.

இதே போல் உகர, ஊகார மெய் எழுத்துக்கள் சீர்செய்யும்போதும் பின் உகரமும் பின் ஊகாரமும் (படம் 14.7:) புதிதாக வரையறுக்கப்பட்டு மெய் எழுத்துக்களின் வலதுபுறமாக எழுதப்படல் வேண்டும். எனவே பின் உயிர் எழுத்துக் குறியீடுகளை மேலிருந்து கீழே இறக்க வேண்டிய காரணத்தால் இன்று ஜு, ஸு போன்றவற்றில் பாவிக்கும் பின் உ பின் ஊ களை விடுத்துப் பின் உகரத்திற்கும், பின் ஊகாரத்திகும் புதிய வடிவங்கள் கொடுத்தல் வேண்டும். இந்தப் புதிய பின் உகர, பின் ஊகார வடிவங்கள் கொண்டு இப்போது மேலதிகமாக இருக்கும் 36 உகர, ஊகார மெய் எழுத்துக்களை (கு கூ ஙு ஙூ சு சூ ஞு ஞூ டு டூ ணு ணூ து தூ நு நூ பு பூ மு மூ யு யூ ரு ரூ லு லூ வு வூ ழு ழூ ளு ளூ று றூ) அகற்றி புதிய முறையில் உகர, ஊகார மெய்களை எழுதுதல் வேண்டும்.

எகரம், ஏகாரம், ஒகரம், ஓகாரம் சார்ந்த உயிர்மெய் எழுத்துக்கள் குதர்க்கத்தின் அடிப்படையில் இருப்பதால் இவை சீர்செய்யப்பட்டுப் புதிய முறையில் எழுதுதல் அவசியம் ஆகின்றது. இப்படி சீர்செய்யும்போது எகரம், ஏகாரம், ஒகரம், ஓகாரம் போன்றவற்றின் பின் உயிர் எழுத்துக்கள் மெய் எழுத்துக்களின் பின்புறமாக வரவேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டு புதிய பின் உயிர் வடிவங்கள் பரிந்துரைத்ததுண்டு. இதே போல், பின் ஐகார எழுத்து வடிவமும், பின் ஔகார எழுத்து வடிவமும் புதிதாக பரிந்துரைத்ததுண்டு.

கணினியும் தமிழும் — தமிழ் யுனிகோட்

உலகில் உள்ள எல்லா மொழிகளையும் கணினியில் சுயமாக புறோசெஸ் செய்வதற்காக யுனிகோட் எனும் உலகளாவிய தகுதரம் இன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த யுனிகோட் தகுதரத்தை நடைமுறைப்படுத்துவதற்க்காக வேண்டிய டெவெலொப்மென்ற் வேலைகளைச் செய்வதில் இன்றய காலகட்டத்தில் பலர் ஈடுபட்டுள்ளார்கள். இந்த உலகளாவிய யுனிகோட் தகுதரத்தின் அடிப்படைக் கோட்பாடும் தொல்காப்பியம் எனும் பழமைவாய்ந்த தமிழ் இலக்கணக் கோட்பாடும் விஞ்ஞானரீதியிலும் தர்க்கரீதியிலும் ஒன்றுபட்டவை என்று விபரிக்கலாம். எனவே, அண்மைய காலங்களில் தவறாக அறிமுகமான தமிழ் எழுத்துக் குறியீடுகளான ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு பின்—ஐக்குறியீடு பின்—ஔக்குறியீடு போன்றவையும் அத்துடன் உகர, ஊகார மெய் எழுத்துக்களும் இந்த யுனிகோட் எனும் தகுதரத்தின் அடிப்படை வரையறுப்பில் இல்லை. இதன்படி, இந்த உலகளாவிய யுனிகோட் வரைவிலக்கணம் தமிழ் எழுத்துச் சீர்மையை ஏற்கனவே செய்துவிட்டது என்றால் மிகையாகாது.

யுனிகோடின் சிறப்பு என்னவென்றால் கொம்புகள், உகர, ஊகார மெய்கள் போன்றவற்றைத் தந்து ஒரு பிரமையை ஏற்படுத்தும் குணாதிசயம் கொண்டது. இத்தகைய குணாதிசயம், நாம் தீர்மானிக்கும்போதும் படிப்படியாகவும் எழுத்துச் சீர்மையை நடைமுறைப்படுத்தும் ஸ்கேலபிலிற்றி வசதியையும் கொண்டிள்ளது. மேலே குறிப்பிட்டதுபோல் ஒரு பிரமையாக இன்றைய தமிழ் எழுத்துக்களைத் தரும் இந்த யுனிகோட் அதன் கருவில் தொல்காப்பிய தத்துவங்கள் போல் லினிய யுனிகோட் எனும் தத்துவத்தையே கொண்டுள்ளது. திரு ஜேம்ஸ் காஸ் அவர்களின் லினிய யுனிகோட் எனும் பதம் யுனிகோட் என்றால் என்ன என்பதை மிகவும் கச்சிதமாக விபரிக்கும் ஓர் பதமாகும். கணினிக்கான புறோகிறாம்களை டெவெலொப் செய்வோர் லினிய யுனிகோட் எனும் தத்துவத்தைப் புரிந்து கொண்டால் மட்டுமே அவர்கள் தங்கள் முயற்சியில் வெற்றிகொள்வர் என்பது என் கருத்து. கணினியைப் பொறுத்த அளவில் தமிழ் எழுத்துச் சீர்மையை நடைமுறைப்படுத்தத் தேவையான அடிப்படைகள் பல நிறைவேற்றப் பட்டுவிட்டன. படம் 14.10ல் தகுதர கரக்ரர்களும் படம் 14.11ல் விபரண லிகேச்சர்களும் தரப்பட்டுள்ளன. (குறிப்பு: தமிழ் இலக்கங்கள் தமிழ் ஆண்டு, திகதி போன்ற பல குறியீடுகளும் கரக்ரர்களாக இருக்கின்றன.)

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ
- ா ி ீ ு ூ ெ ே ை ொ ோ ௌ ்
க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன ஸ ஷ ஹ ஜ

படம் 14.10: !கரக்ரர்கள் - யுனிகோட் தகுதரத்தில்

கு ஙு சு ஞு டு ணு து நு பு மு யு ரு லு வு ழு ளு று னு
கூ ஙூ சூ ஞூ டூ ணூ தூ நூ பூ மூ யூ ரூ லூ வூ ழூ ளூ றூ னூ
ெ ே ா க்ஷ ஸ்ரீ

படம் 14.11: !லிகேசர்கள் - யுனிகோட் விபரணத்தில்

கணினிகளில் உண்மையான புறோசெசிங் கரக்ரர்கள் கொண்டு மட்டும்தான் செயல்முறைப் படுத்துகின்றோம். எனவே கணினியில் எழுத்துச் சீர்மை நடைமுறையாகிவிட்டது என்றால் மிகையாகாது. மேலும், எல்லா இந்திய மற்றும் பிராந்திய மொழிகளும் இந்த லினிய யுனி கோட் முறையிலான எழுத்துச் சீர்மையை அங்கீகரித்து பாவனைக்கு அனுமதித்தால் எமது பிராந்தியத்தின் எழுத, வாசிக்கத் தெரிந்தோரின் விழுக்காடு பற்பல மடங்கினால் அதிகரிக் கும் என்பதில் எந்தவித சந்தேகங்களும் இல்லை. இதே போல் அமெரிக்கா, ஐரோப்பா கண்டம் மற்றும் பல நாடுகளில் வாழும் எமது பிராந்திய மக்கள் எங்கள் மொழிகளைக் கற்பதில் பல்மடங்கு ஆர்வம் காட்டுவார்கள் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

உடனடிப் பாவனைக்கு லினிய யுனிகோட் ஃபோல்ஃபாக் என அங்கீகரித்தல்

காலாகாலமாக தமிழ் எழுத்து வடிவங்கள் மாற்றம் அடைந்து வந்துள்ளன. வீரமா காலத்தில் தமிழ் எழுத்துக்கள் குதர்க்கமான கொாம்புகளைக் கண்டது. அதன் பின் சிறு சிறு மாற்றங் கள் காணப்பட்டன. தொல்காப்பியத் தத்துவங்கள் விஞ்ஞானரீதியானதும் சரியானதும் என்று கண்டோம். எனவே தமிழ் எழுத்துக்கள் சரியானதும் விஞ்ஞானரீதியானதும் பாவனைக்கு இலகுவானதும் விடயங்களை உன்னதமான முறையில் விபரிக்கக் கூடியதாக வும் வளரப் போவது திண்ணம். இந்த உண்மையை நாம் இன்றே உணர்ந்துகொண்டு சீர்மையை நடைமுறைப்படுத்தவேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடல் சிறந்ததாகும்.

மோஃபைல் தொலைபேசியில் ரெக்ஸ்ற் மெஸ்ஸேஜ் தமிழில் இயங்க வைக்க, கல்குலேற்றொ, பொஸ் போன்ற மேலும் பல இலத்திரனியல் கருவிகளில் உடனடியாக தமிழை இயங்க வைக்கவும் லினிய தமிழ் யுனிகோட் பாவனை அனுமதிக்கப்படல் வேண்டும்.

எழுத்துச் சீர்மையின் நடைமுறைப்படுத்தலின் முதல் படியாக, சென்னையில் நடைபெறும் இந்த உத்தமம் 2003 மாநாட்டில், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்களும் மாநாட்டில் கூடியிருக்கும் அறிஞர்கள் அனைவரும் லினிய தமிழ் யுனிகோட் டினை ஃபோல்ஃபாக் இயங்குமுறையாக அங்கீகரிக்குமாறும் புதிய விபர ஆய்தக் குறியீடு களை குரலொலி அகராதிக்கான பாவனைக்கு அங்கீகரிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆராய்ச்சி ஆசிரியர்: ஆவரங்கால் சின்னத்துரை ஸ்ரீவாஸ்

வெ14/2003 தமிழ் இணையம் 2003 மாநாட்டில் சமர்ப்பித்தலுக்காக.

உதவி ஆசிரியர் மாநாட்டில் சமர்ப்பித்தவர்: விண்ணூஞ்சல் கி அரவிந்தன்.

தமிழ் ஆராய்ச்சி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு...

http://www.geocities.com/avarangal/ எழுத்துச் சீர்மை வெளியீட்டுச் சரித்திரம்

வெளியீடு	ஆண்டு	இடம்
வெ14	2003	தமிழ் இணையம் 2003 மாநாடு, சென்னை (உத்தமம் INFITT), ஆசிரியர்: ஆவரங்கால் சின்னத்துரை ஸ்ரீவாஸ், உதவி ஆசிரியர், சமர்ப்பிப்பவர்: விண்ணூரஞ்ஞல் கி அரவிந்தன்.
வெ13	2003	ஐபிசி—தமிழ் வானொலியில் கலந்துரையாடல். சின்னத்துரை ஸ்ரீவாஸ், கலாநிதி கண்ணன் (மின்சுவடி), திரு சோதிலிங்கம்.
வெ12.1	2002	தமிழ் இணையம் 2002 மானாடு (உத்தமம்) — அமெரிக்கா— எழுத்துச் சீர்மை போஸ்ரர் கண்காட்சி.
வெ12.2	2002	சிங்கை இதழில் கட்டுரை வெளியீடு
வெ10	2002	தமிழ் எழுத்துச் சீர்மை சமர்ப்பணம். சென்னைப் பல்கலைக்கழகம்., சின்னத்துரை ஸ்ரீவாஸ் சார்பாக வாசித்து சமர்ப்பித்தவர்: விண்ணூரஞ்சல் கி அரவிந்தன்.

International Seminar on Tamil Computing, University of Madras, Chennai. Jan 2002) —

பிரதிகள்:

http://www.ss003b3751.pwp.blueyonder.co.uk/Tamil/madrasuniversity/TamilResearch-v10.html or use microsoft word format .doc
http://www.ss003b3751.pwp.blueyonder.co.uk/Tamil/madrasuniversity/TamilResearch-v10.doc

வெ9	2001	ஆராய்ச்சிக் கட்டுரை வெளியீடு: சீர்மை: (Avarangal Institute of Technology – inauguration - ரொண்டொன் - Dec 2001)
வெ8.3	2001	http://groups.yahoo.com/group/tamil_research/
	2002	http://groups.yahoo.com/group/tamil_araichchi/?yguid=97114847
	2002	http://groups.yahoo.com/group/tamil_araichchi_vaddam/?yguid=97114847
வெ8.2	2000	பொன்ற்: ஆவரங்கால்: லினிய தமிழ் யுனிகோட் பொன்ற் + புதிய தமிழ் எழுத்துக்கள் + ஆய்த எழுத்துக்கள் வெளியீடு., கொம்ப்லெக்ஷ் றெண்டெற்ட் ஆவரங்கால் யுனிகோட்+சீர்மை வெளியிடல்
வெ8.1	2000	சன்ரைஸ் ரேடியோவில் எழுத்துச் சீர்மை கருத்தாடல்.
வெ7	2000	தமிழ் இணையம் 2000: கொழும்பு இலங்கை— எழுத்துச் சீர்மை அறிக்கை சமர்ப்பித்தல்.
ªõ6.2	2000	பொன்ற்: TabAvarangal + (include diacritics and new alphabets as additional with both Tab. ரப்_ஆவரங்கால் பொன்ற் வெளியிடல்.
வெ6.2	2000	பொன்ற்: கிமு3 கால தமிழ் எழுத்துக்கள்: TNM-kimu3-font வெளியிடல்
வெ6.1	1999	இணைய தளத்தில் எழுத்துச் சீர்மை வெளியிடல் http://www.geocities.com/avarangal/index.html
வெ5.2	1999	தமிழ் இணையம் '99: புதிய தமிழ் எழுத்துக்கள், ஆய்தக் குறியீடுகள், இன்றைய தமிழ் எழுத்துக்கள் கொண்ட 8பிற் என்கோடிங் சமர்ப்பித்தல்.
வெ5.1	1999	பொன்ற் Tamil_Avarangal_TSC வெளியீடு. (ஆய்தக் குறியீடுகள்+சீர்)
வெ4.2	1998	தமிழ்நாடு மாநில அரசுக்கு எழுத்துச் சீர்மை தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரை கையளித்தல்.
வெ4.1	1995	தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரை இணையத்தில் வெளியிடல், தமிழ் டொற் நெற் (தமிழ்_ஆவரங்கால்1,2 பொன்ற்+ஆய்தக் குறிகள்).
வெ3	1995	தமிழ் ஆராய்ச்சி — எழுத்துச் சீர்மை — கலந்துரையாடல், தேனீ டொட் கொம் இணைய discussion forum.
வெ2	1990	தமிழ் எழுத்துச் சீர்மை. கட்டுரை வெளியீடு.

		Tamil_Avarangal1.1 with additional Tamil diacritics and proposed new characters published. This font was of OldTypewriter (or lately come to known as Bamini) encoding.
வெ1	1985	கணினியில் தமிழ்க் குரலொலிகளின் கிரகிப்பு — Voice Recognition - Article v1

57

"பாநயம் கண்டறிதல்" – ஒரு பல்லூடகத் தொகுப்பு

வி.கணபதி,

ஆலோசகர், இந்திய மொழிகளுக்கான தொழில்நுட்பத் தீர்வு வள மையம் — தமிழ், கணினி அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பள்ளி, அண்ணா பல்கலைக்கழகம்.

டி.வி. கீதா, ரஞ்சனி பார்த்தசாரதி,

இந்திய மொழிகளுக்கான தொழில்நுட்பத் தீர்வு வள மையம் — தமிழ், கணினி அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பள்ளி, அண்ணா பல்கலைக்கழகம்.
<E Mail {tvgeedir@annauniv.edu, rp@annauniv.edu }>

கட்டுரை சுருக்கம்

'பாநயம் கண்டறிதல் — ஒரு பல்லூடகத் தொகுப்பு' என்ற இந்தத் தொகுப்பானது இறைவனை, மொழியை, நாட்டை வணங்கும் பகுதியான கடவுள் வாழ்த்து, அறக் கருத்துகளை எடுத்துக் கூறுவதாக அமைந்த அறவுரைப் பகுதி, ஒரு கதையைத் தொடர்ச்சியாகப் பல பாடல்களால் கூறும் தொடர்நிலைச் செய்யுள், குறம், குறவஞ்சி, உலா, பிள்ளைத் தமிழ் போன்ற பல்வகை இலக்கியங்களிலிருந்து பலவகை இலக்கியச் சுவையோடு கூடிய தேர்ந்தெடுக்கப் பெற்ற பாடல்கள் அடங்கிய பல்சுவைப் பகுதி. தீண்டாமை, பெண்கள் விடுதலை, நாட்டுப்பற்று, மக்கள்தொகைக் கல்வி போன்ற சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளை எடுத்துக் கூறும் மறுமலர்ச்சிப் பாடல்கள், பல்சமய கடவுளர்களைப் புகழ்ந்து பாடும் வழிபாட்டுப் பாடல்கள் என்று பகுதிகளை, கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலும் இத்தொகுப்பானது பாடல்களுக்கு ஏற்ற இசையோடு பாடப்பெற்றும் ஒலிநயம், எதுகை, மோனை, இயைபுத் தொடை நயம் உணர்த்தியும் உவமை, சிலேடை போன்ற அணிநயம் அறிவுறுத்தியும் சொற்களைப் பிரித்து அறிதல், அருஞ்சொற்களின் பொருள் போன்றவற்றைத் தெளிவுபடுத்தியும் தொகுக்கப்பட்டுள்ளது. பாடல்கள் அனைத்திற்கும் ஒளிக் காட்சிகள் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது.

இத்தொகுப்பு மூன்று பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதியில் எளிய பாடல்கள், இசையமைத்துப் பாடக் கூடியவை, செப்பலோசை, அகவலோசையை அறிமுகப்படுத்தும். இப்பகுதியில் ஐந்து பாடல்கள் அடங்கும்.

இரண்டாம் பகுதி ஒலி நயத்தைப் பாராட்டும் பகுதி. எதுனை, மோனை, இயைபு, வல்லின மெல்லின எழுத்துக்கள் அமைந்த எட்டுப் பாடல்கள் இப்பகுதியில் அடங்கும். மூன்றாம் பகுதி அணிநயம், சொல் நயம், பொருள் நயம் ஆகியவை அமைந்த பன்னிரண்டு பாடல்களைக் கொண்டது.

அறிமுகம்

ஒரு மொழியின் இனிமையும் இலக்கியத்தின் வளமையும் இலக்கணத்தின் பெருமையும் அம்மொழியின் சிறப்புக் கூறுகளை வெளிக்காட்டப் பயன்படும் உத்தி முறைகளின் தன்மையைப் பொறுத்தே வெளிப்படுகின்றன. செய்யுள்களும், செய்திகளும் வாய்மொழியாக சொல்லப்

பட்ட காலமும், வழிவழியாக வழங்கப்பட்ட காலமும் கடந்து, நூல்களில் நிரம்பிய புரட்சிக் காலமும் போய், இன்று கணினியில் கால் பதித்திருக்கிறது. இந்நிலையில் கொடுக்கின்ற செய்தியினை காண்போரை / படிப்போரைப் பிடிக்கின்ற வகையில் கொடுப்பதென்பது முக்கியத்துவம் பெறுகிறது. அம்முக்கியத்துவத்தினை மையமாகக் கொண்டு வடிவமைக்கப் பட்டதே 'பாநயம் கண்டறிதல் — ஒரு பல்லூடகத் தொகுப்பு' என்ற இத்தொகுப்பாகும்.

பல்வகை இலக்கியங்களில் இருந்து பல்வகைப்பட்ட பாடல்களை ஒலி—ஒளி அமைப்போடு இத்தொகுப்பு வழங்குகிறது. பாடல் நயங்களை வெளிக்கொணரும் முகமாகவும், மேலும் பயனாளரின் நினைவாற்றலை மேம்படுத்தும் பொருட்டும் விளையாட்டு முறைப் பயிற்சி களும் கொடுக்கப்பட்டுள்ளன. இது சிறுவர்களின் ஆர்வத்தினைத் தூண்டுவதோடு அவர் களின் நினைவாற்றலையும், இலக்கிய ஈடுபாட்டையும் வளர்க்க வகை செய்கிறது. இலக்கணப் பகுதிகளின் விதிகள் 'அசைவூட்ட' முறையில் அமைக்கப்பட்டுள்ளதால், இலக்கண விதிகளை மனதில் நிறுத்துவது எளிதாகிறது. ஒவ்வொரு பாடலுக்கும் ஒளிக்காட்சிகளோடு ஒலி வடிவ மும் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளதால், பாடலும் கருத்தும் படிப்போர் மனதில் ஆழப் பதிய ஏதுவாகிறது.

ஒரு பகுதியில் இருந்த மற்றொரு பகுதிக்கு செல்ல எளிமையான முறையில் இணைப்புகள் கொடுக்கப்பட்டு பயனாளரின் தடுமாற்றத்தைத் தடை செய்கிறது. இத்தொகுப்பு 'மேக்ரோ மீடியா'வின் 'ப்ளாஷ்' என்ற மென்பொருளால் உருவாக்கப்பட்டுள்ளது.

பாடி மகிழ்வோம்

ஒரு கருத்தை உரைநடையிலும் பாடல் வடிவிலும் கூறலாம். பாடல் வடிவே மொழியில் முந்தியதாகும். பாடலை இசையோடு சொல்கிறபொழுது கருத்து மனத்தில் நன்கு பதியும். பாடி மகிழ்வோம் என்ற தலைப்பில் இது தொகுக்கப்பட்டுள்ளது. தமிழை இசையோடு கற்பது மிகவும் இனிமை என்பதன் அடிப்படையில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

நூல் உள்ளடக்கங்கள்

இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களின் தலைப்புகளாவன: மலரும் மாலையும், நீதிநெறி விளக்கம், தனிப்பாடல், குற்றாலக் குறவஞ்சி, பாரதியார் பாடல், திருக்குறள், நீதிவெண்பா, இராமாயணம், கலிங்கத்துப் பரணி, பாரதம், நளவெண்பா, நாலடியார், திவ்யப் பிரபந்தம், மணிமேகலை, பெரியபுராணம், புதுக் கவிதைகள் ஆகியன ஆகும்.

பாடல் தலைப்புகள்

இதில் உள்ள தலைப்புகள் மலர்கள், அகம் மகிழ்க, தமிழை என்னுயிர் என்பேன், நாராய் நாராய், குற்றால மலை, இந்நாடு, குறள் இன்பம், கடல் உப்பும் கர்ப்பூரமும், சங்கத் தமிழ் மூன்றும் தா, தமிழ் எமது அமுது, முனியின் கோபம், கலிங்கப் போர், பெண்மையின் மென்மை, கதிரவன் மறைவும் கர்ணன் மறைவும், உள்ளத்து உயர்வு, காதலியைப் பிரிந்த நளன், முதலையின் பலம், திங்களும் சான்றோரும், திருமாலுக்கு சொல்மாலை, அன்பும் வாழ்க்கையும், செவிச் செல்வம், எங்கும் கொடிகள், பெண்ணும் வாழையும், மெய்ப் பொருள் மற்றும் பெரியவை எவை? ஆகியன ஆகும். இவை தவிர மூன்று பயிற்சிப் பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.



ஒவ்வொரு பகுதியிலும் பாடல், சொற்களைப் பிரித்து அறிவோம், இலக்கணம் அறிவோம், அருஞ்சொற்பொருள் அறிவோம், உரைநடைப்படுத்தி அறிவோம், பொழிப்புரை அறிவோம்,

நயம் அறிவோம், ஆசிரியர்—நூல் பற்றி அறிவோம், தொடர்புடைய பிற செய்தி அறிவோம் மற்றும் பயிற்சி என்று 10 விதமான பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இதில் உள்ள பாடல்களும் அதன் பண்புகளும் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

பாடல்கள்	பண்புகள்
மலர்கள்	மலர்கள் தங்களைப்பற்றி கூறுதல்
அகம் மகிழ்க	நீதி நெறியை விளக்கும் பாடல்
தமிழை என் உயிர் என்பேன்	தமிழின் இனிமை கூறும் பாடல்
நாராய் நாராய்	புலவர் தம் வறுமையைக் கூறுதல்
குற்றால மலை	குறத்தி தன் மலை வளம் கூறுவதாக அமைந்த பாடல்
இந்நாடு	பாரத நாட்டைப் போற்றும் பாடல்
குறள் இன்பம்	நீதி நெறியை விளக்கும் குறள்கள்
கடல்உப்பும் கர்ப்பூரமும்	நீதி நெறியை விளக்கும் பாடல்
சங்கத்தமிழ் மூன்றும் தா	முத்தமிழ் வேண்டி ஔவையார் விநாயகரை துதிக்கும் பாடல்
தமிழ் எமது அமுது	தமிழின் இனிமை கூறும் பாடல்
முனியின் கோபம்	விசுவாமித்திரரின் கோபம் கூறும் கம்பராமாயணப் பாடல்
கலிங்கப் போர்	கலிங்கப் போரின் போர்க் காட்சியை விளக்கும் பாடல்
பெண்மையின் மென்மை	கம்பராமாயணத்தில் சூர்ப்பனகையை வர்ணிக்கும் பாடல்
கதிரவன் மறைவும் கர்ணன் மறைவும்	பாண்டவர்—கௌரவர் கதையைக் கூறும் வில்லிபுத்தூரார் பாடல்
உள்ளத்து உயர்வு	நீதி நெறியை விளக்கும் குறள்
காதலியைப்பிரிந்த நளன்	நளனின் வரலாற்றை வெண்பாவில் கூறும் நளவெண்பா பாடல்
முதலையின் பலம்	பிறிது மொழிதல் அணியைப் பயன்படுத்தி அமைந்த குறள்
திங்களும் சான்றோரும்	நாலடியாரில் உள்ள நீதிப்பாடல்
திருமாலுக்குச் சொல்மாலை	திருமாலுக்குப் பாமாலை சூட்டும் நாலாயிர திவ்யப்பிரபந் தப் பாடல்
அன்பும் வாழ்க்கையும்	அன்புடைமை பற்றிய திருக்குறள் பாடல்
செவிச்செல்வம்	செவிச்செல்வம் பற்றிய திருக்குறள் பாடல்
எங்கும் கொடிகள்	காவிரிபூம்பட்டினத்தில் இந்திரவிழா கொண்டாடப்படும் போது உள்ள மணிமேகலைப் பாடல்
பெண்ணும் வாழையும்	வாழையையும் பெண்ணையும் ஒப்பிடும் பாடல்
மெய்ப்பொருள்	சிவபெருமானின் கருணை பற்றி கூறும் பெரியபுராணப் பாடல்
பெரியவை எவை	நீதிநெறியை விளக்கும் குறள்

"மலர்கள்" பகுதியில் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை எழுதிய மலரும் மாலையும் என்ற பாடல் தொகுப்பிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் மலர்கள் தங்களைப் பற்றிக் கூறுவதாக பாடல் அமைந்துள்ளது. கம்பனுடைய பாடல்களில் உள்ள தமிழ் மணம் போல மலர்கள் தனி மணம் வீசுவதாகப் பாடல் அமைந்துள்ளது. அதன் பொழிப்புரை மற்றும் இலக்கணக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

"அகம் மகிழ்க" என்ற பகுதியில் நீதிநெறி விளக்கம் என்ற நூலிலிருந்து ஒரு பாடல் கொடுக் கப்பட்டுள்ளது. தம்மை விடச் செல்வத்தில் குறைந்தவர்களைப் பார்த்து நம் செல்வம் எவ்வ ளவு பெரியது என்று மனத்திற்குள் நினைத்துக்கொள்ள வேண்டும் என்றும், தம்மை விட மிகுதியாகக் கற்றவரைப் பார்த்து இவருடைய கல்வி அறிவுக்கு முன்னே நாம் கற்றது மிகக் குறைவு என எண்ணவேண்டும் என்றும் இப்பாடல் நீதி கூறுகிறது. இதன் ஆசிரியர் குமரகுரு பரர் ஆவார். இது வாழ்வதற்குரிய நீதிகளை, வாழும் முறைமைகளை விளக்கமாகக் கூறு கின்றது.

"தமிழை என் உயிர் என்பேன்" என்ற பகுதியில் பாரதிதாசன் எழுதிய தமிழின் இனிமை என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தமிழின் இனிமை மிகச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. தமிழை உயிருக்கு நிகர் என்று சொல்லும் விதமாக தமிழின் இனிமையை பலாப்பழத்தில் உள்ள பலாச் சுளை, கரும்புச்சாறு, மலரில் உள்ள தேன், பசுவின் பால் இவற்றிற்கு மேலாகக் கூறப்பட்டுள்ளது. இதில் இலக்கணம் மற்றும் உரைநடை விளக்கம் ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன.

"நாராய் நாராய்" என்ற தலைப்பில் சத்திமுத்தப் புலவர் எழுதிய தனிப்பாடலிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இது புலவர் தம் வறுமையை நாரையிடம் கூறுவது போல மன்னனுக்குத் தெரிவிக்கும் பாடலாக அமைந்துள்ளது. பாடலின் விளக்கம், ஒலி வடிவம், காட்சி அமைப்பு மற்றும் இலக்கண விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

"குற்றால மலை" என்னும் தலைப்பில் குற்றாலக் குறவஞ்சி என்னும் நூலில் குறத்தி தன் மலை வளம் கூறுவதாக அமைந்த ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் குற்றால மலை யின் வளம் கூறும் விதமாக அந்த மலையில் குரங்குகள் கனிகளைக் கொடுத்துப் பெண் குரங்குகளுடன் கொஞ்சி விளையாடுகின்றன. காட்டில் உள்ளவர் தங்கள் பார்வையால் தேவ்ரை அழைப்பர். வான்வழியே செல்லும் சித்தர்கள் இம்மலைக்கு வந்து உடலை நிலை யாக வைத்திருக்கும் திறன் பெறுவர் என்ற செய்தி இடம்பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் திரிகூடராசப்ப கவிராயர் ஆவர்ர்.

"இந்நாடு" என்ற தலைப்பில் சுப்ரமணிய பாரதியார் எழுதிய கவிதைத் தொகுப்பிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பாடல் பாரத நாட்டைப் போற்றும் விதமாகவும் வணக் கம் கூறும் விதமாகவும் அமைந்துள்ளது. தந்தையும் தாயும் மகிழ்ச்சியோடு உரையாடி மகிழ்ந்ததும், முன்னோர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்து மறைந்ததுவும் அவர்கள் உள்ளத்தில் வளமான சிந்தனைகள் தோன்றி வளர்ந்து சிறந்ததும் இந்தப் பாரத நாடேயாகும் என்று நவில்கிறது இப்பாடல். இந்தப் பாடல் நாட்டு வணக்கம் என்ற தலைப்பின் முதல் பாடலாக உள்ளது.

"குறள் இன்பம்" என்ற தலைப்பில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலிருந்து "நன்றி மறப்பது நன்றன்று.." என்ற குறளின் விளக்க உரை கொடுக்கப்பட்டுள்ளது. "சொல்லுக சொல்லில் பயனுடைய..." என்ற குறளும் விளக்கப்பட்டுள்ளது. இக்குறட்பாக்கள் முறையே செய்நன்றி அறிதல், பயனில சொல்லாமை என்னும் அதிகாரங்களில் உள்ளன. திருக்குறள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஒருவர் செய்த நன்மையை மறந்துவிடுதல் நல்லது அன்று. ஆனால் ஒருவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுதல் நல்லது என்பதை முதல் குறளும் நாம் சொல்லும் சொற்கள் நமக்கும் கேட்பவருக்கும் பயன் தருகின்ற சொற்களாக

இருத்தல் வேண்டும். அவ்வாறு பயன் தராத சொற்களைச் சொல்லுதல் கூடாது என்பதை இரண்டாம் குறளும் விளக்குகின்றன.

"கடல் உப்பும் கர்ப்பூரமும்" என்ற தலைப்பில் நீதி வெண்பா என்னும் நூலிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு நீதிப்பாடல் ஆகும். கடலுப்பையும் கர்ப்பூரத்தையும் போல தீவினையாளரும் நல்வினையாளரும் உருவத்தால் ஒத்திருப்பர் ஆனால் தன்மையால் வேறுபடுவர்.

"சங்கத் தமிழ் மூன்றும் தா" என்ற தலைப்பில் ஔவையார் பாடிய தனிப்பாடல்களில் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. இயல், இசை, நாடகமாகிய முத்தமிழ் வேண்டி விநாயகரிடம் ஔவை யார் துதிக்கும் பாடல். பாலும், தேனும், பாகும், பருப்புமிவை நான்கும் கொடுத்து முத்தமிழை வரமாக கேட்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"தமிழ் எமது அமுது" என்ற தலைப்பில் பாரதிதாசனின் கவிதைத் தொகுப்பிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இது "எங்கள் தமிழ்" என்னும் தலைப்பில் அமைந்த முதல் பாடல் ஆகும். தமிழ் மொழியின் இனிமையைக் கூறும் பாடல். இதில் தமிழ் மொழியை அமிர்தத்திற்கு இணையாகவும், கனிச் சாறுக்கும் மேலானது போன்று இனிமை மிக்கது என்றும் நாம் பெற்ற செல்வத்தில் சிறந்த செல்வம் என்றும் பாரதிதாசன் தமிழின் இனிமையை விளக்கியிருக்கிறார்.

"முனியின் கோபம்" என்ற தலைப்பில் கம்பர் எழுதிய ராமாயணத்திலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. விசுவாமித்ர முனிவரின் கோபம் குறிப்பிடும் பாடலின் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. விசுவாமித்திரர் உலக நன்மைக்காக வேள்வி செய்ய முற்படுகிறார். அரக்கர் அதனைத் தடுக்கின்றனர். அவர்கள் தடுக்காமல் காப்பாற்ற விசுவாமித்திரர் தசரத னிடம் இராமனை அனுப்பும்படி கேட்கிறார். தசரதன், 'இராமன் சிறுவன், நான் வருகிறேன்' என்கிறார். அந்நிலையில் விசுவாமித்திரருக்குக் கோபம் ஏற்படுகிறது.

"கலிங்கப்போர்" என்ற தலைப்பில் கலிங்கத்துப் பரணியில் உள்ள ஒரு பாடலும் அதன் விளக்க உரையும் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் போர்க் காட்சி ஒன்றை விளக்கும் பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் போர்க்காட்சி ஒன்றை விளக்கும் பாடல் கொடுக்கப்பட் டுள்ளது. குலோத்துங்கச் சோழனின் படைத் தலைவன் கருணாகரத் தொண்டைமான் கலிங்க மன்னன் அனந்தபதுமனுடன் நடத்திய போர் கலிங்கப் போர். அப்போர்க்களக் காட்சி ஒன்றை வருணிக்கும் பாடல்.

"பெண்மையின் மென்மை" என்ற பகுதியில் கம்பராமாயணத்திலிருந்து ஒரு பாடல் கொடுக் கப்பட்டுள்ளது. இது ராமன் மீது சூர்ப்பனகை காதல் கொண்டு மென்மையான பெண் உருவில் வந்ததை வர்ணிக்கும் பாடல் ஆகும். கோதாவரி நதிக் கரையில் பஞ்சவடி என்னும் இடத்தில் இராமன், இலக்குவன், சீதை ஒர் இருப்பிடம் அமைத்துத் தங்கியிருந்தனர். அப் பொழுது இராமன் மீது காதல் கொண்டு சூர்ப்பநகை வந்தாள். அரக்கியான அவள் மென்மையான பெண்ணுருவில் வந்ததை வருணிக்கும் பாடல்.

"கதிரவன் மறைவும் கர்ணன் மறைவும்" என்ற தலைப்பில் வில்லிபுத்தூரார் எழுதிய பாரதம் என்ற நூலிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இது பாண்டவர் மற்றும் கௌரவர் கதையைப்பற்றி கூறுவது. பாரதப் போரில் பதினேழாம் நாள் அருச்சுனன் விடுத்த அம்பு கர்ணன் மார்பில் பாய அவன் குற்றுயிராகி விழுகிறான். அதனைக் கூறுகிறது இப்பாடல். விசயன் விடுத்த அம்பு கர்ணனின் மார்பில் குறி தவறாது தைத்தது. அதனால் அவன் குற்றுயிராகி விழுந்தான். அம்பு குறி தவறாது தைத்தது என்பதைச் சொல்ல வந்த வில்லிப் புத்தூரார், நடுவுநிலை பிறழாத சான்றோர் சொல் எவ்வாறு சிறிதும் பிசகாது உண்மை யாகுமோ (பலிக்குமோ) அவ்வாறு கர்ணனின் மார்பைக் குத்தி ஊடுருவிச் சென்றது என்று கூறுகிற நயம் பாராட்டத் தக்கது. பண்டைய புலவர் பெருமக்கள் புறத்திலும் அறம்காட்டுவர் என்பதற்குச் சான்றாக, போர்க்களத்தில் விசயன் அம்புபட்டுக் கர்ணன் மடியும் காட்சியைச் சொல்லும்பொழுது, நடுநிலைமை பிறழாதவர் சொல் தப்பாமல் பலிக்கும் என்பதை உவமை யாகக் கூறும் பான்மை குறிப்பிடத்தக்கது.

"உள்ளத்து உயர்வு" என்ற தலைப்பில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலிருந்து "வெள்ளத் தனைய மலர் நீட்டம்..." என்ற குறள் கொடுக்கப்பட்டுள்ளது. உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களைக் கண்ணால் காண முடியாது. செயல் மூலமாகத்தான் அறிய முடியும். இதனை விளக்குவதற்குக் கண்ணால் காணக்கூடிய நீர் மட்டத்தால் உயரும் மலர்களை உவமையாகக் கூறியுள்ள நயம் பாராட்டத்தக்கது. மனம் போல் வாழ்வு — என்னும் உலகறிந்த பழமொழியை எளிய உவமை மூலம் இக்குறள் விளக்குகிறது. பண்பு என்பது பொருள் தோன்றும் காலத்துத் தோன்றி, அது அழியும் காலத்து அழிவது. நீர்ப்பூக்கள் அனைத்தும் நீர் மட்டம் உயர்கிறபொழுது உயர்ந்தும், நீர்மட்டம் தாழ்கிறபொழுது தாழ்ந்தும் அழியும் பொழுது தாமும் அழியும். இத்தகைய சிறப்புடைய நீர்ப்பூவை மக்கள் உயர்வு தாழ்வுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது சிறப்பு.

"காதலியைப் பிரிந்த நளன்" — இதில் நளவெண்பாவில் உள்ள ஒரு பாடல் கொடுக்கப் பட்டுள்ளது. இதன் ஆசிரியர் புகழேந்தி ஆவார். இது நளன் வரலாறு கூறும் பாடலாக அமைந்துள்ளது. நளன் நள்ளிரவுப் பொழுதில் தன் மனைவியை நடுக்காட்டில் தனியாக விட்டுவிட்டு வந்தான். காலைப் பொழுதில் கடற்கரை அருகே வரும்பொழுது நண்டுகள் ஓடி ஒளிந்தன. அவற்றைக் கண்டு அவன் பேசியதே இந்த நளவெண்பாப் பாடல். நளன் தமயந்தியைப் பிரிந்து சென்ற செயல் அவன் உள்ளத்தையும் மீறி நடந்த செயல் என்பதனை அவனே கூறுவதாக நாம் அறிய, கானகத்தே என்றும் காரிருள் என்றும் காதலியை என்றும் பல சொற்களைப் பயன்படுத்திக் கவிஞர் கூறிய நயம் பாராட்டிற்குரியது.

"முதலையின் பலம்" — இதில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலிருந்து "நெடும் புனலுள் வெல்லும் முதலை..." என்ற திருக்குறள் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் விளக்க உரையும் இலக்கணமும் கொடுக்கப்பட்டுள்ளன. இக்குறட்பாவில், ஒவ்வொரு வரும் தம் இடத்திலிருந் தால் வலிமையுடையவராய் இருப்பர் என்பதனைக் கூற வந்த புலவர், முதலை தான் வாழும் நீரில் இருந்தால் வலிமை மிக்கது என்றும், நீரை விட்டு நீங்கினால் வலிமை குறைந்துவிடும் என்றும் வேறு கருத்தைக் கூறினார்; எனவே இது பிறிது மொழிதல் அணி ஆயிற்று.

"திங்களும் சான்றோரும்" — இதில் சமண முனிவர்கள் பலரால் பாடப்பட்ட நாலடியாரி லிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. நீதி நூல்களில் நாலடியார் திருக்குறளுக்கு அடுத்தபடியாக கருதப்படுகிறது. சான்றோர்கள் உலக மக்களிடையே உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்படுவர்; உலக மக்களுக்கு நன்மையே செய்வர். இத்தகைய சிறப்புக்கு உரியவர்களை, உயர்வான வானத்தினை இருப்பிடமாகக் கொண்டதும் ஒளியால் மக்களுக்கு நன்மை செய்வதுமான சந்திரனோடு ஒப்பிட்டு அதனினும் சிறந்தோர் சான்றோர் எனக் கூறிய நயம் சிறப்புடையதாகும்.

"திருமாலுக்குச் சொல்மாலை" — இதில் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடலை எழுதியவர் பொய்கையாழ்வார் ஆவார். ஆனால் நாலாயிர திவ்யப்பிரபந்தம் பன்னிரண்டு ஆழ்வார்களால் எழுதப்பட்ட தொகுப்பாகும். "உலகமே விளக்கேற்றும் அகலாக, நீண்ட கடல்நீர் விளக்கு எரிக்கும் நெய்யாக வெப்பமிகுந்த கதிரவன் விளக்கு ஒளியாக, செம்மையான ஒளி பொருந்திய சக்கரப் படையுடைய திருமா லுக்கு, துன்பக் கடலிருந்து விடுபடவேண்டும் என விரும்பி இந்தப் பாமாலையைச் சூட்டினேன்" என்று பொய்கையாழ்வார் பாடியுள்ளார்.

"அன்பும் வாழ்க்கையும்" — இதில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலிருந்து "அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை..." என்ற திருக்குறள் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் விளக்க உரையும் இலக்கணமும் கொடுக்கப்பட்டுள்ளன. உலகில் இல்லாத, நிகழாத ஒன்றை உவமையாக வைத்துப் பாடுவது இல்பொருள் உவமைணியாம். இப்பாடலில் பாலை நிலத்தில் மரம் தளிர்ப்பது நிகழமுடியாத ஒன்று; அதிலும் வற்றிப்போன மரம் தளிர்ப்பது என்பது நிகழவே முடியாத செயல். இந்த இல்பொருளை உவமையாகக் கூறி அன்பு இல்லாது உயிர் இருக்க முடியாது என்பதைப் பெறவைக்கிறார்.

"செவிச் செல்வம்" — இதில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலிருந்து "செல்வத்துள் செல் வம் செவிச் செல்வம்..." என்ற திருக்குறள் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் விளக்க உரையும்

இலக்கணமும் கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்துச் செல்வங்களுள்ளும் செல்வமாகக் கருதப் படுவது கேள்வி அறிவாகிய செல்வமாகும். அக்கேள்விச் செல்வமே பிற செல்வங்கள் யாவற்றிலும் முதன்மை வாய்ந்தது. இக்இக்குறட்பா பயனில சொல்லாமை என்னும் அதி காரத்தில் உள்ளது. யாவரும், எப்பொழுதும் பயனற்ற சொற்களைக் களைந்து பயனுடைய சொற்களைக் கூறுக என்று சொல்லி வந்தவர் அப்பயன் சொல்லிலும் பொருளிலும் திகழ வேண்டும் என்பதற்காகச் சொற் பொருட் பின்வருநிலை அணியில் கூறுகிறார்.

"நோய் நாடி நோய்..." — இக்குறட்பா மருந்து' அதிகாரத்தில் வந்துள்ளது. "நாடி" என்னும் சொல் 'ஆராய்ந்து' என்னும் பொருள் தரும். மருத்துவம் என்பது ஒவ்வொரு நிலையிலும் ஆய்வுக்குரியது என்பதை உணர்த்த இவ்வாறு வள்ளுவர் கூறுகிறார்.

"எங்கும் கொடிகள்" — இதில் சீத்தலைச்சாத்தனார் எழுதிய மணிமேகலையிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஐம்பெரும்காப்பியங்களுள் ஒன்று. இது சிலப்பதிகாரத் துடன் சேர்த்து இரட்டைக்காப்பியங்கள் என அழைக்கப்படுகிறது. காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திரவிழா கொண்டாட ஏற்பாடு செய்க என முதுகுடிப் பிறந்தோன் முரசு அறைந்து செய்தி தெரிவிக்கின்றான். அப்பொழுது கொடிகள் கட்டி அழகுபடுத்துவது பற்றிக் கூறுவன இவ்வரிகள்.

கோவலன் — மாதவி மகளாய்த் தோன்றிய மணிமேகலையின் துறவு பற்றிக் கூறுவது. புத்த சமயக் கருத்துகளை விளக்குகின்றது. பரத்தையொழிப்பு, மதுவொழிப்பு, பசியொழிப்பு, சாதியொழிப்பு — என்ற சீர்திருத்தக் கருத்துகளைக் கூறுகின்றது. இந்நூலில் விழாவறை காதை முதலாக, பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை இறுதியாக முப்பது காதைகள் உள்ளன.

"பெண்ணும் வாழையும்" — இதில் பதின் கவனகத்தில் பொழிந்த பாமழை என்ற நூலிலிருந்து பெ. ராமையா எழுதிய ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. பதின் கவனகம் என்பது பத்து வகையான செய்திகளை நினைவில் கொள்பவர் என்று விளக்கப்பட்டுள்ளது. தலை வாருதல், பூச்சூடுதல், தண்டை அணிதல், விருந்தினரை உபசரித்தல், மகப்பேறு ஆகிய பெண்களுக்குரிய இயல்புகளை வாழையோடு பொருத்திக் காட்டிய கற்பனை நயம் போற்றுதற்குரியது.

"மெய்ப் பொருள்" இதில் சேக்கிழார் எழுதிய பெரிய புராணத்திலிருந்து ஒரு பாடல் கொடுக் கப்பட்டுள்ளது. இது திருத்தொண்டர் புராணம் எனவும் அழைக்கப்படுகிறது. மெய்ப்பொரு ளார் திருக்கோவிலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னன். சிவபெருமானையும் சிவனடியார்களையும் துதிப்பவர். வீரம் ஈரம் மிக்கவர். இவர் மீது பக்கத்து நாட்டு மன்னன் முத்தநாதன் பொறாமையும், பகையும் கொண்டான். அவரோடு போரிட்டுத் தோற்றான். சிவனடியார் போல வேடமிட்டு வஞ்சனையால் அவரைக் கொன்றான். அந்நிகழ்ச்சியைக் கூறும் பாடல்.

"பெரியவை எவை ?" — இதில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலிருந்து "காலத்தினால் செய்த நன்றி...", "நிலையின் திரியா..." மற்றும் "பயன் தூக்கார் செய்த உதவி..." என்ற 3 குறள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் விளக்க உரைகளும் இலக்கணமும் கொடுக்கப் பட்டுள்ளன.

முதல் குறள் — நிலம் அதற்கு உரிய பருவத்தில் மட்டுமே விளைச்சலைத் தந்து பயன் கொடுக்கும். நமக்குத் தேவையான காலத்தில் அது விளையாது. எனவே நமக்குத் தேவை யான காலத்தில் ஒருவர் உதவி / நன்மை செய்வாராயின் அது இந்நிலவுலகத்தை விடப் பெரியது என்று கூறிய நயம் பாராட்டிற்குரியது.

இரண்டாவது குறள் கடல் நமக்கு உதவுவது பயன் கருதியே. எவ்வாறெனில் மழை பெய்வ தற்குத் தன் நீரைத் தந்து உதவுகிறது. தான் கொடுத்த நீர் மழை நீராகவும், ஆற்று நீராகவும் தன்னிடமே மீண்டும் வந்து சேருகிறது. அதனால் கடல் செய்யும் உதவி பயன் கருதியதாகி றது. எனவே பயன் கருதாது ஒருவர் உதவி செய்தால் அது கடலை விடப் பெரியது என்று குறள் காட்டும் நயம் போற்றத்தக்கது.

மூன்றாவது குறள் மலையானது என்றும் மாறாத தன்மை உடையது. ஆனால் மனிதனோ மாறும் தன்மை உடையவன். மாறும் தன்மையை இயல்பாகக் கொண்ட மனிதன் தன் நிலையில் திரியாது. அடக்கமாக இருப்பானேல் அவன் மலையை விட உயர்வானவன் என்று கூறும் நயம் போற்றத்தக்கது.

முடிவுரை

இந்த பல்லூடகத் தொகுப்பில் தமிழ் பாடல்களை மிக எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் நீதிநெறிப் பாடல், துதிப்பாடல், தமிழ் இனிமை கூறும் பாடல் என்று அனைத்து வகைகளிலும் பாடல்கள் கலந்து கொடுக்கப்பட்டுள்ளன. நீதி நெறி பாடல்களில் திருக்குறள் அதி முக்கியமாக இடம் பெற்றுள்ளது. கம்பராமாயணம், வில்லி பாரதம் மற்றும் கலிங்கப் போர் ஆணியவற்றி லிருந்தும் பாடல்கள் விளக்கப்பட்டுள்ளன. இதில் திருப்புதல் பயிற்சிகள் மூன்று தொகுப்புகளாக கொடுக்கப்பட்டுள்ளன. இதில் பாடல் நயம் கண்டறிவதற்காக ஒலி, காட்சி, இலக்கணம், அருஞ்சொற்பொருள், பொழிப்புரை, உரைநடை வடிவம் என்று பலவகையான இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

58

E-governance: Tackling the Hurdles

N Jayaradha

Sr. Software Engineer at DishnetDSL Ltd
(jayaradha@hotmail.com)

CK Shanthakumar

Corporate Sales Manager with HDFC Chubb General Insurance Company
(ckshanthakumar@hotmail.com)

Introduction

E-governance uses technology to reach Governmental services to the masses. Recent developments in the web technologies and networking technologies have reduced the time and cost of information acquisition, maintenance and dissemination thereby making e-governance an obvious choice over conventional delivery mechanisms of governmental services.

While e-governance is as old as, if not older, the Internet itself, except for a few states, no remarkable change is seen in the efficiency of government system because of e-governance implementation. The paper critically analyses the bottlenecks preventing India from benefiting out of e-governance. Inference is drawn from successful implementation of REGINET (Tamilnadu Government's Registration Department) in regional language overcoming such hurdles.

Objective of E-governance

E-governance is the process of service delivery and information dissemination to citizens using electronic means. By virtue of advantages of electronic medium, e-governance provides the following benefits over the conventional system:

- Improved and faster service delivery to citizens and business.
- Increased efficiency in other Governmental processes, viz, purchase, disposal etc.
- Transparency and anticorruption in all transactions
- Citizen empowerment through Information

Where there is a significant gap between expected and existing efficiency delivery mechanism that can be rectified by IT enabling, there is scope for e-governance. Use of regional language in e-governance will increase the efficiency of delivery mechanism.

E-governance is not restricted just to large processes like registration department or telemedicine. Consider a mid-sized initiative like the Electronic Voting Machine which revolutionized election administration by speeding up voting time and counting.

The E-governance Ecosystem



Stakeholders

Government Service Department

IT Department / IT Consultants

Citizens & Business Entities

Environment Variables

Social Environment

Political Environment

Economic Environment

Hurdles in Implementing E-governance

Implementation of e-governance architecture in a developing country like ours is a formidable task. The hurdles faced when implementing e-governance in India are analyzed in the following paragraphs.

1. Lack of Clarity of Objectives

Lack of planning and unclear objectives result in poorly designed systems and cost overruns. A clear motive and understanding of the benefits of computerization is required.

E-government initiatives should be financially self-sustained. This does not necessarily eliminate the low-revenue areas. It is just an early-phase prioritization of 'bankable projects' so that success of these efforts catapults the e-governance movement further. Failures will set a bad precedence diluting the interest in the e-governance phenomenon. Hence pilot projects should precede full-scale implementation. The mantra is "Start small and scale up gradually".

REGINET, for example, started with a package called STAR, a client-side VisualBasic Software with SQL Server Database with TAB Tamil encoding support for archiving database. Now they have almost computerized 325 registrar offices and are ready for complete centralization.

To appreciate the benefits of e-governance, it is advisable to take up projects that would have sizeable manual operations, citizen interface and revenue potential. Consider citilight.com. a portal to monitor streetlight operations in Tirunelveli. It was conceived to 'bring about transparency, accountability and prompt & efficient complaint redressal'. While small initiatives like this are welcome, a specific critical mass is required for the efforts to be commercially viable.

2. Inadequacy of Funds

Though funds are available in plenty for developing nations under various heads, project cost underestimations are common, resulting in unfinished projects and higher maintenance costs.

Hence careful funds flow planning for short and long-terms should be done.

3. Human Resources Aspect

Dearth of quality IT personnel is typical of an underdeveloped country, but uniquely, not faced by India. However, the existing manpower mostly is not IT-ready to be deployed into e-governance projects.

Training costs might be high due to geographical spread. A favorable element is availability of versatile manpower who can be relocated, or re-trained to other functions.

Re-allocation of existing manpower to the new hierarchy is an organizational challenge. The archaic resistance to computerization namely 'retrenchment fear' has to be carefully preempted and combated, by attractive golden handshake schemes or training in other functions.

In REGINET the SROs and DROs were trained to use MIS reports and e-mail. The data entry operators were trained to work with STAR package with their existing typewriting skill.

4. Data Backlog

Piled up historical data has to be archived initially. Often, this mammoth task makes people hesitate to take the first step. Ideally the process can be outsourced as a one-time activity.

5. Leadership and Change Management

The e-governance implementation leader should be strong in project management and man-management. More than technical issues it is management of change that is of prime concern. Reasons for resistance are many. It could be because the concerned branch will lose ownership of data once shared. Or it could be just resistance to computerization concerning job security.

A project manager at Computer aided Administration of Registration Department (Andhra Pradesh) describes his distribution of time and effort as below:

- 45% - Change Management
- 35% - Re-engineering of Processes
- 15-20% - Software
- 5% - Other Factors

This clearly goes out to prove that change management and process reengineering play a vital role in e-governance implementation.

6. Lack of Catalysts

Evolution of e-governance evangelists is essential for handholding the e-governance effort in the initial period. They act as catalysts to accelerate acceptance process among users and to ensure rapid deployment internally, by

- Facilitating acceptance,
- Motivating the front-end service people,
- Create an awareness and curiosity among the users by explaining the benefits.

An ideal catalyst would be a computer savvy person who has power and authority in the governmental system and high credibility among service department and user communities. Many IAS officers have shown interest to take up e-governance projects for their respective departments. Awareness is increasing in Tamilnadu because of efforts of IAS officers like Mr. Umashankar, who implemented Tiruvarur District e-governance.

The catalytic role of media to create awareness among public should not be underestimated.

7. Lack of Coordination

Ideas originate as indigenous efforts of service departments. But coordination with other internal functions facilitates support from other functions. Lack of coordination across administrative and policy boundaries will affect program effectiveness and program efficiency.

In the case of REGINET organizations like ELCOT act as advisory groups to solve such coordination issues.

8. Internet & System Readiness of the E-governance Eco-system

Lack of cost efficient and technically superior Internet backhaul is a drawback. Use of existing obsolete equipment that cannot support recent Internet technologies is a constraint. An empowered organization to perform as an Internet & Infrastructure Provider with operational independence could solve this problem. In Andhra Pradesh, AP Technology Services was set up with a freedom of a private company and a pay structure to attract and retain good talent.

In Tamilnadu, NIC and ELCOT have taken efforts in implementing E-governance. Most of the departments in Tamilnadu are computerized and the data archived. REGINET is a classical example of a successful e-governance project. REGINET will connect 660 Registrar offices to the Office of the Inspector General of Registration to automate activities of the Registration Department. (http://www.tnreginet.net)

Separate Internet backbone for individual departments might prove costly. Instead, if various departments collaborate, the cost is shared.

Database and internal processes should be reorganized to facilitate easy computerization. The applications should be future-proof. Back up and disaster recovery should be built in.

The biggest hurdle is lack of involvement of the service department concerned. Herbert Roy & Associates from ZDNet explains why even big IT companies were not able to implement software projects for government. He says, "...prime reasons include poor requirement-gathering and non-involvement of end-users during this process, poor or negligible IT awareness among decision-makers, poor management of knowledge and human resources, non-compatibility between IT projects and business processes, poor risk management, choice of technology and over-ambitious projects."

9. Legal Framework Readiness

Enabling existing legal framework to authorize electronic documents and processes is another critical process. The legal system should be flexible to permit amendment of existing rules etc, (e.g. Amendment of National Registration Act, 1988 to use of computers).

10. Service Orientation & Motivation of Staff and Intermediaries

Customer orientation of the existing manpower is critical. Low productivity and lack of professionalism and work ethics will prove an indirect bottleneck to implementation. E-governance eliminates corruption practices in the hallowed portals of Taluk office and the like. Hence miscreants could moot anti-establishment activities to resist change.

Mr Pramod Mahajan, Former Union IT Minister, once said 'IT in isolation cannot bring a change unless administrators at the middle level is trained and motivated to use IT tools to speed up communication and decision-making".

Use of motivated IT-savvy intermediaries can help bridge the gap between the computer-illiterate rural masses and e-governance. The government should motivate staff and entrepreneurs to shift to rural pockets and startup activities as intermediaries.

11. Citizenry Readiness

At least moderate literacy levels are required to derive benefit out of e-governance process. Poor attitude towards new technology and widespread poverty are also major bottlenecks. Computer-savvy citizens and willingness to try out new system will help easy acceptance. Cities are early adopters but acceptance and usage in villages will increase only after persistent follow-ups and training, demonstrations, free trials etc.

Tools like COMPLIT (a regional language computer literacy program by Dr. Vijay Bhatkar of ETH Research Lab & Maharashtra Knowledge Corporation) will accelerate computer literacy.

12. Maintenance Challenges

Sustaining the interest levels till the critical mass is achieved is a maintenance challenge. Effort levels and monetary support tend to wane after the launch and initial visibility. Identification of continued funds source is required at the initial stage.

While taking up e-governance limitations of online delivery process should be recognized and gracefully accepted. We get myopic considering IT as an end whereas it is only a means to achieve the objectives of e-governance. It is meant to complement and not completely replace the traditional service delivery methods.

Role of Local Language in E-governance

Advent of language computing has catalyzed usage and acceptance. Apart from this, availability of implementation human resources (e.g. Data entry operators) and ease of training existing manpower is now possible only because of language computing. Thus it is a critical component contributing to the success of e-governance.

Herbert Roy & Associates feel that IT enabled vernacular services are sorely needed as much as IT-enabled services for quick capitalization of technology. In the case of Tamilnadu this problem has been partly resolved.

The efforts taken by standardization committees like INFITT made it possible to arrive at a standard encoding like TAB, which is now used by all government offices to archive data. Full-fledged portability of data and compatibility with various OS would have remained a dream but for the standardization efforts.

Conclusion

Since the beginning of e-governance initiatives, we have come a long way. But the pace of development is still very slow. E-governance models implemented now in the form of static websites (statutory forms, policies, rules and regulations) do not harness the real power of Internet arising out of interactivity and speed.

A clear understanding of the hurdles will help tackling them during planning and implementation. The need of the hour is a group of like-minded forward-thinking people with genuine interest in the language and the citizens of the nation.

Index of authors

1. Ananthakrishnan, Dr. M.V...	163
2. Anbarasan, N ...	140, 248
3. Andavar, Dr. Va.Mu.Se...	1
4. Anto Peter ...	215
5. Aparna, K.H....	44
6. Ashwini, C.M...	53
7. Babu Aharam ...	191
8. Bala Sundara Raman L ...	124
9. Chakravarthy, V.S....	44
10. Chevillard, Dr. Jean-Luc...	105
11. Chinnathurai Srivas, Avarangal ...	341
12. Chithirapoovizhi, S...	146
13. Deepa Devi, J...	65
14. Dhanabalan, T ...	18
15. Dinakaran, T...	6
16. Elanttamil Maruthai...	133
17. Elmore, Bob, Ph.D...	191
18. Felix, I ...	219
19. Ganapathi, V...	351
20. Ganesan, Dr. M...	37, 300
21. Ganesh Kumar, R...	101
22. Ganesh, AC...	293
23. Ganesh, S.G....	93
24. Geetha, T.V....	6, 18, 27, 65, 83, 146, 182
25. Giragadurai ...	77
26. Hays, Gary...	191
27. Ishwar S ...	124
28. Jawaharlal Mariappan, Ph.D....	191
29. Jayachandran, R ...	313
30. Jayakumar, V...	178

Index of authors

31. Jayaradha, N... 360
32. Jayawardhana Rama ... 53
33. Kalaimani, R ... 258
34. Kalaiyarasi, T ... 83
35. Kalyani, N ... 178
36. Kannan, Dr. N.... 117
37. Kavi Arasan, Va.Mu.Se.... 1
38. Kingston, T ... 175
39. Kodumudi Shanmugan, Dr... 328
40. Krishnamurthi, Prof. V ... 51
41. Kulandaisamy, Dr. V.C... 333
42. Kumudavalli Rajan ... 238
43. Logasundaram, N.D.... 285
44. Madan Kumar, T ... 70
45. Maniam, S ... 60
46. Manikandan, R ... 293
47. Miller, Eric ... 307
48. Murasu Nedumaran, Prof. ... 234
49. Navaneethan, P ... 70, 77
50. Pakkirisamy, Dr. R ... 339
51. Palanirajan, K ... 6
52. Parasuraman, Dr. T... 317
53. Ponnavaikko, Dr. M ... 154
54. Pradeep, N ... 70
55. Prakash, G.R.... 93
56. Radha Chellappan, Dr ... 15
57. Rajan, K ... 37
58. Rajmohan, A ... 173
59. Rama Mahalingam ... 163
60. Rama.Ki., Prof ... 273

Index of authors

61. Ramachandra, M.V. ... 265
62. Ramakrishnan, Dr. A.G. ... 53
63. Ramalingam, V ... 37
64. Ramamoorthy, Dr. L ... 240
65. Ramesh, J ... 70, 77
66. Rangarajan, S (Sujatha) ... 134
67. Ranjani Parthasarathi ... 6, 18, 27, 65, 83, 146, 182
68. Ravi Kumar, K.K. ... 93
69. Rita Jawaharlal ... 191
70. Sam Mohan Lal, Dr ... 241
71. Sanjeeth Kumar Ravindranath ... 124
72. Saravanan, K ... 27
73. Satheesh Kumar, C ... 77
74. Seethalakshmi, Dr ... 193
75. Selvaraj ... 70
76. Sita, G ... 53
77. Siva Pillai ... 223
78. Sivalingam, M ... 201, 215
79. Somasundaram, M ... 163
80. Subashini Kanagasundaram ... 117, 226
81. Sudhir Sharma ... 70
82. Shantha Kumar, C.K... 360
83. Tamizhchelvan, M ... 293
84. Tan Tin Wee ... 60
85. Thanaselvi Krishnan ... 159
86. Venkatesan, M ... 241
87. Vijayaraghavan, Dr. R ... 204

Sponsored by

Government of Tamil Nadu

Steered by

Tamil Virtual University
&
Anna University

Supported by

INFITT
(International Forum for Information Technology in Tamil)

&

Kanithamizh Sangam

Tamil Internet 2003 Secretariat
Tamil Virtual University
Elnet Software City, Taramani, Chennai - 600 113, Tamil Nadu, India
Ph : 91-44-22541010, Fax : 91-44-22541011
e-mail : tamilvu@vsnl.net, ponnav@eth.net
Website : www.infitt.org/ti2003, www.tamilvu.org/ti2003